வெளியீடு 6-9-2005 Issued 6-9-2005

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**புதன்கிழமை, மார்ச் 30, 2005—தொகுதி 77—எண் 2**

**Wednesday the 30th March, 2005—Volume 77—No. 2**


*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00



D
V211,31'2005
P05:77.2
226619

339
2005

30-3-2005

## உள்ளடக்கம்

பக்கங்கள்

**1. வினாக்கள்-விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 185-224

**2. கவன ஈர்ப்பு—**

(அ) சீர்காழி நகர், அரசு சேவை இல்ல மேல்நிலைப் பள்ளிக்குச் சொந்தக் கட்டடம் 225-228

(ஆ) புதுக்கோட்டை நகராட்சி, காவிரிக் குடிநீரை தினமும் விநியோகம் செய்தல் 228-231

**3. அறிக்கைகள் அளித்தல்—**

(அ) பொதுக் கணக்குக் குழு 231

(ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு 231

(இ) மனுக்கள் குழு 231-232

(ஈ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு 232

**4. மானியக் கோரிக்கைகள், 2005-2006, விவாதமும் வாக்கெடுப்பும்** — தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 13 – எரிசக்தித் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 24 – உள் துறை – இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள் – நிருவாகம்**

**(இ) கோரிக்கை எண் 46 – போக்குவரத்துத் துறை**

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன் 233-252,253, 254-260

பக்கங்கள்

**4. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்** — தொடர்ச்சி

(ஈ) கோரிக்கை எண் 26 – **தொழில் துறை**

(உ) கோரிக்கை எண் 16 – **கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை – கைத்தறி மற்றும் துணிநூல்**

| | |
|---|---|
| மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன் | 263,270, 276-277,289, 291-292,300, 301-302,310 |
| மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம் | 266,270-271, 273-274,307 |
| திரு. கே.என். இலட்சுமணன் | 271,272-273, 274-276, 277-278 |
| திரு. எஸ்.எஸ். ரமணீதரன் | 278-286 |
| திரு. லா. சந்தானம் | 287-288, 289-291, 292-293 |
| முனைவர் செ.கு. தமிழரசன் | 294-301, 302-306, 307-310, 311-312 |
| திரு. ஆ.கு.சி. அன்பழகன் | 312-316 |

**5. அரசினர் தீர்மானம்—**

விதி 32–ஐத் தளர்த்துதல் 316-317

**6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 317-318

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 17, தாரண — திருவள்ளுவர் ஆண்டு 2036

## 2005 மார்ச் 30, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு."

பொது நன்மையின் பொருட்டு பெரியோர்கள் சொல்லும் கடும் சொற்களானாலும், அவற்றைச் செவியாறக் கேட்டு நடப்பவருக்கு இவ்வுலகமானது எப்பொழுதும் அடங்கியே நடக்கும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். வினா எண் 241, திரு. ஆ. ராஜகோபால், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**241—**

### தூர்வாரும் பணி

***25379—திரு. ஆ. ராஜகோபால்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி தொகுதி, வெம்பக்கோட்டை ஒன்றியம், வல்லம்பட்டி கிராமத்தில் கண்மாய்கள் தூர்வாரி கரைகள் பலப்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 மார்ச் 30

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) சிவகாசி தொகுதி, வெம்பக்கோட்டை ஒன்றியம், வல்லம்பட்டி கிராமத்தில் பொதுப் பணித் துறை கண்மாயை நவீனப்படுத்தும் பணிக்கு ரூ.44 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. (ஆ) நபார்டு வங்கி கடனுதவி பெற்று இப்பணி மேற்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 242, திரு. இரா. இராம் பிரபு, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**242—**

## புதிய பாலம்

***42410—திரு. இரா. இராம் பிரபு:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமக்குடி நகரில், முதுகுளத்தூருக்குச் செல்லும் சாலையில் பழுதடைந்த நிலையிலுள்ள பாலத்தை புதிதாக அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம். அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 243, திரு. அ. நடராஜன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**243—**

## அங்காடிக் கட்டடம்

***11017—திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

226619.
சென் ... 600 018



2005 மார்ச் 30]

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், மருதவாஞ்சேரி ஊராட்சியில் அங்காடிக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், மருதவாஞ்சேரி ஊராட்சியில் உள்ள நியாயவிலைக் கடை முழுநேரக் கடையாக வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இக்கடைக்குப் புதிதாகக் கட்டடம் கட்டித் தரக் கோரி, திருவாரூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட அலுவலருக்கு மண்டல இணைப் பதிவாளரால் முன்மொழிவு அனுப்பப்பட்டது. நியாயவிலைக் கடைக் கட்டடம் கட்டுவதற்கு சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம் வழிகாட்டு நெறிமுறைகளில் தற்போது வழிவகை இல்லையென மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையால் தெரிவிக்கப்பட்டு, 2004–2005 ஆம் நிதியாண்டு வரை கட்டடம் கட்டுவதற்கான நிதி ஏதும் திருவாரூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையால் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இந்நிலையில் அரசின் இதர கிராமிய நலத் திட்டங்களின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில், இக்கடைக்குப் புதிதாகக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இல்லை என்ற சொல்லே இல்லாமல் செய்த மாண்புமிகு அம்மா அவர்களை, உலகமே வியந்து பாராட்டுகின்ற வகையில் சிறப்பான நிதிநிலை அறிக்கையைத் தந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். எனது தொகுதியான திருவாரூர் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், மருதவாஞ்சேரி ஊராட்சியில் மக்கள் நலன் கருதி கூட்டுறவு அங்காடிக் கட்டடம் கட்டித் தர அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதனைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் இதர கிராமிய நலத் திட்டங்களின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில், இக்கடைக்குப் புதிதாகக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. நடராஜன்.

[2005 மார்ச் 30

**திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரையில் வாய்ப்புகள் இருந்தால் செய்து தருவேன் என்று சொல்லியிருக்கின்றார்கள். இந்த மாமன்றத்திலே உள்ள அனைத்து உறுப்பினர்களுடைய கோரிக்கை, பெரும்பாலானவர்களின் கோரிக்கை, அனைத்துக் கிராமங்களுக்கும் தேவையான ஒன்று. எனவே, எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்கள், எங்கள் தொகுதி மேம்பாட்டு நிதியை 1 கோடி ரூபாயாக உயர்த்தித் தந்திருக்கிறார்கள். அந்த நிதியின்மூலம் இதுபோன்ற அங்காடிக் கட்டடங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நிதியமைச்சர் அவர்கள் மூலமாக அம்மா அவர்களிடம் ஆலோசனை பெற்று, வரும் நிதியாண்டில் இதுபோன்று செய்வதற்கு ஆவன செய்வாரா என்பதனைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு இவை குறித்து பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 244, திரு. எஸ்.எம். பாலன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**244—**

### அரசு பொது மருத்துவமனை

***6559—திரு. எஸ்.எம். பாலன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடி அரசு பொது மருத்துவமனையை மாவட்ட அரசு பொது மருத்துவமனையாக விரிவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 212, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 29–6–2004–ன்படி, திருச்சி மாவட்டம், மணப்பாறை அரசு மருத்துவமனை, மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாகத்



2005 மார்ச் 30]

தரம் உயர்த்தப்பட்டுள்ளது. எனவே, லால்குடி அரசு பொது மருத்துவமனையை மாவட்ட அரசு பொது மருத்துவமனையாக விரிவுபடுத்தும் சாத்தியக்கூறு இல்லை.

**திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட மருத்துவமனை வேறு பகுதிக்கு மாற்றப்பட்டதாக அறிகின்றேன். லால்குடி அரசு மருத்துவமனை பழமை வாய்ந்தது. புற நோயாளிகள் 1500 பேரும், உள் நோயாளிகள் 100 பேரும் சிகிச்சை பெறுகிறார்கள். கட்டடங்களும் பழமையாகிவிட்டன. அதிலும் இடமில்லாமல் மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அதோடு உதவி செவிலியர்கள், துப்புரவுப் பணியாளர்கள், Lab-Technician-கள் தேவை. மேலும், இங்கு ஒரு அறுவை சிகிச்சை அரங்கம் நல்லமுறையில் இருக்கிறது. ஆனால், சிறப்பு அனுமதியாக ஒரு அறுவை சிகிச்சை நிபுணரும் தேவை. மாவட்ட மருத்துவமனையைத் திறக்காவிட்டாலும், மேற்கூறிய வசதிகள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் ஏற்படுத்தப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

முற்பகல் 10–05

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய மருத்துவமனையினுடைய தரத்தை உயர்த்த வேண்டுமென்று ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசில் இந்தியாவிலேயே நமது மாநிலத்திலே முதன் முதலாக உலக சுகாதாரத் திட்டத்தின்படி, உலக வங்கியினுடைய நிதியைப் பெற்று, இன்றையதினம் தமிழகத்திலுள்ள 270 அரசு மருத்துவமனைகளின் தரம் உயர்த்தப்பட்டு இருக்கின்றன. இந்த ஆண்டு ஐந்து மாவட்டங்களிலும், வருகின்ற ஆண்டு அத்தனை மாவட்டங்களிலும் செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அந்த அடிப்படையிலே பார்க்கும்போது, வருகின்ற ஆண்டு உலக வங்கியினுடைய நிதியைப் பெற்று, அதற்கான நடவடிக்கை எடுக்கும்போது, லால்குடி மருத்துவமனையினுடைய தரமும் உயர்த்தப்பட்டு அங்கு செவிலியர்கள் நியமிக்கப்பட்டு மற்றும் அறுவைச் சிகிச்சைக்கான உபகரணங்களும் வாங்கித் தரப்படும் என்பதை மாமன்றத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[2005 மார்ச் 30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.எம். பாலன்.

**திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய மருத்துவமனைக்கு நிதி அனுமதித்ததற்கு மருத்துவத் துறையில் சரித்திரம் படைக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின், பொற்பாதம் தொட்டு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 245, செல்வி சி. கனகதாரா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**245—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

***59107—செல்வி சி. கனகதாரா:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேர்ணாம்பட்டு தொகுதி, மேல்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட சுகாதார நிலையமாக நவீனப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு தொகுதியில், மேல்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தினை 30 படுக்கைகள் வசதி கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

**செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் தங்கத் தாரகை மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்கி என்னுடைய வினாவைத் தொடுக்கின்றேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய பேர்ணாம்பட்டு தொகுதியில் மேல்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் நூற்றுக்கணக்கான புறநோயாளிகள் தினமும் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். இது மிகவும் பழமை



2005 மார்ச் 30]

வாய்ந்தது. இந்த நிலையில் எல்லியபுரம், லாவிதம்பட்டி, கார்கூர், பல்லளக்குப்பம், செண்டத்தூர், எம்இ. குப்பம், நாகதோப்பு, நல்லியம்பட்டு, கைலாசகிரி ஆகிய பத்துக்கும் மேற்பட்ட கிராம மக்கள் இந்த மருத்துவமனையில்தான் சிகிச்சை பெற்று வருகின்றனர். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, பொதுமக்களின் தேவையைக் கருதி மேல்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்படுவதற்கு, ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய நான் விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் 2001-லிருந்து 2005 வரையில் கிட்டத்தட்ட 104 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. அந்த 104 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும் தரம் உயர்த்தப்பட்டது மட்டுமல்லாமல், ஒன்றியத்திற்கு ஒன்று என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே பார்க்கும்போது, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, வருகின்ற நிதியாண்டிலே, அவருடைய மருத்துவமனையைத் தரம் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 246, திரு. ப. அரசன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**246—**

### கைமுறை காகித ஆலை

***46099—திரு. ப. அரசன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோயில் நகரில் கதர் வாரியம் மூலம் கைமுறை காகித ஆலை தொடங்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[2005 மார்ச் 30

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இல்லை.*

**திரு. ப. அரசன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய அறந்தாங்கி தொகுதியிலே ஆவுடையார்கோயில் மிகவும் வறண்ட பகுதி, பிற்படுத்தப்பட்ட பகுதி. அந்தப் பகுதியிலே இளைஞர்கள் படித்துவிட்டு எந்த வேலை வாய்ப்புமின்றி இருக்கிறார்கள். இந்தக் கைமுறை காகித அலகு தொடங்குவதற்கு பெரிய அளவு நிதி ஒன்றும் தேவைப்படாது. சிறிய அளவு நிதியே அதற்குப் போதும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தப் பகுதியிலே கைமுறை காகித அலகு ஒன்று தொடங்குவதற்கு மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டில் 19 கைமுறை காகித அலகுகள் தொடங்கப்பட்டு, அதிலே விடாரம், செண்பகப்புதூர், கோவளம், உதகை இந்த நான்கு இடங்களிலே மட்டும்தான் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மீதி இருக்கிற 15 இடங்களிலேயே தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்த காரணத்தால், தொடர்ந்து நடத்த முடியாமல் போய் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பின்தங்கிய பகுதி என்று குறிப்பிடுகிற காரணத்தால், கைமுறை காகித அலகு உற்பத்தி செய்யக்கூடிய தொழிற் கூட்டுறவுச் சங்கம் ஒன்றைப் புதிதாக ஏற்படுத்தி, அதன்மூலம் இதுபோன்ற கைமுறை காகித அலகு செய்யக்கூடிய முறையை, அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களுக்கு எடுத்துத் தெரிவித்து அந்தத் தொழில் செய்ய முன்வருவார்களேயானால் நேரடியாக வாரியம் கடன் வழங்க இயலாது, வங்கிகளுக்கு அனுப்பி வைத்து சிபாரிசின் அடிப்படையிலே அவர்களுக்கு உதவி செய்வதற்குத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10–10*

***(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)***

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 247, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.*



2005 மார்ச் 30]

**247—**

## பிளீச்சிங் பவுடர் தொழிற்சாலை

***57607—திரு. நா. சந்திரமோகன்:**

*மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதியில் உள்ள ஆறுகளில் கிளிஞ்சல்கள் கிடைப்பதால் பிளீச்சிங் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.*

**திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியிலுள்ள உப்பனாறுகளில் குறிப்பாக வெள்ளப்பள்ளம், திருநகரி, எடமணல், ராதாநல்லூர், தாழந்தோண்டி, காட்டூர், செம்மங்காடு ஆகிய பகுதிகளில் உள்ள உப்பனாறுகளில் அதிகளவு கிளிஞ்சல்கள் கிடைக்கின்றன. அவை லாரியில் வெளியூர்களுக்கு ஏற்றிச் செல்லப்படுகின்றன. அக்கிளிஞ்சல்களைக் கொண்டு சீர்காழி பகுதியிலுள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில் பிளீச்சிங் புவுடர் தயாரிக்கும் தொழிற்சாலையைத் தொடங்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கிளிஞ்சல் தொழில் என்பது அரசு நிர்ணயம் செய்து வைத்திருக்கிற புதிய அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் பல்வேறு தொழில்கள் செய்தால், இந்தத் தொழிலில் கடன் உதவி வழங்கி அந்தந்தப் பகுதிகளிலே ஒரு தொழிற்சாலை தொடங்குவதற்குரிய வாய்ப்புகளை சிறுதொழில் வாரியம் மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி அறிவித்திருக்கிறது. அந்த குறிப்பிட்டிருக்கக்கூடிய தொழில்களில் இந்தக் கிளிஞ்சல்கள் மூலமாக பிளீச்சிங் பவுடர் செய்யக்கூடிய தொழிற்சாலை அமைப்பதற்குரிய அந்தத் தொழில்*

[2005 மார்ச் 30

அதிலே இடம் பெறவில்லை. இருந்தாலும்கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுபோன்ற பிளீச்சிங் பவுடர் தயாரிக்கக்கூடிய தொழிற்சாலை தொடங்குவதற்கு அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய தொழில் முனைவோர்கள் முன்வருவார்களேயானால் அவர்களுக்கு மாவட்ட தொழில் மையத்தின் மூலமாக கடன் உதவிகளைப் பெற்று குழுவாகவோ அல்லது கூட்டமைப்பின் மூலமாகவோ அவர்கள் தொடங்குவதற்கு அரசு உதவி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. சந்திரமோகன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் தொகுதியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *248*, திரு. சு. சிவராஜ், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

**248—**

### ஆதிதிராவிடர் நலத் துறை ஆரம்பப் பள்ளி

***36539—திரு. சு. சிவராஜ்:**

*மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ரிஷிவந்தியம் தொகுதி, பெரியபகண்டை காலனியில் ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் ஆரம்பப் பள்ளி தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *249*, திரு. வெ. ஏழுமலை, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.



2005 மார்ச் 30]

**249—**

### சிற்றுந்துகள்

***28758—திரு. வெ. ஏழுமலை:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) செஞ்சி நகரில் சிற்றுந்துகளின் உரிமையாளர்கள் அறிவிக்கப்பட்ட வழித்தடங்களில் அவற்றை இயக்காமல் அரசு பேருந்துகளுக்கு இடைஞ்சலாக இயக்கி அரசுக்கு நஷ்டம் உண்டாக்கி வருவது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?*

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) செஞ்சி நகரில் தற்போது மொத்தம் ஏழு சிற்றுந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த ஏழு சிற்றுந்துகள் முறைப்படி இயக்கப்பட்டு வருகின்றன என்றாலும், அனுமதிக்கப்பட்ட வழித்தடத்தில் இயக்காமல் தடம் மாற்றி இயக்கப்படும் நேரங்களில் அந்த வாகனங்களுக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலரால் தணிக்கை அறிக்கை வழங்கப்பட்டு, வாகன உரிமையாளரிடம் இணக்கக் கட்டணமும் வசூலிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிற்றுந்து உரிமையாளர்கள் அனுமதித்த வழித்தடங்களில் இயக்காமல் தவறுதலாக அவர்கள் விருப்பம்போல் இயக்குவதால் நகரப் பேருந்துகளில் வசூல் குறைகிறது. இதனால் நகரப் பேருந்து அந்த வழித்தடங்களில் இயக்குவதையே நிறுத்தும் நிலையை உருவாக்கி வருகிறார்கள். இதனால் பொது மக்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். எனவே அனுமதிக்கப்பட்ட வழித்தடங்களில்தான் சிற்றுந்துகள் இயக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படுமா என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏழுமலை அவர்கள் சொன்னதுபோல அந்த நிலையெல்லாம் கடந்த திராவிட முன்னேற்றக்

[2005 மார்ச் 30

கழக ஆட்சிக் காலத்திலே இருந்தது உண்மைதான். காரணம் அந்த ஆட்சியிலே அவர்கள் செல்லப் பிள்ளைகள்போல அவர்கள் இஷ்டத்திற்கு விருப்பம்போல் அந்த மினி பஸ் உரிமங்களைப் பயன்படுத்தி வந்தார்கள். அந்த நிலையை இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கட்டுப்படுத்தி வந்ததற்குப் பின்பு விதிமுறை பிரகாரம் இயக்கப்பட வேண்டும் அல்லது அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று வலியுறுத்தி அதன்மூலமாக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தமிழகத்தைப் பொறுத்தளவிலே ஆண்டுதோறும் பல்வேறு வாகனங்கள் சோதனை செய்யப்படுகின்றன. சென்ற ஆண்டுகூட 6,288 வாகனங்கள் சோதனை செய்யப்பட்டு தணிக்கை அறிக்கைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதேபோல, அந்த 6,288 சோதனைகளிலும், இணக்கக் கட்டணமாக– அந்த வண்டிகளுக்கு இணக்கக் கட்டணமாக–fine–44,88,200 ரூபாய் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. இன்னும், நம்முடைய துறை அதிகாரிகளிடம் சொல்லி, மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால், இப்போது அந்த நிலை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல, ஏதோ இங்கொன்றும், அங்கொன்றுமாக, விதிமுறைகளுக்குப் புறம்பாக யாராவது அந்தமாதிரி இயக்குவார்களேயானால், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், உடனடியாக அவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வெ. ஏழுமலை.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய வழித் தடங்களில், சிற்றுந்துகளை இயக்க, அரசு அனுமதியளிக்க செயற்குறிப்பு ஏதாகிலும் அரசிடம் உள்ளதா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதிமுறைகளுக்குட்பட்டு, சட்டத்திற்குட்பட்டு, இப்போது அந்தந்த மாவட்டத்தில் அனுமதிக்கப்பட்ட சிற்றுந்துகளுக்குள்ள உரிமங்கள் கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்குமேயானால், அதுகுறித்து அரசு ஆய்வு செய்து, அந்தந்த மாவட்டங்களின் தகுதியின் அடிப்படையில், விதிமுறைகளுக்குட்பட்டு அந்த உரிமங்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2005 மார்ச் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நடராஜன்.

**திரு. வ. து. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதங்களைத் தொட்டு வணங்கி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடம், என் தொகுதியில், 15 கிலோ மீட்டர், 20 கிலோ மீட்டர் தொலைவிலே, நடந்து செல்லமுடியாத அளவில் இருந்த சாலைகள் எல்லாம் தார்ச் சாலைகளாகப் போடப்பட்டிருக்கின்றன. அதிலே, புதிய வழித் தடங்கள் தொடங்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 250, திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**250—**

## சொந்தக் கட்டடம்

***37768—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோபிசெட்டிப்பாளையத்திலுள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கோபிசெட்டிப்பாளையம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட, அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலம் ஏதும் இல்லை. எனவே, வேறு தகுதியான தனியார் நிலம் கிடைக்கும்பட்சத்தில், நில எடுப்பு செய்து, அதன் பின்னர் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, சொந்தக் கட்டடம் கட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கோபிசெட்டிப்பாளையம் பகுதியானது, வளர்ந்து வருகின்ற ஒரு நகரமாகும். இப்பகுதியில், வாகனங்கள் அதிகமாக உள்ளன. இங்கு செயல்படும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், நெடு நாட்களாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இது, சிறிய கட்டடம் என்பதால், பொது மக்கள் தங்களுடைய ஓட்டுநர் உரிமங்களைப் புதுப்பிக்க வரும்போதும், மற்ற பணிகளுக்கு வரும்போதும், இட நெருக்கடியால் மிகவும் சிரமப்படுகின்றனர். கோடிக்கணக்கான ரூபாய் செலவில், நலத் திட்டங்களைக் கொடுத்து வரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில், அமைச்சர் அவர்கள், மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, கோபிசெட்டிப்பாளையம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் கட்டுவதற்கு, அரசு முயற்சிகளை மேற்கொண்டபோது, உரிய இடம் கிடைக்காததன் காரணமாகத்தான், அந்தக் கட்டடம் கட்டுவதற்கு இப்போது இயலவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்கூட, அங்கு இடம் கிடைப்பதற்கு ஏதேனும் உதவி செய்வார்களேயானால், அந்த இடத்தைக் கையகப்படுத்தி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, அங்கே புதிய கட்டடம் கட்டுவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். ரமணீதரன்.

**திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோபிசெட்டிப்பாளையம் தொகுதியில், அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான நிலம் சுமார் 5 ஏக்கருக்கு மேல் உள்ளது. எனவே, வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் கட்ட, அந்த நிலத்தில் இடம் ஒதுக்கித் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம், அவருடைய உதவியை நாடினால், அவர் மீண்டும் அரசின் உதவியை நாடுகிறார். அங்கே இருக்கின்ற போக்குவரத்துக் கழகத்திற்கு வேண்டிய இடமே, அங்கே இருக்கின்ற இடமே, போதுமான அளவுக்கு இல்லை என்கின்ற



காரணத்தினால், அதுகுறித்து அரசு ஆய்வு செய்வதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி செல்வி முருகேசன்.

**திருமதி செல்வி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன். காங்கேயம், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், தற்போது வாடகைக் கட்டடத்தில்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. தனியார் ஒருவர் தனது சொந்த நிலத்தை தானமாகக் கொடுப்பதற்கு முன்வந்துள்ளார். ஆகையால், அந்த இடத்தை அரசு கையகப்படுத்தி, காங்கேயம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா என்பதை அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அரசினுடைய நிதிநிலைக்கேற்ப, அதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.கே. பெருமாள்.

**திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மதுரை பை-பாஸ் சாலையில் அரசுப் புறம்போக்கு நிலங்கள் ஏராளம் இருப்பதால், அங்கே சொந்தக் கட்டடம் அமைக்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக, அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன பதில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கும் பொருந்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு.

[2005 மார்ச் 30

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் சம்பந்தமாகக் கூறினார்கள். கோவை மாவட்டத்திலே வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடம் ஏதாவது கட்டும் திட்டம் உள்ளதா? என்னுடைய உடுமலைப்பேட்டை தொகுதியிலே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே 2003 ஆம் ஆண்டு புதிதாக ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகமானது தொடங்கப்பட்டது. அந்த இடமும் இப்போது வாடகைக் கட்டடத்திலே உள்ளது. அதற்கு அருகிலேயே 90 சென்ட் இடம், நகர எல்லையிலேயே வாங்கி, வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ளது. அங்கேயும் ஒரு கட்டடம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே கட்டித்தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கோவை மாவட்டத்திலே ஏதாவது ஓர் அரசு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படுமா என்று கேட்டார். நான் அவருக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன், மாண்புமிகு தமிழக முதலமைச்சர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கோவை மாவட்டத்தில், திருப்பூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு இந்த ஆண்டு 110 இலட்சம் ரூபாய் செலவிலே புதிய கட்டடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியினை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தொகுதியினுடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சிவசாமி அவர்கள்கூட அடிக்கடி அதை வலியுறுத்தி வந்தார்கள். அதேபோல, இப்போது நாமக்கல் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கும் சொந்தமாக ரூ. 125.65 இலட்சம் செலவிலே, புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியினையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர், நமது உடுமலைப்பேட்டை உறுப்பினர் அருமை அண்ணன் சண்முகவேலு அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அவருடைய ஊரிலும், வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டுவது குறித்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.



2005 மார்ச் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எஸ். பழனிசாமி.

**திரு. கே.எஸ். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன். என்னுடைய ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதியிலே நம்முடைய போக்குவரத்துக் கழகத்தின் சார்பிலே மிகப் பெரியதொரு மருத்துவக் கல்லூரி இயங்கி வருகிறது. மிக முக்கியமானதொரு transport city என்று சொல்லக்கூடிய அளவிலே, பெருந்துறை விளங்கிக் கொண்டிருக்கிற காரணத்தினாலும், நாமக்கல், திருச்செங்கோடு போன்ற நகரங்களுக்கு அடுத்தபடியாக lorry போக்குவரத்தும், ஆழ்குழாய்க் கிணறு அமைக்கக்கூடிய இயந்திரங்களும் அதிகமாக உள்ள பெருந்துறை நகருக்கு சொந்தமாக வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் இல்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நிதியாண்டிலே என்னுடைய பெருந்துறையில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு சொந்தமாக ஒரு கட்டடம் கட்டுவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்ததுபோல, அரசின் நிதிநிலைக்கேற்ப, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, இதுகுறித்து அரசு ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இனிமேல் இதுபோல், புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் கட்டப்படுமா என்று யாராவது கேட்டால், அதற்கும் இந்தப் பதிலே பொருந்தும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 251, திரு. க. பாரமலை, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**251—**

## புதிய விடுதிக் கட்டடம்

***34572—திரு. க. பாரமலை:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 மார்ச் 30

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் பிற்படுத்தப்பட்ட சமுதாய மாணவிகளுக்கு புதிய விடுதிக் கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், புதிய கட்டடம் கட்டும் பணி எப்போது தொடங்கும்?

முற்பகல் 10–25

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் பிற்படுத்தப்பட்ட சமுதாய மாணவிகளுக்கு புதிய விடுதிக் கட்டடம் கட்டும் திட்டம் இந்த ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் பரிசீலனையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 252, திரு. எஸ். மாணிக்கராஜ், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**252—**

## கால்நடை மருத்துவமனை

***41339—திரு. எஸ். மாணிக்கராஜ்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி தொகுதி, தோட்டக்குடி ஊராட்சி, மருதகுளத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி தொகுதி, தோட்டக்குடி ஊராட்சியில் உள்ள மருதகுளத்தில் 3904 கால்நடைகள் மட்டுமே உள்ளதாலும், தற்போது துறையில் செயல்பட்டு வரும் கால்நடை கிளை நிலையங்கள் மட்டுமே தரம் உயர்த்தப்பட்டு வருவதாலும், அரசின் தற்போதைய நிதி நெருக்கடி காரணமாகவும், மருதகுளம் கிராமத்தில் எந்தவொரு கால்நடை கிளை நிலையமும் செயல்படாத நிலையில், அங்கு நேரடியாக ஒரு கால்நடை மருத்துவமனை தொடங்க தற்போது வாய்ப்பில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



2005 மார்ச் 30]

**திரு. எஸ். மாணிக்கராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முன்னிலையில் சட்டமன்றத்தில் நான் வைத்த கோரிக்கையான. எனது தொகுதிக்குட்பட்ட திட்டங்கள் அத்தனையும் செய்து தந்திருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, நாங்குனேரி சட்டமன்றத் தொகுதி. மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதி. வேலைவாய்ப்பு இல்லாத பகுதி. மகளிர் பெரும்பாலோர் விவசாய கூலி வேலை செய்து வருகின்றனர். அவர்கள் ஆடு–மாடுகள் வளர்த்து வருகின்ற நிலையிலே, நாங்குனேரியிலே மட்டும்தான் அந்தக் கால்நடை சுகாதார நிலையம் ஒன்று இருக்கிறது. மருதகுளத்தைப் பொறுத்தவரையில் 10 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. அந்தப் பகுதியிலே ஒரு கிளை சுகாதார நிலையம் அமைத்துக் கொடுத்தால், அந்தப் பகுதியிலுள்ள மக்கள் ஆடு–மாடுகளுக்கு சிகிச்சையைப் பெறுவதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணை பெற்று புதிய கால்நடை கிளை நிலையங்கள் ஏற்படுத்துவது குறித்து பரிசீலிக்கும்போது, மருதகுளம் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் ஏற்படுத்த கவனத்தில் கொள்ளப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். மாணிக்கராஜ்.

**திரு. எஸ். மாணிக்கராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குனேரி தொகுதி, மருதகுளம் கிராமத்திற்கு அருகில் கால்நடை மருத்துவ நிலையங்கள் ஏதுமில்லை. இதனைச் சுற்றியுள்ள கிராம மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, இங்குள்ள கால்நடைகளுக்குச் சிகிச்சை பெற தற்போது வழியுண்டா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான கவனத்திற்குக் கொண்டு சென்று, நிச்சயமாக இந்த நிதியாண்டில் நிதிநிலைக்கு ஏற்ப மருதகுளம் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் தொடங்க வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்கப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2005 மார்ச் 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பக்கத்து ஊருக்குக் கொண்டு போக வேண்டியதுதானே? திரு. லா. சந்தானம். (குறுக்கீடு)

**திரு. எஸ். மாணிக்கராஜ்:** நன்றி.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு கால்நடை மருத்துவமனைகள் தொடங்குகின்ற செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா? அப்படியென்றால் எத்தனை கால்நடை மருத்துவமனைகள், தமிழகத்திலே இந்த ஆண்டு தொடங்கவிருக்கின்றன என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கையிலே பதில் சொல்வார்கள்.

வினா எண் 253, திரு. கா.தி. இளையகண்ணு, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**253—**

## வனநில ஆக்கிரமிப்பு

***51099—திரு. கா.தி. இளையகண்ணு:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் வனங்களுக்கு அருகில் உள்ள பட்டா உரிமையாளர்கள் மற்றும் எஸ்டேட் உரிமையாளர்களால் வன நில ஆக்கிரமிப்பு செய்யப்படுவதை தடுப்பதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பட்டா உரிமையாளர்கள் மற்றும் எஸ்டேட் உரிமையாளர்கள் வன நிலங்களை ஆக்கிரமிப்பு செய்யவில்லை. அதனால் ஆக்கிரமிப்பை அகற்றும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்காடு தொகுதி, ஏற்காடு மலையில், பிரசித்திபெற்ற சேர்வராயன் கோவில் உள்ளது. இந்தக் கோவிலில் தரிசனம் செய்வதற்காக—சுற்றுலாத் தலமாக இருப்பதால்—பொதுமக்கள் அதிகமாக வருகிறார்கள். அங்கு சாலையோரங்களிலே, கோவில் அருகிலே வன நிலங்களை ஒரு தனியார் நிறுவனம் ஆக்கிரமிப்பு செய்துள்ளது. பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல், இந்தக் கோவிலுக்கு அருகிலுள்ள தனியார் ஆக்கிரமித்துள்ள நிலங்கள் குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2005 மார்ச் 30]

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவிலுக்கு அருகிலுள்ள வன நிலங்களை தனியார் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக வனத் துறைக்கு எந்தத் தகவலும் இல்லை. அப்படி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு ஆக்கிரமிப்பு அகற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா.தி. இளையகண்ணு.

**திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தனியார் நிறுவனம் கனிம மண்ணை வெட்டி எடுத்துச் செல்கிறது. இந்தத் தனியார் நிறுவனம் மால்கோ என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது பொதுமக்களுக்கு இடையூறாகவும், வருகின்ற பக்தர்களுக்கு சிரமமாகவும் உள்ளதால், வாகனங்களை நடு வழியில் நிறுத்திவிட்டு, சாலை ஓரங்களிலே இருக்கின்ற மண்ணைக்கூட எடுக்கிறார்கள். இது அதிகாரிகளுக்குத் தெரியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுமக்கள் கொடுக்கின்ற புகார்கள்மீது அதிகாரிகள் செம்மையாக நடவடிக்கை எடுக்காத காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 254, திரு. ஆ.கு.சி. அன்பழகன், மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

[2005 மார்ச் 30

**254—**

## தொழில்நுட்பப் பயிலகம்

***20485—திரு. ஆ.கு.சீ அன்பழகன்:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூரில் அரசு தொழில்நுட்பப் பயிலகம் அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரணமல்லூரில் அரசு பாலிடெக்னிக் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ.கு.சீ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் கல்வித் துறையிலே பல்வேறு திட்டங்களை அறிவித்து கல்லாமையே இல்லாமல் ஆக்கி கல்விப் புரட்சியைச் செய்துள்ளார்கள். ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை படிக்கும் 97 இலட்சம் மாணவ மாணவிகளுக்கு இலவசப் பாடப் புத்தகங்களை வழங்கும் திட்டத்தினை அறிவித்து மாணவர்கள் வயிற்றில் பால் வார்த்தார்கள். எனது தொகுதியில் தொழில்நுட்பக் கல்லூரி இல்லாத காரணத்தால் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு மாணவர்கள் 25 கிலோ மீட்டர் தூரம் சென்று தொழில் கல்வி படிக்க வேண்டும் என்ற நிலை உள்ளது. எனவே, அடுத்த கல்வி ஆண்டிலாவது பெரணமல்லூரில் தொழில்நுட்பக் கல்லூரியாவது, சேத்துப்பட்டு பகுதியில் கலைக் கல்லூரியாவது அமைக்க அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பாலிடெக்னிக் அமைக்க வேண்டுமானால், நில மதிப்பு நீங்கலாக சுமார் 10 கோடி ரூபாய் செலவாகும். தமிழகம் முழுவதும் உள்ள மொத்தம் 209 தொழில்நுட்பக் கல்லூரிகளில் ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை 58,089. இவற்றில் 2004–2005 ஆம் கல்வி ஆண்டில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 46,819. 11,270 இடங்கள் காலி இடங்களாக உள்ளன. பெரணமல்லூர் தொகுதி அடங்கியுள்ள திருவண்ணாமலை மாவட்டத்தில் தற்போது 8



2005 மார்ச் 30]

பாலிடெக்னிக் கல்லூரிகள் சுய நிதி அடிப்படையில் அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுவின் அங்கீகாரம் பெற்று இயங்கி வருகின்றன. இதில் 2004–2005 ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் 2,260 இடங்கள். அவற்றில் 937 இடங்கள் மாணவர்கள் சேர்க்கை இல்லாமல் காலி இடங்களாக இருக்கின்றன. ஆகவே இருக்கின்ற பாலிடெக்னிக் கல்லூரிகளிலே கணிசமான இடங்கள் காலியாக இருப்பதால் மேலும் புதிய கல்லூரிகளைத் தொடங்கினால் காலி இடங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு இது வழிவகுக்கும். மேற்கண்ட சூழ்நிலையில் பெரணமல்லூர் தொகுதியில் புதியதாக தொழில்நுட்பக் கல்லூரியைத் தொடங்குவதற்கான அவசியம் எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன்.

**திரு. ஆ.கு.சீ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தொகுதியில் ஒரு அரசு கலைக் கல்லூரியையாவது அமைக்க வாய்ப்புள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கலைக் கல்லூரிகளை ஆரம்பிக்க வேண்டுமென்றால் அந்தந்த பல்கலைக்கழகங்களுக்கே அந்தக் கலைக் கல்லூரிகளை ஆரம்பிப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கலைக் கல்லூரி தொடங்க வேண்டுமானால் அதற்குரிய அடிப்படைத் தகுதிகள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன். அதேசமயத்தில் தனியார் புதிய கலைக் கல்லூரிகள் தொடங்குவதற்கு இந்த அரசு அனுமதி தருமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியார் துறையிலே கலைக் கல்லூரிகளை ஆரம்பிக்க அனுமதி அளிக்கப்படுமா என்று கேட்டார்கள். அந்தப் பகுதியிலே தேவையின் அடிப்படையிலே அவசியம் இருப்பின் கண்டிப்பாக அதற்கு அனுமதி அளிப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2005 மார்ச் 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 255, திரு. ஏ. பூவராகமூர்த்தி, மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.*

**255—**

## கலைக் கல்லூரி

***32862—திரு. ஏ. பூவராகமூர்த்தி:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அச்சரப்பாக்கம் தொகுதி, சித்தாமூர் ஒன்றியத்தில் கலைக் கல்லூரி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) அரசு கலைக் கல்லூரி ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. பூவராகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் நான் கேட்காமலேயே என் தொகுதிக்கு கோடிக்கணக்கில் செலவழித்து பல்வேறு திட்டப் பணிகளை நிறைவேற்றித் தந்த எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 10–35*

மேலும் அச்சரப்பாக்கம் தொகுதி மற்றும் மதுராந்தகம் தொகுதி ஆகிய இரண்டு தொகுதிகளிலும் உள்ள மக்கள் ஏழையெளிய விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களின் பிள்ளைகள் கல்லூரிகளில் படிக்க வேண்டுமென்றால் 150 கிலோ மீட்டர் தூரமுள்ள சென்னைக்கும், ஏறக்குறைய 60, 70 கிலோ மீட்டர் தூரமுள்ள செங்கல்பட்டிற்கும், 60, 70 கிலோ மீட்டர் தூரமுள்ள திண்டிவனத்திற்கும் சென்று படிக்கக்கூடிய கடினமான சூழ்நிலை உள்ளது. 2, 3 பேருந்துகளில் மாறி, மாறி செல்ல வேண்டிய ஒரு கடினமான சூழ்நிலை உள்ளது. எனவே, இந்த ஆண்டு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் இந்த இரண்டு தொகுதிகளில் அச்சரப்பாக்கத்திலோ அல்லது மதுராந்தகத்திலோ ஏதாவது ஒரு இடத்தில் நம்முடைய அரசு சார்பில் ஒரு அறிவியல் மற்றும் கலைக் கல்லூரியை அமைத்துத் தரவேண்டுமென்று அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.



2005 மார்ச் 30]

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையின் அடிப்படையில் அந்தந்தப் பகுதிகளைச் சார்ந்த பல்கலைக்கழகங்களே புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் தொடங்கும். ஆண்டிப்பட்டியில் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தாலும், சாத்தான்குளத்தில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தாலும், கூடலூரில் பாரதியார் பல்கலைக்கழகத்தாலும் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. அக்கல்லூரிகளைத் தொடங்க அப்பல்கலைக்கழகங்களுக்கு அரசு நிதியுதவி வழங்கியுள்ளது. மேலும் அரசின் நிதியுதவியின்றி கலைக் கல்லூரி திறப்பது குறித்து தனியாரிடமிருந்து விண்ணப்பங்கள் ஏதும் பெறப்பட்டால் அவ்விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அவருடைய தொகுதிக்கு உட்பட்ட அந்த காஞ்சிபுரம் மாவட்டத்தில் தற்போது 32 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. ஒரு அரசு கலைக் கல்லூரி, 8 அரசு உதவி பெறும் கல்லூரிகள், 23 சுய நிதிக் கல்லூரிகள் இயங்கிக் கொண்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அரசின் சார்பாக கலைக் கல்லூரியை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பூவராகமூர்த்தி.

**திரு. ஏ. பூவராகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு அமைச்சர் கூறியதுபோல், எங்களுடைய தொகுதியைச் சுற்றி, ஏறக்குறைய 50, 60 கிலோ மீட்டர் தாண்டிதான் செல்கின்ற நிலை இருக்கின்றது. எனவே, இந்த இரண்டு தொகுதிகளுக்கும் நம்முடைய அரசின் சார்பில்தான் அமைத்துத்தர வழிவகை இருக்கும் என்ற காரணத்தினால், தனியார் முன்வர மாட்டார்கள் என்ற காரணத்தினால், நம்முடைய அமைச்சர் அவர்கள் அம்மா அவர்களின் அனுமதி பெற்றாவது அமைத்துத்தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைக் கல்லூரி ஆரம்பிப்பது அந்தந்தப் பல்கலைக்கழகங்களைச் சார்ந்தது என்பதால் பல்கலைக்கழகத்திலிருந்து

[2005 மார்ச் 30

ஏதேனும் முன்மொழிவுகள் வரப்பெற்றால் அதை அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். மகாலிங்கம்.

**திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பாதம் பணிந்து வணங்குகிறேன். இன்றையதினம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 110–வது விதியின்படி புதிய புதிய திட்டங்கள், புதிய புதிய அறிவிப்புகள், புதிய புதிய சலுகைகளை அறிவித்துக்கொண்டிருக்கிறார்கள். இதை தமிழக மக்கள் அனைவரும் பாராட்டிக்கொண்டிருக்கிற வேளையிலே, அவினாசி தொகுதியிலே கிட்டத்தட்ட 9–க்கும் மேற்பட்ட மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. அதிலே பிளஸ் டூ படித்த மாணவ, மாணவிகள் அதிக தொலைவில் உள்ள கோயம்புத்தூர், திருப்பூர் செல்ல வேண்டியிருப்பதால், போக்குவரத்து இடைஞ்சல் காரணமாக குறிப்பாக பெண்கள் தங்களுடைய பட்டப் படிப்பு படிக்க வேண்டுமென்று சொன்னால், மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே, கருணையின் அடிப்படையிலே எங்களுடைய அவினாசி தொகுதியில் ஒரு கலைக் கல்லூரி அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் தொடங்க வேண்டுமென்றால், அந்தந்தப் பல்கலைக்கழகங்களே தொடங்கிக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தந்தப் பல்கலைக்கழகங்கள் அந்தக் கல்லூரிகளைத் தொடங்குவதற்கு ஏதாவது அரசிடம் முன்மொழிவு அனுப்பினால் அதை அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்பையா பாண்டியன்.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே, நம்முடைய தமிழ் மாநிலத்திலே கல்வித் துறையை முதல் துறையாகக் கொண்டு வருவதற்காக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த அரசு பாடுபடுகிறது. எனது தொகுதியிலே பெரும்பான்மையான இசுலாமிய சமுதாயத்து மக்கள் குற்றாலத்தில் போய்தான் கலைக் கல்லூரியில் படிக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. கடையநல்லூர், வாசுதேவநல்லூர், புளியங்குடி ஆகிய பகுதிகளிலிருந்து, தொலைவாகச் செல்ல வேண்டியிருப்பதால், ஏற்கெனவே இந்த மாமன்றத்திலே பேசும்போது, என்னுடைய தொகுதிக்கு ஒரு மகளிர் கலைக் கல்லூரி அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறேன்.



2005 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாவேந்தர் பாரதிதாசன் பாடியதைப்போல,

“எல்லார்க்கும் நல்லின்பம்
எல்லார்க்கும் செல்வங்கள்
எட்டும் விளைந்ததென்று
கொட்டுமுரசே–வாழ்வில்
கட்டுத் தொலைந்ததென்று
கொட்டு முரசே!

இல்லாமை என்னும்பிணி
இல்லாமல் கல்விநலம்
எல்லார்க்கும் என்றுசொல்லி
கொட்டுமுரசே–வாழ்வில்
பொல்லாங்கு தீர்ந்ததென்று
கொட்டு முரசே!

சான்றாண்மை இவ்வுலகில்
தோன்றத் துளிர்த்ததமிழ்
மூன்றும் செழித்ததென்று
கொட்டுமுரசே–வாழ்வில்
ஊன்றிய புகழ்சொல்லிக்
கொட்டு முரசே!

ஈன்று புறந்தருதல்
தாயின்கடன்! உழைத்தல்
எல்லார்க்கும் கடனென்று
கொட்டுமுரசே!–வாழ்வில்
தேன்மழை பெய்ததென்று
கொட்டு முரசே.”

[2005 மார்ச் 30

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியில் ஏழை எளிய மக்களின் படிப்புக்கு தேன்மழையாகப் பொழிந்து கொண்டிருக்கின்ற இந்தத் தமிழ்நாட்டிலே, எனது தொகுதி கடையநல்லூரிலே சிறுபான்மை மக்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சரவர்கள் அங்கு ஒரு கலைக் கல்லூரி அமைத்துத்தர முன்வருவார்களா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையின் அடிப்படையிலே அந்தந்தப் பகுதியிலே கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் தொடங்குவதற்கு அந்தந்தப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கின்றது. அப்படி ஏதாவது கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க வேண்டுமென்றும், அதற்கு நிதி உதவி தேவை என்றும் அரசாங்கத்திற்கு அந்தப் பல்கலைக்கழகங்கள் முன்மொழிவு அனுப்பினால் அதைப்பற்றி இந்த அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. சிவபெருமாள்.

**திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் பகுதியிலே 40, 50 ஆண்டு காலம் எந்தவிதக் கல்லூரி வசதியும் இல்லாமல் அந்த மாணவர்கள் தவறான நிலையில் செல்லக்கூடிய ஒரு நிலையை மாற்றி, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனே 2002–லே, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் மூலமாக எங்களுக்கு ஒரு கல்லூரியை அமைத்துத் தந்து, அந்தக் கல்லூரியிலே B.B.A., B.Com., B.Sc., (Maths) ஆகிய மூன்று பிரிவுகளையும் கொடுத்து, இன்று இரண்டாண்டுகள் முடிந்து, மூன்றாவது ஆண்டு நடைபெறக்கூடிய நிலையில், இன்று அந்தக் கல்லூரி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு இன்று கட்டடங்கள் திறக்கக்கூடிய நிலையில் உள்ளன. மேலும் அந்த மாணவர்கள் மூன்றாண்டுகள் படிக்கக்கூடிய சூழ்நிலையில் அந்தக் கட்டடங்கள் போதாத காலகட்டத்தில் மாண்புமிகு அமைச்சரவர்கள் இன்னும் அதிகமான கட்டடங்கள் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களிடத்தில் எடுத்துக்கூறி,



2005 மார்ச் 30]

பரிசீலனை செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறிய கோரிக்கையை நிதிநிலைமைக்கேற்ப இந்த ஆண்டு செயல்படுத்துவது பற்றி இந்த அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் மூலம் ஆண்டிப்பட்டியில் தொடங்கப்பட்டுள்ள புதிய கலைக் கல்லூரியில் அதிகப்படியான மாணவ, மாணவியர் பயின்று வருவதால், கட்டட வசதி போதிய அளவில் இல்லாமல் இருக்கிறது. அதை வருகின்ற காலங்களில் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தால் ஆண்டிப்பட்டி தொகுதியிலே புதியதாகத் தொடங்கப்பட்டிருக்கின்ற அந்தக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்குப் புதியதாகக் கூடுதல் கட்டடங்கள் கட்டுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 256, திரு. ஜெ. குரு என்கிற குருநாதன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

**256—**

**கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம்**

***53361—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஒன்றியம், மேலாரிக்குழி ஊராட்சி மற்றும் படநிலை ஊராட்சி, காடுவெட்டியில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஒன்றியம், மேலாரிக்குழி ஊராட்சி மற்றும் படநிலை ஊராட்சி, காடுவெட்டியில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்க கோரிக்கை ஏதும் பெறப்படவில்லை. பால் உற்பத்தியாளர்களிடமிருந்து சங்கம் அமைக்கக் கோரிக்கை பெறப்பட்டால், சங்கம் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. அண்ணாதுரை.

**திரு. செ. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இலவச மின்சாரத்தை எங்களது பகுதியிலே அறிவித்த மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர் அம்மா அவர்களுக்கு எங்களது தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு எனது தொகுதிக்குட்பட்ட மேலாரிக்குழி, படநிலை, மீன்சுருட்டி ஆகிய பகுதிகளில் முந்திரிக் காடுகள், சவுக்குக் காடுகள் போன்ற காடுகள் இருப்பதால் அங்கே மாடுகளுக்குத் தேவையான தீவனங்கள் அதிகப்படியாகக் கிடைக்கின்ற காரணத்தால், அந்தப் பகுதி மக்கள் தங்கள் முக்கியத் தொழிலாக பால் உற்பத்தி செய்கின்ற தொழிலை மேற்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பாலை அதிகமாக தனியார் அங்கே குறைந்த விலைக்கு வாங்கிச் சென்று விடுகின்ற காரணத்தால் அந்தப் பகுதி விவசாயப் பெருமக்கள் பயன்பெறுகின்ற வகையிலே அந்தப் பாலை கூட்டுறவுச் சங்கங்களே அதிக விலைக்கு வாங்குவதற்கு ஏற்பாடு செய்ய சிறப்பு அனுமதி வழங்கப்படுமா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சங்கம் புதியதாக அமைக்கப்படுகிறபொழுது அது இலாபகரமாகச் செயல்படக்கூடிய வாய்ப்புகளையும் அந்தக் கிராமத்திலே பால் உற்பத்தி செய்பவர்களுடைய குறைந்தபட்சம் 25 பால் உற்பத்தியாளர்களுடைய ஒருங்கிணைந்த கோரிக்கையும் பெறப்பட்டால், எந்தப் பகுதியாக இருந்தாலும் சங்கம் அமைத்துக் கொடுப்பதற்கு அம்மா அவர்களுடைய அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இளவழகன்.

**திரு. ப. இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டம், அரியலூர் தொகுதியில் வி.கைகாட்டி என்ற இடத்தில் பால் குளிரூட்டும் நிலையத்திற்கான கட்டுமானப் பணி எப்போது தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களிடம் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாங்குடி கைகாட்டி என்ற பகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே ஆணை பிறப்பித்திருக்கின்றார்கள். அதற்குண்டான நிலம் 6.3 ஏக்கர் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் அந்த மாவட்டத்தினுடைய D.R.D.A.-விலிருந்து நிதியாக ரூபாய் 10 இலட்சத்தை அளித்திருக்கின்றார்கள். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் அவருடைய சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, குறிப்பிட்ட தொகையை அளிப்பதற்கு கடிதம் கொடுத்திருக்கின்றார்கள். இவற்றை வைத்து ஆரம்பக்கட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அங்கே மும்முனை மின்சாரம் பெறுவதற்கு மனு அளிக்கப்பட்டிருக்கின்றது. மேற்கொண்டு நபார்டு வங்கியின் மூலமாக 2 கோடி ரூபாய் கடனாகப் பெறுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. எனவே அதற்கான பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 257, திரு. செ. வெங்கடாஜலம், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

**257—**

## மீன்வள மேம்பாடு

***53422—திரு. செ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த உள்நாட்டு மீன்வள மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுமா?

[2005 மார்ச் 30

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலுள்ள ஏரிகள் மற்றும் குளங்களில் தண்ணீர் வரத்து ஏற்பட்டாலும், ஏரிகள் மற்றும் குளங்களில் தண்ணீர் இருப்பு மிகவும் குறைவான கால அளவிற்கு மட்டுமே இருக்கும் என்பதால் அம்மாவட்டத்தில் ஒருங்கிணைந்த உள்நாட்டு மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவியல் ரீதியில் மீன் வளர்ப்பதை ஊக்குவிக்க பொது ஏலம் மூலம், மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நமது அரசால் முன்னுரிமை கொடுத்து ஆண்டுதோறும் ஏலம் விடப்படுகின்றது. ஏரிகளில் மீன் குஞ்சுகளை வளர்த்து, மீன் பிடிப்பதில் ஒரு வருட காலத்தில் மீன்களைப் பிடிக்க முடியாத நிலையில் அவர்கள் இருக்கின்றார்கள். ஏரிகளில் குத்தகைதாரர்கள் வளர்த்த மீன்கள் உள்ளபோது, ஏலத்தில் போட்டியாளர்கள் குத்தகையை அதிகம் ஏற்றி ஏலம் எடுத்து, கூட்டுறவுச் சங்கங்களில் பிரச்சினைகளை உருவாக்குகின்றார்கள். எனவே குத்தகை காலத்தை ஓராண்டுக் காலம் என்பதை மூன்று ஆண்டுக் காலமாக நீட்டித்துக் கொடுத்து, மீன் உற்பத்தியைப் பெருக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன்வளத் துறையின் மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய கட்டுப்பாட்டிலே சில குளங்கள் ஒப்பந்த அடிப்படையிலேயும், வேறு சில குளங்களை கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவும் அரசு வழங்கிக் கொண்டிருக்கின்றது. விதிகள் இருப்பின், அந்த ஓராண்டுக் காலம் என்பதை மூன்றாண்டுக் காலமாக உயர்த்திக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. வெங்கடாஜலம்.

**திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் தனியார் மீன் வளர்ப்போர் அதிகரித்துள்ளார்கள். மீன் வளர்ப்புத் தொழிலை அதிகம் செய்து வருகின்றார்கள். எனவே, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம், மேட்டூர் அணையில் மீன்குஞ்சு உற்பத்தி மற்றும் வளர்ப்பு நிலையம் அமைத்து மீன்குஞ்சு வளர்ப்புப் பணிகளைச் செயல்படுத்திட அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.



2005 மார்ச் 30]

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அணை என்பது சேலம் பக்கத்திலே உள்ள பகுதியாகும். அந்தப் பகுதியிலே மீன்குஞ்சு வளர்ப்பு மற்றும் இருப்பு செய்கின்ற பணிகளெல்லாம் நடைபெற்று வருகின்றன. அதற்குத் தேவையிருப்பின் அரசு அதை பரிவோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி கனகதாரா.

**செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பேரணாம்பட்டு தொகுதி, மோர்தானா அணைக்கு அருகில் வசித்து வரும் உள்நாட்டு மீனவர்களுக்கு இனிய தலைவி நல்லாட்சியில் இலவச வீடுகள் கட்டித்தர முயற்சிகள் மேற்கொள்ள அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்நாட்டு மீனவர்களுக்கென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001-லே ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே, 500 வீடுகளைக் கொடுக்க வேண்டுமென்று ஆணையிட்டிருக்கின்றார்கள். அவர்கள் உள்நாட்டு மீனவச் சங்கத்திலே அந்த அணையிலே மீன் பிடிப்பவர்கள் member-ஆக இருந்தால், அவர்களுக்குத் தகுதி இருப்பின், வருங்காலத்திலே வீடுகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 258, திரு. பிஎஸ். அருள், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**258—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

***22721—திரு. பி.எஸ். அருள்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பிச்சாவரம் வனப் பகுதிக்கு அருகே அமைந்துள்ள கிள்ளை பேரூராட்சியில் புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தரும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

[2005 மார்ச் 30

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதி, பிச்சாவரம் வனப் பகுதிக்கு அருகே அமைந்துள்ள கிள்ளை சிறப்பு கிராம ஊராட்சிக்கு கிள்ளை குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள 4.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் வாயிலாக கிள்ளை சிறப்பு கிராம ஊராட்சிக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. எனவே, கிள்ளை சிறப்பு கிராம ஊராட்சியில் புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 10–50

**திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிள்ளை சிறப்பு ஊராட்சி முன்னால் பேரூராட்சியாக இருந்து இப்போது சிறப்பு ஊராட்சியாக மாற்றப்பட்டுள்ளது. அந்தச் சிறப்பு ஊராட்சி, 12 கிராமங்களை உள்ளடக்கியது. அந்த ஊராட்சியில், கிள்ளை, முழுக்குத்துறை, M.G.R. திட்டு, முடசலோடை, பொன்னன்திட்டு, சின்ன வாய்க்கால், பில்லுமேடு, சிங்காரக்குப்பம், தைக்கால், மீனவர் காலனி, குச்சிப்பாளையம், பிச்சாவரம் சுற்றுலா மையம் ஆகிய 12 கிராமங்களை உள்ளடக்கிய அந்தப் பகுதியில், சின்ன வாய்க்கால், பில்லுமேடு ஆகிய இரண்டு கிராமங்களும் இந்த சுனாமியில் முழுவதும் பாதிக்கப்பட்டுள்ளன. அங்கே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலறிக்கையிலே, 4 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து விநியோகம் செய்வதாக அறிவித்தார்கள். ஆனால் அந்த 12 கிராமங்களிலும் குடிநீர் உப்பு நீராகவே தொடர்ந்து இருந்துகொண்டிருக்கிறது. வெளி கிராமங்களில் bore போட்டு அந்த நீரை அந்த 12 கிராமங்களுக்கும் கிட்டத்தட்ட 8 கிலோ மீட்டர், 5 கிலோ மீட்டர் தூரத்திலிருந்துதான் அங்கே குடிநீர் சென்றுகொண்டிருக்கிறது. அதனாலே அதனுடைய கொள்ளளவுத் திறனை அதிகமாக உயர்த்துகின்ற வகையிலே மேலும் இரண்டு குடிநீர் நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்துத் தருவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதி, கிள்ளை சிறப்பு கிராம ஊராட்சியிலுள்ள–கடந்த 2001 ஆம் ஆண்டு–மக்கள் தொகை 10,186 ஆகும். தற்பொழுது அந்தச் சிறப்பு கிராம ஊராட்சிப் பகுதியில் மாண்புமிகு உறுப்பினர் கூறிய அனைத்துக் குக்கிராமங்களிலும்



2005 மார்ச் 30]

இருக்கின்ற மக்களுக்கு நாள் ஒன்றுக்கு 70 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே, அந்தப் பகுதியிலே மேலும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி தேவையில்லாத காரணத்தினால், அந்தப் பகுதியிலே குடிநீர்ப் பிரச்சினையற்று நிலவுகின்ற காரணத்தால், அங்கே மேல்நிலை குடிநீர்த் தொட்டியானது தேவைப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அருள்.

**திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கிள்ளை சிறப்பு கிராம ஊராட்சி, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, அத்தனைக் கிராமங்களிலுமே நிலத்தடி நீர் உவர்ப்பு நீராகவே இருந்துகொண்டிருக்கிறது. அதனாலே, சிதம்பரம் வருகின்ற வழியிலே 8 கிலோ மீட்டருக்கு அப்பால், கீழ்அனுவம்பட்டு என்ற ஒரு கிராமத்தில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து, அதன்மூலமாக அந்தக் கிள்ளைச் சிறப்பு கிராம ஊராட்சிக்குக் குடிநீர் கொண்டுசெல்லப்பட்டு வருகிறது. இது 10, 20 ஆண்டு காலமாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அங்கே ஜனத்தொகைக்கேற்ப குடிநீர்ப் பிரச்சினை ஏற்பட்ட காரணத்தினால், சென்ற ஆண்டு மாவட்ட நிர்வாகத்திடம் பேசி, மாவட்ட ஆட்சித் தலைவர் அந்த S.G.R.Y. திட்டத்தின் மூலமாக சுமார் 21 இலட்சம் பண ஒதுக்கீடு செய்து, அங்கே நஞ்சைமுகத்துவாழ்க்கை என்ற கிராமத்தில் bore போட்டு அங்கிருந்து இப்போது குடிநீர் அந்தப் பகுதிகளுக்குச் சென்றுகொண்டிருக்கிறது. அந்த 10 கிராமங்களுக்கும் சேர்த்து அந்தக் கிள்ளை மீனவர் காலனியிலே இரண்டு இலட்சம் லிட்டர் கொள்ளளவுகொண்ட ஒரு நீர்த்தேக்கத் தொட்டியும் முடசலோடை என்ற ஒரு கிராமத்தில் ஒரு இலட்சம் லிட்டர் நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றும் கட்டித் தருவதற்கு இந்த நிதியாண்டிலேயே அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல, கிள்ளை சிறப்பு கிராம ஊராட்சியில் மொத்தம் 15 வார்டுகள் உள்ளன. நஞ்சைமுகத்துவாழ்க்கை என்னும் இடத்தில் 2003–2004 ஆம் ஆண்டில் வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் ரூபாய் 21.30 இலட்சம் மதிப்பீட்டிலே எட்டு அங்குலம் விட்டம் உள்ள ஒரு ஆழ்துளைக் கிணறு நிறுவப்பட்டது. இந்த ஆழ்துளைக் கிணற்றின் ஆழம் 246 மீட்டராகும். இந்த ஆழ்துளைக் கிணற்றிலிருந்து 20 எச்.பி. திறன்கொண்ட மின்

[2005 மார்ச் 30

மோட்டார் மூலம் குடிநீர் வெளிக் கொண்டுவரப்பட்டு 5,200 மீட்டர் நீளத்திற்கு பைப் லைன் அமைத்து, கிள்ளை என்னும் இடத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட sump மூலம் குடிநீர் சேகரிக்கப்படுகிறது. அவ்வாறு சேகரிக்கப்படும் குடிநீரானது கிள்ளை என்னும் இடத்தில் உள்ள நான்கு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கும், தைக்கால் என்னும் இடத்திலுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுகொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கும் பொன்னன்திட்டு என்னும் இடத்தில் உள்ள ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கும் 5 எச்.பி. திறன்கொண்ட மின் மோட்டார் மூலம் நீர் ஏற்றப்பட்டு தினந்தோறும் அந்தப் பகுதியில் இந்தச் சிறப்பு கிராம ஊராட்சிப் பகுதிக்கு ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு 70 லிட்டர் வீதம் குடிநீரானது வழங்கப்பட்டு வருகிறது. கூடுதல் நீராதாரத்திற்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேலும் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைக்க உரிய இடம் தேர்வு செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆகவே, அந்தப் பகுதியில் குடிநீர்ப் பிரச்சினை இல்லாதவண்ணம் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே கண்டிப்பாக சீர் செய்து கொடுக்கப்படும் என்று கூறி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏழுமலை.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிகள் எல்லாம் நிதிநிலை சரியில்லாத காரணத்தால் சிறப்பு ஊராட்சிகளாக மாற்றப்பட்டு, அந்தச் சிறப்பு ஊராட்சிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு திட்டம் உள்ளதா? அப்படி இருக்கிறது என்று சொன்னால், என்னுடைய செஞ்சி தொகுதியில், செஞ்சி சிறப்பு ஊராட்சியில் மாண்புமிகு இதய தெய்வம் தங்கத் தாரகை அம்மா அவர்கள் செஞ்சி சிறப்பு ஊராட்சி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான குடிநீர்த் திட்டத்திற்கு ரூபாய் 45 இலட்சத்தை ஒதுக்கி, அந்தத் திட்டத்ந்தை இப்போது செயல்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் திட்டம் சிறப்பாகச் செயல்பட அந்த நீராதாரம் உள்ள பகுதி வனப் பகுதி என்ற காரணத்தால், வனச் சட்டத்தின்படி குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அதிகப்படியான செலவு ஆகிவிட்டதால், இந்தத் திட்டத்தில் இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைப்பதற்கு அந்த ஒப்பந்தத்தில் கோரப்பட்டிருந்தாலும்கூட, பணம் இல்லாத காரணத்தால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஒரு



2005 மார்ச் 30]

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை மட்டும் அமைத்து நீர் வழங்கப்படுவதாகச் சொல்கிறார்கள். ஆனால் இந்தச் சந்தைமேடு என்ற பகுதி மேடான பகுதி. அந்தப் பகுதி ஆதிதிராவிட மக்களும், வறுமைக் கோட்டிற்குக்கீழே இருக்கின்ற மக்களும், ஆசிரியர் பெருமக்களும், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரிகின்ற ஊழியர்களும் இருக்கின்ற பகுதி. மேடான பகுதி. அந்தப் பகுதியில் கூடுதலாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அவசியம் அமைக்கப்பட வேண்டும். எனவே அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியில் அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10–55

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை கனிவோடு பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் திருப்பூர் தொகுதி மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக 2 ஆண்டு காலத்திற்கு முன்பு 3–வது குடிநீர்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு, அந்தப் பணி தற்போது முடிவடைந்து இன்னும் 2 மாத காலத்தில் அந்தப் பகுதி மக்களுக்குக் குடிநீரை விநியோகிக்கின்ற பணி தொடங்க இருக்கிறது. அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய ஊராட்சித் தலைவர்கள் எல்லாம் பாதுகாக்கப்பட்ட அந்தக் குடிதண்ணீரைத் தேக்கி வைப்பதற்காக இருக்கின்ற மேல்நிலைத் தொட்டிகள் போதாது. ஏனென்றால் அதில் ஆழ்குழாய்க் கிணற்றிலே இருந்து எடுக்கின்ற தண்ணீர் அந்த tank–லே ஏற்றப்படுவதால் இரண்டு தண்ணீரும் கலந்தால் சரிப்பட்டு வராது என்கின்ற அடிப்படையில் புதிய மேல்நிலைத் தொட்டிகளைக் கட்டி அதன் மூலமாகத் தண்ணீரை விநியோகிக்க வேண்டும் என்று அந்தத் தண்ணீரை விநியோகம் செய்கின்ற புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்திடம் கேட்டார்கள். அதற்கு அவர்கள் எங்களால் கூடுதல் மேல்நிலைத் தொட்டிகளைக் கட்டித் தரமுடியாது. ஊராட்சித் தலைவர்கள் தங்களது சொந்த நிதியிலே நீங்களே மேல்நிலைத் தொட்டிகளைக் கட்டிக்கொள்ள வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். எனவே ஊராட்சியில் இருக்கக்கூடிய நிதிநிலைமை போதாத காரணத்தினால் திருப்பூர்

[2005 மார்ச் 30

தொகுதியிலே இருக்கக்கூடிய அந்த ஊராட்சிகளை இந்த 3-வது குடிநீர்த் திட்டத்தினுடைய தண்ணீர் வருகின்ற காரணத்தினால் சிறப்பு இனமாகக் கருதி கூடுதல் மேல்நிலைத் தொட்டிகளைக் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மாவினுடைய அரசானது இதுகுறித்து பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருப்பணன்.

**திரு. கே.சி. கருப்பணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்திலே மத்திய அரசு ஸ்வஜல்தாரா என்ற திட்டத்தின் மூலம் தாழ்த்தப்பட்ட, ஆதிதிராவிட மக்களுடைய மக்கள் பங்களிப்புத் தொகையாக 5 சதவிகிதம், 10 சதவிகிதம் மூலம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேல்நிலைத் தொட்டிகளைக் கட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தது. தற்போது மத்திய அரசு அந்தத் திட்டத்தை நிறுத்திவிட்டதாகச் சொல்கிறார்கள். நமது அம்மாவினுடைய அரசு மீண்டும் அந்தத் திட்டத்தைக் கொண்டுவர வலியுறுத்துமா என அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டமானது இப்பொழுதும் செயல்முறையில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.டி. பச்சைமால்.

**திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், சுனாமியால் மிகவும் பாதிக்கப்பட்டு, குமரி மாவட்டத்திலுள்ள 33 மீனவக் கிராமங்களும் அதையொட்டி உள்ள கிராமங்களும் குடிநீர்ப் பிரச்சினையால் மிகவும் அவதிப்படுகின்றன. மீனவர் கிராமங்களுக்குக் குடிநீர் செல்கின்ற ஆழ்குழாய்க் கிணறுகளில் எல்லாம் கடல்நீர் புகுந்து இன்றைக்கு நல்ல தண்ணீர் இல்லாத நிலைமை ஏற்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் 33 மீனவக் கிராமங்களுக்கும், அதையொட்டியுள்ள கிராமப் பகுதிகளுக்கும் குழித்துறை ஆற்றிலிருந்து ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசினுடைய அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. சுனாமி நிவாரணப் பணியாக அரசு இதை நிறைவேற்றித்தர ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.



2005 மார்ச் 30]

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலோரப் பகுதியிலே மீனவர் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உப்புத் தண்ணீர் கிடைப்பதாகச் சொன்னார். மாண்புமிகு அம்மா அவர்கள் அரசால் போர்க்கால அடிப்படையிலே அந்த நிகழ்வுகளானது நிகழ்ந்து இரண்டாவது நாள் முதற்கொண்டே நல்ல பாதுகாக்கப்பட்ட குடிநீரானது அவர்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. மேலும் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 259, திரு. து. நெப்போலியன், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**259—**

**மழைநீர்க் கால்வாய்**

***37511—திரு. து. நெப்போலியன்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வில்லிவாக்கம் தொகுதி, கொளத்தூர் காமராஜர் நகர் ஓடை பகுதியில் மழைநீர்க் கால்வாய் அமைத்துத்தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் சற்று நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 260, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்.

**260—**

**விளையாட்டு வீரர்கள்**

***27143—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 மார்ச் 30

(அ) தமிழகத்திலுள்ள தேசிய அளவில் சிறப்புமிக்க விளையாட்டு வீரர்களை அரசின் பொறுப்பில் தத்து எடுத்து சர்வதேச அளவில் அவர்களின் திறமையை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 1991 ஆம் ஆண்டு தேசிய அளவில் சிறப்புமிக்க விளையாட்டு வீரர்களை அரசின் பொறுப்பில் தத்தெடுத்து, சர்வதேச அளவில் அவர்கள் திறமையை உயர்த்தும் விதமாக சேம்பியன் மேம்பாட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டது. இத்திட்டம், மீண்டும் 2001-ல் புதுப்பிக்கப்பட்டு, தேசிய அளவில் தங்கப் பதக்கம் பெற்ற வீரர்களை அரசே தத்தெடுத்து, அவரது குடும்பத்தாருடன் கலந்து அவர்களது தேவைகள் அனைத்தையும் வழங்கி வருகிறது. அரசு தத்தெடுக்கும் விளையாட்டு வீரர்களுக்குத் தேவையான, விளையாட்டு உபகரணங்கள், போட்டிகளுக்காக வெளிநாடு செல்ல விமானப் பயணக் கட்டணம், சிறப்புப் பயிற்சிபெற ஆகும் செலவுகள், வீரர்களுக்குத் தேவையான ஊட்டச்சத்துமிக்க உணவுகள், இவர்களுக்கு சிறப்பு உடற்தகுதி குறித்த தேர்வுகள் மற்றும் மருத்துவ பரிசோதனைகள் நடத்துவது, வீரர்கள் மனோதத்துவ ரீதியில் மனவலிமைப்பெற பயிற்சிகள் மற்றும் நவீன விளையாட்டு அரங்கங்களில் இலவசமாகப் பயிற்சி பெறுதல் ஆகியவை, ஒவ்வொரு வீரரின் தேவைக்கு ஏற்ப, 20,000 முதல் 2,00,000 ரூபாய் வரை செலவு செய்து வருகிறது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு. மேலும், இத்திட்டத்தின்கீழ் 57 விளையாட்டு வீரர்கள் பயன்பெற்று வருகிறார்கள். இவர்களில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள 8 வீரர்களுக்கு அவர்களின் அடிப்படை வசதிகளையும், மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களின் அரசு செய்துவருகிறது. (ஆ) நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 2. கவன ஈர்ப்பு

### (அ) சீர்காழி நகர், அரசு சேவை இல்ல மேல்நிலைப் பள்ளிக்குச் சொந்தக் கட்டடம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. நா. சந்திரமோகன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சீர்காழி நகரில் இயங்கிவரும் அரசு சேவை இல்ல மேல்நிலைப் பள்ளிக்குச் சொந்தக் கட்டடம் கட்டிக்கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கின்றது என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

#### அறிக்கை

கடந்த 26-12-2004 அன்று, தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில், இதுவரை கண்டிராத மிகக் கடுமையான சுனாமிப் பேரலைகள் தாக்கின. இதன்காரணமாக, தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்கள் மிகப் பெரிய அளவிலான பாதிப்பை, அதாவது உயிர்ச்சேதம் மற்றும் பொருட்சேதம் ஆகிய இரு நிலைகளிலும் சந்தித்தன. விலை மதிப்பில்லாத உயிர்களுக்கு ஈடு செய்ய இயலாது என்றாலும், அரசு, கருணையுடன் பொருட்சேதம் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்கும்வகையிலும், தாய், தந்தையை இழந்து ஆதரவற்ற நிலையில் உள்ள வளர்இளம் பெண்களையும், 18 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத பெண்களையும் பாதுகாத்து, அவர்களுக்கு உடனடியாக மறுவாழ்வு அளிக்கும்வகையிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கன்னியாகுமரி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் சேவை இல்லங்கள் அரசால் தொடங்கப்படும் என்று அறிவித்துள்ளதன் அடிப்படையில், நாகப்பட்டினம் மாவட்டத்தில் ரூ.20.87 இலட்சம் செலவினத்தில் 100 பயனாளிகளைக் கொண்டு இயங்கும்வகையில், புதிய

சேவை இல்லம் ஒன்று தொடங்குவதற்கு அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வரசாணைக்கிணங்க, நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியில் சிறப்பு அரசு சேவை இல்லம் தொடங்கப்பட்டு, 18-1-2005 முதல் இயங்கி வருகிறது. இச்சேவை இல்லத்தில், தற்போது 24 வளர்இளம் பெண்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் 20 வளர்இளம் பெண்கள், அவர்களது கல்வியினைத் தொடரும்பொருட்டு, நாகப்பட்டினத்தில் இயங்கிவரும் புதிய அரசு குழந்தைகள் காப்பகத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இக்கல்வியாண்டின் இறுதித் தேர்விற்குப் பிறகு, அப்பெண்கள் சீர்காழியில் உள்ள சிறப்புச் சேவை இல்லத்திற்கு மீண்டும் கொண்டு வரப்படுவார்கள். எனவே, சிறப்புச் சேவை இல்லத்தில் தற்போதைய எண்ணிக்கை, மொத்தம் 24 + 20 = 44 ஆகும். மேலும், 18 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத பெண்கள் 12 நபர்கள் உள்ளனர் என்று கண்டறியப்பட்டுள்ளது. இவர்களும் இம்மாதம் 15 ஆம் தேதிக்குப் பிறகு, அரசு சிறப்புச் சேவை இல்லத்தில் அனுமதிக்கப்படுவார்கள். இது சிறப்புச் சேவை இல்லமாக இருப்பதால், மேல்நிலைப் பள்ளி தொடங்கப்படவில்லை. இச்சேவை இல்லத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள வளர்இளம் பெண்கள், ஏற்கெனவே படித்துவந்த பள்ளிகளில் படிப்பினைத் தொடர்கின்றனர். இச்சேவை இல்லத்தில் தங்கியுள்ள சுனாமியால் பாதிக்கப்பட்ட வளர்இளம் பெண்களுக்கும் இனிமேல் சேர்க்கப்படவுள்ள 18 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத பெண்களுக்கும் ஆரோக்கியமான சூழ்நிலை அமைத்துக் கொடுக்க, சொந்தக் கட்டடம் தேவைப்படும்பொழுது, உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. சந்திரமோகன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைத் தெளிவாகப் படித்துப் பார்த்தேன். தேவைப்படும்போது, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி நகரத்தில் தொடங்கப்பட்ட சேவை இல்லம், நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில், போதிய வசதியில்லாமல் செயல்பட்டு வருகிறது. வருகின்ற மே மாதம் முதல், வளர்இளம் பெண்கள், 18 வயதிற்குட்பட்ட திருமணம் ஆகாத பெண்கள், ஊனமுற்ற பெண்கள், விதவைகளின் பெண் குழந்தைகள், கணவனால் கைவிடப்பட்ட குழந்தைகள், வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் பெண் குழந்தைகள் அதிக அளவில் சேரும் வாய்ப்பு உள்ளதால்,





அவர்களது ஆரோக்கியமான சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு உடனடியாக நிலத்தைத் தேர்வு செய்து நடப்பு நிதியாண்டிலேயே சேவை இல்லத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக, அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 26-12-2004 ஆம் ஆண்டு, தமிழ்நாட்டில் கடலோரப் பகுதியில், இதுவரை கண்டிராத மிகக் கடுமையான சுனாமிப் பேரலைகள் தாக்கின. அதனால், சுனாமியால் பொருட் சேதமும் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்கும்வகையில், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசில், சீர்காழியில் சிறப்பு அரசு சேவை இல்லம் ஒன்று, 18-1-2005 முதல் தொடங்கப்பட்டு இயங்கிவருகிறது. இது சிறப்புச் சேவை இல்லமாக இருப்பதால், மேல்நிலைப் பள்ளி தொடங்கப்படவில்லை. இச்சேவை இல்லத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள வளர்இளம் பெண்கள், ஏற்கெனவே படித்துவந்த பள்ளிகளில் படிப்பினைத் தொடர்கின்றனர். இச்சேவை இல்லத்தில் தங்கியுள்ள சுனாமியால் பாதிக்கப்பட்ட வளர்இளம் பெண்களுக்கும், இனிமேல் சேர்க்கப்படவுள்ள 18 வயதுக்கு மேற்பட்ட திருமணமாகாத பெண்களுக்கும், ஆரோக்கியமான சூழ்நிலை அமைத்துக் கொடுக்க, சொந்தக் கட்டடம் தேவைப்படும்போது உரிய நடவடிக்கை எடுப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. சந்திரமோகன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேவை இல்லம் கட்டுவதற்கு, சில தனியார் நிறுவனங்கள் முன்வருகின்றார்கள். அதனால், சேவை இல்லம் கட்டுவதற்குத் தனியார் நிறுவனத்திற்கு அனுமதி கொடுக்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சேவை இல்லத்திற்குக் கட்டடம் கட்டுவதற்குத் தனியார் முன்வருகின்றார்கள் என்று எடுத்துக் கூறியிருக்கின்றார். அவ்வாறு தனியார் முன்வந்தால், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய

[திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி] [2005 மார்ச் 30

மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, அதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) புதுக்கோட்டை நகராட்சி, காவிரிக் குடிநீரை தினமும் விநியோகம் செய்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை நகராட்சியில், காவிரிக் குடிநீரை, தினமும் விநியோகம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்த," அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

### அறிக்கை

காவிரி ஆற்றில் ஜியர்புரம் என்ற இடத்தை நீராதாரமாகக் கொண்ட புதுக்கோட்டை கூட்டுக் குடிநீர்த் திட்டம், உலக வங்கி திட்டத்தின்மூலம், 1994 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு, 1995 ஆம் ஆண்டிலிருந்து புதுக்கோட்டை நகராட்சி, கீரனூர், இலுப்பூர், அன்னவாசல் பேரூராட்சிகள் மற்றும் 15 வழியோரக் கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. புதுக்கோட்டை நகராட்சியின் தற்போதைய மக்கள் தொகை, 1,10,000 ஆகும். புதுக்கோட்டை நகராட்சிக்கு நாள்தோறும் 100 இலட்சம் லிட்டர் தேவைப்படும். தற்போது, நாள்தோறும் 50 இலட்சம் லிட்டர் குடிநீர், புதுக்கோட்டை நகராட்சிக்கு வழங்கப்பட்டு வருகிறது. புதுக்கோட்டை நகராட்சியின் நகரப் பகுதி, இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, முதல் நாள் ஒரு பகுதிக்கு 50 இலட்சம் லிட்டர், மறுநாள் மறு பகுதிக்கு 50 இலட்சம் லிட்டர் என்றவகையில், வாரியத்தால் குடிநீர் வழங்கப்பட்டு, நகராட்சியால் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. புதுக்கோட்டை நகராட்சியின்



2005 மார்ச் 30] [திரு. கே. பி. அன்பழகன்]

நிதிநிலைமை, இத்திட்டத்தின்மூலம் வழங்கப்படும் குடிநீருக்கான கேட்புத் தொகையை, முழுவதுமாக காலதாமதமின்றி வாரியத்திற்குச் செலுத்தும்வகையில் இல்லை. எனவே, நகராட்சியின் நிதிநிலைமைக்கேற்ப, குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. குடிநீர் வடிகால் வாரியம், உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து பெறப்படும் குடிநீர்க் கட்டணத்தைக் கொண்டுதான் பராமரிப்புப் பணிகளைச் செய்து பயனீட்டாளர்களுக்குக் குடிநீர் வழங்கி வருகிறது. புதுக்கோட்டை நகராட்சி, அந்தந்த மாதக் குடிநீர்க் கட்டணத்தை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு முழுமையாகச் செலுத்தவேண்டிய தொகையைச் செலுத்த முன்வருமானால், முழுமையான அளவு குடிநீர் வழங்க இயலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அதிலே, புதுக்கோட்டை நகராட்சி, மாதாந்திரக் கட்டணத்தை முறையாகக் கட்டினால், குடிநீர் வழங்க, வாரியத்தால் இயலும் என்று தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே குறிப்பிட்டுள்ளபடி, புதுக்கோட்டை நகராட்சிக்கு, ஏறத்தாழ இப்போது ஒரு நாளைக்கு 100 இலட்சம் லிட்டர் தண்ணீர் தேவைப்படுகின்றது. ஆனால், அங்கே ஒரு நாள் விட்டு ஒரு நாள், alternative days என்று சொல்லக்கூடிய இரண்டு நாளைக்கு ஒரு தரம் 50 இலட்சம் லிட்டர் தண்ணீர் மட்டுமே கொடுக்கப்படுகின்றது. அதாவது, தேவைப்படுகின்ற தண்ணீரில் நான்கில் ஒரு பங்கு மட்டுமே கொடுக்கப்படுகின்றதனாலே, அங்கே பொது மக்களுக்குக் குடிதண்ணீருடைய தேவை, இன்னும் அதிகமாக இருக்கின்றது. ஆனால், இங்கே விவர அறிக்கையிலே குறிப்பிட்டுள்ளபடி புதுக்கோட்டை நகராட்சியிலே, 2001–லே அம்மா அவர்கள், ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னாலே அந்த நிலுவைத் தொகை 2 கோடி ரூபாய் கட்டப்பட்டிருக்கிறது. இன்னும் 4 கோடி ரூபாய் மட்டும்தான் பாக்கியிருக்கிறது. மாதாமாதம் முறையாக, அவர்கள் 8 இலட்சம் ரூபாயை வாரியத்திற்குக் கட்டி வருகின்றார்கள். அதுமட்டுமல்லாமல், கூடுதல் தொகையையும் வாரியத்திற்குக் கட்டி வருகிறார்கள். ஆக, இந்தத் தொகையினை ஏற்று, புதுக்கோட்டை நகராட்சிக்கு தினமும் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை நகராட்சியின் மொத்த மக்கள் தொகை

1,10,000 ஆகும். புதுக்கோட்டை நகராட்சியில், மொத்தம் 39 ward-கள் உள்ளன. இந்த நகரில், 1952 ஆம் ஆண்டு, ரூபாய் 30 இலட்சம் செலவிலே அமைக்கப்பட்ட அம்மையாப்பட்டி நீரளிப்பு நிலையம்மூலம், தினந்தோறும் 13 இலட்சம் லிட்டர் குடிநீர் பெறப்படுகிறது. மேலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய முந்தைய ஆட்சிக் காலத்தில், 1995 ஆம் ஆண்டு ரூபாய் 22 கோடி மதிப்பீட்டிலே தொடங்கப்பட்ட காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம், 50 இலட்சம் லிட்டர் குடிநீர் பெறப்படுகிறது. இதன்மூலம், தற்போது ஒரு நாள் விட்டு ஒரு நாள், நபர் ஒருவருக்கு 57 லிட்டர் வீதம், குடிநீர் வழங்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர், நான்கில் ஒரு பங்கு குடிநீர் அங்கே வழங்கப்படுவதாகச் சொன்னார், ஆனால், அங்கே மொத்தம் தேவை 100 இலட்சம் லிட்டர். இங்கே நாம் வழங்குவது 63 இலட்சம் லிட்டர். ஆக, அவர் சொல்வதுபோல, நான்கில் ஒரு பங்கல்ல; 57 லிட்டர் வீதம் குடிநீரானது தற்போது வழங்கப்பட்டிருக்கிறது. மேலும், அங்கே. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்குக் கடந்த ஆட்சிக் காலத்திலே, 6 கோடி ரூபாய் நிலுவையை, அந்த நகராட்சியானது நிறுத்திவிட்டுச் சென்றுவிட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2001 ஆம் ஆண்டிலே ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, அந்த நகராட்சி மூலமாகக் குடிநீர் வடிகால் வாரியத்திற்கு, 2 கோடி ரூபாய் கட்டப்பட்டிருக்கிறது. மீதம் 4 கோடி ரூபாய் பாக்கியிருக்கின்றது. தற்போது பயன்படுத்துகின்ற குடிநீருக்கு மட்டும், அவர்கள் கட்டணம் செலுத்தி வருகின்றார்கள். ஆகவே, அந்த நகராட்சிமூலமாக, இன்னும் கூடுதலாகப் பணத்தைச் செலுத்தி, தற்போது குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலமாக, அந்த நிர்வாகத்தைச் செயல்படுத்துவதற்காகவும், அங்கே பராமரிப்புச் செலவிற்காகவும், கூடுதல் கட்டணத்தைச் செலுத்துவார்கள் என்றால், மாண்புமிகு உறுப்பினர் கேட்டதுபோல, அங்கே தண்ணீர் கொடுப்பதற்குப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

முற்பகல் 11-10

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய ஆட்சியில் வரலாற்றுச் சாதனையாக, சென்னை மக்களுடைய தாகம் தீர்க்க வீராணம் திட்டம் கொண்டு வந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதேபோல, அன்றைய ஆட்சிக் காலத்திலே, புதுக்கோட்டை மக்களுடைய தாகம் தீர்க்க, காவிரி நீர் கொண்டு



வந்தவர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள். குடிப்பதற்குத் தண்ணீர் வழங்கி, மக்களின் கண்ணீரைத் துடைக்கின்ற தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலே, புதுக்கோட்டை நகராட்சி மக்களுக்காக, அந்த நகராட்சி செலுத்த வேண்டிய, அபராத வட்டி 1 1/2 கோடி ரூபாயைக் குடிநீர் வடிகால் வாரியம், தள்ளுபடி செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது பரிசீலனை செய்யும்.

## 3. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல், பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல், திரு. கே.என். இலட்சுமணன்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2005 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று அறுபத்து எட்டு முதல் இருநூற்று எழுபத்து இரண்டு வரையிலான ஐந்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கை அளித்தல், திரு. ப. இராஜரெத்தினம்.

***திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவுடன் வணங்கி, 2003-2005 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் பதினான்காவது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

### (இ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல், திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்கி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003–2005 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் நூற்றுப் பதினொன்று முதல் நூற்றுப் பதினாறு வரையிலான ஆறு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஈ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகள் அளித்தல், திருமதி வளர்மதி ஜெபராஜ்.

***திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின், 2003–2005 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஐம்பத்து ஏழாவது மற்றும் ஐம்பத்து எட்டாவது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 4. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 13 – எரிசக்தித் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 24 – உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள் –நிருவாகம்**

**(இ) கோரிக்கை எண் 46 – போக்குவரத்துத் துறை**

—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 29–03–2005 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின் மீதான விவாதத்திற்குப் பதிலுரை. மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.



**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நடைபெற்ற போக்குவரத்து, உள் துறை – இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள், நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கைகள்மீதான விவாதம் மற்றும் எரிசக்தித் துறையின் மீதான மானியக் கோரிக்கையில் நேற்று நான் பேசுகின்றபோது, போக்குவரத்துத் துறை சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கையின்மீது முழுமையான என்னுடைய பதிலுரையை அளித்திருக்கிறேன். அதற்கு அடுத்தபடியாக, உள் துறை – இயக்கூர்திகள் குறித்த மானியக் கோரிக்கையின்மீது பதிலுரையையும் அளித்திருக்கிறேன். அதனுடைய தொடர்ச்சியாக, அதிலே ஒரே ஒரு செய்தியை மட்டும், மிக முக்கியமான செய்தி என்பதால், அதையும் மக்கள் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதால், அந்தச் செய்தியைச் சொல்லிவிட்டு அடுத்தபடியாக, எரிசக்தித் துறையினுடைய மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்குப் பதில் அளிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின்படி, கடந்த மாதம் 25–2–2005 ஆம் ஆண்டு, நம் தமிழ்நாடு மற்றும் ஆந்திர மாநிலங்களுக்கிடையேயான போக்குவரத்து ஒப்பந்தம் ஒன்று இறுதி செய்யப்பட்டது–Inter State agreement–அதனுடைய அடிப்படையிலே, தமிழ்நாடு அரசு ஆந்திரப் பகுதியிலே ஏறத்தாழ 52,965 கி.மீட்டர்கள் இயக்குவது என்றும், ஆந்திர மாநிலம், தமிழக எல்லைப் பகுதியில் அதே அளவிற்கு, 52,966 கிலோ மீட்டர் அளவிற்கு, தமிழக எல்லையிலும் இயக்குவது என்றும் வெற்றிகரமாக அந்த ஒப்பந்தம் முடிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், இதற்கு முன்பு 1994 ஆம் ஆண்டு, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆட்சிப் பொறுப்பிலே இருக்கும்போதுதான் தமிழ்நாட்டிற்கும், ஆந்திர மாநிலத்திற்கும் அந்த Inter State agreement இரண்டு மாநிலங்களுக்கிடையேயான போக்குவரத்து ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதற்கு அடுத்தபடியாக, 10 ஆண்டுகளுக்குப் பின்புதான், மீண்டும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான் அந்த ஒப்பந்தம் செய்யப்பட்டு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதோடுமட்டுமல்ல; அந்த ஒப்பந்தம் ஏற்கெனவே இருந்த தூரத்தைக் காட்டிலும், இரண்டு மடங்கு இப்போது அதிகரித்து அந்த ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு இருக்கிறது. இதன்மூலமாக, தமிழ்நாட்டு மக்களும், ஆந்திர மக்களும் மிகுந்த பயனைப் பெறுவார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–15

மற்றொன்றையும் இந்தநேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, இந்த ஒப்பந்தம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேயே ஏற்பட்டு இருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அதைப் பற்றியெல்லாம் எங்கே சிந்தித்தார்கள்? அவர்களுக்கு அதைப் பற்றிச் சிந்திப்பதற்கெல்லாம் நேரம் ஏது? மக்களைப் பற்றியோ, ஆட்சியைப் பற்றியோ, துறையைப் பற்றியோ சிந்திப்பதற்கு அவர்களுக்கு நேரம் இல்லை. மாறாக அவர்களுக்கெல்லாம் இருந்த நேரம் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்மீது எப்படிப் பொய் வழக்குப் போடுவது, (மேசையைத் தட்டும் ஒலி) எப்படி அவர்களை அரசியலைவிட்டு ஒழிப்பது; இதைத் தவிர அந்த 5 ஆண்டுக் காலத்திலே அவர்கள் சிந்திப்பதற்கு நேரமே இல்லை. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் செய்த சாதனையை– புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே ஒரு சாதனையைச் செய்தால், அந்தச் சாதனையை வேறு எவராலும் வெல்ல முடியாது. ஆனால் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் மட்டுமே அந்தச் சாதனையை வெல்ல முடியும். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்றமுறை 1994–லே ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தை, அதற்கடுத்து 10 ஆண்டுக் காலத்திற்குப் பின்பு, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வந்துதான், இன்றைக்கு அவர்கள் ஆணையிட்டு உடனடியாக ஆந்திர மாநிலத்திற்குச் சென்று, அந்த ஒப்பந்தத்தை இறுதி செய்யுங்கள் என்று அவர்கள் உத்தரவிட்டதன்பேரில், இரண்டு மாநில மக்களும் பயனடைகின்றவகையில், அந்த அருமையான ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்ற செய்தியைச் சொல்லி, அதற்கு அடுத்தபடியாக இப்போது பெருகி வருகின்ற வாகனங்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பினை வழங்கியிருக்கிறது. பொதுவாக, இந்தியப் பெருநகரங்களில், சென்னை உட்பட 9 பெருநகரங்களில் டீசல், பெட்ரோல் எரிபொருளைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக திரவ L.P. Gas பயன்படுத்தி, திரவ எரிபொருளை, பெட்ரோல் எரிபொருளைப் பயன்படுத்தி, வாகனங்களை இயக்க வேண்டுமென்று இப்போது அறிவுறுத்தியிருக்கிறது. அதற்காக, ஒரு கமிட்டியையும் நியமித்திருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையில், உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனையின் அடிப்படையில், தீர்ப்பின் அடிப்படையில் சென்னைப் பெருநகரிலும் இன்றைக்கு முதன்முறையாக, ஆட்டோக்களுக்கு, L.P. Gas மூலமாக இயக்குகின்ற



ஆட்டோக்களுக்கு, உரிமம் வழங்குவதில் முன்னுரிமை அளிப்பது குறித்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிவுடன் பரிசீலித்து வருகிறது என்கிற செய்தியினையும் இந்தநேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, போக்குவரத்துத் துறையில், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான ஒப்புதலோடும், அவர்களின் ஆணையின்படியும் இந்த அறிவிப்புகளை வெளியிடுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

1. மாநகர போக்குவரத்துக் கழகத்தில் நாள் முழுவதும் விருப்பம்போல் பயணம் செய்யும் பயணச்சீட்டு வழங்கும் திட்டம் ஏற்கெனவே அறிமுகப்படுத்தப்பட்டு, சென்னை நகரப் பயணிகள் மத்தியில், பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது. இத்திட்டத்தின்படி ஒருவர் ஒரு நாள் பயணச்சீட்டை ரூபாய் 30 கொடுத்து வாங்கினால், அவர் மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் அனைத்துப் பேருந்துகளிலும் நாள் முழுவதும் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவார். அதேபோல, விருப்பம்போல் அனைத்துப் பேருந்துகளிலும் பயணம் செய்யும் வாராந்திர பயணச்சீட்டு ரூபாய் 160–க்கும், மாதாந்திர பயணச்சீட்டு ரூபாய் 600–க்கும் விற்பனை செய்யப்படுகிறது. மாநகரப் போக்குவரத்துக் கழகத்தில் நடைமுறையில் உள்ள மேற்குறிப்பிட்ட பயணச்சீட்டு திட்டங்கள், பயணிகளின் நலனைக் கருத்தில்கொண்டு, தமிழகத்தில் உள்ள இதர முக்கிய நகரங்களான மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சி, திருநெல்வேலி ஆகிய மாநகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

2. விழுப்புரம் மாவட்டப் பொதுமக்களின் போக்குவரத்துத் தேவையை மேம்படுத்தும்வகையில், திருக்கோயிலூர் வட்டம் மணம்பூண்டியில், 3.92 ஏக்கர் நிலம், ரூபாய் 9.62 இலட்சம் செலவில் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த இடத்தில் ரூபாய் 55 இலட்சம் செலவில் போதிய வசதிகளுடன் கூடிய புதிய பணிமனையும் அலுவலகமும் கட்டப்படும்.

3. சென்னை, கோயம்பேடு புறநகர்ப் பேருந்து நிலையம் மிகச் சிறந்தமுறையில் இயங்கிவருகிறது. இந்தப் பேருந்து நிலைய வளாகத்தில், போக்குவரத்துக் கழகப் பணிமனைகள் மிகக் குறைந்த வசதிகளுடன் தற்போது செயல்பட்டு வருகின்றன. பணிமனை வசதிகளை முழுமையாக்கும்வகையில், கோயம்பேட்டில் பேருந்து நிலைய வளாகத்திற்கு மிக அருகில் விழுப்புரம் அரசுப் போக்குவரத்துக்

கழகத்தால் புதிய பணிமனை ஒன்று, ரூபாய் 90 இலட்சம் செலவில் கட்டப்படும்.

4. சென்னை நகரில் இரவு நேரத்தில் பயணம் செய்யும் பயணிகளின் வசதியை மேம்படுத்தும்வகையில், குறிப்பிட்ட வழித்தடங்களில் நள்ளிரவு வரை மாநகரப் போக்குவரத்துக் கழகத்தால் கூடுதல் பேருந்துகள் இயக்கப்படும்.

5. அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகள் நபர் ஒருவருக்கு ரூபாய் 500 செலுத்தி, வருடாந்திர பயணச் சலுகை அட்டையினைப் பெற்று, வருடம் முழுவதும் இப்போக்குவரத்துக் கழகத்தின் அனைத்துப் பேருந்துகளிலும் பயணம் செய்யும்பொழுது, பயணக் கட்டணத்தில் 10 சதவிகிதம் சலுகை பெறும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

6. ஒருவார காலத்திற்குத் தொடர்ச்சியாக, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளை ஊக்குவிக்கும்வண்ணம், நபர் ஒருவருக்கு ரூபாய் 500 செலுத்தி பயண அட்டையினைப் பெற்று, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் அனைத்துப் பேருந்துகளிலும் மேற்படி அட்டையைக் காண்பித்து, ஒரு வாரத்திற்கு எந்த இடத்திற்கு வேண்டுமென்றாலும் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

7. குறிப்பிட்ட ஊர்களுக்கு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் அடிக்கடி பயணம் செய்யும் பயணிகளை ஊக்குவிக்கும்வண்ணம், 60 நாட்களுக்குள், ஐந்து முறை ஒரு குறிப்பிட்ட ஊருக்கு முன்பதிவு செய்து பயணம் செய்யும் பயணிகளுக்கு, ஆறாவது முறை இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்படும்.

முற்பகல் 11–20

8. பயணிகளின் வசதிகளைக் கருத்தில்கொண்டு, சென்னை–பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில், மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்ட இடத்தில், காஞ்சிபுரம் மண்டல அலுவலகக் கட்டடத்தோடு, சாலையோர உணவு விடுதி ஒன்றும், வரும் நிதியாண்டான 2005–2006–ல் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

9. போக்குவரத்துக் கழகங்கள், இந்த ஆண்டு மே தின விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடும்வகையில் தொழிலாளர் மற்றும் அவர்தம் குடும்பத்தினர்கள் பங்குகொள்ளும் பல்வேறு விளையாட்டுகள் மற்றும் இதர நிகழ்ச்சிகள், அந்தந்தப் போக்குவரத்துக் கழகக் கோட்ட அளவில் நடத்தப்படும். இந்த விழாக்கள், ஏப்ரல் 14 ஆம் தேதி முதல் தொடங்கி, மே தினத்தன்று அந்தந்தப் போக்குவரத்துக் கழகத் தலைமை அலுவலகத்தில் நடைபெறும் விழாவில், வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எரிசக்தி மானியக் கோரிக்கை எண் 13—இது தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சிக் கழகம், அரசு தலைமை மின் ஆய்வகம் மற்றும் மின் விசை நிதிக் கழகம் ஆகிய 4 துறைகளை உள்ளடக்கியதாகும். இத்துறையில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சிறந்த வழிகாட்டுதலின்பேரில், மின் துறை இயக்கச் செயல்பாட்டினை நிர்வகிப்பதில், தமிழ்நாடு மின்சார வாரியம், இந்தியாவிலேயே முதன்மை இடத்தை வகிக்கிறது என்பதை நான் இங்கே மெத்தப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்தபடியாக, நான் ஒன்றை இந்தநேரத்திலே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியின் சிறப்பிற்கும், நிர்வாகத் திறமைக்கும் ஓர் எடுத்துக்காட்டாகச் சொல்ல விரும்புகிறேன். கடந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியாளர்கள் தாங்கள் ஆட்சியை விட்டுச் செல்கின்றபோது, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்கின்றபோது, மின்சார வாரியத்திற்கு மிகப்பெரும் நிதி நெருக்கடி; ஏறத்தாழ 4,851.89 கோடி ரூபாயை நிதிச் சுமையாக விட்டுவிட்டுச் சென்றார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த சில நிர்வாகத் திறமையின் காரணமாக, சில சீரமைப்பு நடவடிக்கைகள் எடுத்ததன் காரணமாக, அந்த நிதிப் பற்றாக்குறை—திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாளர்கள் விட்டுச் சென்ற, அந்த 4,851.89 கோடி ரூபாய், பற்றாக்குறை—அடுத்த ஆண்டு, பல்வேறு சீரமைப்பு நடவடிக்கைகள் எடுத்ததன் காரணமாக, 112.57 கோடி ரூபாய் உபரி வருவாயைப் பெற்றது. அதற்கு அடுத்த ஆண்டு, 2003–2004 ஆம் ஆண்டு, அதாவது சென்ற ஆண்டு பற்றாக்குறையை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 1,161.42 கோடி ரூபாயாகக் குறைத்திருக்கிறார்கள். அதற்கு அடுத்தபடியாக, – 4,800 கோடி ரூபாய் –ஏறத்தாழ 5,000 கோடி ரூபாய் பற்றாக்குறையிலிருந்து, 112 கோடி ரூபாய் உபரியாக வந்து, அடுத்தபடியாக, அடுத்த ஆண்டு, வெறும்

1,161 கோடி ரூபாய் மட்டும் நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டது. அடுத்தபடியாக, இன்றைக்கு 2004–2005 ஆம் ஆண்டில், இந்த ஆண்டில், இந்த நடப்பாண்டில், ஏறத்தாழ அந்த நிதிப் பற்றாக்குறை வெறும் 999.64 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஒன்றை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், தமிழக மின்சார வாரியம் ஏறத்தாழ 5,000 கோடி ரூபாய் நிதிப் பற்றாக்குறையிலிருந்தது. இப்போது, 4,000 கோடி ரூபாய் அதிலிருந்து குறைத்து, ஏறத்தாழ ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு, அதனைக் குறைத்திருக்கிறார்கள் என்று சொன்னால், அதுதான் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆளுமைத் தன்மைக்கு, திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடு மட்டுமல்ல; அவர்கள் எப்போதுமே வழக்கமாகக் கடனை வைத்துவிட்டுச் செல்வார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வந்துதான், அந்தக் கடனை அடைப்பார்கள். அதற்கு உதாரணமாகத்தான் இதிலேகூட அவர்கள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வாங்கிய நிலக்கரி மற்றும் எண்ணெய் நிறுவனங்களுக்கு எல்லாம் அவர்கள் பணம் கொடுக்கவில்லை. ஏறத்தாழ 1,962 கோடி ரூபாயை அவர்கள் அங்கே கடனாக விட்டுச் சென்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் வந்ததற்குப் பின்புதான், அதற்கு மாநில அரசு அந்தக் கடனுக்குப் பொறுப்பேற்றுக்கொண்டு, 1,962 கோடி ரூபாயை அந்த நிலக்கரி நிறுவனங்களுக்கும், அந்த எண்ணெய் நிறுவனங்களுக்கும் வழங்கியிருக்கிறார்கள் என்று சொன்னால், அந்த அளவிற்கு நிதி நிர்வாகத்தைச் சீரமைப்பதிலே புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு ஈடு இணை இந்தியாவில் எவரும் இல்லை என்பதை இந்தநேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடு மட்டுமல்ல; நிதி நிர்வாகம் மட்டுமல்ல, நிர்வாகச் சீரமைப்பு மட்டுமல்ல, இன்றைக்கு மின் உற்பத்தியைக்கூட எடுத்துக்கொள்ளுங்கள், தமிழகத்தைப் பொறுத்த அளவிலே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததற்குப் பின்பு, ஏற்பட்டிருக்கின்ற மின் உற்பத்தியையும், அதேபோல திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே ஏற்பட்டிருக்கின்ற மின் உற்பத்தியையும் இந்தநேரத்திலே உங்களுக்கு நான் ஒப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.



புரட்சித் தலைவி அம்மா ஆட்சிக் காலத்தில், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மொத்த மின் உற்பத்தி நிறுவு திறன், 9,657 மெகாவாட். ஆனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் 8,127 மெகாவாட்தான் மின் உற்பத்தி இருந்தது.

முற்பகல் 11–25

புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த ஆட்சியில், 4 ஆண்டுக் காலத்திலே ஏறத்தாழ 1,530 மெகாவாட் புதியதாக உற்பத்தியைச் செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சென்ற ஆட்சியில், அவர்களுடைய 5 ஆண்டுக் காலத்திலே அவர்கள் உற்பத்தி செய்தது, வெறும் 560.69 மெகாவாட்தான். 5 ஆண்டுக் காலத்தில், வெறும் 560.69 மெகாவாட் அவர்கள் உற்பத்தி செய்தார்கள். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த 4 ஆண்டுக் காலத்திலேயே, 1,530 மெகாவாட் புதியதாக உற்பத்தி செய்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியைப்போல, ஏறத்தாழ 3 மடங்கு கூடுதலாக மின் உற்பத்தி இன்றைக்குச் செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடு மட்டுமல்ல; அதற்கு முந்தைய ஆட்சியை எடுத்துக் கொண்டாலும்கூட, மாண்புமிகு அம்மாவினுடைய, புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியில், 1991–1996–லேகூட அந்த ஆட்சிக் காலத்திலேகூட, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, ஏறத்தாழ 1,300.75 மெகாவாட் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், சென்ற முறையும் 1,300 மெகாவாட், இந்த முறையும் 4 ஆண்டுக் காலத்திலே 1,530 மெகாவாட். ஆனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, 5 ஆண்டுக் காலமும் அவர்கள் உற்பத்தி செய்தது, 560.69 மெகாவாட் என்று சொன்னால், உண்மையிலேயே புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சித் திறமைக்கு, சாதனைக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் இங்கே இல்லை–இப்படிப்பட்ட சாதனையை எல்லாம் அவர்கள் கேட்பதற்கு வெட்கப்பட்டுக் கொண்டோ அல்லது வேதனைப்பட்டுக் கொண்டோதான் வெளியே சென்றிருக்கிறார்கள் என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடு மட்டுமல்ல; இன்றைக்கு, இந்த மின் உற்பத்தியை மட்டும் அல்ல; காற்றாலை மின் உற்பத்தியைக்கூட எடுத்துக்கொள்ளுங்கள். காற்றாலை மின் உற்பத்தியிலேகூட, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததற்குப் பிறகு, இந்த 4 ஆண்டுக் காலத்திலே, ஏறத்தாழ 968 மெகாவாட் காற்றாலை மூலமாக மின் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்தில், 5 ஆண்டுக் காலத்திலே, 256 மெகாவாட்தான் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது.

ஆக, காற்றாலை மின் உற்பத்தியின் மூலமாக, ஏறத்தாழ 1,775 மெகாவாட் இன்றைக்கு உற்பத்தி செய்து இந்தியாவிலேயே தமிழகம்தான் காற்றாலை உற்பத்தியில் முதன்மை இடத்தை வகிக்கிறது என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடு மட்டுமல்ல; ஒட்டுமொத்த காற்றாலை மின் உற்பத்தியைப் பொறுத்த அளவிலே, ஒட்டுமொத்த இந்தியாவிலே உற்பத்தி செய்யப்படுகின்ற மொத்த உற்பத்தியில், ஏறத்தாழ தமிழ்நாட்டில் 55 சதவிகிதம் இங்கு உற்பத்தி செய்யப்படுகிறது என்று சொன்னால், அனைத்து மாநிலங்களையும் சேர்த்து 45 சதவிகிதம்; ஆனால், தமிழ்நாட்டிலே மட்டும் 55 சதவிகிதம் என்று சொன்னால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்தத் துறையிலே எந்த அளவிற்குச் சாதனை படைத்திருக்கிறார்கள் என்பதற்கு இதுவும் ஒரு முன்னுதாரணம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, சர்க்கரை ஆலைகளின் இணை மின் உற்பத்தி. அந்தச் சர்க்கரை ஆலை இணை மின் உற்பத்தியிலேகூட, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், வெறும் 74 மெகாவாட் மட்டும்தான் உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே இந்த 5 ஆண்டுக் காலத்திலே ஏறத்தாழ 132 மெகாவாட், அந்தச் சர்க்கரை ஆலைகளில் இணை மின் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. எந்தவகை உற்பத்தியை எடுத்துக்கொண்டாலும் சரி, அதாவது அனல்மின் உற்பத்தியாக இருந்தாலும் சரி, புனல்மின் உற்பத்தியாக இருந்தாலும் சரி, காற்றாலை மின் உற்பத்தியாக இருந்தாலும் சரி அல்லது மரபுசாரா எரிசக்தி மூலமாகப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் மூலமாக உற்பத்தி செய்யப்பட்டாலும் சரி அல்லது இணை மின் உற்பத்தியானாலும் சரி, எல்லாத் துறைகளிலும் திராவிட முன்னேற்றக்



கழக ஆட்சியைக் காட்டிலும், பல மடங்கு மின் உற்பத்தியை அதிகரித்து சாதனை படைத்திருக்கிறது புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடு மட்டுமல்ல; புதியதாக உருவாக்கியது மட்டுமல்ல; ஏற்கெனவே இருக்கின்ற மின் உற்பத்தி நிலையங்களிலேகூட, மேட்டூரிலே இருக்கின்ற உற்பத்தியைக்கூட அதிகரிப்பதிலே புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி, கவனம் செலுத்தி இருக்கிறது. மேட்டூரிலே 40 மெகாவாட் உற்பத்தி செய்த அந்தத் திட்டத்தை, 50 மெகாவாட்டாக, கூடுதலாக இன்றைக்கு உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறார்கள்.

அதேபோல, பாபநாசத்தில் 28 மெகாவாட் உற்பத்தி செய்ததை 32 மெகாவாட்டாக, ஏறத்தாழ இரண்டுக்கும் 56 கோடி ரூபாயிலே, இந்த மின் உற்பத்தியைக் கூடுதலாக ஆக்கியிருக்கிறார்கள் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கடுத்தபடியாக, ஒன்றை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததற்குப் பின்பு, தான் சொன்னதையும் செய்திருக்கிறார், சொல்லாததையும் செய்து முடித்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-30

நாங்கள் சொன்னதைவிடக் கூடுதலாக மின் உற்பத்தி செய்து சாதனை படைத்திருக்கிறார். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியாளர்கள்; குறிப்பாக அன்றைக்கு மின் துறை பொறுப்பை வகித்தவர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள், இதே அவையிலே பல்வேறு வாக்குறுதிகளை அள்ளி வீசியிருக்கிறார். அந்த வாக்குறுதிகளை வெளியிலேகூட சொல்லவில்லை, இந்த மாமன்றத்திலே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்திலே ஐந்தாறு வாக்குறுதிகளை வாய்க்கு வந்தபடி அள்ளி வீசியிருக்கிறார். ஆனால், அந்த வாக்குறுதிகளைச் சொல்லிவிட்டு, அதிலே ஏதாவது நடைபெற்றிருக்கிறதா என்று சொன்னால் ஒன்றுகூட நடைபெறவில்லை. அதற்கு உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். இன்றைக்கு இதே சபையிலே அவர் சொன்னதை அப்படியே படித்துக் காட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1998 ஆம் ஆண்டு நடைபெற்ற மானியக் கோரிக்கையிலே அன்றைய மின் துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் சபையில் பேசியதை

அப்படியே வாசித்துக் காட்டுகிறேன்: "கடலூரிலே 1,320 மெகாவாட்டில் ஓர் அனல்மின் திட்டம் வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஸ்ரீமுஷ்ணத்திலே 250 மெகாவாட் மின் திட்டம் அமைப்பதற்கான நடவடிக்கைகளிலே ஈடுபட்டு, பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஜெயங்கொண்டத்திலே ரிலையன்ஸ் நிறுவனத்தின் மூலம், 1,500 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு அனுமதி தரப்பட்டு, 500 மெகாவாட் உடனடியாக உற்பத்தி செய்வதற்கான பணிகளைத் தொடங்குவதற்கான வேலைகளிலே அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அதேபோல Chennai Power Corporation மூலமாக எண்ணூருக்கு அருகில் 1,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான முழு அனுமதியும் தந்து, அவர்கள் பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அதேபோல, அடுத்த மாதம் பணியைத் தொடங்க இருக்கிறார்கள். வேம்பாரில் 2,000 மெகாவாட் மின்சார உற்பத்தி செய்யவும் நாம் அனுமதி வழங்கியிருக்கிறோம். ஆக, பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே மட்டும் 8,170 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான அனுமதியைத் தந்து இந்த அரசு துரிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த அவைக்குச் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)". இந்த மேசையைத் தட்டும் ஒலிதான் நடந்திருக்கிறதே தவிர, அதிலே ஒரு மெகாவாட் கூட நடைபெறவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்–அதேபோல, அங்கே அவர் செல்லியிருக்கிறார் வட சென்னை வீடியோகான் 1,050 என்று, அதாவது பூ வியாபாரிகள் சொல்லுவார்களே ஆயிரம், இரண்டாயிரம், ஐந்தாயிரம் என்று பூ வியாபாரிகளைப்போல, ஆயிரம் மொகாவாட் மின் உற்பத்தி செய்யப்படும். இரண்டாயிரம் மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்படும் என்று வாய்க்கு வந்தபடி வாக்குறுதிகளை வீசியிருக்கிறார்கள். கிராமத்திலே சொல்லுவார்கள்; "வெந்ததைத் தின்று, வந்ததைப் பேசுகின்ற" என்று ஏதோ சொல்லுவார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, ஏதோ "வானத்தை வில்லாக வளைக்கிறேன், மணலைக் கயிறாகத் திரிக்கிறேன்" வானத்தை வில்லாக வளைக்கிறேன் என்றெல்லாம் நடக்கமுடியாத செய்திகளையெல்லாம் – திட்டங்களையெல்லாம் அன்று வாக்குறுதியாக அள்ளிக் கொடுத்தார்கள். அவர்களைப் பார்த்துத்தான்



"நெஞ்சில் உரமுமின்றி
நேர்மைத் திறமுமின்றி,
வஞ்சனை சொல்வாரடீ! – கிளியே!
வாய்ச்சொல்லில் வீரரடி!"

என்று பாரதி வாய்ச்சொல் வீரர் என்று பேசியிருப்பார் என்று தெரிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவுக்கு வாய்ச் சொல் வீரர்களாக இருந்திருக்கிறார்களே தவிர, ஒரு மெகாவாட்டாவது சொன்னது உற்பத்தி செய்திருக்கிறார்களா? இந்த 8,170 மெகாவாட்டில், ஒரு நூறு மெகாவாட் உற்பத்தி செய்து இருக்கக் கூடாதா? ஒரு நூறு சதவீதம் – ஒது பொதுத் தேர்வு எழுதினால் ஏதோ 10 மார்க், 20 மார்க் வாங்கிக்கொண்டு தோல்வி அடைந்திருக்கலாம். ஆனால் சைபர் மார்க் வாங்கியா தோல்வி அடைவது? (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவிற்கு. இன்னும் சொல்லப்போனால், அவர் சொல்கிறார் "வட சென்னை வீடியோகான் 1,050 மெகாவாட்; நடக்கவே இல்லை. வட சென்னை Trisakthi என்ற நிறுவனம் 525 மெகாவாட்; நிறுவப்படவேயில்லை. தூத்துக்குடி ஸ்பிக் 525 மெகாவாட், நிறுவப்படவேயில்லை. கடலூரில் 1,320 மெகாவாட்; நிறுவப்படவேயில்லை. ஸ்ரீமுஷ்ணம் 250 மெகாவாட் நிறுவப்படவேயில்லை. ஜெயங்கொண்டத்தில் 1,500 மெகாவாட்; இதைப்பற்றிய திட்டத்தை அவர்கள் கைவிட்டுவிட்டார்கள். Chennai Power Corporation 1,000 மெகாவாட் நிறுவப்படவேயில்லை. வேம்பாரில் 2,000 மெகாவாட் இதுவரை நிறுவப்படவேயில்லை. ஏதாவது ஒரு positive பதில் வந்திருக்கிறதா? அதிலே வேடிக்கை என்னவென்றால், இந்தத் திட்டங்களையெல்லாம் திருத்தி, ஏதோ திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாளர்கள் அறிவித்ததுதானே, அதற்காக விட்டுவிடக் கூடாது என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு, இதைத் தொடங்குவதற்கு ஏதாவது வாய்ப்பு இருக்கிறதா என்று அம்மாவினுடைய அரசு வந்ததற்குப் பின்னர் ஆய்வு செய்து பார்த்தால், இதில் வேடிக்கை என்னவென்றால் இந்தத் திட்டங்களைத் தொடங்குவதற்கு 0.001% கூட வாய்ப்பே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி வாய்ப்பே இல்லாத திட்டங்களை வாய்ச்சொல் வீரர்களாக அறிவித்திருக்கிறார்கள் என்று சொன்னால், இதைவிட அவர்களுடைய ஆட்சியின் அவலத்திற்கு வேறு ஏதாவது சாட்சியம் வேண்டுமா?

அதேபோல, இன்னும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கும் சொல்லப்போனால் காவிரிப் படுகை புனல் மின் திட்டம். 1150 மெகாவாட்டில் அவர்கள் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்படும் என்று அறிவித்தார்கள். நேரத்தின் அருமை கருதி, சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னதற்கிணங்க, இந்த நேரத்திற்குள்ளே முடிக்க வேண்டும் என்பதால், அந்தத் திட்டமும் நிறைவேறவில்லை என்பதைமட்டும் சுருக்கமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதற்கு வேண்டிய முயற்சிகளும் எடுக்கப்படவில்லை. இன்றைக்கு மத்திய அரசிலே இந்தத் திட்டம் கிடப்பிலே இருக்கிறது. மத்திய அரசிலே அங்கம் வகிப்பவர்கள், அந்தக் காவிரி புனல் நீர் மின் உற்பத்தித் திட்டத்தையும் பெற்றுத் தருவதற்கு, அங்கே 12 மத்திய அமைச்சர்கள் உட்பட 40 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ...

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் தேவைப்படுகிற நேரத்தை எடுத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** அதற்கும் அவர்கள் எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

அதற்கு அடுத்தபடியாக, இவ்வளவு மின் உற்பத்தியைச் செய்ததன் காரணமாகத்தான், இந்தியாவிலேயே மின்வெட்டே இல்லாத ஒரு மாநிலம் தமிழகம் என்ற நிலைமை (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு உருவாகியிருக்கிறது என்று சொன்னால், அந்தப் பெருமைக்கும், சிறப்புக்கும் முழுமுதற் காரணம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். அவர்களுடைய ஆளுமைத் தன்மையாலும், தொலைநோக்குப் பார்வையாலும், திட்டமிடும் ஆற்றலாலும், அதைச் செயல்படுத்துகின்ற திறமையின் காரணமாகவும், இன்றைக்குத் தமிழகம், இந்தியாவிலே மின்வெட்டே இல்லாத ஒரு மாநிலமாக உருவாகியிருக்கிறது. இவ்வளவு சாதனையைப் படைத்திருக்கிறோம் என்று சொன்னால்—பொதுவாகச் சொல்வார்கள். ஒரு சாதனையைச் செய்வதற்கு மிகப் பெரும் முயற்சி வேண்டும், மிகப் பெரும் உழைப்பு வேண்டும். ஆனால் அந்தச் சாதனையைத் தக்கவைக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கும் மேலாக உழைக்க வேண்டும், அதற்கும் மேலாக – அந்தத் திட்டத்தை, அந்தச் சாதனையைத் தக்கவைப்பது என்பது, அந்தச் சாதனையை ஏற்படுத்தியதைக் காட்டிலும், அதைவிடக் கடினம் என்று சொல்வார்கள். அதைப்போல, மின்வெட்டே இல்லாத மாநிலமாக உருவாக்கி, சாதனை படைத்திருக்கிற புரட்சித் தலைவி



அம்மா அவர்கள், அந்தச் சாதனையை என்றென்றும், வருங்காலத்திலும் தக்கவைக்க வேண்டுமென்ற தொலைநோக்குப் பார்வையோடு (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக மட்டும், வருகின்ற 5 ஆண்டுத் திட்டக் காலத்திலே, 2002–2007–க்குள் 2408.8 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு வருங்காலத்திலே தேவைப்படுகின்ற மின்சாரத்தை, மின்சாரத் தேவை, நாளுக்கு நாள் அதிகரித்து வருவதைக் கருத்தில்கொண்டு, அதையும் கணக்கிட்டு, அந்தத் தேவையையும் உள்ளடக்கி, அதைப் பூர்த்தி செய்வதற்காக 2408.8 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்திச் செய்வதற்கான –திட்டங்களை வடிவமைத்து, அதற்கு வேண்டிய முயற்சிகளிலும், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, இப்போது திட்டங்களைத் தயார் செய்து, அந்த முயற்சியிலே நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதையும் இந்த நேரத்திலே.பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பல்வேறு சிறப்புகளுக்கு மற்றோர் உதாரணத்தையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அனல் மின் உற்பத்தியைப் பொறுத்த அளவிலே இன்றைக்கு நமது தூத்துக்குடி அனல் மின்நிலையமும், மேட்டூர் அனல்மின் நிலையமும் தொடர்ந்து 5 ஆண்டுக் காலமாகச் சிறப்பாகச் செயல்பட்டு, 2004–05 ஆம் ஆண்டிலும், இந்த ஆண்டிலும் இந்திய அளவிலே, தூத்துக்குடி மற்றும் மேட்டூர், இந்த இரண்டு அனல்மின் உற்பத்தி நிலையங்களும், இந்தியாவிலேயே சிறந்த அனல் மின் நிலையங்கள் என்பதற்காக, இந்திய அரசின் தங்கப் பதக்கத்தைப் பெறுவதற்கு இன்றைக்குத் (மேசையைத் தட்டும் ஒலி) தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன என்கின்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நமது தங்கத் தலைவியின் ஆட்சியில் தங்கப் பதக்கம் பெறுகின்ற சாதனையை (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் துறை படைத்து இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல. தூத்துக்குடியும், எண்ணூர் அனல்மின் நிலையமும் தமிழக அரசினுடைய—பாதுகாப்பைப் பொறுத்த அளவிலே –சிறப்பு விருதுகளைப் பெறுவதற்கு, இரண்டாம் இடத்திலே தேர்வு செய்யப்பட்டு இருக்கின்றன. ஆகவே, அந்தச் சிறப்பையும் இன்றைக்குப் பெற்றிருக்கிறோம்.அதற்கு அடுத்தபடியாக, மிக முக்கியமான ஒரு செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மத்திய அரசினுடைய வஞ்சகப் போக்கினை எடுத்துச் சொல்வதற்காக, மாநில அரசை வஞ்சிப்பதற்கு, மத்திய அரசு எடுத்திருக்கிற மறைமுக நடவடிக்கைக்கு ஓர் உதாரணம் சொல்ல

விரும்புகிறேன். ஊரக மின்மயமாக்கல் கழகம் என்று மத்திய அரசில் உள்ளது. மத்திய அரசினுடைய ஊரக மின்மயமாக்கல் கழகத்தின் மூலமாக, முழுமையான மின்சார வசதி பெறாத கிராமங்களைத் தேர்வு செய்து, அந்தக் கிராமங்களுக்கு மின் வசதியைச் செய்து கொடுப்பதற்காக, ஒரு சிறப்புத் திட்டத்தை அங்கே செயல்படுத்தி வருகிறார்கள். அந்தத் திட்டத்தின் அடிப்படையில் பார்த்தால்—அதற்குச் சில norms–ஐ, சில விதிமுறைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். முழுமையான மின்சார வசதி பெறாத கிராமங்களுக்கு, மத்திய அரசின் ஊரக மின்மயமாக்கல் கழகம் நிதி உதவி செய்து, அந்த வசதியைப் பெற்றுத் தரும். அந்தத் திட்டத்தின் அடிப்படையில், இன்றைக்கு அவர்கள் சொல்லியிருக்கின்ற விதிமுறைகளுக்கு உட்பட்டு—அதாவது கிராமங்கள், மின்சார வசதி பெற்றிருந்தாலும், முழுமையான மின்சார வசதி பெறாத கிராமங்களுக்கு அந்த உதவி கிடைக்கும்.--அந்தவகையிலே பார்த்தால், தமிழகத்திலே 5,100 கிராமங்கள் அதற்காகத் தேர்வு செய்யப்பட்டன. 5,100 கிராமங்களிலும் மின் வசதி இருக்கிறது. அவர்கள் சொல்லியிருக்கின்ற விதிமுறை என்னவென்று சொன்னால், ஒரு கிராமத்தில் மின்வசதி இருந்தாலும், 10 சதவீத குடியிருப்புகளாவது மின்வசதி பெற்றிருக்க வேண்டும். அந்த ஊரிலே ஒரு transformer இருக்க வேண்டும். அந்த ஊரிலே இருக்கின்ற உள்ளாட்சி அமைப்புக் கட்டடங்கள் அல்லது பொதுக் கட்டடங்கள், பள்ளிக்கூடம் போன்றவை எல்லாம் மின்வசதி பெற்றிருக்க வேண்டும். இவையெல்லாம் பெற்றிருந்தால்தான், அது முழுமையாக மின்வசதி பெற்ற கிராமம். ஆனால் மின்வசதி இருந்து, transformer இல்லையென்றால் அல்லது பொதுக் கட்டடங்களுக்கு மின் வசதி இல்லையென்றால், அந்தக் கிராமம் மின்வசதி பெற்ற கிராமமாகக் கருதப்பட மாட்டாது என்று ஒரு விதிமுறையை வைத்திருக்கிறார்கள். அந்த விதிமுறையின்படி பார்த்தால், நமது மாநிலத்தைப் பொறுத்த அளவிலே 1992-இலேயே அனைத்துக் கிராமங்களும் மின்வசதியைப் பெற்றிருந்தாலும்கூட, ஒரு சில கிராமங்கள், மலைப் பகுதி கிராமங்களைத் தவிர, மற்றவை மின்வசதி பெற்றிருந்தாலும்கூட, இந்த விதிமுறையின்படி பார்த்தால், ஒருசில பகுதிகள்தான் மின்சார வசதியைப் பெற்றிருக்கின்றன.

*முற்பகல் 11–40*

மத்திய அரசினுடைய இந்த விதிமுறைப்படி, நாம் உதவி பெறுவதற்கு தகுதியான கிராமங்கள் நமது மாநிலத்தில் இருக்கின்றன. அந்தவகையிலே பார்த்தால், 5100 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, அந்த 5100 கிராமங்களுக்கு 235 கோடி ரூபாய் செலவாகுமென்று



சொல்லி, மத்திய அரசுக்கு நமது மாநில மின்சார வாரியம், ஒரு proposal–ஐ–திட்டத்தை–அனுப்பியிருக்கிறது. இந்த விதிமுறைப்படி, அவர்கள் 235 கோடி ரூபாயைக் கொடுத்தாக வேண்டும். 235 கோடி ரூபாயைக் கொடுத்தாக வேண்டும். 5100 கிராமங்களுக்கும் மின் வசதியை, இந்தக் கூடுதல் மின் வசதியை, நாம் செய்தாக வேண்டும். ஆனால், இப்போது என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால், ஒரு புதிய விதியை, அதிலே இல்லாத விதியை, இப்போது புதிதாகக் கற்பனையாக உருவாக்குகிறார்கள். என்னவென்று சொன்னால், ஓர் ஊராட்சி ஒன்றியத்திலே, ஒரு துணை மின் நிலையம் இருந்தால், அந்தப் பகுதி, ஊராட்சிப் பகுதியின் அனைத்து கிராமங்களும், மின் வசதி பெற்ற கிராமங்களாகக் கருதப்படுமென்று புதிய விளக்கத்தைத் தருகிறார்கள். அப்படிப் பார்த்தால், நமது தமிழகத்தைப் பொறுத்த அளவிலே, எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் துணை மின் நிலையங்கள் இருக்கின்றன. துணை மின் நிலையம் இல்லாத ஊராட்சியே இல்லை. அந்த அளவில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே–சென்ற நமது ஆட்சிக் காலத்திலேயே--அந்தச் சாதனையை, நாம் எட்டிப் பிடித்து இருக்கிறோம்.

அதுவும் சொல்லப்போனால் சில ஊராட்சி ஒன்றியங்களிலே 2, 3 துணை மின் நிலையங்கள்கூட இருக்கின்றன. ஆக, இந்தக் காரணத்தைச் சொல்லி, நீங்கள் இந்த உதவி பெறுவதற்குத் தகுதியில்லை என்று சொல்லி, இந்த 5,100 கிராமங்களையும் இன்றைக்குப் புறக்கணிக்கின்ற முயற்சியில், மத்திய அரசு ஈடுபட்டிருக்கிறது. விதிமுறைப்படி, அவர்கள் ஏற்படுத்திய விதிமுறைப்படி, அவர்கள், இந்த 235 கோடி ரூபாயைக் கொடுத்தாக வேண்டும். 5100 கிராமங்களுக்கு மின் வசதி கொடுத்தாக வேண்டும். ஆனால், வஞ்சிக்கின்றவிதமாக, 'நீங்கள் எல்லாம் வளர்ச்சி பெற்ற மாநிலங்கள்; அதனால், உங்களுக்கு அது தேவையில்லை' என்று சொல்கிறார்கள். நான் கேட்கிறேன், வளர்ச்சி பெறுவது என்பது மிகப் பெரிய குற்றமா? அது என்ன பஞ்சமா பாதகமா? ஒரு மாநிலம் வளர்ச்சி பெற்றுவிட்டது என்று சொன்னால், அது பெருமைக்குரியதில்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) அது சிறப்புக்குரியதில்லையா? இன்னும் சொல்லப்போனால், அப்படிச் சிறப்பாகச் செயல்படுகிற அந்த மாநிலங்களுக்கு ஊக்கத் தொகையாக, ஊக்க போனசாக வழங்குவார்களே தவிர, ஆனால், இவர்கள், மாறாக வஞ்சிக்கிறார்கள். நான் கேட்கிறேன். தமிழகத்திலிருந்து சென்ற இந்த 12 மத்திய அமைச்சர்கள் உட்பட, இந்த 40 நாடாளுமன்ற உறுப்பினர்களும் அங்கே என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? தமிழர்கள் நலன் பாதிக்கப்படுகிறது. தமிழ்நாட்டினுடைய நலன்

பாதிக்கப்படுகிறது. 5,100 கிராமங்கள் இங்கே புறக்கணிக்கப்படுகின்றன என்று சொன்னால், அதைப்பற்றிக் குரல் கொடுப்பதற்கு அங்கே வக்கில்லை, நாதியில்லை, திராணியில்லை, தெம்பில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அவர்கள் இங்கே தமிழகத்திலே வந்து வீர வசனம் பேசுகிறார்கள். இப்படிப்பட்டவர்களை மக்கள் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான், இந்த மாமன்றத்திலே இந்தப் பிரச்சினையை நாங்கள் எடுத்து வைக்க விரும்புகிறோம்.

அடுத்தபடியாக காவிரி டெல்டா பகுதியிலே இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததற்குப் பின்பு, கடுமையான வறட்சியின் காரணமாகவும், கர்நாடகம் வஞ்சித்து விட்டதன் காரணமாகவும், காவிரி டெல்டா பகுதி விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைக் கருத்தில்கொண்டு அங்கு மின் இணைப்பு வசதி கொடுத்த விவசாயிகளுக்கு 7,000 மின் இணைப்புதான் ஆண்டுக்குக் கொடுக்கப்பட்டு வந்தது. இன்றைக்கு அந்தப் பகுதியிலே 15,000 என்ற அளவிற்கு அந்த ஒதுக்கீட்டை உயர்த்தி இருக்கிறார்கள். அதிலேயும்கூட, உடனடியாக, இப்போது 7,900 பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது. மீதமுள்ள விவசாயிகளின் பம்புசெட்டுகளுக்கு மிக விரைவிலே மின் இணைப்பு கொடுக்கின்ற பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மின் இணைப்பைப் பொறுத்த அளவிலே, இன்றைக்கு National average–தேசிய அளவிலே–மின் இழப்பு–line loss–என்பது 27 சதவிகிதம் இருக்கிறது. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆளுகின்ற இந்தப் புண்ணிய பூமியான தமிழகத்திலே மட்டும்தான், இந்தியாவிலேயே மிகக் குறைந்த அளவில், ஏறத்தாழ 18 சதவிகிதம் என்ற அளவிலே தமிழகத்திலேதான் மின் இழப்பு–line loss–இருக்கிறது. இந்த 18 சதவிகிதம் மின் இழப்பைக்கூட இன்னும் குறைக்க வேண்டும். தேசிய அளவில், 27 சதவிகிதம் இருந்தாலும், நாம் அதைவிடக் குறைவாக 18 சதவிகிதமாக இருந்தாலும்கூட அதிலேகூட இன்றைக்கு அதையும் மீண்டும் குறைப்பதற்காக ஆண்டுக்கு ஏறத்தாழ 1000 கோடி ரூபாயை சிறப்பு நிதி ஒதுக்கீடாக, மின் வாரியம் அந்த line loss–ஐக் குறைப்பதற்கு ஒதுக்கி, அதற்கு சிறப்புத் திட்டங்களை எல்லாம் செயல்படுத்தி வருகிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, இந்த நுகர்வோர் சேவையைப் பொறுத்த அளவிலே கணினிமயமாக்கப்பட்ட மின் தடை மையங்கள், இப்போது சென்னை பெருநகரில் மட்டும் இயங்கி வந்தது. மாண்புமிகு அம்மா அவர்கள்,



மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சி போன்ற மாநகராட்சிகளுக்கும் அந்த வசதியை இப்போது விரிவுபடுத்திக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காகவும், இந்த நேரத்தில், அந்த மக்கள் எல்லாம், மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, அந்தத் திட்டம், மிக விரைவிலே வேலூர், திருநெல்வேலி, சேலம், ஈரோடு, நாகர்கோவில் போன்ற மாநகரங்களுக்கும், நகரங்களுக்கும் விரிவுபடுத்தப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, புதிய மின் உற்பத்தித் திட்டங்களைப் பொறுத்த அளவிலே, சென்ற முறை, 8–12–2004 அன்று மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தினுடைய வெள்ளி விழா ஆண்டிலே, அங்கே திட்டங்களைத் தொடங்கி வைத்தார்கள். 27 மின் உற்பத்தி நிலையங்களை, ஏறத்தாழ 452 கோடி ரூபாயில் அந்தத் திட்டங்களை எல்லாம் முடித்து, அவற்றைத் தன்னுடைய திருக்கரங்களால் தொடங்கி வைத்து நாட்டுக்கு அர்ப்பணித்திருக்கிறார்கள்.

முற்பகல் 11–45

அதேபோல் 4 புதிய மின் உற்பத்தித் திட்டங்களுக்காக, 472 கோடி ரூபாயிலே அன்றைக்கு அந்தத் திட்டங்களைத் தொடங்கி வைத்தார்கள். தூத்துக்குடியிலே மட்டும், கடந்த டிசம்பர் மாதம் 2004–ல் நடைபெற்ற விழாவில், ஏறத்தாழ 974 கோடி ரூபாய்க்கு, தமிழக மக்கள் பெரிதும் பயன்பெறுகின்ற வகையில், மின் உற்பத்தித் திட்டங்களை எல்லாம் தொடங்கி வைத்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு நினைவூட்ட விரும்புகிறேன்.

அதேபோல், இப்போது விவசாயிகளுக்கு, இவ்வளவு நிதிநெருக்கடியிலும் இலவச மின்சாரம் வழங்கி, இப்போதும் விவசாயிகளுடைய ஏகோபித்த பாராட்டைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

அதோடு மட்டுமல்ல; அந்த விவசாயிகள் பெரிதும் பயன்பெறுகின்ற வகையிலே, முன்பு இலவச மின்சாரம் கொடுத்தார்களே தவிர, ஆனாலும்கூட உரிய மின்சாரத்தை அவர்கள் வழங்கவில்லை. இலவச மின்சாரம் என்று பெயர் அளவில் விளம்பரம் செய்தார்களேயொழிய, விவசாயிகளுக்கு, யாருக்குமே உள்ளபடியே

மின்சாரமே கிடைக்கவில்லை. 2 மணிநேரம், 3 மணிநேரம்கூட அறிவித்திருப்பார்கள். ஆனால் கிடைக்கவில்லை. இப்போது போய்க் கேட்டுப் பாருங்கள். மாண்புமிகு அருமை அண்ணன் சந்தானம் அவர்கள் சொன்னதுபோல, எந்தக் குறிப்பிட்ட நேரத்திலும், தடை இல்லாத மின்சாரமும், தரமான மின்சாரமும் (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், வீட்டு உபயோகிப்பாளர்களுக்கும் பெருமளவு கட்டணத்தைக் குறைத்துள்ளார்கள். இந்தியாவிலேயே domestic கட்டணம், வீட்டு உபயோகத்திற்கான மின்சாரக் கட்டணம், மிகக் குறைவான கட்டணம் தமிழகத்திலேதான் இருக்கிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தொழிலாளர்கள் நலனை எடுத்துக்கொண்டால், தொழிலாளர்களுடைய நலனுக்காக, இடைக்கால நிவாரணமாக போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு வழங்கியதுபோல மின் துறை ஊழியர்களுக்கும், மாதம் 250 ரூபாய் என்ற அளவிலே வழங்கி அவர்களுடைய, தொழிலாளர்களுடைய நலனிலே அக்கறை கொண்ட அரசாக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு விளங்கிக்கொண்டிருக்கிறது.

அதோடு மட்டுமல்லாமல், தொழிலாளர்களைப் பற்றி மற்றொன்றையும் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்குத் தொழிற்சங்கங்கள் எல்லாம் கோரிக்கைகள் வைத்துக் கொண்டிருக்கின்றன. ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள், ஏற்கெனவே அதற்கு வேண்டிய உத்தரவை வழங்கியிருக்கிறார்கள். தொழிலாளர்கள் பிரச்சினையைப் பொறுத்த அளவிலே, அவர்களின் பிரச்சினையைப் பேசித் தீர்த்து, அவர்களை அழைத்து, தொழிற்சங்கங்களோடு பேசி, அவர்களுடைய வேலைப் பளு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் மற்றும் அவர்களுடைய ஊதிய ஒப்பந்தப் பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் பேசித் தீர்த்து, அவர்களுடன் ஊதிய ஒப்பந்தம் செய்யப்பட வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் கட்டளையிட்டிருக்கிறார்கள்; ஆணையிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில், இன்றைக்கு மின் துறை அதிகாரிகள், தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி,



அந்த ஒப்பந்தத்தை இறுதி செய்கின்ற பணியிலே ஈடுபட்டிருக்கின்றார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றை மட்டும் நான் இந்த நேரத்திலே சொல்லி, என்னுடைய உரையை நிறைவு செய்ய விரும்புகிறேன். அதேபோல், இதுவும் ஒரு முக்கியமான பிரச்சினை, மத்திய அரசு சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சினை. பைக்காரா புனல் மின் திட்டம். இந்த பைக்காரா புனல் மின் திட்டம் என்பது, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒரு மிகப் பெரிய, பெருமையைத் தரக்கூடிய திட்டமாகும். அந்த அளவிற்குத் தொழில்நுட்பம் மிகுந்த அந்தத் திட்டத்தை, மிகச் சிறப்பாக, வெற்றிகரமாக இப்போது தமிழ்நாடு மின்சார வாரியம் நிறைவேற்றியிருக்கிறது.

ஒன்றைச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், இது 1985–லே உருவாக்கப்பட்ட திட்டமாகும். இந்தத் திட்டம் நீண்டகாலமாக கிடப்பிலே போடப்பட்டு, அதற்குப் பின்பு, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பின்னாலே, இந்தத் திட்டத்தை, சென்ற நம்முடைய ஆட்சிக் காலத்திலே விரைவுபடுத்தி, பிறகு, மீண்டும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே, இந்தத் திட்டத்தைக் கைவிட்டதுபோல் அப்படியே விட்டுவிட்டார்கள். தொடர்ந்து நடத்த இயலவில்லை; செயல்படுத்தவில்லை. அதற்குப் பின்பாக, மீண்டும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததற்குப் பின்புதான், இந்தத் திட்டத்தின்மீது சிறப்புக் கவனம் செலுத்தி, இப்போது அப்படிப்பட்ட, 150 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட இந்த பைக்காரா புனல் மின் திட்டத்தைச் செய்து முடித்து, இப்போது இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதைத் (மேசையைத் தட்டும் ஒலி) தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆனால், ஒன்றை நான் அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புவது எல்லாம், இந்தத் திட்டத்தைத் தொடங்குவதற்கு, ஏறத்தாழ 350 கோடி ரூபாய் செலவிலே, 150 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட பைக்காரா புனல் மின் திட்டம்மூலம், மின்சாரத்தை உற்பத்திச் செய்வதற்கு மத்திய அரசின் சுற்றுச்சூழல் துறை அன்றைக்கு அனுமதி அளித்தது. மத்திய அரசினுடைய சுற்றுச்சூழல் துறையினுடைய அனுமதியைப் பெற்றுத்தான் உற்பத்தியைத் தொடங்கினார்கள். இப்போது அந்த உற்பத்தி செய்கின்ற அந்தப் பணிகள் இறுதி செய்யப்பட்டுவிட்டன; முடிவுற்றுவிட்டன. முடிவுற்ற பின்பு, அந்த உற்பத்தி செய்த மின்சாரத்தை எடுத்துச் செல்வதற்கு மின் பாதை அமைக்கவேண்டிய

பணி மட்டும்தான் பாக்கி உள்ளது. அந்த மின் பாதை அமைப்பதற்காக, தமிழ்நாடு மின்சார வாரியம், அதற்கான முயற்சிகளை மேற்கொண்டபோது, மத்திய அரசினுடைய சுற்றுச்சூழல் துறை அமைச்சகம், இல்லை என்று சொல்லி அதற்கு அனுமதி மறுக்கிறது. அதாவது, உற்பத்தி செய்வதற்கு அனுமதி கொடுத்த மத்திய அரசின் சுற்றுச்சூழல் துறை, உற்பத்தி செய்த மின்சாரத்தை அங்கிருந்து எடுத்துச் செல்வதற்குத் தடை விதிக்கிறது என்று சொன்னால், இதிலே என்ன நியாயம்? அதிலும் சொல்லப்போனால், சமைப்பதற்கு அனுமதி கொடுப்பார்களாம்! சமைத்து முடித்ததற்குப் பின்பு, அதைச் சாப்பிடக்கூடாது என்று சொன்னால், இதிலே என்ன பொருள் இருக்கிறது? இன்னும் சொல்லப்போனால், சென்றமுறை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. டி.ஆர். பாலு, வனத் துறை மற்றும் சுற்றுச்சூழல் துறைக்கு... (குறுக்கீடு)

*முற்பகல் 11–50*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது சொன்ன விவரத்தைப் பற்றிச் சற்று விரிவாகச் சொல்ல விரும்புகிறேன். காரணம், இதில் நான் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருக்கிறேன். இப்போது அமைச்சர் குறிப்பிட்ட அந்த மின் திட்டம் நிறைவு பெற்று, commission செய்யப்படுவதற்கு முன்பு, வனப் பகுதிமூலமாக ஒரு cable-ஐ எடுத்துச்செல்ல வேண்டும். அப்போதுதான் அந்த மின்சாரத்தை supply செய்யமுடியும். Forest area–விற்குள் சிறிது தூரம் அந்த cable-ஐப் போடவேண்டும். அதற்கு அப்போது மத்திய வனத் துறை அமைச்சராக இருந்த திரு. டி.ஆர். பாலு அனுமதி கொடுக்க மறுத்தார். கிட்டத்தட்ட ஓர் ஆண்டுக் காலம் அதைத் தாமதப்படுத்தினார். திரும்பத் திரும்ப இங்கிருந்து கடிதம் எழுதி, இதுசம்பந்தமாக துறைக்கு எழுதி, துறை அமைச்சருக்கு எழுதி, பின்னர் நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும் கடிதம் எழுதி, அப்போதும் திரு. டி.ஆர். பாலு இதற்கு அனுமதி தராததால், வேண்டுமென்றே அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, மக்களுக்கு நன்மை பயக்கும், மக்களுக்கு மின்சாரத்தைக் கொடுக்கின்ற ஒரு திட்டத்திற்கு அவர் தடை விதித்ததால், உச்ச நீதிமன்றத்தில் வழக்குப் போட்டு, வெற்றி பெற்று அதன்பிறகுதான் ஆணை பெறப்பட்டது என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் மிகத் தெளிவாக இதை விளக்கியிருக்கிறார்கள். அந்த நேரத்திலும் அவர்கள் அனுமதி கொடுக்க மறுத்துவிட்டார்கள். இப்போது இருக்கின்ற அதே துறையைச் சார்ந்த அமைச்சர் திரு. ராஜா, – தி.மு.க.–வினுடைய அமைச்சர்தான்--இந்தத் துறைக்கு இப்போதும் பொறுப்பு வகிக்கிறார். அதேபோல, இவரும் கொடுக்க மறுத்துவிட்டார். உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று, இப்போது மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த மிகப் பெருமுயற்சியின் காரணமாக, உச்ச நீதிமன்றத்திலே அதற்கு இப்போது அனுமதி வாங்கி, அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவேதான் சொல்கிறேன். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், இந்த அளவிற்கு, எந்தப் பணியாக இருந்தாலும், மத்திய அரசிலே இருக்கின்றவர்கள், குறிப்பாக, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த அமைச்சர்கள் நன்மை செய்யவில்லை என்றாலும் பரவாயில்லை; அவர்கள் உதவி செய்யவில்லை என்றாலும் பரவாயில்லை; உபத்திரமாவது செய்யாமல் இருக்கலாமே என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவிற்கு இப்போது அவர்களையும் மீறி, உச்ச நீதிமன்றத்தின் ஆணை பெற்று, இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தச் சிறப்பு முயற்சியை எடுத்ததன் காரணமாகத்தான், இன்றைக்கு அந்த அனுமதியைப் பெற்று, வேலைகள், நடைபெற்றிருக்கின்றன. (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்தில் மக்களுக்கு ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மத்தியிலே அமைச்சர்களாக இருக்கின்ற தி.மு.க.–வைச் சேர்ந்த அமைச்சர்கள், எப்படி மக்கள் விரோதப் போக்கைக் கடைப்பிடிக்கிறார்கள் என்பதைத் தமிழக மக்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக இதைச் சொல்கிறேன். இந்தப் பைக்காரா மின் திட்டத்தைப் பற்றி, இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்களும், நானும் குறிப்பிட்டோமே, இந்தத் திட்டம் செயல்படத் தொடங்கினால், அந்த மின்சாரம் என்ன, என் இல்லத்திற்கு வரப்போகிறதா? இல்லை, மாண்புமிகு அமைச்சரின் வீட்டிற்குப் போகப் போகிறதா? இதனால் தமிழக மக்கள் பயனடையப் போகிறார்கள். இது ஒரு பொது நலத் திட்டம். பொது மக்களுக்குச் செல்கின்ற திட்டம். ஆனால், அவ்வளவு குறுகிய மனப்பான்மையோடு, அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற விடாமல், அவர்கள் இத்தனைக் காலம் அதை தாமதப்படுத்தியிருக்கிறார்கள். மீண்டும், மீண்டும் மத்திய அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும்

கடிதம் எழுதியும், பலன் தராமல், பலன் இல்லாமல், அதனால் உச்ச நீதிமன்றத்திற்குச் செல்லவேண்டிய ஒரு கட்டாயத்தை அவர்கள் ஏற்படுத்தினார்கள் என்றால், அவர்களுடைய மக்கள் விரோதப் போக்கை மக்கள் புரிந்துகொண்டு, வரும் தேர்தலில் அவர்களுக்குத் தக்க பாடம் புகட்டவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் மிகத் தெளிவாக இதை விளக்கியிருக்கிறார்கள். இன்னொன்றையும் சொல்லவேண்டும் என்றால், ஒருநாள் தாமதப்பட்டால், உற்பத்தி செய்வதற்குத் தயாராகி, அந்த அனுமதி கிடைக்காததன் காரணமாக, ஒரு நாளைக்கு 27 இலட்சம் ரூபாய் நஷ்டம். அப்படியானால், எவ்வளவு நாள் தாமதம் ஆகியிருக்கிறது மத்திய அரசினால். நம்முடைய தமிழ்நாட்டு மக்களுடைய வரிப் பணம்தான் இந்தப் பணம். அந்த அளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த முயற்சியை எடுக்கவில்லை என்று சொன்னால், தனிக் கவனம் செலுத்தவில்லை என்று சொன்னால், நிச்சயமாக இந்தத் திட்டத்தில், அவர்களுடைய வஞ்சகத்தையும், சூழ்ச்சியையும் மீறி வெற்றி பெற்றிருக்க முடியாது. புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய தலைமையின் காரணமாக, அவருடைய விவேகத்தின் காரணமாக, அவருடைய திறமையின் காரணமாகத்தான், இன்றைக்கு இதை உச்ச நீதிமன்றத்திற்குக் கொண்டு சென்று வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடுமட்டுமல்ல; நிச்சயமாக இந்தத் திட்டம் முடிவுற்றவுடன் – மிக விரைவிலே இந்தத் திட்டம் முடிவடைய இருக்கிறது; மின் பாதை அமைக்கும் பணி, உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் முடிவடைய இருக்கிறது; முடிவடைந்தவுடன் – புரட்சித் தலைவி அம்மா அவர்களே தன்னுடைய திருக்கரங்களால் அதைத் தொடங்கிவைத்து; (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டு மக்களுக்கு அர்ப்பணிக்கின்ற காலம், மிக விரைவிலே வர இருக்கிறது என்ற நல்ல செய்தியை இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–55*

இறுதியாக ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். கவன ஈர்ப்பு மூலமாக நமது சட்டமன்ற உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டார். மானியக் கோரிக்கையில் அதற்குப் பதில்



அளிக்கிறேன் என்று சொன்னேன். அதனால், அவருக்கும் இந்தப் பதிலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சென்னைப் பெருநகரத்தைப் பொறுத்த அளவில், மின் வசதி மேம்பாட்டிற்காக இந்த அரசு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, என்னென்ன திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறது என்று கேட்டார்கள். அதுபற்றிய விரிவான பதிலை மானியக் கோரிக்கையின்போது சொல்கிறேன் என்று சொன்னேன். அவருக்கு அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

2002–2007 இந்த ஐந்து ஆண்டுத் திட்டக் காலத்திலே, சென்னைப் பெருநகரில், மொத்தம் நிறுவப்படவுள்ள துணை மின் நிலையங்கள் 68. அவற்றிலே, 230 கிலோவாட் துணை மின் நிலையங்கள் 6; 110 கிலோவாட் துணை மின் நிலையங்கள் 20; 33 கிலோவாட் துணை மின்நிலையங்கள் 42; ஆக மொத்தம் 68 துணை மின் நிலையங்கள். இந்த 68 துணை மின் நிலையங்களையும் அமைப்பதற்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.735 கோடி. இதிலே, இப்போது ரூ.235 கோடி திட்டத்தில், சென்னை நகருக்குக் கொண்டு வந்திருக்கின்ற துணை மின் நிலையங்கள் அமைக்கின்ற பணியில், இதுவரையில் ரூ.162 கோடி செலவு செய்து, 21 துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. அவற்றிலே, இன்னும் சொல்லப்போனால், 6 துணை மின் நிலையங்கள் இப்போது அமைக்கின்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. அவையும் மிக விரைவிலே முடிவடைய இருக்கின்றன. அதோடு, இன்னும் 12 துணை மின் நிலையங்களுக்கு இடம் தேர்வு செய்யப்பட்டு, அதற்குரிய பணிகளும் மிக விரைவிலேயே தொடங்கப்பட இருக்கின்றன. மீதி இருக்கின்ற 29 துணை மின் நிலையங்களுக்கும் மிக விரைவிலேயே அமைக்க--இடம் கிடைக்காத பிரச்சினையால், அது சற்றுக் காலதாமதமாகிக் கொண்டிருக்கிறது. அதற்கும் மிக விரைவிலேயே இடத்தைத் தேடி--அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான ஒப்புதலோடும், ஆணையின்படியும், இந்தத் துறை தொடர்புடைய கீழ்க்கண்ட அறிவிப்புகளை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன்:

1. பெரம்பலூர் மாவட்டம், டி.பழூர் மற்றும் திருமானூர் ஊராட்சி ஒன்றியங்களில் நிலுவையிலுள்ள விவசாய மின் இணைப்புகள் வழங்க முன்னுரிமை அளிக்கப்படும். 2005–2006–இல் ரூபாய் 32.86 கோடி செலவில் மின் இணைப்புகள் வழங்கப்படும்.

2. தமிழ்நாடு மின்சார வாரியம், விவசாயிகளுக்குப் புதிய மின் இணைப்பு வழங்க, விவசாயிகள் தங்களுடைய தயார் நிலையைத் தெரிவிக்க, ஐந்து வருட காலம் என்ற வரையறை நிர்ணயித்திருந்தது. இந்த வரையறைக்குள் தயார் நிலையைப் பதிவு செய்ய முடியாத ஏழை விவசாயிகள் தங்கள் முன்னுரிமையை இழந்தார்கள். ஏழை விவசாயிகளுக்கு உதவும் பொருட்டு இந்த ஐந்து வருட கால வரையறை, அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் இரத்து செய்யப்படும்.

3. முழு மதிப்பீட்டுத் தொகையையும், முன்வந்து செலுத்தும் விவசாயிகளுக்கு உடனடியாக மின் இணைப்பு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் குறைந்த மின்அழுத்தப் பிரச்சினைகளைக் குறைக்கவும், மின்அழுத்த ஏற்றத் தாழ்வுகளைத் தவிர்க்கவும், 2005–2006 ஆம் ஆண்டில் ஊரகப் பகுதிகளில், 21 துணை மின் நிலையங்களும், நகர்ப்புறப் பகுதிகளில் 39 துணை மின் நிலையங்களும் நிறுவப்படும். ஊரகப் பகுதிகளில் கூடுதலாக மின் விநியோக மின்மாற்றிகள் நிறுவப்பட்டு விவசாய மின் இணைப்புகள் வழங்கப்படும். இந்தவகையில், 2005–2006–இல் ரூபாய் 400 கோடி செலவிடப்படும்.

5. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சென்னைப் பெருநகரை அழகுபடுத்துவதற்காக, பல்வேறு திட்டங்களை அறிவித்தார்கள். தமிழ்நாடு மின்சார வாரியம், 2005–2006–ல் பல்வேறு திட்டங்களுக்கு ரூபாய் 596 கோடி செலவிடும். உயரழுத்த மற்றும் தாழ்வழுத்த மேல்நிலைக் கம்பிகளைப் புதைவடங்களாக மாற்றுதல், கம்பங்களாலான கட்டமைப்புகளை வளிமக் காப்பீடு கொண்ட வளைவு மையங்களாக மாற்றுதல், புதிய துணை மின் நிலையங்களை நிறுவுதல், முக்கிய துணை மின் நிலையங்களை உயரழுத்த புதைவடங்கள் மூலம் இணைத்தல் மற்றும் இரும்பு மின்பகிர்வுப் பெட்டிகளை நார் இழையால் (Fibre) வலுப்படுத்தப்பட்ட குழமை வார்ப்புப் பொருளால் ஆன மின்பகிர்மானப் பெட்டிகளாக மாற்றுதல்.

6. இந்தியாவில் மரபுசாரா எரிசக்தி வளர்ச்சியில், தமிழ்நாடு முன்னிலையில் உள்ளது. இந்தியாவிலுள்ள மொத்த காற்றாலை நிறுவுதிறனில், 50 விழுக்காட்டுக்கு மேலான நிறுவுதிறன் தமிழ்நாட்டில் உள்ளது. 2005–2006–இல் கூடுதலாக 500 மெகாவாட் அளவு காற்றாலைகள் தமிழ்நாடு கட்டமைப்பில் இணைக்கப்படும். இவ்வாறு



உற்பத்தியாகும் மின்சாரத்தை மின்உற்பத்தி நிலையங்களிலிருந்து வெளியேற்றத் தேவையான கட்டமைப்பு வசதிகள், ரூபாய் 150 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

நண்பகல் 12–00

7. மாநிலத்தில் மின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக, தமிழ்நாடு மின்சார வாரியம், கூட்டு முயற்சியில் மின் நிலையங்கள் அமைக்க, இரு புரிந்துணர்வு ஒப்பந்தங்களை ஏற்படுத்தியது. ஒன்று, தேசிய அனல் மின் கழகத்தோடு, எண்ணூரில் 1000 மெகாவாட்டிற்காக; மற்றொன்று நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்துடன் தூத்துக்குடியில் 1000 மெகாவாட்டிற்காக. மின் உற்பத்தியை மேலும் பெருக்குவதற்காக 1000 மெகாவாட் திறனுடைய ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின் திட்டம், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் இணைந்து புதுப்பிக்கப்படும்.

8. தனியார் துறையில், 53 மெகாவாட் திறனுடைய எரிவாயுவை எரிபொருளாகக் கொண்ட மின் திட்டம், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வளந்தரவியில், 2005–2006-இல் இயக்கி வைக்கப்படும்.

9. நீலகிரி மாவட்டத்திலுள்ள முக்குறிச்சிஹல்லா நீர் ஏற்று திட்டம், ரூபாய் 11.28 கோடி செலவில் 2005–2006 ஆம் ஆண்டில் முடிக்கப்படும். இத்திட்டம், தற்போது இயக்கத்திலுள்ள பைக்காரா, மரவகண்டி மற்றும் மோயார் நீர் மின் நிலையங்களின் நீர் இருப்பை அதிகப்படுத்தும்.

10. 2005–2006 ஆம் ஆண்டில் 540 மின்னூட்டிகளில் மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூபாய் 113 கோடி செலவிடப்படும்.

11. தொழிற்சாலைகளிலும் தாவர எரிசக்தி வாயுக் கலன்கள் அமைத்து, சொந்த உபயோகத்திற்காக மின்சாரம் உற்பத்தி செய்வதிலும் தமிழ்நாடு முன்னோடியாக உள்ளது என்பதை உறுதி செய்யும்வகையில், 2005–2006 ஆம் ஆண்டில் நலிவுற்ற ஊராட்சிகளில் 29 எரிவாயுக் கலன்கள் அமைத்து மின்சாரம் உற்பத்தி செய்ய, மாநில அரசால் ரூபாய் 46.40 இலட்சம் கூடுதல் மானியம் வழங்கப்படும்.

12. அரசு மருத்துவமனைகள், மாணவ மாணவியர் விடுதிகள் மற்றும் பிற நிறுவனங்களில் சூரிய சுடுநீர்க் கலன்கள் அமைக்க 2005–2006 ஆம் ஆண்டில் ரூபாய் 13.00 இலட்சம் ஒதுக்கப்படும்.

13. வேளாண்மைப் பொருட்கள், உப்பு, மீன் மற்றும் துணிகளை, சூரிய வெப்பத்தின் மூலம் உலர்த்துவதற்கான புதிய அமைப்புகள் நிறுவ, 2005–2006 ஆம் ஆண்டில் ரூபாய் 6.20 இலட்சம் ஒதுக்கப்படும்.

14. சூரிய சக்திச் சாதனங்களின் பயன்பாட்டை, மாணவ, மாணவியர் மூலம் பொது மக்களிடையே பரப்புவதற்காக, சூரிய சக்திக் கல்விக்கான 250 கருவிகளை, பள்ளிக் கல்வித் துறை மூலமாக 2005–2006 ஆம் ஆண்டில் அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு 50 சதவீத மானியத்துடன் வழங்க ரூபாய் 9.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

15. காவல் துறையில் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அமைப்பு மற்றும் கம்பியில்லாத் தகவல் தொடர்பு சாதனங்களை இயக்க சூரிய சக்தியைப் பயன்படுத்துவதைச் செயல்முறையில் விளக்கிட, புதிய சாதனங்களை அமைப்பதற்காக 2005–2006 ஆம் ஆண்டில் ரூபாய் 20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இத்திட்டத்தின்கீழ், 5 போக்குவரத்துக் கட்டுப்பாட்டு விளக்குகள் மற்றும் 5 கம்பியில்லாத் தகவல் தொடர்பு சாதனங்களை இயக்குவதற்கான மின் சக்தி பெற, சூரியப் பலகைகள் மற்றும் மின் கலன்கள் அமைக்கப்படும்.

16. புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில், 3 ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்வதற்கு 2005–2006 ஆம் ஆண்டில் ரூபாய் 20 இலட்சம் நிதி ஒதுக்கப்படுகிறது. இதே அளவு நிதி, அண்ணா பல்கலைக்கழகம் ஒதுக்கி இத்திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

17. மைய அரசின் திட்டத்தின்கீழ், 2005–2006 ஆம் ஆண்டில் 10 குடியிருப்புகளில் கிராம எரிசக்தி காப்புத் திட்டத்தை, முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்த, மாநில அரசின் பங்காக ரூபாய் 20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதனால், மின் வசதி இல்லாத தொலைதூரக் குடியிருப்புகளின் சமையல், மின்விளக்கு மற்றும் சிறு தொழில்களுக்கான எரிசக்தித் தேவைகள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள் மூலமாகப் பெறப்படும்.

18. மின் கட்டமைப்புடன் இணைக்கப்படாத 152 தொலைதூரக் குடியிருப்புகளுக்கு முதல் கட்டமாக சூரிய ஒளி விளக்குகள் மூலம், மின் வசதி அளிக்கும் திட்டத்திற்கு, மைய அரசின் மரபுசாரா எரிசக்தி ஆதார அமைச்சகத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேலும் இரண்டாம் கட்டமாக 106 குடியிருப்புகளுக்கு, மின் வசதி அளிக்கும் திட்டத்திற்கு, மரபுசாரா எரிசக்தி ஆதார அமைச்சகத்தின் ஒப்புதலை எதிர்நோக்கிய நிலையில், இவ்வரசின் பங்காக ரூபாய் 50.59 இலட்சம் ஒதுக்கப்படும்.



19. 2005–2006 ஆம் ஆண்டில் மின் ஆய்வுத் துறையில் மின்வழி நிர்வாகம் (e-governance) செயலாக்கப்படுத்துவதற்கென, ரூபாய் 15 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் பற்றிய மானியக் கோரிக்கை மற்றும் எரி சக்தித் துறை மீதான மானியக் கோரிக்கைகளில் வெட்டுத் தீர்மானங்களை அளித்திருக்கிறார்கள். அந்த வெட்டுத் தீர்மானங்களில் ஒருசில குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், சிலர், திரு. டி.கே. இராஜா, திரு. கோவிந்தசாமி போன்ற பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் எல்லாம் கொடுத்துள்ள அந்த வெட்டுத் தீர்மானங்களிலே, தற்போது இயங்குகின்ற சிற்றுந்துகளை மினி பேருந்துகள் இயக்குகின்ற வழித்தடத்தில் overlapping area அதாவது ஏற்கெனவே செல்லுகின்ற 4 கிலோ மீட்டர் என்று அனுமதிக்கப்பட்டிருப்பதை 8 கிலோ மீட்டர் ஆக்க வேண்டும், கூடுதல் கிலோ மீட்டர் இயக்க வேண்டும் என்று வலியுறுத்தி வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதேபோல, கூடுதல் பெர்மிட்டுகளும், உரிமங்களும் வழங்க வேண்டுமென்றும் அவர்கள் வெட்டுத் தீர்மானத்திலே வலியுறுத்தியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆய்வு செய்து, சட்டத்தின் அடிப்படையில், அதேபோல, மக்களுடைய நலனுக்காக என்ன செய்ய வேண்டுமோ, அதை உரிய முறையில் ஆய்வு செய்து, அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே அவர்களுக்குப் பதிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, மின் துறை சம்பந்தப்பட்ட மற்றும் இயக்கூர்திகள் குறித்த மாண்புமிகு உறுப்பினர்களுடைய வெட்டுத் தீர்மானங்களுக்கு, நான் அளித்திருக்கிற பதிலில், போதுமான அளவிற்கு விளக்கம் அளித்திருக்கிறேன் என்று கருதுகிறேன். ஆகவே, அதுபோக, அவர்களுடைய கோரிக்கைகளை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான ஆலோசனைக்குக் கொண்டு சென்று, அவர்களுடைய அனுமதியைப் பெற்று, அரசினுடைய நிதிநிலைமைக்கேற்ப அவையெல்லாம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை அன்போடு தெரிவித்து, இந்த மானியக் கோரிக்கையில் பேசிய அனைத்து உறுப்பினர்களுக்கும், அவர்கள் வழங்கிய அரிய ஆலோசனைகளுக்கும் எனது நெஞ்சார்ந்த

நன்றியைத் தெரிவித்து, உங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரும்படி அன்புடனும், பணிவுடனும் வேண்டிக் கேட்டுக்கொண்டு அமர்கிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–05

### (ஆ) கோரிக்கை எண் 13 – எரிசக்தித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 13, எரிசக்தித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,093,36,73,000/–, மூலதனக் கணக்கில் ரூ.25,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.108,61,81,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.



### (ஆ) கோரிக்கை எண் 24 – உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 24, உள் துறை – இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள் – நிருவாகம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"உள் துறை – இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள் – நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.57,69,11,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகின்றது.

## (இ) கோரிக்கை எண் 46 – போக்குவரத்துத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 46, போக்குவரத்துத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.269,51,55,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.12,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க.

(ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

(இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## (ஈ) கோரிக்கை எண் 26 – தொழில் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005–2006 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 26 – தொழில் துறை. மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.



**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.50,74,38,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.78,15,61,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 2663, திரு. அ.இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3056, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4345, திரு. கோ. இரவிராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4717, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5814, திருமதி காசாம்பு பூமாலை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6027, திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6245, திரு. சி. சண்முகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6268, திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7141, திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7181, திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7305, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2788, திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3228, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3892, திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5703, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7524, திரு. கே.சி. கருணாகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4251, திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7276, திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3023, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6814, திரு. கே.வி. முரளிதரன்.

***திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தளி தொகுதி ஜக்கேரி, போடிச்சிப்பள்ளி, தேவரபெட்டா ஊராட்சிகள் மலைப்பகுதியில் உள்ளன என்று சுரங்கப் பணிகளுக்காகத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அம்மூன்று ஊராட்சிகள் சமவெளிப் பூமியில் உள்ளதால், இப்பகுதியிலுள்ள ஏழையெளிய மக்கள் பயன்பெறும் வகையில், தடையை நீக்கி தடையில்லாச் சான்றிதழ் (N.O.C.) வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,74,38,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.78,15,61,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4870, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4274, திரு. எஸ். தாமோதரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4583, திரு. ஆர். கிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6385, திரு. எம். ராம்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3954, திரு. டி. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7221, திரு. ஆ. ராஜகோபால், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7237, திரு. க. பாரமலை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 633, திரு. மீ.அ. வைதியலிங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6200, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை சிப்காட் வளாகத்தில் மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,74,38,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.78,15,61,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4482, திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3264, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூட்டுறவுத் துறை, அரசுத் துறையின் மூலம் இயக்கப்படும் சர்க்கரை ஆலைகள், பஞ்சாலைகள் மற்றும் சிமென்ட் ஆலைகள் சீர்செய்வது (புனரமைப்பது) குறித்தும், அதன் மூலம் விவசாயிகளும் தொழிலாளர்களும் பயன்பெறும் நிலையை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,74,38,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.78,15,61,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

பிற்பகல் 12–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4085, திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5450, திரு. மு.பெ. சாமிநாதன், இருக்கையில் இல்லை.

### (உ) கோரிக்கை எண் 16 – கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை – கைத்தறி மற்றும் துணி நூல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 16 – கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை – கைத்தறி மற்றும் துணி நூல். மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை – கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.312,38,05,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.40,00,000/–ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 2585, திரு. அ.இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3526, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4297, திரு. கோ. இரவிராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4633, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6509, திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5379, திரு. டி.கே. இராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5792, திருமதி காசாம்பு பூமாலை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6237, திரு. சி. சண்முகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6283, திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6966, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7183, திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3291, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5679, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6493, திருமதி எ.எஸ். மஹேஸ்வரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6728, திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3959, திரு. டி. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6330, திரு. கே.சி. கருணாகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2792, திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4040, திரு. ஆர். கிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4294, திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5078, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6196, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறந்தாங்கி தொகுதி, புதுக்கோட்டை மாவட்ட நூற்பாலையை முழு அளவில் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" கூட்டுறவு விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை – கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.312,38,05,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6710, திரு. க. பாரமலை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7244, திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6058, திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 2766, திரு. என். நன்மாறன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7225, திரு. ஆ. ராஜகோபால், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4093, திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3022, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4474, திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5455, திரு. மு.பெ. சாமிநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6855, திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத்.தலைவர் அவர்களே, "தளி தொகுதி, கெலமங்கலத்தில் 1971 ஆம் ஆண்டு பட்டு நெசவாளர் சங்கம் வாடகைக் கட்டடத்தில் தொடங்கப்பட்டு, செயல்பட்டுக் கொண்டிருந்த தருணத்தில், சங்கத்திற்கு சொந்தக் கட்டடம் ஏற்படுத்த வங்கிக் கடனுக்காக விண்ணப்பித்து, பிறகு வங்கி அதிகாரிகள் 25% தொகையை மட்டும் அளித்துவிட்டு 75% தொகையைக் கொடுக்காததால் Working Capital பணம் எடுத்து சங்கக் கட்டடப் பணி முடிக்கப்பட்டது. பிறகு Working Capital இல்லாத காரணத்தால் மூடப்பட்டது. ஆதலால் கடனை ரத்து செய்து மீண்டும் நெசவாளர் சங்கம் தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை – கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.312,38,05,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6647, திரு. கு. பிச்சாண்டி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3269, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும், எடுக்கப்பட வேண்டிய சீர்திருத்த நடவடிக்கைகள் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை – கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.312,38,05,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 621, திரு. மீ.அ. வைதியலிங்கம், இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்காக வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாண்புமிகு மாமன்ற உறுப்பினர்களுக்கு படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை – கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள்

@ 319 முதல் 355 வரையிலான பக்கங்களில் இணைப்பு—I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலே தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய கொள்கை விளக்கக் குறிப்பினை@@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டிலே பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். மாண்புமிகு உறுப்பினர்கள், இந்த இரண்டு விவாதத்தில் பங்கேற்கும் மாண்புமிகு உறுப்பினர்கள், இந்த இரண்டு மானியக் கோரிக்கைகளின்மீதும் ஒருங்கே தங்களுடைய கருத்துகளைத் தெரிவிக்கலாம். திரு. கே.என். இலட்சுமணன்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை – கைத்தறி மற்றும் துணி நூல் மற்றும் தொழில் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு மிக்க நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கைத்தறி மிகப் பழமையானது. நெசவுத் தொழில் மிகவும் பழமையான ஒன்று. நம்முடைய பண்டைய கிராமங்களிலே கிராம மக்களுக்கு பயிர்த் தொழிலுக்கு அடுத்தப்படியாக அதிகமான வேலைவாய்ப்பினைக் கொடுத்த தொழில் நெசவுத் தொழில். இந்த நெசவுத் தொழில் இன்றையதினம் நாளுக்குநாள் நலிந்து கொண்டு வருகின்றது. பல்வேறு போட்டிகள் இருக்கின்ற காரணத்தினாலே நலிந்த நிலையிலே தள்ளப்பட்டு...

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கைத்தறி நெசவுத் தொழில் நலிந்து வருகிறது என்ற தவறான கருத்தை இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, இன்று நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலை கொடுக்கக்கூடிய ஒரு அற்புதமான துறையாக இந்தத் துறையை அம்மா அவர்கள் வழி நடத்திக் கொண்டிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

@@ 356 முதல் 393 வரையிலான பக்கங்களில் இணைப்பு—II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

பிற்பகல் 12–15

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் குறிப்பிட்டதுபோல நெசவுத் தொழில் நம்முடைய தமிழகத்திலே மிகப் பழமை வாய்ந்த நல்ல தொழில் ஆகும். இப்போது எல்லாம் நூற்பாலையிலே நூற்கப்படுகின்ற நூலின் இழை 120 count அளவிற்குத்தான் மெல்லியதாக இருக்கிறது.

ஆனால் தமிழகத்திலே பழைய காலத்தில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே நூல் இழை 2400 count–லே, அவ்வளவு மெல்லியதாக நம்முடைய நெசவாளர்கள் உற்பத்தி செய்திருக்கின்றார்கள். அவ்வளவு மெல்லிய 2400 count இழையிலே தயாரிக்கப்பட்ட ஆடைகள் பல்வேறு நாடுகளுக்கு இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன. கிரேக்க நாடுகளுக்கும் அன்றையதினம் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன. அங்கே கிரேக்க நாட்டு இளவரசிகள், அரச குடும்பத்தைச் சார்ந்தவர்களெல்லாம் இதை ஆடையாக அணிந்திருந்தார்கள். ஒரு சமயம் அந்த இளவரசி உடுத்திக்கொண்டு வந்த ஆடையைப் பார்த்து இவ்வளவு மெல்லியதாக ஆடை உடுத்துகிறாயே, கூச்சமாக இல்லையா என்று கேட்கும்பொழுது, இந்தியாவிலிருந்து வந்த இந்த மஸ்லின் துணியை 7 ஆக மடித்து கவுனாகத் தைத்து நான் அணிந்திருக்கின்றேன் என்றார். அந்த அளவுக்கு நம்முடைய கைத்தறி நெசவாளர்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திறமை படைத்தவர்களாக இருந்திருக்கின்றார்கள். அத்தகைய ஒரு திறமைவாய்ந்த அந்த நெசவுத் தொழிலை இன்னும் மேம்படுத்த வேண்டும் என்பதுதான் என்னுடைய தாழ்மையான வேண்டுகோள்.

நெசவாளிகளுக்கு வேலைவாய்ப்பு ஆண்டு முழுவதும் கொடுக்க திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆனால் நம்முடைய நெசவாளிகள் முன்பு இருந்த நிலைமையைக்காட்டிலும், வேறு பல்வேறு தொழில்களிலே ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளிகளைக்காட்டிலும் பொருளாதாரத்திலே நலிந்த நிலைமையிலே இருக்கின்றார்கள் என்பதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இன்னும் அவர்களுக்கு நிறைய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்களுடைய கூட்டுறவுச் சங்கங்கள் 2002–2003–லே மொத்தம் 1,313 கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. 2004–2005–ல் பருத்தி, பட்டு கூட்டுறவுச் சங்கங்கள் மொத்தம் 1,247



தான். ஆகவே, 66 கூட்டுறவுச் சங்கங்கள் குறைந்துவிட்டன. அவை நலிவடைந்து விட்டன. இலாபத்திலே இயக்க முடியாமல் போய்விட்டதனாலே மூடப்பட்டன. ஆகையினாலே நெசவாளிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத்தான் நான் கூற விரும்புகின்றேன். அவர்களுக்கு அரசு எதுவும் செய்யவில்லை என்று நான் சொல்லவில்லை. கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக எல்லாமே செய்ய வேண்டும் என்று அரசு முனைந்தால்கூட, கூட்டுறவு இயற்கையாக நலிவடைந்து வருகின்ற ஒரு சூழ்நிலையிலே கைத்தறி கூட்டுறவுச் சங்க நெசவாளிகளும் பலி ஆகின்றார்கள். அப்படி பலி ஆகின்ற நேரத்திலே நெசவாளிகள் பலி ஆகக்கூடாது, அரசு காப்பாற்ற வேண்டுமென்பதுதான் என்னுடைய பணிவன்பான வேண்டுகோள்.

இலவச வேட்டி சேலைத் திட்டம் ஒரு அருமையான திட்டம். இந்தியாவிலேயே எங்குமே இல்லாத ஒரு திட்டம். நெசவாளிகளுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கின்ற ஒரு திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் அதை மனதார வரவேற்கின்றோம். ஆனால் ஒன்று, இந்த இலவச வேட்டி சேலை கொடுப்பதற்கு, விசைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக உற்பத்தியாகின்ற ஆடைகள் கொள்முதல் செய்து விநியோகம் செய்யப்படுகின்றது. கைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் அதைக் கொள்முதல் செய்தால் ஏழை நெசவாளிகள், கைத்தறி நெசவாளிகள் பயனடைவார்கள் என்பதை நான் எடுத்துக்கூற....

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுக்கக்கூடிய இலவச வேட்டி சேலையை, கைத்தறி நெசவாளர்களிடமிருந்து பெறவேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வலியுறுத்தி இருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவுடைய எண்ணமும் அதுதான். ஆகையால்தான் அம்மா அவர்கள் இந்த நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டும் என்பதற்காக இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே தமிழகத்திலே இருக்கக்கூடிய சுமார் 16,500 நெசவாளர்கள் இந்த இலவச வேட்டி சேலைகளை உற்பத்தி செய்துகொண்டிருக்கிறார்கள். அப்படி உற்பத்தி செய்யக்கூடியுவர்கள் ஆண்டு முழுவதும் வேலை செய்தால்கூட சுமார் 35 இலட்சம் சேலைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மீதி இருக்கக்கூடிய அந்தச் சேலைகளைக் கொள்முதல் செய்வதற்காக விசைத்தறி நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுத்து

கூட்டுறவுச் சங்கத்திலே இருக்கக்கூடிய அந்த விசைத்தறி நெசவாளர்களுக்கும் வேலைவாய்ப்பு கொடுத்து, அதைப் பெற்று ஏழை எளிய மக்களுக்கு 1 கோடியே 11 இலட்சம் சேலைகளையும், அதுபோல 1 கோடியே, 11 இலட்சம் வேட்டிகளையும் ஏழை மக்களுக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

*பிற்பகல் 12–20*

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்ய முடியாத நிலை இருக்கிற காரணத்தாலே, விசைத்தறிகள் மூலம், ஈடு செய்யப்படுகின்ற அளவுக்கு அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது என்பது உண்மைதான். இருந்தபோதிலும், இன்னும் கைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மட்டுமில்லாமல் எத்தனையோ கைத்தறி நெசவாளிகள் தனியாக தயாரித்து விற்றுக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களிடம் கொள்முதல் செய்ய வேண்டும் என்று நான் வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன்.

புதிய காப்பீட்டுத் திட்டத்தை, “புங்கர் பீமா யோஜனா” காப்பீட்டுத் திட்டத்தை நெசவாளிகளுக்குக் கொடுத்திருக்கின்றார்கள். கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரிகின்ற நெசவாளிகளுக்கு மட்டும்தான் இந்தக் காப்பீட்டுத் திட்டம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், என்னுடைய வேண்டுகோள், எல்லா நெசவாளிகளுக்கும், கூட்டுறவுச் சங்கங்களில் இல்லாத, தனியாக நெசவு செய்து ஜீவனம் செய்து கொண்டு வருகின்ற நெசவாளிகளையும் பதிவு செய்து, அவர்களையும் இந்த காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் கொண்டு வர வேண்டுமென்று அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

நெசவாளிகளுடைய குழந்தைகளுக்கு கல்வித் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு காலாண்டிற்கு, 3 மாதங்களுக்கு 300 ரூபாய் உதவித் தொகை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு குடும்பத்திற்கு, இரண்டு குழந்தைகளுக்கு மேற்படாமல், இரண்டு குழந்தைகளுக்கு மட்டுமே அந்தக் காலாண்டிற்கு 300 ரூபாய் வீதம் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். என்னுடைய பணிவான வேண்டுகோள், அந்த நெசவாளர் குடும்பத்திலே இருக்கின்ற அத்தனை குழந்தைகளுக்கும், எத்தனை எண்ணிக்கை இருந்தாலும், இரண்டுக்கு மேற்பட்டிருந்தாலும் சரி, ஒவ்வொரு குடும்பத்திலேயும் இருக்கின்ற அத்தனை பெண் பெண்களுக்கும், இரண்டுக்கு மேற்பட்டிருந்தாலும்கூட கொடுக்கப்பட



வேண்டும், கல்வி தரப்பட வேண்டும். ஏனென்றால், ஒரு பெண்ணிற்குக் கல்வி அளித்தால் ஒரு குடும்பத்திற்கே கல்வி கொடுத்ததுபோல, அந்தத் தாயின் வயிற்றில் பிறக்கின்ற குழந்தையும் நன்றாகப் படிக்கும். ஆக, இது எல்லா பெண்களுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நபார்டு மூலமாக சலுகை வட்டியிலே கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி கொடுக்கப்படுகிறது; வட்டி கம்மியாக, மூலதனம் கொடுக்கப்பட்டு வருகிறது. 2002–2003–லே ரூ.413.73 கோடி கொடுத்தார்கள். 2004–2005–லே ரூ.344.35 கோடிதான் நபார்டு மூலம் நிதி உதவி பெறப்பட்டிருக்கிறது; குறைந்துவிட்டது. ஆகையினால், மீண்டும் நம்முடைய அரசு முனைப்பாக ஈடுபட்டு நபார்டிலிருந்து பெறுகின்ற தொகையை அதிகமாகப் பெறுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கிராமத்திலே இருக்கிற மக்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கும்போது, கூடவே உணவு தானியங்களையும் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். வேலை செய்பவர்களுக்கு நேரடியாக பணம் கொடுக்காமல், ஊதியமாக சிறிதளவு பணமும், சிறிதளவு உணவு தானியங்களும் கொடுக்கின்றார்கள். ஏனென்றால், உணவுப் பொருள்கள் போய்ச் சேர வேண்டும், நேரடியாக அவர்களுக்கு உதவி புரிய வேண்டும் என்று.

அதேபோல, கைத்தறி நெசவாளிகளைக் காப்பாற்றுவதற்காக, அரசாங்க ஊழியர்களுக்கு பொங்கல் மற்றும் தீபாவளி பண்டிகையின்போது சம்பளம் பட்டுவாடா செய்யும்போது, இந்தக் கைத்தறி ஆடைகளை வாங்குவதற்காக சம்பளத்தில் 20 சதவிகிதம், இந்த இரண்டு மாதங்களுக்கு மட்டும் கைத்தறி ஆடைகளையே வாங்க வேண்டுமென்ற ஒரு திட்டத்தை இந்த அரசு கொண்டுவந்தால் மேலும் கைத்தறித் துணிகள் விற்பனை அதிகமாகும், நெசவாளிகளுக்கு வேலைவாய்ப்பு அதிகம் வரும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களுக்கு சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்திலே இன்றையதினம் 6.5 சதவிகித வட்டியைக் கொடுத்து வருகிறார்கள். அந்தக் காப்பீட்டுத் திட்டத்திலே, சேமிப்புத் திட்டத்திலே வைத்திருக்கிற நெசவாளிகளுக்கு 6.5 சதவிகிதம் வட்டிக்குப் பதிலாக அதை உயர்த்தி 9 சதவிகிதமாக இன்றையதினம் கொடுக்க வேண்டுமென்று அரசைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–25

தொழில் துறையிலே ஓரிரண்டு வார்த்தைகளை நான் சொல்ல விரும்புகின்றேன். தொழில் துறையிலே இன்றையதினம் தமிழ்நாடு மிக வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றது. அதில் ஐயமில்லை. பன்னாட்டு கம்பெனிகள் எல்லாம் தமிழகத்திலே பெரிய பெரிய தொழிற்சாலைகளை அமைத்துக் கொண்டிருக்கின்றார்கள், வரவேற்கின்றோம். வளர்ச்சிக்கு வித்தாக இருக்கின்றது. ஆனால் தொழில் துறையிலே நம்முடைய தமிழகம் இன்னும் வேகமாக முன்னேற வேண்டும். தொழில் துறையிலே வேகமாக முன்னேறுவதற்கு முக்கியக் காரணம் என்ன? இங்கே பணப்புழக்கம் ஏற்பட வேண்டும். வறுமை குறைந்து, பொருளாதார மேம்பாடு ஏற்பட வேண்டும். இப்போது உலகத்திலே அமெரிக்கா பெரிய பணக்கார நாடாக இருக்கின்றது. ஆனால், அங்கே இருக்கின்ற அத்தனை தொழிற்சாலைகளையும் வெட்டி இங்கே கொண்டுவந்து வைத்து உற்பத்தி செய்துவிட்டால் நம்முடைய நாடு பணக்கார நாடாக ஆகிவிடுமா? செய்கின்ற உற்பத்தி எவ்வளவு அதிகமாக இருந்தபோதிலும்கூட வாங்குவதற்கு ஆள் வேண்டும், sales-ம் செய்யப்பட வேண்டும். விற்பனை செய்தால்தான் அங்கே வியாபாரம் turn-over ஆகும். விற்பனை செய்வதற்கு வாங்குபவர் வேண்டும். வாங்குபவர் வேண்டுமென்றால் வாங்குகின்ற சக்தி மக்களிடம் இருக்கவேண்டும். அதனால் தொழில் வளம்பெருக வேண்டுமென்றால் அந்த நாட்டிலே இருக்கின்ற மக்களுக்கு வாங்குகின்ற சக்தியை ஏற்படுத்திக் கொடுத்தால்தான் அந்த நாட்டிலே தொழில் வளம் பெருகும். ஆகையினாலே தமிழகத்திலே வாங்குகின்ற சக்தியை மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். அதுதான் தொழில் வளர்ச்சியினுடைய அஸ்திவாரம். அப்படி வாங்குகின்ற சக்தியை மக்களிடத்திலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இலட்சுமணன், மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்கிறார்.

***மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தமிழகத்தில் தொழிற்சாலைகள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்ற பிறகு பன்மடங்கு வளர்ந்திருக்கின்றன என்று சொன்னார்கள். அதற்காக அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மக்களிடத்திலே வாங்குகின்ற சக்தி அதிகமாக வேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் வளர்ச்சியினுடைய rate விகிதம் 4.14 ஆக



இருந்தது. ஆனால் 1991–1996 ஆம் ஆண்டு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே 6.92 ஆக உயர்ந்திருந்த அந்த rate விகிதம், திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்த பிறகுதான் 4.14 ஆக அந்த rate விகிதம் குறைந்தது என்பதை மத்தியத் திட்டக் குழுவினுடைய அறிக்கையே தெரிவித்திருக்கின்றது. அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு இயங்கிக் கொண்டிருந்த அந்தத் திட்டக் குழு அறிக்கையிலேயே அது தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அதைப்போல, திராவிட முன்னேற்றக் கழக அரசில் இருந்ததைக் காட்டிலும், இப்போது மக்களுடைய வாங்குகின்ற தன்மை இந்தத் தமிழகத்தைப் பொறுத்தமட்டிலும் நூற்றுக்குத் தொண்ணூறு சதவிகிதம் பணப்புழக்கம் இருந்து கொண்டிருக்கிறது average–ஆக. அதிலும் குறிப்பாக விருதுநகர் மாவட்டம், சிவகாசியைப் பொறுத்தமட்டிலும் பணப்புழக்கம் என்பது 100 ரூபாய் வங்கியிலே கடன் கொடுக்கவேண்டுமென்று deposit வருகிறது என்று சொன்னால், அங்கே 111 ரூபாய் கடன் வழங்க வேண்டிய சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. பணப்புழக்கம் விருதுநகர் மாவட்டம், சிவகாசியில் மற்ற மாவட்டங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்கிறது என்பதையும், மொத்தம் சராசரியாக 90 சதவிகிதம் பணப்புழக்கம் இப்பொழுது இருந்து கொண்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருக்கு மிக்க நன்றி. இந்த வாங்குகின்ற சக்தியை அதிகப்படுத்துவதிலே நான் ஒரு யோசனையை இந்த அவையிலே வைக்க விரும்புகின்றேன். நம்முடைய தமிழகத்திலே Mass production–ஐவிட Production by Mass - இயந்திரத்தின் மூலம், தொழிற்சாலையின் மூலம் மிக அதிகமான எண்ணிக்கையிலே உற்பத்தியைச் செய்து, பொருட்களைக் கொடுப்பதைக் காட்டிலும், மிக அதிகமான, கோடிக்கணக்கான உழைக்கும் கரங்களுக்கு உற்பத்தி செய்கின்ற வாய்ப்பினைக் கொடுத்து உற்பத்தி செய்தால், வாங்குகின்ற சக்தி கிராமத்திலே இருக்கின்ற மக்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்துவதினாலே வரும் என்ற கருத்து இருக்கின்றது. அந்தக் கருத்தை வைத்துக்கொண்டு செயல்பட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

தவிர, ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலேயே சொல்லியிருக்கின்றார்கள், கிருஷ்ணகிரி மாவட்டத்திலே மிகப் பின்தங்கிய பகுதியாக தளி தொகுதி இருக்கிறது

என்று. அதற்காக 10 கோடி ரூபாய், 20 கோடி ரூபாய் திட்டத்தை வழங்கியிருக்கின்றார்கள். நாங்கள் கேட்டுக்கொள்கிறோம், அந்த தளி தொகுதியிலே தொழிற்சாலைகளை அதிகமாக – ஓசூரிலே இருக்கின்றது. தளியிலே, பின்தங்கிய பகுதியிலே – புதிய, நவீன தொழிற்சாலைகளை அமைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். ஏற்கெனவே 2,000 ஏக்கர் நிலத்தை தளி பகுதியிலே குறிப்பிட்டு தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு முடிவு செய்யப்பட்டு, ஆனால் ஏனோ இன்னும் அது நிறைவேற்றப்படவில்லை. அதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

தவிர, தளி தொகுதிக்காக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடம் 5 வழித்தடங்களை பற்றி, நேற்றையதினம் தளி தொகுதி எம்.எல்.ஏ., திரு. முரளிதரன் அவர்கள் கேட்டுக் கொண்டதை நான் நினைவுபடுத்த விரும்புகின்றேன். தவிர, என்னுடைய மைலாப்பூர் தொகுதியிலே பட்டினப்பாக்கத்திலே ஏற்கெனவே பேருந்துகள் நிற்கின்றன. ஆனால், அங்கே பேருந்து நிலையமே இல்லை. ஆகையினாலே அந்தப் பேருந்து நிலையத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். என்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அதற்குப் பணம் கொடுப்பதற்குத் தயாராக இருக்கின்றேன் என்று சொல்லி, அதற்காக ஒரு திட்டமும் ஏற்கெனவே தயாராகி அது முடிவு பெறும் தருவாயில் இருக்கின்றது. ஆனால் கடற்கரையோரமாக இருக்கின்றது என்று ஏதாவது ஒரு நிபந்தனை, ஆட்சேபணை மத்திய அரசிடமிருந்து வந்தாலும்கூட, தமிழக அரசு அதைச் சாடி, வெற்றி பெற்று அந்தப் பேருந்து நிலையத்தை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டு, நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரமணீதரன்

**திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை மற்றும் கைத்தறித் துறை மானியக் கோரிக்கைகளில் எனக்கு இந்த அவையில் பேச அனுமதி அளித்த எங்கள் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்டபொழுது தமிழ்நாட்டில் கடுமையான வறட்சி ஒருபக்கம், கடுமையான நிதிநிலை பற்றாக்குறை ஒருபக்கம். கடந்த ஆட்சியாளர்கள் கஜானாவைக் காலி செய்துவிட்டு எங்கெல்லாம்



கடன்களை வாங்க முடியுமோ அங்கெல்லாம் கடன்களை வாங்கி வைத்துவிட்டு மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு வரவேண்டிய ராயல்டி தொகையையும் முன்னதாகவே பெற்றுக்கொண்டு தமிழ்நாட்டின் நிதிநிலையை சீர்கேடாக்கி விட்டுச் சென்றுவிட்டார்கள்.

***(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)***

இருந்தாலும்கூட மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழ்நாட்டை முன்னோடி மாநிலமாக ஆக்கியே தீருவேன் எனச் சூளுரை ஏற்று அதற்கேற்ப திட்டங்களைக் கொடுத்ததன் பயனாக இன்று தமிழ்நாடு எல்லாத் துறைகளிலும் முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கின்றது என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு மாநிலம் தொழில் துறையில் முன்னேற வேண்டுமானால் அந்த மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு சரியாக இருக்கவேண்டும். மேலும் தொழில் தொடங்க உள்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும். தொழில் முனைவோர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இணக்கமான சூழ்நிலை அமையவேண்டும். இத்தகைய வசதிகளை மாண்புமிகு அம்மா அவர்கள் அமைத்துக் கொடுத்ததன் பயனாகத்தான் தொழில் முனைவோர்கள் மற்ற மாநிலத்தைக் காட்டிலும் தமிழ்நாட்டில் தொழில் தொடங்க ஆர்வமாக வருகின்றார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1991 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான் ஹூண்டாய் கார் தொழிற்சாலை ஸ்ரீபெரும்புதூரில் தொடங்கப்பட்டது. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த முயற்சியினால்தான் ஆசியாவிலேயே கார் மற்றும் உதிரிப் பாகங்கள் உற்பத்தியில் தமிழகம் இன்று முன்னணி இடத்தைப் பிடித்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததும் தமிழ்நாட்டில் தொழில் புரட்சியைச் செய்தார்கள். தொழில் தொடங்க பல்வேறு அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்ததன் பயனாக பல தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டன. இந்த அடிப்படையில்தான் ஹூண்டாய் கார்

தொழிற்சாலை ரூ.1,800 கோடியிலிருந்து தனது விரிவாக்கத்தை 2,300 கோடி ரூபாய் அளவுக்கு ஏற்படுத்தியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல உலகில் தலைசிறந்த Saint Gobain கண்ணாடித் தொழிற்சாலை தனது விரிவாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான் வெளிநாட்டு முதலீடுகள் தமிழ்நாட்டில் 70 சதவிகிதம் அளவுக்கு உயர்ந்திருக்கின்றது. மற்ற 30 விழுக்காடு மட்டுமே மற்ற மாநிலங்களுக்குப் போகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். கார் தயாரிப்பு தொழிற்சாலையில் ஆசியாவில் உள்ள 3 முதன்மையான இடங்களில் தமிழகம் ஒன்று என்று கூறப்பட்டுள்ளது. இது மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் தொலைநோக்குத் திட்டத்திற்கு முன்னுதாரணம் என்று கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மேலும், வெளிநாட்டு கார் தொழிற்சாலைகள் தமிழகத்தை நோக்கி வந்தவண்ணம் உள்ளன. கடந்த 18 ஆம் தேதிகூட ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த Benz கார் தொழிற்சாலை அதிபர்கள் தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களைச் சந்தித்துப் பேசினார்கள். ஃபோர்டு, ஹூண்டாய் என்ற இரண்டு மிகப் பெரிய கார் தொழிற்சாலைகள் ஏற்பட்டதுபோல, மேலும் உலகப் புகழ் பெற்ற Benz காரும் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படவிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இது தொழில் துறையில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஒருவருக்கே கிடைத்த மாபெரும் வெற்றியாகும் என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருகின்ற 2015 ஆம் ஆண்டிற்குள் ஆசியாவில் கார் உற்பத்தியில் 3 இடங்களில் ஒன்றாக தமிழகம் வந்துவிடும். இன்னும் சொல்லப்போனால் 2015 ஆம் ஆண்டுக்குள் கார் உற்பத்தி சுமார் 88 ஆயிரம் கோடி ரூபாயை நெருங்கிவிடும் என்று இந்திய தொழில் அதிபர்கள் கூட்டமைப்பு ஆய்வு அறிக்கை கூறுகிறது.

தமிழ்நாட்டில் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்து கொடுத்துள்ள உலகத்தரம் வாய்ந்த கட்டமைப்பு வசதி, புதிய தொழிற் கொள்கை அறிவிப்பால்தான் இந்த சாதனையைப் படைக்க முடிகிறது.



பிற்பகல் 12-35

இந்தத் தொழிற்சாலைகளின்மூலம் தமிழ்நாட்டில் ஆறு இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த சரித்திர சாதனை மாண்புமிகு அம்மா அவர்கள் ஒருவரால் மட்டுமே செய்திட்ட அதிசயம் ஆகும் என்பதை நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் Automobile தொழிற்பூங்காக்கள் அமைந்துள்ளன. இந்தியாவிலேயே தொழிற் தகராறு இல்லாத மாநிலம், சிறந்த தொழில்நுட்ப வல்லுநர்கள், திறமைமிக்க மனித சக்தி ஆகியவை தமிழ்நாட்டில் ஏராளமாகக் கிடைக்கின்றன என்று இந்திய தொழில் அதிபர்கள் கூட்டமைப்பின் ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் சென்னையை அடுத்து கோவை மற்றும் ஓசூரிலும் தொழில்நுட்பப் பூங்கா உருவாக உள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களின் தொலைநோக்குப் பார்வையால் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தர வேண்டும் என்ற அடிப்படையில்தான் இந்த தொழில்நுட்பப் பூங்காக்கள் உருவாக்கப்படுகின்றன. இதனால் பலதரப்பட்ட உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் தொழில் தொடங்கவும், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்கள் தங்கள் தொழிலை மேம்பாடு செய்துகொள்ளவும் மற்றும் Internet மையங்களும், சேவைகளும் அதிகரிக்கும் வாய்ப்புகளும் ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்றாண்டு காலமாக இரண்டாம் நிலை தொழில் பிரிவுகள் மீண்டும் புத்துயிர் பெற்று துவங்கும் நிலை தென்படுகின்றது. சுரங்கம், உலோகமற்ற கனிமப் பொருட்கள், ஊர்தி, உதிரிபாகங்கள், மின்சாரக் கருவி தொழிற் பொருட்கள், இயந்திர உபகரணங்கள் போன்ற துணைநிலைப் பிரிவுகள் வலுவான வளர்ச்சியடைந்துள்ளன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1949 ஆம் ஆண்டு இந்திய நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் ஒரு நிறுவனமாக உருவாக்கப்பட்ட தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் நாட்டிலேயே முதன்மையான, மாநில அளவிலான நிதி நிறுவனமாகும். இக்கழகம் தற்பொழுது தளவாடம் மற்றும் இயந்திரம் வாங்குதல் போன்ற நிலையான சொத்துக்களை வாங்குவதற்கு ரூ. 10 கோடி வரை கடன் உதவி வழங்குகிறது. இக்கழகம் புதிய தொழிற் பிரிவுகளை நிறுவுவதற்கு மட்டுமின்றி, தமிழ்நாட்டில் எப்பகுதியிலும் ஏற்கெனவே உள்ள தொழிற் பிரிவுகளை விரிவுபடுத்துவதற்கும், நவீன மயமாக்குவதற்கும், நிதி உதவி அளிக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஒரு செயல் அமைப்பாக கடன் இணைந்த மூலதன மானியத் திட்டத்தின்கீழ் சிறு தொழில் பிரிவுகளில் அடங்கியுள்ள 30 நிறுவனங்களின் தொழில் மேம்பாட்டிற்காக 12 விழுக்காடு மூலதன மானியம் – அதிகபட்சமாக ரூ.4.80 இலட்சம் வரை--வழங்கப்படுவது என்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறித் துறையைப் பொறுத்தவரையிலே, சென்ற ஆட்சியாளர்கள் கையாலாகாத துறையாக மாற்றிவிட்டுச் சென்றுவிட்டார்கள்.

கடந்த ஆட்சிக் காலத்தில் புழுத்துப்போன அரிசியை குடோனில் தேக்கி வைத்திருந்ததுபோல, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து கொள்முதல் செய்யப்பட்ட துணிகளை சரியான முறையில் விற்பதற்கு நடவடிக்கை எடுக்காமல், தேங்கிக் கிடந்தது. இதனால் நெசவாளர் சங்கங்களுக்குப் பணம் கொடுக்க முடியாமல், அதன்மூலம் நெசவாளர்கள் கூலி கிடைக்காமல் திண்டாடிக் கொண்டிருந்த நிலையை மாற்றி, ஏழை நெசவாளர்கள்மீது மிகுந்த அக்கறை கொண்ட தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், வைப்பாக வைக்கப்பட்டிருந்த கைத்தறி சேலைகள், வேட்டிகள் ஆகியவற்றை சேலையின் விலை 30 ரூபாய், வேட்டியின் விலை 20 ரூபாய் என மலிவு விலை நிர்ணயித்து, தமிழ்நாட்டில் உள்ள 27 ஆயிரம் ரேஷன் கடைகள் மூலம் விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்தார்கள். இது மாண்புமிகு அம்மா அவர்கள் ஏழை நெசவாளர்களுக்காக சாதித்த சாதனையாகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நூற்பாலைகளை நவீனமயமாக்க கடந்த காலத்தில் 12 விழுக்காடு மட்டுமே மானியம் வழங்கப்பட்டு வந்தது. தற்போது கடன் இணைந்த மூலதன மானியத் திட்டத்தின்கீழ் மற்றும் தொழில்நுட்ப மேம்பாடு நிதித் திட்டத்தின்கீழ் 20 விழுக்காடு மூலதன மானியம், அதிகபட்சமாக 12 இலட்சம் ரூபாய் வரை அல்லது 5 விழுக்காடு வட்டி மானியம் இதில் எது பயனுள்ளதோ, அது அளிக்கப்படுவது மிகுந்த வரவேற்கத்தக்க ஒன்றாகும்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய பட்ஜெட்டில் ஒரு கோடியே எழுபது இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று மத்திய நிதியமைச்சர் அறிவித்திருக்கிறார். வெளிநாட்டில் இருந்து துணி இறக்குமதி செய்தால் ஒன்றே முக்கால் பங்கு அளவிற்கு வரி வசூலிக்கப்பட்டு வந்தது. தாராளமயமாக்கல் கொள்கைத் திட்டத்தின்கீழே அந்த வரியை நம் நாட்டில் உள்ளதுபோல 8 சதவீதம் அளவிற்குக் குறைத்துவிட்டார்கள். அப்படிக் குறைக்கப்பட்டதால் வெளிநாட்டுத் துணிகள் மலிவாகக் கிடைக்கின்றன. அப்படி இருக்கும்போது நம் நாட்டுத் துணிகள் வெளிநாட்டுத் துணிகளுக்கு ஈடுகொடுக்க முடியாமலும், விற்பனை ஆகாமலும் இருக்கிற சூழ்நிலை ஏற்பட்டது. இதுதான் மத்திய அமைச்சர் சிதம்பரம் செய்த சித்து விளையாட்டு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இது எப்படி இருக்கிறது என்றால், ஒருவனிடம் பஞ்ச பாண்டவர்கள் எத்தனை பேர் என்று கேட்டால், அவன் கட்டில் காலைப் போல என்று கூறி, மூன்று விரல்களைக் காட்டி, தரையில் இரண்டு கோடுகளைப் போட்டு, அதில் ஒன்றை அழித்துவிட்டானாம். அது போலத்தான் இந்த மத்திய நிதி அமைச்சர் சிதம்பரத்தின் வியாக்கியானம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மலிவு விலையில் வேட்டி, சேலைகளை விற்று, நெசவாளர் சங்கங்களுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தை அரசாங்கத்தில் இருந்து கொடுத்து, நெசவாளர்களின் வயிற்றில் பால் வார்த்தாரே, அவர்தான் எங்கள் அம்மா. ஏழை எளிய நெசவாளர்களைக் காப்பாற்றியவர் எங்கள் அம்மா என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நெசவாளர்களின் வாழ்க்கைக்காகவும், விசைத்தறி நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவும், நெசவாளர்களுக்குத் தறியுடன் கூடிய வீடுகளைக் கட்டித் தந்தும், வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள மக்களுக்கு ஆண்டுக்கு ஒரு முறை – அதாவது பொங்கலின்போது– –இரண்டே கால் கோடி பேருக்கு வேட்டியும், சேலையும் இலவசமாகக் கொடுக்கும் திட்டத்தை மீண்டும் கொண்டுவந்து இரண்டாண்டு காலமாகக் கொடுத்து வருகிறாரே, அவர்தான் மனிதநேயம் மிக்க புரட்சித்தலைவி அம்மா என்று நெசவாளர் நெஞ்சங்கள் பாராட்டுகின்றன

பிற்பகல் 12–40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் ரூ. 559.72 கோடி மதிப்புள்ள 1083.26 இலட்சம் மீட்டர் கைத்தறித் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ. 696.58 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுவிட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்து வரும் சீரான நடவடிக்கைகள், உற்பத்தி, விற்பனை போன்ற காரணங்களால் 527 ஆக இருந்த இலாபம் ஈட்டும் கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் 601 ஆக உயர்ந்திருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். நெசவாளர்களுக்கு ஆயுள் காப்பீட்டுத் தொகையை அரசே செலுத்துதல், நெசவாளர்களின் பிள்ளைகளுக்குப் படிப்புதவி ஆகிய எண்ணற்ற நலத் திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்து வருவதால்தான் 160 நாடுகளின் ரோட்டரி சங்கத்தின் வாழ்நாள் சாதனையாளர் விருது அச்சங்கத்தின் நூற்றாண்டு விழாவின்போது அம்மா அவர்களுக்கு வழங்கப்பட்டது என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன் (மேசையைத் தட்டும் ஒலி) 160 நாடுகளில் வேறு தலைவர்களே இல்லையா? இருக்கலாம். இருப்பார்கள். ஆனால் அம்மா அவர்களைப்போல இல்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை என்பதை இம்மாமன்றத்திலே நான் கூறி, என்னுடைய தொகுதி சார்பாக சில கோரிக்கைகளை முன்வைக்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோபிசெட்டிப்பாளையம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள கூகலூர் பேரூராட்சியைச் சுற்றி சுமார் 35 கிராமங்கள் உள்ளன. இங்கு வசிக்கும்



அனைவரும் விவசாயத்தையே தொழிலாகச் செய்து வருகின்றனர். அவர்களுடைய விவசாய பம்பு செட்டுகளுக்கு போதிய மின்சாரம் கிடைக்காமல் கஷ்டப்படுகின்ற சூழ்நிலை உள்ளது. எனவே இந்தப் பகுதி விவசாய பம்பு செட்டுகளுக்கு 24 மணி நேரமும் மின்சப்ளை கொடுத்து உதவ வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கித் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, கோபிசெட்டிப்பாளையம் நகரப் பகுதியில் உள்ள பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான கீரிப்பள்ள ஓடை சுமார் 30 ஆண்டுகளாகத் தூர் வாராமல் கரைகள் உடைந்துள்ளன. மழைக் காலங்களில் வரும் தண்ணீர் இந்த ஓடையில் தேங்கி நகர்ப்புறக் கடைகளில் புகுந்து பல இலட்சக்கணக்கான பொருட்கள் சேதமடைந்து வருகின்றன. இது ஒவ்வோர் ஆண்டும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. மேலும், இப்பகுதியில் உள்ள ஆதிதிராவிடர்கள் வசிக்கும் குடிசைகள் அனைத்தும் அடித்துச் செல்லப்படுகின்றன. எனவே இப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான இந்தக் கீரிப்பள்ள ஓடையைத் தூர் வாரிச் செப்பனிட்டுக் கொடுக்க வேண்டுமாய் மாண்புமிகு அம்மா அவர்களின் தாள்பணிந்து கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல கோபிசெட்டிப்பாளையம் தொகுதியிலுள்ள சவண்டப்பூர் To அத்தானி காவேரி ஆற்றுப்பாலம் சுமார் 80 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட இரும்பு உத்திரப் பாலமாகும். இப்பாலம் கோவை அந்தியூர் மெயின் சாலையில் அமைந்துள்ளது. இரண்டு சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்புகள் இந்தப் பாலத்தின் வழியாகத்தான் செல்ல வேண்டியுள்ளது. இப்பாலம் மிகவும் பழுதடைந்து போக்குவரத்துக்கு மிகவும் இடைஞ்சலாக உள்ளது. எனவே இப்பகுதியில் ஒரு மாற்றுப் பாலம் அமைத்து இருவழிப் பாதையாக மாற்றித் தந்து உதவ வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்கள் தொட்டு வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் மக்கள் சேவையை அன்னை தெரசா அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். அவர்கள் பாராட்டுகிறபொழுது உங்கள் சேவை தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, இந்தியாவிற்கே தேவை எனப் பாராட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களுக்குத் தங்கத்தாரகை விருது கொடுத்துப் பாராட்டுகிறார்கள். உலகத் தலைவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களைப் பாராட்டும்பொழுது The Tamil Nadu Chief Minister is having physical strength, spiritual strength and mental strength என்று பாராட்டுகிறார்கள். இந்த மூன்றும் ஒருங்கிணைந்த, இந்த மூன்று வலிமையையும் பெற்ற ஒரே முதலமைச்சர் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டுமே என்று கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலக வங்கி இந்தியாவில் தங்கள் ஆய்வை மேற்கொண்டபொழுது இந்தியாவிலேயே சரியாக திட்டங்களை வகுத்து முறையாக நிதியைப் பயன்படுத்திய ஒரே முதலமைச்சர் தமிழ்நாடு முதலமைச்சர் என்று பாராட்டுகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மனசாட்சி உள்ள அனைவரும் எங்கள் தாயைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் சில பேர்களுக்கு மட்டும் பாராட்ட மனம் வருவதில்லை. நான் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்வதெல்லாம் நீங்கள் பாராட்டாமல் இருந்தாலும் பரவாயில்லை, பழி சொல்லாமல் இருந்தாலே போதும் என்பதுதான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, யார் பாராட்டினாலும் சரி, பாராட்டாமல் இருந்தாலும் சரி, எங்கள் தாய் அதைப் பற்றியெல்லாம் கவலைப்படுவதில்லை. ஏனென்று சொன்னால் அவர் ஒரு தீர்க்கதரிசி. அவர்களது எண்ணம், செயல்கள் அனைத்தும் தமிழ்நாடு முன்னேற வேண்டும், தமிழ்நாட்டு மக்கள் முன்னேற வேண்டும் என்பதுதான். 24 மணி நேரத்தில் 20 மணிநேரம் உழைக்கின்ற உத்தமத் தலைவி எங்கள் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இம்மாமன்றத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்த எங்கள் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், தங்களுக்கும் எனது நன்றியை மீண்டும் ஒருமுறை கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. லா. சந்தானம்.



**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் துறை மற்றும் கைத்தறித் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியினைக் காணிக்கையாக்கிக்கொள்கின்றேன்.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்,—வீணில்
உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்"

என்று பாரதி பாடினான்.

*பிற்பகல் 12–45*

இப்போது உழவும், தொழிலும் தமிழகத்திலே எப்படியிருக்கிறது என்கின்ற நிலையை நாம் சற்று சிந்தித்துப் பார்க்கின்ற நிலையிலேதான் இருந்துகொண்டிருக்கிறோம். கடந்த 4 ஆண்டு கால வறட்சியின் காரணமாக உழவுத் தொழில் சற்று நசிந்திருக்கிற ஒரு சூழ்நிலைதான் இருந்துகொண்டிருக்கிறது. இந்த அரசினுடைய திறமையான செயல்பாடுகளின் மூலமாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் பாதுகாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் உண்மையான நிலை. அதுபோல தொழில் துறையை எடுத்துக்கொண்டாலும்கூட, தொழிலைப் பொறுத்தளவில், தனியாராக இருந்தாலும் சரி, அரசுத் துறையிலே இயங்கிக்கொண்டிருக்கின்ற நிறுவனங்களாக இருந்தாலும் சரி, இப்போது அவையெல்லாம் சீரமைக்கப்படவேண்டிய ஒரு சூழ்நிலையிலே இருந்துகொண்டிருக்கின்றன என்கின்ற நிலையைத்தான் நமது கொள்கை விளக்கக் குறிப்புகூட இங்கு காட்டுகிறது.

காலத்தின் அருமை கருதி இன்றைக்கு சில முக்கியமான வேண்டுகோளை மட்டும் தொழில் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். ஏற்கெனவே இந்த கோரிக்கைகள் எல்லாம் நிதிநிலை அறிக்கையின்போது அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகின்ற நேரத்தில், அவை எல்லாம் செயல்படுத்தப்படும், அங்கு பணியாற்றுகின்ற தொழிலாளர்களினுடைய நலன்கள் காக்கப்படும் என்கின்ற உறுதியினை அளித்திருக்கிறார்கள். எனவே, இந்த தாயுள்ளம்கொண்ட புரட்சித் தலைவி அவர்களுடைய அரசில் தென் பகுதியிலே இருக்கின்ற மக்கள்தான் தங்களுடைய வறுமையின் காரணமாக, வேலைவாய்ப்பு இன்மையின் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு சென்னையை ஒட்டியிருக்கின்ற பகுதிகளிலெல்லாம் பல்வேறு தொழில் நிறுவனங்கள் Hyundai Car தொழிற்சாலை, Ford Car தொழிற்சாலை, கண்ணாடி தொழிற்சாலை போன்றவையெல்லாம் இருந்துகொண்டிருக்கின்றன. எனவே, தென்பகுதியிலே இருக்கின்ற அரசுத் துறை நிறுவனங்களாவது சரியாக இயங்கவேண்டும் என்கின்ற கருத்தினை அந்தப் பகுதி மக்கள் கொண்டிருக்கிறார்கள்.

தென் பகுதியில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக ஏறத்தாழ 35 ஆண்டுகளுக்கு முன்னால் நிறுவப்பட்டது ஆலங்குளம் சிமெண்ட் ஆலை ஆகும். அந்த ஆலையை நிறுவுகின்ற நேரத்தில் இரண்டு clinker சூளையோடு ஏறக்குறைய 1,200 பேர் வேலைவாய்ப்பு பெறுகின்ற அளவிலே, அந்த ஆலை நிறுவப்பட்டு மிகச் சிறப்பாக இயங்கிக்கொண்டிருந்தது. இன்றைக்கு அரியலூரிலே செயல்படுகின்ற ஆலைகளைக் காட்டிலும் மிக முந்தி, ஏறக்குறைய 10 ஆண்டுகளுக்கு முன்பாக அந்த ஆலை நிறுவப்பட்டது. விருதுநகர் மாவட்டத்தைப் பொறுத்தளவிலே, அது ஒன்றுபட்ட இராமநாதபுரம் மாவட்டமாக இருக்கின்ற நேரத்திலே அந்த ஆலை நிறுவப்பட்டது. அந்தப் பகுதியின் கடுமையான வறட்சிக்கும், வேலையில்லா மக்களுக்கு வேலை அளிக்கின்ற பகுதியாக ஆக்கப்பட வேண்டும் என்கின்ற காரணத்திற்காகவும் நிறுவப்பட்ட ஆலை அது. இன்றைக்கு அதிலே இரண்டு clinker சூளைகளில், ஒன்று மட்டும்தான் இயங்கிக்கொண்டு இருக்கிறது. அந்த ஒன்றும்கூட எப்பொழுது நின்றுபோகுமோ என்கின்ற அச்சத்தோடு அந்தத் தொழிலாளர்களெல்லாம் இன்றைக்கு மிகுந்த, ஆழ்ந்த வருத்தத்தோடு இருந்துகொண்டிருக்கிறார்கள். அது ஏறக்குறைய அரசுத் துறை நிறுவனங்களுக்குத்தான் உற்பத்தியாகின்ற அந்த சிமெண்ட்டையெல்லாம் கொடுத்துக்கொண்டிருக்கிறது. இப்படி இருந்தும்கூட இன்றைக்கு அவர்கள் 59 விழுக்காடு உற்பத்தித் திறனை செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நமது கொள்கை விளக்கக் குறிப்பிலேகூட குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே, ஓடிக்கொண்டிருக்கின்ற அந்த ஆலையினுடைய, clinker மற்ற சாதனங்களையும் சரி செய்வதற்கு ஏறக்குறைய 6 கோடி ரூபாய்தான் செலவாகும் என்று சொல்லுகிறார்கள். எனவே, அந்த 6 கோடி ரூபாய் செலவு செய்வதன் மூலமாக அந்த ஆலை பாதுகாக்கப்பட வேண்டும். அங்கு பணியாற்றுகின்ற ஏறக்குறைய 600–க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள், அவர்களுடைய நலன் காக்கப்பட வேண்டும் என்று கருதுகிறார்கள்.



பிற்பகல் 12–50

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் சந்தானம் அவர்கள் ஆலங்குளம் தொழிற்சாலையைப் பற்றி இங்கே குறிப்பிட்டுப் பேசினார்கள். ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலை என்பது மிகவும் பழமை வாய்ந்தது. அதற்குப் பின்னாலே அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டாலும், அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலை இன்றைக்கு 100 சதவீதம் உற்பத்தி செய்ய வேண்டுமென்றால் 114 சதவீதம் அதனுடைய உற்பத்தியைத் தொடங்கிக்கொண்டிருக்கிறது. ஆலங்குளம் சிமென்டைப் பொறுத்தவரையில் நான் ஏற்கெனவே இந்தச் சட்டமன்றத்திலே குறிப்பிட்டதைப்போல dry process, wet process என்ற இரு அமைப்புகள் இருக்கின்றன. இது மிகவும் பழமை வாய்ந்ததாக இருக்கின்ற காரணத்தினால் wet process, இது முழுமையாகச் செயல்பட வேண்டுமென்றால் கிட்டத்தட்ட 250 கோடி ரூபாய்க்கு மேலேயாகும். இன்றைய நிதிநிலை அதற்கு இடம் கொடுக்காத காரணத்தினால் மாண்புமிகு அண்ணன் சந்தானம் அவர்களும், அங்கேயிருக்கின்ற தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்களும், நமது சட்டப் பேரவையினுடைய தலைவர் அவர்களும் ஏற்கெனவே இதைத் திறக்க வேண்டுமென்று அம்மாவிடம் கோரிக்கை வைத்தார்கள். ஆனால், இருக்கின்ற இரண்டு kiln ஒன்று மட்டும் 59 சதவீதம்தான் இன்றைக்கு உற்பத்தியைச் செய்தாலும்கூட, 6 கோடி ரூபாய் முதலீட்டில் ஒரு kiln அதைச் சரிசெய்ய வேண்டுமென்று அம்மா அவர்களுக்குக் கோரிக்கை வைத்திருந்தார்கள். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் அந்தக் கோரிக்கையை ஏற்று 6 கோடி ரூபாய் செலவில் ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலையில் அந்த இயந்திரங்களைப் பழுது பார்த்து மூன்று ஆண்டுகளில் அந்தப் பணத்தைத் திருப்பிப் பெற்றுக்கொள்ளலாம் என்கிற ஒரு உத்தரவாதத்தோடு மாண்புமிகு அம்மா அவர்கள் 6 கோடி ரூபாயை அளிக்க பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. லா. சந்தானம்:** அமைச்சர் அவர்களுக்கு மிகுந்த நன்றி. அதுபோல, மதுரை மாவட்டத்தில் இன்றைக்கு விவசாயிகள் பயன்பெறுகின்ற அளவிலே, ஓரளவிற்கு இலாபம் ஈட்டுகின்ற வகையிலே இருக்கின்ற பயிர், கரும்பு விவசாயம் ஒன்றுதான். கரும்பு

பயிர் ஒன்றுதான் இன்றைக்கு விவசாயிகளுக்கு ஓரளவுக்கு பயன் ஈட்டித் தருகின்ற அளவிலே, இலாபத்தைப் பெற்றுத் தருகின்ற அளவிலே இருக்கின்ற பயிர். அந்தக் கரும்பு விவசாயத்தை ஊக்கப்படுத்துவது போல கடந்த காலத்தில் மதுரை மாவட்டத்தைப் பொறுத்தளவிலே National Sugars, அலங்காநல்லூர், அது போல, Madura Sugars, பாண்டிராஜபுரம், இரண்டு ஆலைகள் ஓடிக்கொண்டிருந்தன. இன்றைக்கு கொள்கை விளக்கக் குறிப்பிலே பார்க்கின்றபோது அந்த இரண்டு ஆலைகளும், அதோடு மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ஆகிய மூன்று ஆலைகளும் நலிவுற்ற ஆலைகளாக குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

துரதிருஷ்டவசமாக மதுரை மாவட்டத்திலே இயங்கிக் கொண்டிருந்த இரண்டு ஆலைகளும் ஓடாத நிலையில் இருந்து கொண்டிருக்கின்றன. அங்கேயிருக்கின்ற விவசாயிகள் எல்லாம், பெரும்பாலும் மதுரை மாவட்டம் மட்டுமல்ல, திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அதுபோல, விருதுநகர் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், சிவகங்கை மாவட்டம் அத்தனைக்கும் ஒட்டுமொத்தமாக அரசுத் துறையின் சார்பிலே இயங்கிக்கொண்டிருக்கின்ற கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, அலங்காநல்லூர் சர்க்கரை ஆலை என்பது அந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. ஓரளவிற்கு 10 கோடி ரூபாய் அளவிலே செலவு செய்தால் அந்த ஆலையை சீரமைத்து வருகின்ற பருவக் காலத்திலே அந்த ஆலையை ஓட்டுவதற்கு முடியும் என்ற நம்பிக்கையோடு அந்தப் பகுதி விவசாயிகள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அது ஏறக்குறைய பெரியார் நீர்ப்பாசன பகுதி. பெரும்பாலும் அங்கு கரும்பு விவசாயம் அதிகமாக இருக்கிறது.

இப்போது சர்க்கரையைப் பொறுத்தளவிலே வெளிச் சந்தையிலே நல்ல அளவிற்கு விற்கின்ற நிலையிருக்கிறது. எனவே, ஆலையில் உற்பத்தி செய்கின்ற சர்க்கரைக்கு நல்ல market இருக்கிறது. கடந்த காலங்களில் எல்லாம் அவை விற்கப்படாமல் தேங்கி நிற்கின்ற ஒரு சூழல் இருந்த காரணத்தினால்தான் அந்தச் சர்க்கரை ஆலைகள் எல்லாம் நலிவுற்ற ஒரு நிலை இருந்தது. இப்போது சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தளவிலே கரும்பினுடைய சக்கைகளைப் பயன்படுத்தி, அந்த ஆலைகளுக்குப் போதுமான அளவிற்கு மின்சாரத்தை தயாரித்துக்கொள்வதற்குரிய வாய்ப்பு இருக்கிறது. அதுபோல, அந்தக் கழிவாகிய molasses-ஐக்கூட பெரிய அளவிலே விற்றுப் பணமாக்கக்கூடிய ஒரு சூழல் எல்லாம் இருக்கிறது. எனவே, மதுரை



மாவட்டமும் அதையொட்டியுள்ள பகுதிகளும் பயன்பெறுகின்ற அளவிலே இந்த அலங்காநல்லூர் சர்க்கரை ஆலைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்ற முறைகூட அதற்கு உத்தரவாதம் கொடுத்திருக்கிறார்கள். அந்த மக்களால் முதலமைச்சர் அவர்களுக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துகூட அங்கே எல்லாம் poster-கள் அடித்து ஒட்டப்பட்டிருக்கின்றன.—நிச்சயமாக இந்தப் பருவ காலத்தில் ஓட்டுவதற்கு நடவடிக்கையை இந்த அரசு எடுத்துக்கொள்ளும் என்கின்ற நம்பிக்கையிலே விவசாயிகள் இருக்கிறார்கள். எனவே, அந்த விவசாயிகளுடைய நம்பிக்கையை வீணாக்காமல், நிச்சயமாக அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசி அந்த ஆலையை ஓட்டுவதற்கு முன் வரவேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–55

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அண்ணன் சந்தானம் அவர்கள், இங்கே அலங்காநல்லூர் சர்க்கரை ஆலையைப் பற்றி குறிப்பிட்டார்கள். அலங்காநல்லூர் சர்க்கரை ஆலை குறித்து மேலூர் சட்டமன்ற உறுப்பினர் சாமி அவர்களும், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ராஜாங்கம் அவர்களும், சமயநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் பொன்னம்பலம் அவர்களும், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் ஏற்கெனவே இதைப்பற்றி பேசி இருந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களிடமும் அந்தக் கருத்தைத் தெரிவித்து இருந்தார்கள். ஆக அந்த ஆலையைத் திறப்பதற்கு வழிவகைக் கடனாக 11 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்கள் தருவதற்கு ஒப்புக்கொண்டு இருக்கின்றார்கள் என்ற நல்ல செய்தியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் அதிலே ஒரு பிரச்சினை இருக்கிறது. மதுரை கூட்டுறவு வங்கியிலே ரூ.20 கோடி ஏற்கெனவே கடன் பெற்றிருக்கிறார்கள். அந்தக் கடனுக்கு நபார்டு வங்கி ஒப்புதல் தரவேண்டும். அரசாங்கத்தைப் பொறுத்தமட்டிலும் 11 கோடி ரூபாய் தருவதற்கு அம்மா அவர்கள் ஒப்புதல் தந்து விட்டார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுராந்தகம் சர்க்கரை ஆலையைப் பொறுத்தமட்டிலும், அங்கு ஏற்கெனவே பணியாளர்களுக்கு V.R.S முழுவதும் கொடுக்கப்பட்டுவிட்டது. மேற்கூறிய இன்னொரு சர்க்கரை ஆலையிலும் V.R.S முழுவதும் கொடுக்கப்பட்டுவிட்டது. சர்க்கரை

ஆலை இந்த அளவிற்கு நலிவடைந்ததற்குக் காரணம், கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக அரசு, 623 கோடி ரூபாய் நட்டமும், திரண்ட நட்டமாக ரூ.1,000 கோடி ரூபாய் நட்டத்தையும் ஏற்படுத்திவிட்டு சென்றுவிட்டார்கள். அதையெல்லாம் சீர்படுத்துவதற்கே 4 ஆண்டு காலம் பிடித்தது. அம்மா அவர்கள் தலைமையிலே 2001-ல் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்ற பிறகுதான் செங்கல்வராயன், செய்யாறு, திருத்தணி சர்க்கரை ஆலை, கள்ளக்குறிச்சி-2, தருமபுரி போன்ற இந்த 5 சர்க்கரை ஆலைகளும், இப்போது இலாபத்திலே வரத் தொடங்கி இருக்கின்றன என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சர்க்கரைத் துறையைப் பொறுத்தமட்டிலும் கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக அரசு 575 ரூபாய் அன்றைக்கு இருந்த S.M.P. மத்திய அரசினுடைய சட்டபூர்வமான- குறைந்த விலை 575 ரூபாய் தருகிறேன் என்று சொல்லி அதையும் தராமல் சென்றுவிட்டார்கள். அதேபோன்று S.A.P. additional-ஆக, கூடுதலாக நாங்கள் 180 ரூபாய் சேர்த்து மொத்தம் 755 ரூபாய் தருகிறோம் என்று சொன்னார்கள். ஆக கொடுக்க வேண்டிய S.M.P-யில் 575 ரூபாயில், 50 கோடி ரூபாய் பாக்கி வைத்து சென்றுவிட்டார்கள். அதன்பிறகு S.A.P. என்கின்றதில் additional-ஆக தருகிறோம் என்று சொன்னதில், அதில் 120 கோடி ரூபாய். ஆக மொத்தம் 170 கோடி ரூபாயை பாக்கி வைத்து சென்று விட்டது திராவிட முன்னேற்றக் கழக அரசு. கரும்பு விவசாயிகளுக்கு தாயுள்ளத்தோடு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வந்தபிறகு, இந்த 170 கோடி ரூபாயும் வழங்கி இருக்கின்றார்கள் என்பதையும் இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு கூட்டுறவு வங்கியிலே, கடன் இருக்கின்ற செய்திகளையும் கூறி இருக்கிறார்கள். அதையெல்லாம் இந்த அரசுதான் சீர் செய்யவேண்டும். நீங்கள்தான் அதையெல்லாம் ஒழுங்குசெய்ய வேண்டும், கூட்டுறவு வங்கி உங்களுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது. எனவே அந்தப் பகுதி விவசாய மக்களுக்குப் பயன்படுகின்ற அளவில் செய்ய வேண்டும். அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல இப்போது, சர்க்கரைத் தொழிலைப் பொறுத்தளவிலே பல்வேறு ஆலைகள் இலாபத்தில் இயங்குகின்ற ஒரு சூழல் இருக்கிறது. அதுபோல இந்த ஆலையையும் நீங்கள் இயக்கினால், நிச்சயமாக இந்த ஆலையும், நல்ல விதத்திலே, இந்த அரசுக்கு இலாபம் ஈட்டித் தருகின்ற விதத்திலே இயங்கும் என்பதிலே எந்தவிதமான வேறுபாடும் இல்லை. கருத்து



மாறுபாடும் இல்லை என்கின்ற முறையில் இதை இயக்குவதற்கு நீங்கள் ஆவன செய்யவேண்டும்.

அதுபோல, இந்த விவசாயத்திலே மாற்றுப் பயிராக ஜெட்ரோபா போன்ற Oil seeds உற்பத்தி ஆகின்ற பயிர்களை எல்லாம் இந்த அரசு ஊக்கப்படுத்தவேண்டும் என்கின்ற நிலையிலே அதை பயிரிடச் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். எனது உசிலம்பட்டி தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. அங்கே இருக்கிற மக்களுக்கெல்லாம் எந்த வேலைவாய்ப்பும் இல்லாமல் பல்வேறு நகரங்களுக்கு திருப்பூர் போன்ற நகரங்களுக்குச் சென்று, அவர்களுடைய வாழ்க்கையை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். முறுக்கு போடுவதற்காக இந்தியாவினுடைய பல மாநிலங்களிலேயும் அவர்கள் சென்று தங்கள் வாழ்க்கையை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்ட மக்கள் பயன்படுகின்ற அளவிலே ஒரு ஆமணக்குத் தொழிற்சாலை என்பதை கடந்த காலத்திலே அந்த அரசு அறிவித்தது, அதைச் செயலாக்கவில்லை. எனவே நீங்களாவது இந்த ஜெட்ரோபா போன்ற பயிர்களை அங்கு பயிர் செய்வதற்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தினால், அப்படி ஒரு தொழிற்சாலையை எங்களது உசிலம்பட்டி பகுதிக்கு நீங்கள் ஏற்படுத்தித் தரவேண்டும்.

பிற்பகல் 1-00

அதோடு, மதுரை என்பது சென்னைக்கு அடுத்தபடியாக மிகப் பெரிய நகரம். இன்றைக்கு அங்கிருக்கின்ற விமான நிலையத்தைக்கூட சர்வதேச விமான நிலையமாக ஆக்குகின்ற அடிப்படை வேலைகள் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன. எனவே மதுரையை ஒட்டி ஒரு தொழில்நுட்பப் பூங்கா—சென்னையை ஒட்டி வைத்திருப்பதுபோல எங்களது தென்பகுதி மக்கள், அவர்களுடைய வாழ்க்கையிலே வளம் பெறுவதற்கு, வேலைவாய்ப்பினை பெறுவதற்கு, மதுரையை ஒட்டி ஒரு தொழில்நுட்பப் பூங்கா—அமைத்துத் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறியைப் பொறுத்தளவிலே, அந்த நெசவாளர்களுடைய வாழ்க்கையிலே, பல்வேறு நலத் திட்டங்களைக் கொடுத்து இந்த அரசு அவர்கள் வாழ்க்கையிலே ஒளியேற்றிக் கொண்டிருக்கிறது என்கின்ற செய்தியை மட்டும் சொல்லி, வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முனைவர் செ.கு. தமிழரசன்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் துறை, கைத்தறி, கைத்திறன், துணிநூல் ஆகிய இந்தத் துறைகளின் பேரிலே, எங்கள் அமைப்பின் சார்பில், எங்களது கருத்துகளைப் பதிவு செய்கிற ஒரு வாய்ப்பைத் தந்த தங்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகளை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழில் துறை, பெருந்தொழில் துறை, எளிய மக்களின் கைத்தறி, நெசவாளர் துறை ஆகிய தமிழகத்தின் மிக மிக முக்கியத் துறைகளான இந்த இரண்டையுமே ஒருசேர இணைத்து இன்றைக்கு விவாதிக்கிற வாய்ப்பை நீங்கள் உருவாக்கியிருக்கிறீர்கள்.

ஒரு மாநிலத்திலே சிறப்பான தொழில் அமைய வேண்டும் என்று சொன்னால், அந்த மாநிலத்திலே அப்படிப்பட்ட சூழல் இருக்க வேண்டும்; சமூக நல்லிணக்கம் இருக்க வேண்டும்; தொழில் அமைதி இருக்க வேண்டும்; அப்படிப்பட்ட சுற்றுப்புறச்சூழல் அமைய வேண்டும். இப்போது இந்தியத் துணைக் கண்டத்திலேயே அத்தகைய தொழில் அமைதியும், சமூக நல்லிணக்கமும், சுற்றுப்புறச்சூழலும் ஒரு மாநிலத்திலே அமைந்திருக்கிறது என்று சொன்னால் அது நம்முடைய தமிழ்நாடாகத்தான் இருக்கும் என்பதிலே வேறு எவருக்கும் எந்தவிதமான கருத்தும், ஐயமும் இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குக் காரணமே மாண்புமிகு தமிழக முதல்வர் நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வலிமையான, சீரிய, திட்டமிட்ட ஒரு தலைமையினாலே, இந்த அரசு இயங்கிக் கொண்டிருப்பதனாலே அப்படிப்பட்ட ஒரு நிலைமை இப்போது தமிழ்நாட்டிலே அமைந்திருக்கிறது. ஆகவேதான் வெளிநாட்டிலே இருக்கின்ற தொழில் முதலீட்டாளர்களும், பன்னாட்டு நிறுவனங்களும், பெருந்தொழில் அதிபர்களும் தமிழகத்திலே தொழில் தொடங்க வேண்டும் என்பதிலே அவர்கள் மிகுந்த ஆர்வத்தோடு இப்போது வந்து கொண்டிருக்கிறார்கள். இங்கே தொழில் தொடங்கப்படுமேயானால், அது பாதுகாக்கப்பட்ட தொழிலாக இருக்கும், பாதுகாப்புடன் கூடிய, அப்படிப்பட்ட அந்த உணர்வுடன் கூடிய, அந்தத் தன்மை படைத்த தொழிலாக இருக்கும் என்பதனாலே, தொழில் அதிபர்களுக்கு அவ்வளவு ஆர்வம் இருப்பதனாலே இந்த மாநிலம் அந்த வகையிலே முதல் நிலையில் இருக்கிறது, முதல் நிலை வகிக்கிறது என்பதனாலே நான் முதல்வரைப் பாராட்டுகிறேன்.



நம்முடைய தொழில் கொள்கை, அது சுதந்திரத்திற்குப் பின்னாலே உருவாக்கப்பட்ட தொழில் கொள்கையானாலும், இன்றைக்கு மத்திய, மாநில அரசுகளால் பின்பற்றப்படுகிற தொழில் கொள்கையானாலும், எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு, சுதந்திரம் துவங்கிய காலத்திலே, அரசியல் சட்டத்தை உருவாக்கியபோது, பாபா சாகேப் அம்பேத்கர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அரசு நேரடியாக 40 சதவிகித தொழில்களை கையிலே வைத்துக்கொள்ளலாம். 30 சதவிகிதத்தை தனியாருக்குத் தரலாம், 30 சதவிகிதத்தை அரசும் தனியாரும் சேர்ந்து நடத்துகின்ற பொதுத் துறைக்குத் தரலாம், ஆக 100 விழுக்காடு இலக்கை 40 சதவிகிதம் நேரடி அரசும், 30 சதவிகிதம் தனியாரும், 30 சதவிகிதம் அரசும் தனியாரும் சேர்ந்து இயக்குகிற பொதுத் துறையாகவும் செயல்படுத்தினால் Mixed economy என்று சொல்லப்படுகிற ஒரு கலப்புப் பொருளாதாரம் இந்த தேசத்திலே இருக்கும், அது தனியார் துறைக்கும் பாதுகாப்பு வழங்குகிற வகையிலே இருக்கும், பொதுத் துறையையும் ஊக்குவிக்கிற வகையிலே இருக்கும். அரசாங்கமும், பெரும்பான்மைத் தொழில்களை வைத்துக்கொண்டிருக்கிற, 40 சதவீதம் தொழில்களை வைத்துக்கொண்டிருக்கிற ஒரு நிலைமை இருக்கும். ஆகவே, இப்படிப்பட்ட ஒரு கலப்புப் பொருளாதாரக் கொள்கையை மத்திய, மாநில அரசுகள் கடைப்பிடித்தால், அது மக்களுக்கும், அரசுக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்று, அரசியல் சட்டத்தை உருவாக்கிய வேளையிலே அண்ணல் அம்பேத்கர் அவர்கள் கருத்துரைத்தார்கள்.

பிற்பகல் 1–05

அரசு என்பது அடிப்படை வாழ்வுரிமைகளைச் செய்கிற மிகப்பெரிய கடமைகளைச் செய்தாலும்கூட, ஒரு அரசின் மிகப் பெரிய கடமை, இப்போது வளர்ந்துவருகிற ஜனநாயகத்திலே, எதுவாக இருக்கும் என்று சொன்னால், கல்வியைத் தருவது, மருத்துவத்தைத் தருவது, அதற்கு மேலே வேலைவாய்ப்பைத் தருவது.

நம்முடைய புரட்சித் தலைவி அவர்களின் அரசைப் பொறுத்தவரையிலே, கல்வியிலே ஒரு மிகப் பெரிய மறுமலர்ச்சியைக் கொண்டுவந்து, இன்றைக்கு இந்தியாவிலே உருவாகிற பொறியாளர்களிலே, இந்தியாவிலே உருவாகிற தனியார் கல்லூரிகள் ஆனாலும், அரசுக் கல்லூரிகள் ஆனாலும், இந்தியாவிலே உருவாகிற பொறியாளர்களிலே, மிகப்பெரும் அளவிலே தமிழ்நாட்டிலேதான் பொறியாளர்கள் உருவாகிறார்கள் என்கிற வகையிலே, அவ்வளவு ஒரு பெரிய கல்வி மறுமலர்ச்சியைக் கொண்டுவந்து இன்றைக்கு நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது.

மருத்துவ வசதியைப்பற்றி சொன்னாலும்கூட, ஆசியாவிலேயே மிகப் பெரிய மருத்துவமனைகள் சென்னையிலே தான் இருக்கின்றன என்கிற வகையிலே, மருத்துவத் துறையிலேயும் ஒரு மறுமலர்ச்சியைச் செய்து வருகிறது.

மூன்றாவதாக, இந்த வேலைவாய்ப்பைப் பொறுத்தவரையிலே அதை உருவாக்குகிற மிகப் பெரிய கடமை தொழிலுக்கு இருக்கிறது; Industries–க்கு இருக்கிறது; Industries Department–க்கு இருக்கிறது; தொழில் துறைக்கும், தொழிலதிபர்களுக்கும் இருக்கிறது.

தொழில் வளர்ந்தால்தான் வேலைவாய்ப்பு கிடைக்கும். வேலைவாய்ப்பு அதிகரித்தால்தான் தனி நபர் வருமானம் அதிகரிக்கும். தனி நபர் வருமானம் அதிகரித்தால்தான், சமூக வளர்ச்சி ஏற்படும். அந்த சமூகத்தினுடைய வளர்ச்சியை, நாம் அதனை ஒரு அளவுகோலாக வைத்துக்கொள்ள முடியும். அந்த வகையிலே, தொழில் துறையிலே தனி நபர் வருமானத்தை உயர்த்தக்கூடிய மிகப் பெரிய மறுமலர்ச்சிகளை நாம் செய்து கொண்டிருக்கிறோம் என்பதை மறுக்க முடியாது.

இன்றைக்கு இந்தியாவிலேயே சென்னை என்பது Car City என்று சொல்லி அழைக்கிற அளவுக்கு, ஏன் உலகத்திலேயேகூட சென்னையை Car City என்று சொல்கிற அளவுக்கு, கார் உற்பத்தியிலே முன்னணியிலே இருப்பது சென்னை மாநகரம் ஆகும். அதற்கு அடித்தளம் அமைத்தவர், அதற்கு அடிக்கல் நாட்டியவர், நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு ஃபோர்டு நிறுவனம் இங்கே அமைந்திருக்கிறது என்று சொன்னால், அந்த ஃபோர்டு நிறுவனத்தோடு ஒப்பந்தமிட்டு, அதற்கு வழி வகுத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இன்றைக்கு ஹூண்டாய் நிறுவனம் இங்கே மிகப் பெரிய அளவில் ஆண்டுக்கு 5 இலட்சம் கார்களுக்கு மேலே தயாரிக்கிற அளவுக்கு—50,000 கார்களுக்கு மேலே 5 இலட்சம் வரையிலே நெருங்குகிற அளவுக்கு—அவ்வளவு பெரிய கார் உற்பத்தியிலே இன்றைக்கு முன்னணியிலே இருக்கிறது என்று சொன்னால், அந்த ஹூண்டாய் நிறுவனம் இங்கே வருவதற்கு அடிக்கல் நாட்டியவர், நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



இன்றைக்கு சென்னை மாநகரம் என்பது Car City என்கிற வகையிலே, ஆசிய அளவிலே ஆனாலும், உலக அளவிலே ஆனாலும் தொழில் துறையிலே வளர்ந்திருக்கிறது. ஆக, இதன் மூலமாக இன்றைக்கு அதைப் பொறுத்திருக்கிற Ancillary Industries இருக்கின்றனவே, துணைத் தொழிற்சாலைகள் பெருமளவிலே சென்னையை ஒட்டி வந்திருக்கின்றன, Automobile Industry–யிலே. Mother Industry என்று சொல்லப்படுகிற தாய்த் தொழில்கள் எந்த மாநிலத்திலே மிக அதிக அளவிலே ஆரம்பிக்கப்படுகின்றனவோ, எங்கே மிக அதிக அளவிலே தொடங்கப்படுகின்றனவோ, அங்கே அதையொட்டி Ancillary Industries மிகப்பெரிய அளவிலே வளருகின்றன.

திருச்சியிலே ஒரு பெல் நிறுவனம் இருப்பதனாலே, நெய்வேலியிலே ஒரு N.L.C. நிறுவனம் இருப்பதனாலே, இப்படிப்பட்ட பெரும் தொழில்கள் தொடங்கப்படுவதனாலே, அதை ஒட்டிய Ancillary Units, உதிரி பாகங்களும் அல்லது துணைத் தொழில்களும் மிகப்பெரும் அளவிலே உருவாகி, அதனாலே ஆயிரக்கணக்கிலே, பல்லாயிரக்கணக்கிலே அந்தப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைத்து, அதன்மூலம் தனி நபர் வருமானம், பணப் புழக்கம், இவையெல்லாம் ஏற்படுகிற வகையிலே, வாய்ப்புகள், சூழல்கள் அமைகின்றன. ஆகவே, இப்படிப்பட்ட பெரும் தொழில்களைக் கொண்டுவருவதற்கு, மிகப் பெருமளவிலே நாம் முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். அதிலே வேகமாக நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு நீண்ட தொலைநோக்கோடு திட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

வரும் ஆண்டிலே 74,000 கோடி ரூபாய்க்கு மேலே தமிழகத்திலேயிருந்து மட்டும் Automobile Industry–யிலே, உதிரிப் பாகங்கள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிற நிலைமை உருவாகக்கூடிய சூழல் இருக்கிறது என்று டில்லியிலே இருக்கிற அந்த மத்திய வர்த்தகச் சங்கம் அதனுடைய அந்த ஆண்டறிக்கையிலே குறிப்பிட்டிருக்கின்றது. இப்படி உதிரிப் பாகங்கள் உற்பத்தியிலும், ஏற்றுமதியிலும் இன்றைக்கு சென்னை மாநிலம், தமிழ் மாநிலம் முன்னணியிலே இருக்கிறது என்று சொன்னால், அவற்றை ஒரு வகைப்படுத்தி, Regulate செய்து, அந்த உதிரிப் பாகங்கள் ஏற்றுமதிக்கு, அதை ஒரு முறைப்படுத்தி, அவற்றுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தருவதற்கு, இந்த அரசு நிறையச் செய்து கொண்டிருக்கிறது என்று சொன்னாலும், அவற்றை முறைப்படுத்த வேண்டுமென்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

இப்படி, பெரும் தொழில்கள் தொடங்கப்படுகிறபோது நான் இன்னொன்றையும் இந்தச் சந்தர்ப்பத்திலே வலியுறுத்த வேண்டுமென்று விரும்புகிறேன். இன்றைக்கு மத்திய அரசுகூட தனியார் துறையிலே இட ஒதுக்கீடு என்கிற ஒரு கொள்கையை, இதை நாங்கள் மக்கள் ஆய்வுக்கு விடுகிறோம், மக்கள் மன்றத்திற்கு விடுகிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறது. பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் தேர்தலுக்கு முன்னாலே ஒரு கொள்கையைப் பேசினார். தேர்தலுக்குப் பின்னாலே ஒரு கொள்கையைப் பேசுகிறார். டெல்லியிலே ஒரு கொள்கையைப் பேசுகிறார். மும்பையிலே ஒரு கொள்கையைப் பேசுகிறார். டெல்லியிலே பேசுகிறபோது, தனியார் துறையிலே இட ஒதுக்கீடு இருக்கிறது, நாங்கள் வழிவகை செய்து கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறார். மும்பையிலே போய் வர்த்தக சங்கத்திலே பேசுகிறபோது, பெருந் தொழில் அதிபர்களிடமே இதை நாங்கள் விட்டு விடுகிறோம், அவர்களுடைய முடிவிற்கே விடுகிறோம், நாங்கள் வற்புறுத்த மாட்டோம், வலியுறுத்த மாட்டோம், அச்சுறுத்த மாட்டோம், நீங்கள் மனமுவந்து தந்தால் நல்லது என்று சொல்கிறார். ஆக, கடந்த 2 ஆண்டுகளாக இந்த தொழிற் கொள்கையிலே அவர்கள் முரண்பட்ட ஒரு நிலைமையை மத்திய அரசில் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

*பிற்பகல் 1-10*

இந்தப் பொதுத் துறை உருவாக்கப்பட்ட காலத்திலேயே, அந்தக் காலத்திலேயே, 50–களிலேயே, பிரதமர் நேரு ஒரு பெரிய வாக்குறுதியை பாராளுமன்றத்திலே தந்தார்கள். Quasi Government என்று சொல்லப்படுகின்ற இந்தப் பொதுத் துறைக்கான அறிமுகத்தை, அப்படிப்பட்ட சட்ட மசோதாவை, நாடாளுமன்றத்திலே பிரதமர் நேரு அவர்கள் அறிமுகப்படுத்தியபோது, அரசாங்கம்தான் தொழில்களை செய்ய வேண்டும். தனியார் துறைக்கும், பொதுத் துறைக்கும் தரக் கூடாது என்று எதிர்க் கட்சிகள் அன்றைக்கு வலியுறுத்தியபோது, எதிர்த்து பேசியபோது, பொதுத் துறையிலே இட ஒதுக்கீட்டிற்கான எந்த சிக்கலும் வராமல் நாங்கள் பார்த்துக்கொள்வோம் என்கிற உறுதிமொழியை அன்றைக்குத் தந்தார். 50 ஆண்டுகளுக்கு மேலே ஆகியும், தனியார் துறையிலே அந்த இட ஒதுக்கீடு என்பது ஒரு கேள்வியாக இருந்து கொண்டிருக்கிறது; ஒரு மிகப் பெரிய குழப்பமாக இருந்து கொண்டிருக்கிறது; பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. மத்திய அரசோ தங்களுடைய அந்த Common Minimum Programme–லே குறைந்தபட்ச செயல் திட்டத்திலே இதைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், நடைமுறையிலே ஓராண்டு காலமாக,



அதற்கு எந்த உறுதியையும், எந்த சட்டப்பூர்வமான நடவடிக்கைகளையும் மத்திய அரசு எடுக்கவில்லை. ஆகவே, மாநில அரசை பொறுத்தவரையிலே, மாநில அரசாவது இந்தக் கொள்கையிலே ஒரு தெளிவான உறுதியைச் சொல்ல வேண்டும்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இங்கே முதல்வராக இருந்தபோது, அப்போதே இதை ஆதரித்து இந்த மாமன்றத்திலேயே அவர்கள் குறிப்பிட்டுப் பேசினார்கள். ஆகவே, அதிலே நாம் ஒரு முடிவை வலியுறுத்த வேண்டும். மத்திய அரசை நிர்ப்பந்திக்க வேண்டும். தனியார் துறையிலும் இட ஒதுக்கீட்டை அமல்படுத்த வேண்டும். மலேசியாவிலே, இந்தத் தனியார்த் துறையிலே இட ஒதுக்கீடு இருக்கிறது. வளர்ந்த அமெரிக்க மாநகரத்திலே, நீக்ரோக்களுக்கு அந்த மண்ணின் மைந்தர்களுக்கு, கருப்பர்களுக்கு அங்கே தொடங்கப்படுகின்ற தொழிற்சாலைகளிலே இட ஒதுக்கீடு இருக்கிறது.

இங்கே 1 கோடி ரூபாய்க்கு மேலே ஒரு தொழில் தொடங்கப்பட்டால் அல்லது ரூபாய் ஒரு கோடிக்கு மேலே எந்தத் தொழிலாக இருந்தாலும், அரசு நிறுவனத்தின் உதவியில்லாமல், அரசின் எந்தவகையான உதவியும் இல்லாமல், எந்தத் தனியாரும் தொழில் தொடங்குவதில்லை. ஆகவே, அரசின் அனைத்து உதவிகளையும் பெறுகிற இவர்கள், அரசின் பெரும் பொறுப்பிலே பங்கேற்க வேண்டும் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

நான் மிகப் பெரிய தொழிற்சாலைகளை அம்மா அவர்கள் இங்கே கொண்டுவந்தார்கள் என்பதை சொல்கிறபோது, நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இப்போது மத்திய அரசு நடத்துகிற தொழிற்சாலைகள் இருக்கிறதே, இந்தத் தொழிலிலே மாநில அரசிற்கு நிகராக அவர்களுக்கு ஆதரவாக, அவர்களுக்கு எல்லா வகையிலும் துணை நிற்கிற வகையிலே, மத்திய அரசும் தொழிற் கொள்கையைப் பின்பற்ற வேண்டும். மாநில அரசுகளை ஊக்குவிக்க வேண்டும். ஆனால், நம்மைப் பொறுத்தவரையிலே, இப்போது மணலியிலே இருக்கிற M.R.L. இருக்கிறதே, – Madras Refineries Limited - அது மூடப்படுகிற நிலையிலே இருக்கிறது. என்றைக்கு மூடப்பட்டுவிடுமோ என்கிற அச்சம் இருக்கிறது. பல கோடி ரூபாய் முதலீட்டிலே இயங்கிக் கொண்டிருக்கிற M.R.L. இப்படி ஆவதற்கு என்ன காரணம் என்று சொன்னால், அவர்களுடைய நிறுவனத்திலே இங்கே M.R.L. இருக்கிறது. நாகப்பட்டினத்திலே C.P.C.L. இருக்கிறது. Central Petroleum Corporation Limited அங்கேயிருக்கிற அந்த கச்சா பொருளை அந்த மத்திய அரசு நிறுவனத்திடமிருந்து இந்த மத்திய

அரசு நிறுவனம் வாங்குவதில்லை. தனியாரிடத்திலிருந்து வாங்குகிறார்கள். ஆனால் அங்கேயிருக்கிற C.P.C.L.–க்கும் இழப்பு. இங்கேயிருக்கிற M.R.L.–க்கும் இழப்பு. இரண்டு பேருக்குமே இரண்டு பெரிய தொழிற்சாலைகளுக்குமே இங்கே இழப்பு. M.R.L. மூடப்படுமேயானால், அது மத்திய அரசுக்கு வேண்டுமானால் அதிலே அவர்களுக்கு கவலை இல்லாமல் இருக்கலாம்; அவர்களுக்கு வருத்தம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அது மூடப்படுமேயானால், எண்ணூரிலே ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழப்பார்கள். ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் குடும்பங்கள்...

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. செ.கு. தமிழரசன் அவர்கள் நாகப்பட்டினத்திலே இருக்கிற C.P.C.L. பற்றியும், மணலியிலே இருக்கிற M.R.L. பற்றியும் இங்கே குறிப்பிட்டார்கள். ஆனால் மாநிலத்திலே இருக்கின்ற நமக்கு, மத்தியிலே இருக்கின்ற பொதுத் துறை நிறுவனங்கள் மீது இவ்வளவு அக்கறை இருக்கிறதே தவிர, தமிழகத்திலே இருக்கின்ற 12 மத்திய அமைச்சர்களுக்கும், 40 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வாய்கிழிய பேசுகின்ற எதிர்க் கட்சித் தலைவர்கள் இங்கே வெளிநடப்புச் செய்கிறார்களே தவிர, இதையெல்லாம் பற்றிப் பேசுவதற்கு அவர்களுக்கு அக்கறை இல்லை, அருகதை இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக தமிழக மக்கள்தான் அதற்கு பதிலடி தரவேண்டும் என்பதை இந்த அவையிலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, M.R.L. மட்டுமல்ல. நீலகிரி மாவட்டத்திலே இருக்கிற Hindustan Photo Film Industry அதுவும் ஒரு புராதன தொழில் நிறுவனம். பல்லாண்டு காலத்திற்கு முன்னாலே தொடங்கப்பட்ட நிறுவனம். ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் புரளுகின்ற நிறுவனம். சொல்லப்போனால், நீலகிரி மக்களுக்கே வாழ்வளித்துக் கொண்டிருக்கின்ற நிறுவனம். அங்கேயிருக்கின்ற பெரும்பான்மையான ஊழியர்கள் நீலகிரியிலே போய் இருக்கிறார்கள். அந்தக் கொட்டும் மழையிலும், குளிரிலும் இருக்கிறார்கள் என்றால், அந்தத் தொழிற்சாலையை நம்பித்தான். இன்றைக்கு அந்த Hindustan Photo Film நிறுவனமும் மூடப்படுகிற நிலைமையிலே இருக்கிறது. அதுவும் அப்படிப்பட்ட நிலைமையிலே இருக்கிறது. நம்முடைய தொழிற் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டத்தைப்போல, மத்தியிலே 12



அமைச்சர்கள் இருக்கிறார்கள். இதையெல்லாம் காப்பாற்றுவதற்கு அவர்கள்...

*பிற்பகல் 1–15*

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.கு. தமிழரசன் அவர்கள் மறுபடியும் மத்திய அரசு சம்பந்தப்பட்ட Hindustan Photo Films நிறுவனத்தைப் பற்றி இங்கே பேசினார்கள். இந்த Hindustan Photo Films நிறுவனத்தை மூடிவிட BIFR நிறுவனம் பிப்ரவரி 2003–லே முடிவெடுத்தது. அதன்பிறகு மத்திய அரசானது Percusion – ஆலோசனை நிறுவனத்தாரிடம் இதைப் புனரமைக்க வழிவகைகளை ஆராய்ந்து அறிக்கை ஒன்றைக் கேட்டுக்கொண்டது. அந்த Percusion நிறுவனத்தின் ஆலோசனை, நிச்சயமாக அது இனிமேல் viable ஆகாது; அதை இலாபகரமாக இயக்கிவிட வழியில்லை என ஓர் அறிக்கை கொடுத்தது. Hindustan Photo Films நிறுவனம் அதை மறுத்து ஓர் அறிக்கையை மத்திய அரசுக்கு அனுப்பி, மத்திய அரசினுடைய பல்வேறு சலுகைகளை அது கேட்டுக்கொண்டது. மத்திய அரசு ரூ.199.36 கோடி கடன் மற்றும் வட்டிகளைத் தள்ளுபடி செய்யவேண்டும். வங்கிக் கடனை ஒரே தவணையில் செலுத்த வேண்டும். மொத்த amount–ம் 178 கோடியே 80 இலட்சம் ரூபாய். நடைமுறை மூலதனத்தில் 8 கோடி ரூபாயும் தள்ளுபடி செய்யவேண்டும். இயந்திரங்களை புதுப்பித்து, புனரமைக்க 10 கோடி ரூபாய் வேண்டும். ஏற்றுமதி செய்வதற்கு திருப்பி மானியம் வேண்டும். மத்திய அரசு சில பொருள்களுக்கு விதித்த Anti Dumping Duty–யை அதிகப்படுத்த வேண்டும். இப்படியாக சில கோரிக்கைகளை வைத்தாலும் அதன் பிறகு மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 17–10–2003–ல் மாண்புமிகு பாரதப் பிரதமர், துணைப் பிரதமர் மற்றும் நிதி அமைச்சர் மற்றும் கனரகத் தொழில் நிறுவன அமைச்சர்களைச் சந்தித்து பேசுகின்றபொழுது இதற்கான சலுகைகளை வழங்கிடுமாறும், அவற்றை ஒரே தவணையில் திருப்பிச் செலுத்த நிதியினையும், சலுகைகளையும் அளித்திட முன்வருமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்கள். அதேபோல், மேலும் 16–9–2004 அன்று பிரதமரை நேரில் சந்தித்து, தமிழ்நாடு பற்றிய கோரிக்கைகள் அடங்கிய கடிதத்தில் இந்த நிறுவனத்தைத் திறக்கும் கோரிக்கையினையும் அம்மா அவர்கள் கொடுத்துள்ளார்கள். கோரிக்கையில் Steel Authority of India–வுக்கு அளித்த சலுகை போன்றும் 2004–2005 [illegible] வரவு செலவுத் திட்டத்தில் Indian Telephone In[illegible] Hindustan Anti[illegible]

226619

நிறுவனம் ஆகியவற்றிற்கு புனரமைப்பிற்குத் தேவையான நிதி உதவி செய்வதை அறிவிப்பில் அம்மா அவர்கள் சுட்டிக்காட்டி, இதேபோன்று சலுகைகளை Hindustan Photo Films நிறுவனங்களுக்கும் நீங்கள் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்கள். மேலும், 27–10–2004 அன்று தலைமைச்செயலாளர் மத்திய கனரகத் தொழில் செயலருக்கு ஒரு கடிதத்தை எழுதியுள்ளார்கள். அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களும், தலைமைச் செயலாளர் அவர்களும் தொடர்ந்து வற்புறுத்தி வருகின்றார்கள் என்பதை இந்த சபைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**முனைவர் செ.கு. தமிழரசன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இவை எல்லாம் மைய அரசால் தொடங்கப்பட்ட நிறுவனங்கள். இப்போது நிலை குலைந்து போய் இருக்கிற நிறுவனங்கள்.

நான் இன்னொன்றையும் இந்த அவையிலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு சென்னைக்கு ஒரு மிகப்பெரிய திட்டத்தை அறிவித்திருப்பதாக மத்திய அரசு சொல்கிறது. ஆயிரம் கோடிக்கு மேலே முதலீடு செய்து சென்னையிலே கடல் நீரைக் குடிநீராக்குகிற திட்டத்தை அறிவித்து இருக்கிறது. அந்த அறிவிப்புக்கு இன்னமும் முழுமையான நிதி அறிவிக்கப்படவில்லை என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட சொல்லியிருக்கிறார்கள். இதேபோல ஒரு திட்டத்தை கடந்த 6, 7 ஆண்டுகளுக்கு முன்னாலே மாண்புமிகு அம்மா அவர்கள் முதல்வராக இருந்தபோது மணலியிலே ஒரு குடிநீர் சுத்திகரிப்பு ஆலையை, குடிநீர் சுத்திகரிப்பு நிறுவனத்தை உருவாக்குவதற்கு ரூ. 500 கோடிக்கு மேலே முதலீடு செய்கிற வகையிலே ஒரு மிகப்பெரிய தொழில் நிறுவனத்தை அன்றைக்கு ஜப்பானிலே இருக்கிற ஒரு தொழில் நிறுவனத்தின் உதவியோடு அங்கே தொடங்கினார்கள். அதற்கு வழிவகை செய்தார்கள். ஒப்பந்தத்திற்குரிய வழிவகை செய்தார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழக அரசில் அப்படியே அதை கிடப்பிலே போட்டார்கள். அன்றைக்கு இருந்த குடும்பத் தகராறின் காரணமாக மணலியிலே உருவாக இருந்த ஜப்பானிய தொழில் நிறுவனத்தோடு சேர்ந்து – ஒரு பன்னாட்டு நிறுவனத்தோடு சேர்ந்து அன்றைக்கு—அமையவிருந்த இந்தத் திட்டத்தை 6, 7 ஆண்டுகளுக்கு முன்னாலேயே ஒரு நீண்ட தொலைநோக்கோடு நம்முடைய முதல்வர் அம்மா அவர்கள் இங்கே அறிவித்தபோது. அதற்கு



வேண்டிய நடவடிக்கைகள் எடுத்தபோது அதற்குப் பின்னாலே வந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு அதை நிறுத்தியது. ஒரு காரணமும் இல்லாமல் அதை கிடப்பிலே போட்டது, முடக்கியது. ஆனால், இப்போது 7, 8 ஆண்டுகளுக்குப் பின்னாலே ஆயிரம் கோடி ரூபாய் என்கிற அளவிலே அதேபோல் ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். இன்னமும் நடைமுறைக்கு வரவில்லை. எந்தவிதமான தாக்கீதும் இல்லை. நான் இவற்றைச் சொல்கிறபோது, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறித் துறையும் சேர்ந்து சொல்லவேண்டிய அப்படிப்பட்ட ஒரு நிலைமையிலே இருப்பதனாலே நான் மிகச் சுருக்கமாகச் சிலவற்றைச் சொல்லவேண்டுமென்று விரும்புகிறேன். இந்தத் தொழில் துறையிலே Bio-Technology என்கிற வகையிலே இந்தத் தொழில்களை நாம் மேம்படுத்த வேண்டும், ஊக்குவிக்க வேண்டும். வேளாண்மைப் பொருள்களை அடிப்படையாகக் கொண்ட Bio-Technology Industry–ஐ நாம் உருவாக்க வேண்டும். தஞ்சையைப் போல, நாகையைப் போல, திருவாரூரைப் போல, வேளாண்மைத் தொழிலிலே மிகப் பெரிய அளவிலே ஈடுபட்டிருக்கிற, வேறு தொழிலே இல்லாத, தொழில் நிறுவனங்களே இல்லாத அந்த மாவட்டங்களிலே Bio-Technology Industry –ஐக் கொண்டு வாருங்கள்.

பிற்பகல் 1–20

ஆம்பூர், வாணியம்பாடி, ஈரோடு, திண்டுக்கல் போன்ற பகுதிகளிலே Leather Industries இருக்கின்றன. அந்த Leather Industry -யினாலே அங்கே pollution. அப்படிப்பட்ட ஒரு பிரச்சினைக்கு நடுவிலே, அந்த Leather Industry சிக்கித் தவிக்கின்றது. மிகப் பெரிய அளவிலே ஏற்றுமதியிலே முதலிடம் வகிக்கிற அந்தப் பகுதிகள், இன்றைக்கு pollution என்ற வகையிலே, அதை முறைப்படுத்திக் கொண்டு வாருங்கள்; அதைச் சீரமையுங்கள்; அதை எப்படி முழுமைப்படுத்த வேண்டுமோ அப்படி முழுமைப்படுத்துங்கள்.

Textile Industry , Sugar Industry, Software Industry இவையெல்லாம் இருக்கிறபோது; இதிலே Sugar Industry–ல் மராட்டிய மாநிலத்திற்கு ஈடான ஒரு பெயரைத் தமிழ் மாநிலம் பெற்றிருந்தது. இந்த மாநிலத்திலே, கூட்டுறவுத் துறையிலே, 17 நிறுவனங்களும், பொதுத் துறையிலே 3 நிறுவனங்களும், தனியார் துறையிலே 15 நிறுவனங்களும், ஏறக்குறைய 35 Sugar Industries – சர்க்கரை ஆலைகள்--இருக்கின்றன. இவ்வளவு ஆலைகள் இந்தப் பகுதிகளிலே இருக்கின்றன. ஆனால், அதை விற்பதற்கு வழியில்லாமல் இருக்கிற ஒரு தடுமாற்றம்,

அப்படிப்பட்ட ஒரு தொய்வு இருக்கிறது. மகாராஷ்டிராவிலே Sugar Industry இன்றைக்கு மிகப் பெரிய அளவிலே வளர்ந்திருக்கிறது. தமிழகத்திலே, Sugar Industry, அதற்கு நிகராக இருந்தாலும்கூட, விற்பனையிலே தொய்வு இருக்கிறது. ஆகவே, இந்த Sugar Industry-ஐ மராட்டிய மாநிலத்திற்கு ஈடாக, அதைவிட மேலாகக் கொண்டுவருகிற வகையிலே, கரும்புக்கு நீங்கள் அதிகமான விலையைக் கொடுங்கள். கரும்பு உற்பத்தியாளர்களும் பயன்பெறுவார்கள். கரும்பு உற்பத்தியும் வளர்கிற வகையிலே, தமிழகத்திலே விவசாயம் மிகப் பெரிய அளவிலே வளரும். ஆகவே அதை முறைப்படுத்துங்கள்.

இதற்கு மேலே, software–லே சென்னை நகரம் மிகப் பெரிய அளவிலே வளர்ந்திருக்கிறது. ஆனால் hardware என்று சொல்லப்படுகிற அதிலே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், Technology Minister அவர்கள், கொஞ்சம் அதிகமான ஈடுபாடு செலுத்தி, hardware industry–களைக் கொண்டு வருவதற்கு உலக அளவிலே, மிகப் பெரிய அளவிலே, நம்முடைய hardware industry சென்னையிலே வருவதற்கு வழிவகை செய்யுங்கள்.

சிவகாசியிலே Printing Industry இருக்கிறது. அந்த printing industry–ஐப் பொறுத்த அளவிலே, அங்கேதான் குழந்தைத் தொழிலாளர் முறை இருக்கிறது என்று சொல்கிறார்கள். குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்க வேண்டும். அதேநேரத்திலே, printing industry வளர வேண்டும். அச்சுக் கலை நிறுவனங்கள் வளர வேண்டும், சிவகாசிதான் இந்தியாவிலேயே அச்சுக் கலைத் தொழிலிலே முதலிடம் வகிக்கிறது. அந்த முதலிடத்தை நாம் தக்க வைக்கிற வகையிலே, அங்கே அச்சுக் கலைக்காகவே ஒரு தொழில்நுட்பப் பூங்காவை உருவாக்குங்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. லா. சந்தானம் அவர்கள்கூட மதுரையிலே தொழில்நுட்பப் பூங்காவை வைக்கலாம் என்று சொன்னார்கள். மதுரையைப் போல சிவகாசியிலே printing technology-ஐ அடிப்படையிலே வைத்து, printing industry-ஐ அடிப்படையாக வைத்து, ஒரு தொழில்நுட்பப் பூங்காவை உருவாக்குங்கள் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

அதேபோல, புவியியல் சுரங்கத் துறையிலே மணல், கிரானைட் போன்றவற்றிற்குக் குவாரிகள் வழங்கப்படுகின்றன. அப்படிப்பட்ட குவாரிகள் வழங்குகிறபோது, இரண்டு விஷயங்களுக்கு நாம் முன்னுரிமை தருகிற நிலைமையை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இங்கே ஒரு கோரிக்கையாக வைக்க விரும்புகிறேன். ஒன்று, மணல் குவாரிகளிலே, அந்தக் கிராமப் பஞ்சாயத்துகளுக்கு, அங்கே உரிய பங்கு வழங்கப்படுகிறது. ஆனால், கிரானைட் குவாரிகளிலே, அந்தக் கிராமப் பஞ்சாயத்துகளுக்கோ, ஊராட்சி ஒன்றியங்களுக்கோ உரிய பங்கீடு வழங்கப்படுவதில்லை. ஆகவே, கிரானைட் நிறுவனங்களிலேயிருந்து அப்படிப்பட்ட ஒரு பங்கீடு ஊராட்சிக்கும் வருகிற வகையிலே, நீங்கள் ஒரு சின்ன திருத்தத்தைக் கொண்டு வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். கறுப்புக் கல் என்ற சொல்லப்படுகிற இந்த கிரானைட் ஏற்றுமதி, இன்றைக்கு முன்னணி வகிக்கிறது. அது அந்தப் பகுதிக்கும், அந்த மண்ணின் மக்களுக்கும் பயன்படுகிற வகையிலே, அதிலே ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை ஊராட்சி ஒன்றியத்திற்கும், மன்றத்திற்கும் தருகிற வாய்ப்பை உருவாக்கிக் கொடுங்கள். அதுமட்டுமல்லாமல், இதிலே அடிப்படைத் தொழிலிலே ஈடுபடக்கூடிய, அங்கே இருக்கிற ஒடுக்கப்பட்ட, நலிந்த மக்களுக்கும் குவாரிகள் வழங்கப்படுகிறபோது, அவர்களுக்கு முன்னுரிமை தருகிற வகையிலே; ஒரு கல்லுடைக்கும் தொழிலாளர்கள் சங்கம் இருக்கிறது; ஆதிதிராவிடர் கல்லுடைக்கும் தொழிலாளர் சங்கம் இருக்கிறது; மலையை உடைத்து, அப்படிப்பட்ட கடும் பணியிலே ஈடுபடுகிற அவர்களுக்கு இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னுரிமை தருகிற வகையிலே; குவாரிகள் வழங்குகிறபோது நீங்கள் தர வேண்டும்.



இந்தத் துணி நூலைப் பொறுத்தவரையிலே, திருப்பூரும், கோவையும், கரூரும் முன்னணி வகிக்கின்றன. பருத்தியைப் பொறுத்தவரையிலே, அங்கே தேவைப்படுகிற பருத்தியிலே *80* சதவீதம் பருத்தி, பஞ்சாபிலிருந்தும், மராட்டிய மண்ணிலிருந்தும் இங்கே இறக்குமதி ஆகிறது. *20* சதவீதப் பருத்திதான் கோவை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தமிழரசன், இரண்டு மணித் துளிகளில் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள். இன்னொரு உறுப்பினர் பேச வேண்டும்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** பேச்சை முடித்துவிடுகிறேன். *20* சதவீதப் பருத்திதான் கோவை வட்டாரத்திலோ, திருப்பூர் வட்டாரத்திலோ, கரூர் வட்டாரத்திலோ கிடைக்கிறது. மீதி *80* சதவீதத்தை நாம் இறக்குமதி செய்கிறோம். பஞ்சாபிலிருந்தோ அல்லது மும்பையிலிருந்தோ அல்லது வேறு மாநிலங்களிலிருந்தோதான் இறக்குமதி செய்கிறோம். ஆக அங்கேயிருந்து, பருத்தியை வாங்கி, இங்கே அதை நூலாக்கி, மீண்டும் நூலை ஏற்றுமதி செய்கிறார்கள்.

பருத்தியை வாங்கி அதை நூலாக்கி, நூலை ஏற்றுமதி செய்கிறார்கள். வாங்குகிறபோது, மத்திய அரசுக்கு வரி செலுத்த வேண்டிய நிலைமை. திருப்பி விற்கிறபோது, விற்பனை வரி. ஆனால், இந்த நூலைத் துணியாக்கித் தருகிறபோது, அதற்கு எந்தவிதமான வரியும் கிடையாது. ஒரு சாதாரண powerloom அது, ஒரு மத்தியத் தர வர்க்கத்தினர் நடத்தக்கூடிய விசைத் தறி நிறுவனம். சாதாரண மத்தியத் தர வர்க்கத்தினர்தான் powerloom industry-லே இருக்கிறார்கள். ஆயிரக்கணக்கானவர்கள், ஒரு லட்சத்திற்கும் மேலே இருக்கின்றவர்கள், மத்தியத் தர வர்க்கத்தினரைச் சேர்ந்தவர்கள்தான், powerloom industry வைத்திருக்கிறார்கள். கரூரிலோ, திருப்பூரிலோ, நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய தொகுதியான திருச்செங்கோட்டிலோ, அங்கேயெல்லாம் அவர்கள் வைத்திருக்கிறார்கள். அவர்கள் வாங்குவது ஓரிடம், விற்பது ஓரிடம். வாங்கியபோது ஒரு வரி, திருப்பி விற்கின்றபோது ஒரு வரி என்கின்ற வகையிலே, நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, நூலுக்குப் போடுகிற விற்பனை வரியை, தயவுசெய்து இரத்து செய்யுங்கள். குறைந்தபட்சம் குறைப்பதற்காவது ஏதாவது வழி இருக்கிறதா என்று யோசியுங்கள். இதையே 'பின்னி' போன்ற மிகப்பெரிய நிறுவனம் இருக்கிறது; அவர்கள் இந்த நூலைத் துணியாக்கித் தருகிறபோது, அதற்கு tax கிடையாது. விற்பனை வரி கிடையாது. ஆக, மிகப்பெரிய தொழில் நிறுவனங்கள், இதிலே வாய்ப்புப் பெறுவதற்கும், மத்தியத் தர வர்க்கத்தினரால் நடத்தப்படுகிற சாதாரண powerloom industry நலிவடைவதற்கும், அவர்கள் அதிக சுமையைத் தாங்குவதற்கும் என, அப்படிப்பட்ட ஒரு சிக்கல் வந்து விடுகிறது. ஆகவே, தவிர்த்து விடுங்கள். அதைத் தவிர்ப்பதற்கு ஏதாவது வழி இருக்கிறதா என்று பாருங்கள்.

*பிற்பகல் 1–25*

அதேபோல, மத்திய அரசு இன்றைக்கு இந்த ஏற்றுமதியாளர்களுக்குத் தந்துவந்த, அந்த ஊக்குவிப்புத் தொகை இருக்கிறதே, export incentive, அதை மிகப் பெருமளவிலே மத்திய அரசு இன்றைக்குக் குறைத்துவிட்டது. மிகப் பெரிய துரோகத்தைச் செய்து விட்டது. CENVAT வரியைக் குறைத்து விட்டோம், CENVAT வரியைக் குறைத்து விட்டோம் என்று மத்திய அரசு சொல்லிக் கொண்டிருக்கிறது. இது எப்படியிருக்கிறது என்று சொன்னால், இதே மத்திய அரசுதான் CENVAT—ஐக் கொண்டு வந்தது. பாரதிய ஜனதா இருந்தபோது...



**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மிக நல்ல ஒரு கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இங்கே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இருப்பார்கள் என்று நினைத்தேன். ஆனால், அவர்கள் இங்கே வர மறுத்துவிட்டிருக்கிறார்கள். இன்றைக்கு மத்திய அரசு CENVAT வரியை எடுத்து விட்டோமென்று ஒருபுறம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்த நெசவாளர்களுக்கு எப்படிப்பட்ட இன்னல்களை அவர்கள் கொடுத்திருக்கிறார்கள் என்பதை, இங்கே இருக்கக்கூடிய மாமன்ற உறுப்பினர்கள் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்றைக்குத் தமிழகத்திலே உற்பத்தி செய்யக்கூடிய இந்தத் துணிகள் எல்லாம், அதிகமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அப்படி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறபோது, அந்த ஏற்றுமதியாளர்களுக்கு duty draw back என்று சொல்லக்கூடிய வகையிலே 10 சதவிகிதம் அவர்களுக்கு ஊக்கத் தொகை கொடுத்து வந்தார்கள். ஆனால், இங்கே தமிழகத்திலேயிருந்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இன்றைக்கு மத்தியிலே நிதியமைச்சராக இருக்கக்கூடிய மரியாதைக்குரிய சிதம்பரம் அவர்கள், இங்கே 10 சதவிகிதம் CENVAT வரியை நீக்கிவிட்டேன் என்று சொல்லிவிட்டு, அங்கே அந்த ஏற்றுமதி துணிகளுக்கு ஊக்கத் தொகையைக் குறைத்து இன்றைக்குத் தமிழகத்திலே நெசவுத் தொழில், விசைத்தறித் தொழில் நடைபெற முடியாத ஒரு சூழ்நிலையிலே இன்றைக்குப் 'பசுத்தோல் போர்த்திய புலிபோல்' (மேசையைத் தட்டும் ஒலி) நெசவாளர் மக்களுக்கு அவர்கள் காட்சியளித்துக் கொண்டிருக்கிறார்கள். இதை, இந்த நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். என்றைக்குமே இந்த நெசவாளர் மக்களுக்கு உறுதுணையாக இருப்பவர், குடும்ப தெய்வமாக விளங்கிக் கொண்டிருப்பவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த ஏற்றுமதியாளர் ஊக்குவிப்புத் தொகை, powerloom industry-லே குறைக்கப்பட்டுவிட்டதனாலே, இப்படிப்பட்ட ஒரு நிலைமை மத்திய அரசால் ஏற்பட்டதனாலே, அங்கே powerloom industry –லே ஒரு தொய்வு அடைகிற ஒரு நிலைமை இருக்கிறது. அந்த தொழிலைப்

பொறுத்தவரையில் லட்சக்கணக்கான மக்கள், அடித்தளத்து மக்கள், மிகப் பின்தங்கிய மக்கள், தலித் மக்கள், அந்த தொழிற்சாலைகளிலே பணிபுரிகின்ற ஊழியர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கையிலே ஒளியேற்ற வேண்டுமென்று சொன்னால், அவர்களுக்கு இருக்கின்ற இந்த இன்னலைக் களைந்து, அந்த sales tax இருக்கிறதே, அந்த நூல் வரி, அதை இரத்து செய்வதோடு, ஏற்றுமதியாளர்களை ஊக்குவிக்கின்ற வகையிலே, ஏதாவது ஒன்றைச் செய்ய வேண்டும்.

இப்போது, வெளிநாடுகளுக்கு நம்முடைய மாநிலத்திலே, கைத்தறித் துறையிலேயிருந்து போகின்ற படுக்கை விரிப்பு, வீட்டு உபயோக அலங்கரிப்பு, திரைச் சீலை, தலையணை உறை, மேசை விரிப்பு ஆகிய இவற்றிற்கு எல்லாம் மிகப்பெரிய வாய்ப்பும், அப்படிப்பட்ட ஒரு demand –ம் இருக்கின்றன. தேவையும், ஆர்வமும் வெளிநாடுகளிலே இருக்கிறது. ஆக, இன்றைக்குக் கோடிக்கணக்கிலே, தமிழகத்திலே திருப்பூர், கோவை, கரூர், ஈரோடு போன்ற பகுதிகளிலே இருந்து ஏற்றுமதியாகிறது. அந்த நிறுவனங்கள், மிகச் சிறிய சொசைட்டிகள். ஆயிரக்கணக்கான சொசைட்டிகள் கூட்டுறவுச் சங்கங்களில் ஈடுபட்டிருக்கின்றன. இந்தப் படுக்கை விரிப்பு, மேசை விரிப்பு, திரைச் சீலைகள், அலங்கார வீட்டு உபயோக துணிகள் உற்பத்தியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். இந்த ஆயிரக்கணக்கான கூட்டுறவுச் சங்கங்கள் பயன்படுகிற வகையிலே, அவற்றை ஊக்குவிக்கிற வகையிலே, ஒரு அமைப்பை ஒரு நிறுவனத்தை நாம் உருவாக்க வேண்டுமென்பதை இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். இந்த duty draw back என்று சொல்லக்கூடியதை, மத்திய அரசு புறக்கணித்து இருக்கிறது. CENVAT வரியைச் சொல்கிறார்களே ஒழிய, அது எப்படியிருக்கிறது என்று சொன்னால், பாரதிய ஜனதா அரசு அதைக் கொண்டு வந்தது...

*பிற்பகல் 1–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. பேச்சை முடித்துவிடுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** பாரதிய ஜனதா அரசு அதைக் கொண்டு வந்தது. பாரதிய ஜனதா அரசு அதைக் கொண்டு வந்தபோது இதே திராவிட முன்னேற்றக் கழகமும், இதே பாட்டாளி மக்கள் கட்சியும், அங்கேயிருந்த அனைத்துக் கட்சிகளும் அங்கே அதை ஆதரித்தன. இப்போது பாரதிய ஜனதா அரசு போய், மத்திய அரசாக காங்கிரஸ் மத்தியிலே ஆட்சிக்கு வந்த பின்னாலே, அந்த ஆட்சியும் CENVAT



வரியை இப்போது எடுத்திருக்கிறது. அப்போது அவர்கள் போட்டபோது, வாய் மூடிக்கிடந்தார்கள். இப்போது பெரியதாகப் பேசுகிறார்கள். இந்த CENVAT வரி எப்படி இருக்கிறது என்று சொன்னால், ஒரு பனை மரத்திலே ஒருவன் ஏறினான். அவனிடம், அந்தத் திருடனிடம் 'என்ன செய்து கொண்டிருக்கிறாய்?' என்று கேட்டார்கள். அதற்கு அவன் 'நான் தேங்காய் பறிக்க ஏறிக்கொண்டிருக்கிறேன்' என்று சொன்னான். 'இது பனை மரமாயிற்றே! இதிலே எப்படித் தேங்காய் பறிப்பாய்?' என்று கேட்டார்கள். அவன், 'அதனால்தான் திரும்பி வந்துகொண்டிருக்கிறேன்' என்று சொன்னான். இது என்ன பாராட்டுக்குரிய செய்தியா? போட்டவர்கள் வாபஸ் பெற்றது என்பது பாராட்டுக்குரிய செய்தியா? ஆகவே, அப்படிப்பட்ட சூழலில் இப்போது அங்கே இருக்கிற இந்த ஏற்றுமதியாளர்கள் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நம்முடைய மாநில அரசு துணை நிற்க வேண்டும்; உதவி செய்ய வேண்டும்.

கடலூரை மையப்படுத்தி அங்கே தொழிலதிபர்கள் எல்லாம் இப்போது powerloom industry கொண்டு வருவதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள், ஒரு Industrial Park வைக்க வேண்டும் என்பதற்காக. ஆகவே, அப்படிப்பட்ட Industrial Park–ஐ, கடலூரிலே, வைக்கிற ஒரு திட்டத்தை நடப்பாண்டிலேயே செயல்படுத்துங்கள். கடலூரைப் பொறுத்தவரையிலே, அங்கே ஏற்கெனவே சமூகக் கலவரங்கள் நடந்து, இப்போது ஓய்ந்திருக்கின்றன. இப்போது அம்மா அவர்களுடைய ஆட்சியிலே ஓய்ந்திருக்கின்றன. இங்கே இருக்கிற அம்மா ஆட்சியிலே சமூகக் கலவரங்களே இல்லாமல், இப்போது அப்படிப்பட்ட ஒரு அமைதி அங்கே இருக்கிறது. இப்படித் திசை திருப்பப்படுகிற அங்கே இருக்கிற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வேண்டுமானால், அந்தப் பகுதியிலே மிகப் பெரிய அளவிலே ஒரு Industrial Estate உருவாக வேண்டும். அங்கே, ஏற்கெனவே, இப்போது இருக்கிற தொழிலதிபர்களால் இப்படிப்பட்ட powerloom industry-க்காக முன்னிலைப்படுத்தி ஒரு Industrial Estate அமைப்பதற்கான ஒரு திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை நீங்கள் வேகமாக நடப்பாண்டிலே நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சிக்கவேண்டும்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் என்று TIIC இருக்கிறதே, அதிலே, வட்டிக்கு வட்டி என்கிற கொஞ்சம் கடுமையான வகையிலே கட்டுகின்ற அப்படிப்பட்ட ஒரு சூழல், புதியதாகத் தொடங்குகின்ற மத்தியத் தர எளிய தொழிலதிபர்களைக் கொஞ்சம்

கடுமைப்படுத்துவதாக இருக்கிறது. ஆகவே, TIIC நிறுவனத்திலே, அப்படிப்பட்ட நிலைமைகளைக் குறைப்பதற்கு வழியாக, இந்த வட்டிக்கு வட்டி என்கிற வகையை, கந்து வட்டியை, நம்முடைய அம்மா அவர்கள் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே இங்கே ஒழித்தார்கள்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, TIIC-ஐப் பொறுத்தமட்டிலும், 5 இலட்சம் ரூபாய் வரைக்கும் வாங்கியவர்களுக்கு முழுமையாக வட்டி, அபராத வட்டி எல்லாம் தள்ளப்படுகின்றன. 10 இலட்சம் ரூபாய் வரைக்கும் கடன் பெற்றவர்கள், அந்தத் தேதியிலே அசல் மற்றும் எந்தத் தேதியில் அந்தக் கணக்கு, வாராக் கடனாகக் கருதப்பட்டதோ, அன்றுவரையுள்ள வட்டியும் மற்றும் பிற தொகை ஏதேனும் இருப்பின், அதையும் கட்ட வேண்டும். இப்படிக் கணக்கில் உள்ள அபராத வட்டி, கூட்டு வட்டி, மீதி உள்ள வட்டி, சாதாரண வட்டி முழுவதும் தள்ளுபடி செய்யப்பட்டுக்கொண்டிருக்கிறது.

அதற்கு மேலும் உள்ள தொகைகளில், கடன் வாங்குகிறவர்கள், அந்த இனத்தின் அடிப்படையில் அவர்களுக்குச் சலுகைகள், one time settlement என்கிற முறையில், சலுகைகள் வழங்கப்படுகின்றன. சில பேர், இது அரசாங்கம்தானே, ஆகவே வட்டியும் கட்ட வேண்டாம்; தள்ளுபடியும் செய்துவிடுவார்கள் என்று நினைத்துக்கொண்டு பாதி பேர் கட்டாமலே இருந்துவிடுகிறார்கள். அந்த அடிப்படையில் இல்லாமல், சிலர் உண்மையிலேயே கஷ்டப்படுகிறவர்களுக்குக் கருணையின் அடிப்படையில், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், one time settlement-ஐ இனிவரும் காலங்களில், அந்த விதிமுறைகளை இன்னும் தளர்த்தி, தொழிலதிபர்களை ஊக்குவிக்கின்ற வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்வார்கள் என்பதை இந்தச் சபையில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய இந்த நல்ல விளக்கத்திற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவேதான், இப்படிப்பட்ட பிரச்சினைகளை இந்த மன்றத்திலே பேசுகிறபோது அதற்கு ஒரு விடிவு கிடைக்கும் என்பதனாலே இவற்றை நாங்கள் குறிப்பிட விரும்புகிறோம்.

TIIC Industry மூலமாக உருவாக்கப்பட்ட, திருப்பூரிலே உருவாக்கப்பட்ட இந்தத் தொழில்-தலித் மக்களுக்காக Industrial Estate for Dalits என்கிற வகையிலே உருவாக்கப்பட்ட இந்தத்



தொழிற்பேட்டைகள்-முடங்கிக் கிடப்பதை கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னால்கூட இந்த அவையிலே எடுத்துச் சொன்னபோது இப்போது அதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அதற்கு முத்தாய்ப்பு வைப்பதைப்போல, இப்போது நம்முடைய தொழில் துறை அமைச்சர் அவர்களிடம் TIIC-ன் இப்படிப்பட்ட கடுமையான நடவடிக்கைகளைக் கொஞ்சம் தளர்த்த வேண்டும் என்று கேட்டபோது, அவர்கள் ஓர் ஆதரவான பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழிலைப் பொறுத்தவரையிலே, இங்கே இருக்கிற தொழிலதிபர்கள் வெளியே போகாமல் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். ஆனால், வெளியே இருக்கிற தொழிலதிபர்கள் இங்கே வருகிற வகையிலே அந்த வாய்ப்புகளை, கதவுகளைத் திறந்து வைத்திருக்க வேண்டும். பெரும் தொழில்களைத் தொடங்குவதற்கு. அப்படிப்பட்ட ஒரு நிலைமையை நாம் மேற்கொள்ள வேண்டும். அதற்காகத்தான் நம்முடைய முதல்வர் அம்மா அவர்களைப் பொறுத்தவரையிலே, அவர்களுடைய காலம்தான் தொழில் துறையிலேயே தமிழகத்திற்குப் பொற்காலம் என்பதற்குப் (மேசையைத் தட்டும் ஒலி) பல சான்றுகள் அடுக்கடுக்காய் இருக்கின்றன. அவர் முதல்வராக வந்தபோதுதான் பல நீண்ட திட்டங்களை வகுத்து, தொழில் துறையிலேயே இப்போது மிகப் பெரிய அளவிலே, ஒரு மிகப் பெரிய, இந்தியாவிலேயே இப்போது முன்னணியிலே உள்ள மாநிலங்களிலேயே தொழில் துறையிலே இந்த மாநிலம் முதல் இடம் பெறுகிற வகையிலே, அவ்வளவு பெரிய மறுமலர்ச்சியை, அவ்வளவு பெரிய தொழில் புரட்சியை அம்மா அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். அதை, மேலும் பெருக்குகிற வகையிலே, ஒரு பெரிய Industries Relations Centre-ஐ நாம் உருவாக்கலாம். Industries Relations Centre—தொழில் தொடர்பு நிறுவனம்—என்கிற வகையிலே, பெரிய நிறுவனங்கள், இப்படிப்பட்ட தொழிலைத் தொடங்க வருகிறபோது, அவர்களுக்கு உற்சாகம் அளிக்க, அவர்களுக்கு வழிகாட்ட, அவர்களுக்கு உதவ, அவர்களுக்கு வேண்டிய திட்டங்களை எல்லாம் வகுத்துத் தர, இந்த மாநில அரசின் தன்மைகளையெல்லாம் எடுத்துச் சொல்ல, அப்படிப்பட்ட ஒரு Industries Relations Centre என்கிற ஒரு நிறுவனத்தை, நம்முடைய மாண்புமிகு முதல்வருடைய மேற்பார்வையிலே நாம் வைப்போமேயானால், வெளிநாடுகளிலே இருக்கிற பல தொழில் முதலீட்டாளர்கள் இங்கே வருவதற்கான வாய்ப்பு பெருகும். அவர்கள் எல்லாம், இந்த மண்ணிலேதான் தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும் என்று ஆர்வத்தோடு இருக்கிறார்கள். இங்கே மட்டும்தான்

தொழில் அமைதி இருக்கிறது, சமூக அமைதி இருக்கிறது, மாநில அரசின் எல்லாவகையான உதவியும், உற்சாகமும் இருக்கிறது என்கிற வகையிலே அதை உருவாக்கவேண்டும் என்று கேட்டு, இந்த நல்ல வாய்ப்பைத் தந்த தங்களுக்கு நன்றி சொல்லி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 1-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ.கு.சி. அன்பழகன்.

**திரு. ஆ.கு.சி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிக்க பேரவையிலே தொழில் துறை மற்றும் கைத்தறித் துறை மானியக் கோரிக்கைகளின்மீது எனது கருத்துகளைத் தெரிவித்திட, பெரிய வாய்ப்பளித்த மனிதகுல தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து அவைமுன் என் கருத்துகளைச் சமர்ப்பிக்கின்றேன். கடல் தாய் விளைவித்த துன்பத்தினைப் போக்கிய கருணைத் தாயே! தமிழகக் காவல் துறையை நவீனமயமாக்கிய பாரதம் போற்றும் காவல் தெய்வமே! கணினி, ஆங்கில வார்த்தைகளைத் தமிழாக்கும் பணியைச் செய்து, பதிவு செய்து தமிழ் மொழியைக் காத்த செந்தமிழ்த் தாயே! 2005 ஆம் ஆண்டு உலகம் போற்றும், வரியில்லாத சீரிய நிதிநிலை அறிக்கையைத் தந்த நீதித் தாயே! பார் போற்றும் தங்கத் தாரகையே! புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகின்றேன்.

தற்போதைய நிகழ்வின்படி, பாரதத்தின் கல்வி வளர்ச்சியில் தமிழகம் முதலிடம் பெற்றுள்ளது. அதுபோல, தொழில் துறையிலும் முதலிடத்தை நோக்கி வீறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது. இது ஓய்வறியா ஒளி விளக்கு, தமிழகத்தின் தாய், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய செயல் தீவிரங்களால் மட்டுமே விளைந்தது. மேலும், தமிழகத்தில் பல்வேறு வகையிலான தொழில் தொடங்கவும், அதன்வாயிலாக வேலைவாய்ப்பினை உண்டாக்கவும், தமிழகத்தின் தொழில் வளங்களை மேம்படுத்தவும், on-line திட்டத்தினைத் தொடங்கியுள்ள அம்மா, அதன்வாயிலாக, பல்வேறு நாடுகளின் தொழிலதிபர்களுடைய தொழில் கருத்தரங்குகளில் பங்குபெற்று, தொழில் தொடங்க தமிழகத்தை நாடிவரும்வண்ணம் தொழில் புரட்சியைச் செய்துள்ளார் நமது அன்னை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மற்ற மாநிலங்களைவிட அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாட்டை முதல் மாநிலமாகக்



கொண்டுவருவதற்கு இலக்கு வைத்துச் செயல்படுகிறார்கள். 1992 ஆம் ஆண்டு வகுக்கப்பட்ட தொழில் கொள்கையின் மூலம், Ford, Hyundai நிறுவனங்களின் வெளிநாட்டு மூலதனங்கள் தமிழ்நாட்டிற்கு உதவின. அதன்மூலம், உலக அளவில் தமிழ்நாட்டின் போட்டித் திறன் வலுவடைய வகை செய்யப்பட்டது. 20-9-2002 அன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட Mahindra தொழில்நுட்பப் பூங்கா பல்வேறு வகைப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்யும் சிறப்புப் பொருளாதார மண்டலமாக மத்திய அரசினால் அறிவிக்கப்பட்டுள்ளது. ரூ.62.50 கோடி முதலீட்டுச் செலவினங்களால், TICEL உயிரியல் பூங்கா ஒன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், 10-11-2004 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இப்பூங்கா தற்போது உயிரியல் ஆராய்ச்சியில் வணிக அளவில் செயல்பட்டு இயங்கி வருகிறது. புதிய தொழில் திட்டங்களை, ஏப்ரல் 2001 முதல், டிசம்பர் 2004 வரை சிறு தொழில் முன்னேற்ற நிறுவனம், SIPCOT மூலமாக, 269 தொழில் திட்டங்களுக்கு 16,865 ஏக்கர் நிலங்களை ஒதுக்கீடு செய்தது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுதான். ரூ.25 கோடி அளவிலான தொழில் திட்ட அனுமதியை வழங்குவதற்கு ஒருமுகச் செயல் திட்டம், Single Window Mechanism நடைமுறையில் உள்ளது. இந்தத் திட்டம் மாவட்டங்களில் உள்ள சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கு விரிவாக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறைத் திட்டங்களுக்கு ஒப்புதல் பெறுவதை விரைவுபடுத்த ஆணை பிறப்பித்தது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுதான்.

தென் மாவட்டங்களின் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்க ரூ.2,000 கோடி முதலீட்டில், Titanium Di-oxide திட்டம் TATA நிறுவனத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாநில அரசுக்கும், TATA நிறுவனத்திற்கும் ஒப்பந்தம் கையெழுத்தானதற்குக் காரணம், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்தான். இங்கிலாந்தில் உள்ள XANSA நிறுவனத்திற்கும், அரசுக்கும் இடையே 235 கோடி ரூபாய் முதலீட்டில் மென்பொருள் மேம்பாட்டு வசதிக்காகப் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய திருக்கரத்தாலே சென்னை கிளை தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

சென்னையில் பெரிய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களை, — WIPRO, AXO, HCL, SATYAM COMPUTERS, VIRTUSA, PATNI COMPUTERS, CTS, ACCENTURE, TCS மற்றும் இதர நிறுவனங்களுக்குத் தேவையான இடவசதிகளைப் பெருமளவு அளித்து, தமிழகத்தில் தகவல்

[திரு. ஆ.கு.சீ. அன்பழகன்] [2005 மார்ச் 30

தொழில்நுட்பத் துறையில் அபரிமிதமாக தொழிற்சாலையைத் தொடங்க வழிவகை செய்தது மாண்புமிகு அம்மாவினுடைய அரசுதான்.

பிற்பகல் 1–40

வராத தொழிற்சாலைகளை வருது, வருது என்று புலிக் கதை கூறியவர் கருணாநிதி. உண்மைக்குப் புறம்பாகச் சொல்வது மட்டுமே அவருடைய வாடிக்கை. பொது நிறுவனத் துறையின் அரசாணை எண் 75 மூலம் சிறு தொழில் முழுவதையும் ஒழித்துக்கட்டியவர் கருணாநிதி. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்றபின், தொழில் துறை நிறுவனங்களுக்குப் புத்துயிர் ஊட்டியவர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான். 'One time settlement' என்ற திட்டத்தினைத் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தில் நடைமுறைப்படுத்தி, அதற்குப் புத்துயிரூட்டி, தொழில் அபிவிருத்திக்கு வழிவகை செய்தவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். தமிழகத்தின் வளர்ச்சிக்காகவும், தமிழ் மக்களின் நலனுக்காகவும் பற்பல நலத் திட்டங்களை, மாண்புமிகு அம்மா அவர்கள் தினந்தோறும் அறிவித்தும், அவ்வாறே செயல்படுத்தியும் வருகிறார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் இச்செயல் திட்டங்களை அறிவிக்கும் சமயத்தில், தமிழக மக்களைத் திசை திருப்பும் வகையிலே, கூட்டணி எதிர்க் கட்சியினர் அவையில் பங்குபெறாமல், வெளிநடப்புச் செய்வதையே வாடிக்கையாகக் கொண்டுள்ளனர். இது, அவர்கள் தமிழ்நாட்டிற்கும், அவர்களுக்கு வாக்களித்துப் பேரவைக்கு அனுப்பிய தமிழக மக்களுக்கும் செய்யும் மிகப் பெரிய துரோகமாகும். இதைப் பொதுமக்களும், அனைத்துத் தரப்பினரும் நன்கு உணர்ந்தே உள்ளனர். இதற்கெல்லாம் ஒரு பாடத்தினை எதிர்க் கட்சியினருக்குப் புகட்ட, தமிழக மக்கள், வருகின்ற சட்டமன்றத் தேர்தலில், தயாரான நிலையில் உள்ளனர் என்று நான் இந்தச் சட்டமன்றத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ்கின்றது. இதன் காரணமாக, வெளிநாட்டுத் தொழில் நிறுவனங்கள் பெருமளவில் முதலீடு செய்ய, தமிழகத்தில் தொழில் துவங்க படையெடுத்து வருவதைக் கண்கூடாகக் காண்கிறோம்.

சாதாரண பாமரத் தொண்டனாக இருந்த என்னை, சட்டமன்றப் பேரவையில் பங்குபெற, உறுப்பினராக ஆகவைத்த, பொன்னான வாய்ப்பினை அளித்தவர், எங்களது மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள்தான். கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலையினுடைய 2001–2002 சர்க்கரைப் பருவத்தில் அரைவை



2005 மார்ச் 30] [திரு. ஆ.கு.சீ. அன்பழகன்]

செய்யப்பட்ட கரும்பின் சர்க்கரைக் கட்டுமானம் 9.49 சதவிகிதம் மட்டுமே. தற்போது அதிக சர்க்கரைச் சத்துள்ள கரும்பு உற்பத்தியின்மூலம், 10 சதவிகிதம் வரை உயர்ந்துள்ளது. 2002–2003 சர்க்கரைப் பருவத்தின்போது, சர்க்கரைக் கட்டுமானம் 9.96 சதவிகிதமாகவும், 2003–2004 ஆம் ஆண்டு சர்க்கரைக் கட்டுமானம் 9.9 சதவிகிதமாகவும் உயர்ந்துள்ளது. இதனால், கரும்பு விவசாயிகளுக்கு அதிகச் சர்க்கரைக் கட்டுமானம் பெற்றவகையில், அதிகக் கரும்பு விலை கிடைக்க வழிவகை காணப்பட்டுள்ளது. கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் 2002 ஆம் ஆண்டிற்கான நட்டம் ரூ.193.06 கோடி என்ற நிலையிலிருந்து 2003–2004 ஆம் ஆண்டு நட்டம் ரூ.90 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. 2003–2004 ஆம் ஆண்டு செய்யாறு மற்றும் சுப்பிரமணிய சிவா கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் I.S.O. 9001: 2000 தரச் சான்றுகள் பெற்றுள்ளன. நடப்பு ஆண்டில் சேத்தியாதோப்பு, எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை தரச் சான்று பெற்றுள்ளது. மேலும், அறிஞர் அண்ணா பொதுத் துறை சர்க்கரை ஆலை, தஞ்சாவூர் மற்றும் கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் ஆகிய பல ஆலைகள் தரச் சான்று பெற்றுள்ளன. மேலும், பல்வேறு முற்போக்குத் திட்டங்களைத் தமிழக அரசு செயல்படுத்தி வருகின்றது. கரும்பு விவசாயிகளுக்குப் பாக்கியில்லாமல், பணம் பட்டுவாடா செய்தது, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான். விவசாயிகளுடைய வயிற்றில் பாலை வார்த்தது அம்மா அவர்களின் அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி)

கைத்தறி மற்றும் துணி நூல் துறையில், கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்திலே, கூட்டுறவு நெசவாளர்கள் சங்கங்களின் தலைவர்கள் மற்றும் இயக்குநர்கள் சேர்ந்து, நெசவாளர் சங்கம் இயங்க முடியாத அளவிற்குத் தவறுகளைச் செய்தார்கள். இன்று, சிறந்தமுறையிலே செயல்பட வழிவகை செய்துள்ளவர், நமது புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். அதேபோல, இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்தினைத் தொடர்ந்து வழங்கி நெசவாளர்களுடைய வாழ்க்கையில் ஒளியேற்றிய தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு, நாமெல்லாம் நன்றிக் கடன்பட்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது தொகுதியினுடைய சில பகுதிகளைத் தனி வட்டமாகப் பிரிக்க வேண்டும் என்று பல காலமாக நாங்கள் கோரிக்கை வைத்திருக்கிறோம். பேரணமல்லூர், சேத்துப்பட்டு பகுதிகளை மையமாக வைத்து வட்டமாகப் பிரிக்க வேண்டுமாய், அம்மா அவர்களுடைய பொற்பாதம் வணங்கிக் கோருகிறோம். சேத்துப்பட்டு

பகுதியிலே மக்கள் அதிகமான அளவில் வாழ்ந்து வருகிறார்கள். Floating population அதிக அளவில் உள்ளதால், இப்பகுதியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அறிவிப்பிற்கிணங்க, 30 படுக்கைகள் கொண்ட, தரம் உயர்த்தப்பட்ட மருத்துவமனையாக மாற்ற வேண்டுமாய் அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்கிக் கேட்டுக்கொண்டு, இந்தத் தொழில் துறை மற்றும் கைத்தறித் துறை மானியக் கோரிக்கைகளில் எனது கருத்துகளைச் சொல்வதற்கு வாய்ப்பளித்த, எங்களுடைய குடும்ப தெய்வம் அம்மா அவர்களுக்கு எனது பணிவான நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களும், கைத்தறித் துறை அமைச்சர் அவர்களும் பதிலுரையை நாளைக்குத் தெளிவாக வழங்குவார்கள்.

## 5. அரசினர் தீர்மானம்

### விதி 32–ஐத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 31–3–2005 அன்று வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ 31–3–2005, வியாழக்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

*31–3–2005 அன்று வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.*

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (31–3–2005) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–45 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

– ஏதுமில்லை –

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

144. எரிசக்தித் துறை மானியக் கோரிக்கை குறித்த புதிய அறிவிப்புகள், 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

145. மானியக் கோரிக்கை எண் 26 – தொழில் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

146. தொழில் துறை பற்றிய செயல்பாட்டு ஆய்வுரை, 2004–2005. (தமிழ், ஆங்கிலம்)

147. தொழில் துறை பற்றிய செயலாக்கத் திட்டம், 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

148. மானியக் கோரிக்கை எண் 16 – கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை – கைத்தறி மற்றும் துணிநூல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

149. கைத்தறி மற்றும் துணிநூல் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2004–2005. (தமிழ், ஆங்கிலம்)

[2005 மார்ச் 30

150. கைத்தறி மற்றும் துணிநூல் துறை பற்றிய "மக்கள் சாசனம்", 2005. (தமிழ், ஆங்கிலம்)

151. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று அறுபத்து எட்டாவது அறிக்கை. (2003–2005)

152. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று அறுபத்து ஒன்பதாவது அறிக்கை. (2003–2005)

153. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று எழுபதாவது அறிக்கை. (2003–2005)

154. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று எழுபத்து ஒன்றாவது அறிக்கை. (2003–2005)

155. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று எழுபத்து இரண்டாவது அறிக்கை. (2003–2005)

156. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் பதினான்காவது அறிக்கை. (2003–2005)

157. மனுக்கள் குழுவின் நூற்றுப் பதினோராவது அறிக்கை. (2003–2005)

158. மனுக்கள் குழுவின் நூற்றுப் பன்னிரண்டாவது அறிக்கை. (2003–2005)

159. மனுக்கள் குழுவின் நூற்றுப் பதின்மூன்றாவது அறிக்கை. (2003–2005)

160. மனுக்கள் குழுவின் நூற்றுப் பதினான்காவது அறிக்கை. (2003–2005)

161. மனுக்கள் குழுவின் நூற்றுப் பதினைந்தாவது அறிக்கை. (2003–2005)

162. மனுக்கள் குழுவின் நூற்றுப் பதினாறாவது அறிக்கை. (2003–2005)

163. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் ஐம்பத்து ஏழாவது அறிக்கை. (2003–2005)

164. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் ஐம்பத்து எட்டாவது அறிக்கை. (2003–2005)



2005 மார்ச் 30]

# இணைப்பு I

*(270 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 26

## தொழில் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006

### முன்னுரை

தமிழ்நாடு, வலுவான தொழில் உள்கட்டமைப்பு அடிப்படையுடனும் மிகுதியாகக் கிடைக்கக்கூடிய தொழில்நுட்பத் திறனுடைய மனிதவளத்துடனும் தொழில் மூலதனத்திற்கு மிகவும் விரும்பத்தக்க இடமாகத் திகழ்கிறது. தமிழ்நாட்டின் தொழில் உள்கட்டமைப்பின் வளர்ச்சி, பல்வேறு வகை தனிப்பட்ட ஆய்வுகளில் இந்தியாவின் முதல் மூன்று சிறந்த மாநிலங்களில், மிகச் சிறந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் வெளிவரும் 79,000க்கு மேற்பட்ட பொறியியல் பட்டதாரிகளின் எண்ணிக்கை இந்தியாவிலேயே மிக அதிக அளவிலானதாகும். இதுதவிர, தொழில்நுட்பப் பயிலகங்களிலிருந்து 58,500 பட்டயப் படிப்பு முடித்தவர்களும் தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் உருவாக்கப்படுகின்றனர்.

கடந்த மூன்று ஆண்டுகளாக இரண்டாம் நிலை பிரிவுத் தொழில் மீண்டும் புத்துயிர் பெற்று துலங்கும் நிலை தென்படுகிறது. சுரங்கம், உலோகமற்ற கனிமப் பொருள், ஊர்தி உதிரி பாகங்கள், மின்சாரக் கருவித் தொழில்கள், தோல் பொருட்கள் இயந்திர உபகரணங்கள் போன்ற துணை நிலைப் பிரிவுகள் வலுவான வளர்ச்சி அடைந்துள்ளன. மத்திய அரசு சில குறிப்பிட்ட நாடுகளுடன் மேற்கொண்ட உடன்படிக்கையின் காரணமாகவும், தடையில்லா வணிக உடன்படிக்கை மேற்கொண்டதாலும், வர்த்தக ரீதியில் பல முன்னேற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இந்நிலையில் அனைத்துப் பிரிவுகளின் ஒட்டுமொத்த எதிர்பார்ப்புகளும், பலதரப்பட்ட தொழில் குழுக்கள் தயாரித்த மற்றும் தயாரிக்கப்பட வேண்டிய பகுத்தாய்வுகளும் கவனத்தில் கொள்ள வேண்டியவையாகும்.

[2005 மார்ச் 30

2003 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் இந்த அரசு வெளியிட்ட புதிய தொழிற்கொள்கை புதிய தொழில்களின் உற்பத்தித் திறனை ஊக்குவிக்கும்வகையில் தற்போதைய தொழில் அடிப்படைகளை ஒருங்கிணைத்தும் புதிய உற்பத்தித் திறனை அதிகரித்து, உலக அளவிலான தரத்திற்கு ஏற்றவகையில் புதிய இடங்களில் முன்னேற்றத்தை அளிப்பதும், செயல்படுவதும் நோக்கமாகக் கொண்டது. இக்குறிக்கோள்களை அடைந்திடத் தேவையான போதெல்லாம் தொழில் அமைப்புகளைக் கலந்தாலோசித்து உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல், பொதுத் துறை நிறுவனங்களை மேம்படுத்துதல், தொழிலாளர் நலச் சட்ட சீர்திருத்தம், நிதி நிர்வாகச் சீர்திருத்தம், நடைமுறைகளைச் சீரமைத்து எளிமைப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை அரசு திட்டமிட்டு வருகிறது.'

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், 8 விழுக்காடு வளர்ச்சிக்கென பல சிறப்பியல்புகளுடன் இரண்டாம் தலைமுறை சீர்திருத்தங்களுடன், அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தொழிற்கொள்கையானது, 2003–ல், சிறந்த போட்டித் திறனின் அடிப்படையில் புதிய உற்பத்தித் திறனை அதிகரித்து, பன்னாட்டு நேரடி முதலீடுகளை வரவேற்பதுடன், முதலீட்டில் பொது, தனியார் கூட்டாண்மையை அதிகரிக்க புதிய சூழலை உருவாக்கி, உள்நாட்டு, மற்றும் வெளிநாட்டு முதலீட்டினை உட்கட்டமைப்புத் திட்டங்களுக்காக அதிகரித்தல் உட்பட அனைத்தும் அடங்குவதாகும்.

உட்கட்டமைப்புத் திட்டங்களின் கொள்கைகள் மற்றும் திட்டங்களின் செயல்பாடுகளை ஊக்குவிக்க, "உட்கட்டமைப்பு முன்னேற்ற திட்டம்" மற்றும் உட்கட்டமைப்பு முன்னேற்ற வாரியம் போன்ற திட்டங்களைச் செயல்படுத்த இம்மாநிலம் உத்தேசித்து வருகிறது.

இம்மாநில அரசு, தற்காலிக வேலை நிறுத்தம், ஆட்குறைப்பு, ஒப்பந்தப் பணியாளர்களின் நியமனம், பணிக் காலத்தில் நேர மாற்றம் போன்ற தொழிலாளர் நலச் சட்டங்களைச் சீர்திருத்தவும் ஆய்வு மேற்கொள்கிறது. மேலும் மாநில அரசு இரண்டாம் தேசிய தொழிற் குழு பரிந்துரைகளின் அடிப்படையில் மத்திய அரசின் இசைவுடன் தொழிலாளர் நலச் சட்டங்களைத் தேவைக்கேற்ப திருத்தவும் எண்ணியுள்ளது.



2005 மார்ச் 30]

இம்மாநில அரசு, அண்மையில் ரூ.25 கோடிக்கு மேல் முதலீடு செய்யும் முதலீட்டாளர்களுக்கென, செயல்திறமிக்க ஒற்றைச் சாளர முறையினை அறிமுகப்படுத்தியுள்ளது. பல்வேறு மனுக்களுக்கு பதிலாக பொதுவாக ஒரே மனுவும், மற்றும் ஒரே முகவர் மூலம் அணுகி திட்டத்தை நிறைவேற்ற துணைபுரியவும் மாநில அரசு முனைந்துள்ளது.

திட்டச் செயலாக்கத்திற்குப் பின், முதலீட்டாளர்கள் பல்வேறு வகையான படிமங்களுக்குப் பதிலாக, அனைத்துப் படிமங்களையும் உள்ளடக்கி, ஒரே ஒரு ஆண்டு படிமம் மட்டும் சமர்ப்பிக்கும் வண்ணம் தொழிற்சட்டத்தில் இம்மாநில அரசு மாற்றம் செய்துள்ளது. தற்போது, பல்வேறு பதிவேடுகளை முறைப்படுத்திடவும், குறைத்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஒரு திட்டத்தை நிறைவேற்றுவதற்குமுன், கடைபிடிக்கவேண்டிய நடைமுறைகள், ஒப்புதல்கள், விண்ணப்பப் படிவங்கள், விவர அறிக்கைகள் (Returns), ஆய்வுகள் மற்றும் சான்றிதழ் நடைமுறைகள் போன்றவற்றிற்கான வழிமுறைகளை எளிமைப்படுத்துவதற்காக ஒரு தொழில் வளர்ச்சி மற்றும் வர்த்தகக் கட்டுப்பாடு தளர்வுக்கான சட்டத்தை இயற்றுவதற்கு வழிவகை செய்யப்பட்டு வருகிறது.

மத்திய அரசின் கொள்கையினை மாதிரியாகக் கொண்டு, ஒரு புதிய சிறப்புப் பொருளாதார மண்டலக் கொள்கை அறிவிக்கப்பட்டுள்ளது. சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கான சட்டம் இறுதி செய்யப்பட உள்ளது.

2002 ஆம் ஆண்டில், ஒரு புதுமையான தகவல் தொடர்பு தொழில்நுட்பக் கொள்கை அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது ஒரு தகவல் தொழில்நுட்ப சேவைகள் (Information Technology Enabled Services) கொள்கை இறுதி செய்யப்பட பரிசிலனையில் உள்ளது. இக்கொள்கைகள் முதலீட்டாளர்களுக்குச் சாதகமான சூழ்நிலையை அளிக்கக் கூடியவையாகும்.

இருங்காட்டுக்கோட்டையில் இயங்கும் ஹுண்டாய் மோட்டார் நிறுவனம், தனது உற்பத்தித் திறனை அதிகரிக்க ரூ.1800 கோடியிலிருந்து ரூ.2300 கோடி கூடுதல் முதலீடு செய்ய கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது.

[2005 மார்ச் 30

சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு (Small and Medium Enterprises) துணைபுரிவதற்காக, தொழில்நுட்ப முன்னேற்றத்திற்குத் தேவையான வளம், தொழில்நுட்ப வணிகமயமாக்கல், கழிவு மேலாண்மை தொழில்நுட்பம் மற்றும் அறிவுசார்ந்த சொத்துரிமை (Intellectual Property Rights) பாதுகாப்பு போன்றவற்றின் மீது கவனம் கொண்டு தொழில் துறையின் கூட்டுடனும், அதனால் நிர்வாகிக்கப்படும் மையம் ஒன்று நிறுவப்படும்.

முத்திரைக்கட்டணம் ஒழுங்குபடுத்தப்பட்டு 50 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது.

இத்துறையைச் சார்ந்த நிறுவனங்கள் மற்றும் அரசின் செயல்பாடுகள் அடுத்து வரும் பத்திகளில் விளக்கப்பட்டுள்ளன:

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்**

தமிழ்நாட்டில் பெரிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்களை மேம்படுத்தும் நோக்குடன் தமிழக அரசின் நிறுவனமாக 1965 ஆம் ஆண்டில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) ஏற்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டில் உள்கட்டமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதன்மூலம் தொழில் வளர்ச்சியில் டிட்கோ ஒரு முக்கிய பங்கு வகித்து வருகிறது. நடுத்தர மற்றும் பெரிய அளவிலான முதலீட்டு வாய்ப்புகளைக் கண்டறிந்து தனியார் நிறுவனங்கள் மற்றும் தனிநபர் தொழில் முனைவோருடன் இணைந்து தொழில் திட்டங்களை டிட்கோ நிறுவனம் செயல்படுத்தி வருகிறது. நிதி நிறுவனங்களுடன் இணைந்து புது முயற்சிகளை ஊக்குவிக்கும் வகையில் புதிய முயற்சி முதலீடு நிதிகளையும் டிட்கோ நிறுவனம் ஏற்படுத்தியுள்ளது. செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

ரூபாய் 14.52 கோடி மதிப்பீட்டுச் செலவில் கன்னியாகுமரி மாவட்டத்தில் இரப்பர் தொழிற்பூங்கா நிறுவும் திட்டத்தைச் செயல்படுத்த தமிழ்நாடு தொழிற் பூங்கா (ரப்பர்) லிமிடெட் என்ற கூட்டு முயற்சி நிறுவனம் நிறுவப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மாநில "ஏற்றுமதிக்கான உட்கட்டமைப்பு வளர்ச்சி உதவி" என்ற திட்டத்தின்கீழ் 4.15 கோடி ரூபாய் மானியம் வழங்க மாநில அளவிலான ஏற்றுமதி வளர்ச்சிக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. இரப்பர் வாரியத்திடம் இருந்து இத்திட்டத்திற்கு ரூ.3.55 கோடி நிதி உதவி கிடைக்கும். இத்திட்டம் மார்ச் 2006-க்குள் நிறைவேற்றப்படும். கன்னியாகுமரி மாவட்டத்தில் விளையும் இயற்கை இரப்பரைப் பயன்படுத்தி இரப்பர்



2005 மார்ச் 30]

அடிப்படையிலான பொருட்களை உற்பத்திச் செய்யும் தொழில்கள் வளர்ச்சி அடைய இத்திட்டம் ஊக்கம் அளிக்கும். இவ்வகையில் 40 தொழில் அலகுகள் 5 ஆண்டுக் கால அளவில் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத் தொழில் அலகுகள் முழுமையாக செயல்படும் தருணத்தில் சுமார் 1000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாகும்.

டிட்கோ நிறுவனமும் திருவாளர்கள் நாகார்ஜுனா குழுமமும் இணைந்து கூட்டு முயற்சியில் ஏற்படுத்தியுள்ள நாகார்ஜுனா ஆயில் கார்ப்பரேஷன் என்ற நிறுவனம் ஆண்டொன்றுக்கு 60 இலட்சம் டன்கள் உற்பத்தித் திறனுடன் கடலூர் மாவட்டத்தில் பெட்ரோலிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஒன்றினை, சுமார் 3480 கோடி ரூபாய் மொத்த முதலீட்டில் அமைத்து வருகிறது. இத்திட்டம் தமிழகத்தில் தனியார்மூலம் அதிக அளவில் முதலீடு செய்யப்படும் ஒரே பெருந்திட்டம் மட்டுமன்றி 2003 ஆம் ஆண்டில் அரசு அறிவித்த புதிய தொழிற்கொள்கையின் அடிப்படையில் புத்துயிர் பெற்று அமைப்பு முறையிலான உதவிகளைப் பெறும் முதல் திட்டமுமாகும். 2005 ஆம் ஆண்டில் ஏப்ரல் திங்களில் கட்டுமானப் பணிகள் மீண்டும் தொடங்கப்பட்டு, 2007 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் நிறைவு பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாட்டில் பல பெட்ரோலிய துணைத் தொழில்கள் அமைவதற்கு இது தாய் அலகாகத் திகழும்.

புரோ ஆல்ஜென் பயோடெக் என்ற நிறுவனம், ரூபாய் 24.55 கோடி திட்டச் செலவில் உள்நாட்டுத் தொழில்நுட்பத்தைக் கொண்டு பீட்டா கரோடின் என்ற இறக்குமதிக்கு மாற்றான மூலப்பொருளை பாசியிலிருந்து தயாரிக்க வணிக ரீதியிலான உயிரி தொழில்நுட்பப் பிரிவு ஒன்றினை டிட்கோ நிறுவனத்துடன் இணைந்து இணைத் துறையில் அமைத்து வருகிறது. இவ்வாலை, காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டத்திலுள்ள நடவுக்கரை கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ளது. 2005 ஆம் ஆண்டு இறுதிக்குள் வணிக ரீதியிலான உற்பத்தி தொடங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கம்பம் மற்றும் நிலக்கோட்டை பகுதியில் மதுபானம் தயாரிப்பு மற்றும் வடிசாலை பிரிவுகள் நிறுவும் செயற்குறிப்புக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்குரிய விதிமுறைகள் வகுத்த பின்னர், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், இதற்கான அலகுகள் (units) நிறுவிட உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும். இதனால் இப்பகுதிகளில் உள்ள 4000 விவசாயிகள் பயன் பெறுவார்கள்.

[2005 மார்ச் 30

சேலம் மாவட்டம் கஞ்சமலை மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள வேதியப்பன்மலை, கவுதி மலைப் பகுதிகளில் உள்ள இரும்புத் தாதுவை வெட்டி எடுத்து, அதனைச் செறிவு மிக்கதாக அமைக்கும் சுரங்க திட்டத்தை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை டிட்கோ நிறுவனம் மீண்டும் எடுத்துள்ளது. இச்சுரங்கங்களில் உள்ள குறைந்த தரமுள்ள இரும்புத் தாதுவை ஆண்டொன்றுக்கு 10 இலட்சம் டன் அளவு செறிவுமிக்க தாதுவாக மாற்றும் பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் மொத்த முதலீடு ரூபாய் 250 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இரும்புத் தாதுவை கெட்டியான உருண்டைகளாக மாற்றும் இத்திட்டத்தின்மூலம் ரூபாய் 200 கோடி கூடுதல் முதலீடு உண்டாக வாய்ப்பு ஏற்படும்.

எண்ணூரில் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைப்பதற்குக் கொள்கை அளவிலான அனுமதியை மத்திய அரசு வழங்கியுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்த, எண்ணூர் சிறப்புப் பொருளாதார மண்டல நிறுவனம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. திட்ட மேம்பாட்டாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக திட்ட தகவல் குறிப்பு ஒன்றினைத் தயார் செய்ய டிட்கோ நிறுவனம் ஆலோசகர்களை நியமித்துள்ளது. தேர்ந்தெடுக்கப்படும் திட்ட மேம்பாட்டாளர், எண்ணூர் சிறப்புப் பொருளாதார மண்டல நிறுவனத்தின் சக தொழில்முனைவராகலாம்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலம் ஏற்படுத்துவதற்காக சந்தை நிலவரம் மற்றும் முதற்கட்ட சாத்தியக்கூறு ஆய்வினை மேற்கொள்ள டிட்கோ நிறுவனம் தகுந்த ஆலோசகரை நியமித்துள்ளது.

### தமிழ்நாடு மாநிலத் தொழில் முன்னேற்ற நிறுவனம்

தமிழ்நாடு மாநிலத் தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) 1971 ஆம் ஆண்டில் நிறுமங்கள் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்டது. தமிழ்நாட்டில் நடுத்தர மற்றும் பெரிய தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவது இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் ஆகும். சிப்காட் நிறுவனம் அதனுடைய முக்கிய நோக்கங்களைக் கீழ்க்கண்ட வழிவகைகளில் செயல்படுத்தி வருகிறது.

அ) தொழில் வளாகங்கள்/பூங்காக்கள் மற்றும் வளர்ச்சி மையங்களை மேம்படுத்தி, பராமரித்து விற்பனை செய்தல்

ஆ) மேம்பாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளைச் செயல்படுத்துதல்



2005 மார்ச் 30]

தவணைக் கடன் வழங்கும் பணிகள் யாவும் 1-4-2000 முதல் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு மாற்றப்பட்டதால், இந்நிறுவனம், ஏற்கெனவே வழங்கப்பட்ட தவணைக் கடன் நிலுவைகளை வசூலிப்பதிலும் வளர்ச்சிப் பணியிலும் முனைப்பாகச் செயல்பட்டு வருகிறது.

இந்நிறுவனம் 28-2-2005 வரை கையகப்படுத்திய, மேம்படுத்தி விற்பனை செய்த நிலங்களின் பரப்பளவு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

(ஏக்கரில்)

| | | |
|---|---|---|
| கையகப்படுத்தப்பட்ட மொத்த பரப்பளவு | – | 21689 |
| ஒதுக்கீடு செய்யக்கூடிய மொத்த பரப்பளவு | – | 16636 |
| ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த பரப்பளவு | – | 7400 |
| ஒதுக்கீடு செய்யப்பட்ட அலகுகள் எண்ணிக்கை | – | 1227 |
| வளர்ச்சிப் பணிக்காக இதுவரை செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | – | 32050.66 |

### 2005–2006 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்

(ஏக்கரில்)

| | | |
|---|---|---|
| கையகப்படுத்தப்பட உள்ள பரப்பளவு | – | 706 |
| விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ள பரப்பளவு | – | 750 |
| மேம்பாட்டிற்காக செலவிடப்பட உள்ள தொகை (ரூபாய் இலட்சத்தில்) | – | 4729.84 |

### 1. சிப்காட் தொழில் வளாகங்கள்/பூங்காக்கள் மற்றும் வளர்ச்சி மையங்கள்

சிப்காட் நிறுவனம் பன்னிரண்டு மாவட்டங்களில், மொத்தம் பதினேழு தொழில் வளாகங்கள்/பூங்காக்கள்/வளர்ச்சி மையங்களை மேம்படுத்தி உள்ளது. இந்தத் தொழில் வளாகங்கள் கையகப்படுத்திய

நிலங்கள், ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலப்பரப்பு 28-2-2005 வரையிலான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

(பரப்பளவு)

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | தொழில் வளாகம்/ பூங்கா/வளர்ச்சி மையம் பெயர் | கையகப் படுத்திய நிலங்களின் பரப்பளவு (ஏக்கரில்) | இதுவரை ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலப்பரப்பு (ஏக்கரில்) | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலப்பரப்பு 2003-2004 (ஏக்கரில்) | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலப்பரப்பு 2004-2005 (28.2.05) |
|---|---|---|---|---|---|---|
| 1 | வேலூர் | இராணிப் பேட்டை (கட்டம்-I)<br>(கட்டம்- II)<br>(கட்டம்- III) | 729.78<br>133.13<br>496.07 | 577.87<br>111.97 | 0.78 | .. |
| 2 | கிருஷ்ணகிரி | ஓசூர் (கட்டம்-I)<br>(கட்டம்-II)<br>(விரிவாக்கம்- II)<br>(விரிவாக்க நில எடுப்பு பணியில் 235.13 ஏக்கர்)<br>பர்கூர் | 1235.86<br>456.88<br>179.06<br>1253.41 | 980.95<br>394.93<br>120.71<br>30.33 | 6.35<br>(1.21)<br>(0.48) | 4.60<br>4.84<br>3.79 |
| 3 | காஞ்சிபுரம் மாவட்டம் | இருங்காட்டுக் கோட்டை தொழில் பூங்கா<br>ஆடை தயாரிக்கும் பூங்கா(சிறப்பு திட்டம்) திருப்பெரும்புதூர்<br>தொழில் பூங்கா<br>தகவல் தொழில்நுட்ப பூங்கா, சிறுசேரி<br>ஒரகடம் (நடப்பு திட்டங்கள்) | 1719.85<br>123.23<br>2134.79<br>757.29<br>1737.00 | 1016.98<br>10.64<br>269.36<br>481.88 | 97.83<br>..<br>88.74<br>115.90 | 144.77<br>10.64<br>19.47<br>251.42 |
| 4. | கடலூர் மாவட்டம் | கடலூர் (கட்டம்-I)<br>கடலூர்(கட்டம் - II)<br>கடலூர் தொழிற் பூங்கா (டாசிட்) | 518.79<br>154.27<br>997.78 | 442.82<br>22.13<br>.. | ..<br>..<br>.. | 4.00<br>.. |
| 5 | புதுக்கோட்டை மாவட்டம் | புதுக்கோட்டை தொழில் வளாகம் | 421.10 | 245.74 | 0.72 | 26.70 |





| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6 | சிவகங்கை மாவட்டம் | மானாமதுரை தொழில் வளாகம் | 492.07 | 180.76 | 10.40 | |
| 7 | தூத்துக்குடி மாவட்டம் | தூத்துக்குடி கட்டம்-I (விரிவாக்க நில எடுப்பு பணியில் 1623.27ஏக்கர்) | 1083.59 | 731.41 | 2.94 | |
| 8 | திருவள்ளூர் மாவட்டம் | கும்மிடிப்பூண்டி (கட்டம் -I)<br>(கட்டம்-II)<br>ஏற்றுமதி மேம்பாட்டு தொழிற் பூங்கா | 780.09<br>476.99<br>224.11 | 617.79<br>312.00<br>12.94 | 0.53 | 4.79<br>12.94 |
| 9 | திருநெல்வேலி | கங்கை கொண்டான் | 2035.10 | 50.79 | 100 | 37.24 |
| 10 | திண்டுக்கல் மாவட்டம் | நிலக்கோட்டை | 380.16 | 38.58 | | 38.58 |
| 11 | ஈரோடு மாவட்டம் | பெருந்துறை | 2599.26 | 750.03 | 282.6 | 85.65 |
| 12 | திருவண்ணா மலை மாவட்டம் | செய்யாறு தொழில் வளாகம் | 510.97 | | | - |

1-4-2004 லிருந்து 28-2-2005 வரை 649.43 ஏக்கர் நிலப் பரப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திரண்ட (cumulative) நில ஒதுக்கீடு (28-2-2005 வரை) 7400.61 ஏக்கர் நிலப்பரப்பு ஆகும்.

## 2. உட்கட்டமைப்பு வசதி மேம்பாடு திட்டங்களைச் செயல்படுத்தும் பணிகள்

சிப்காட் நிறுவனம் பின்வரும் சிறப்புக் கட்டமைப்பு வசதி மேம்பாடு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது:-

### உணவுப் பூங்கா, நிலக்கோட்டை, திண்டுக்கல் மாவட்டம்

சிப்காட் நிறுவனமும், தமிழ்நாடு வேளாண்மை விற்பனை வாரியமும் இணைந்து திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள சிப்காட் நிலக்கோட்டை தொழில் வளாகத்தில் சுமார் 100 ஏக்கர் நிலப் பரப்பளவில் ரூ.1300 இலட்சம் செலவில் ஒரு உணவு பூங்காவை ஒரு சிறப்புக் குறிக்கோள் அமைப்பான "நிலக்கோட்டை உணவுப் பூங்கா நிறுவனம்" மூலமாக

[2005 மார்ச் 30

செயல்படுத்தி வருகிறது. மாநில திட்ட முதலீட்டுக் குழு, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற திட்ட மதிப்பீடு தொகையான ரூ.1300 இலட்சம் மற்றும் அதில் உள்ளடக்கிய மத்திய அரசின் மானியத் தொகையாக ரூ.32.5 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. நிலக்கோட்டை உணவுப் பூங்கா லிமிடெட் நிறுவனம் அமைப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான திட்ட ஆலோசகரைத் தெரிவு செய்ய விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. மேலும் மத்திய அரசின் மானியத் தொகையைப் பெறுவதற்கும் தகுந்த செயற்குறிப்புகள் பெறப்பட்டுள்ளன.

**ஆடை தயாரிக்கும் தொழிற் பூங்கா இருங்காட்டுக்கோட்டை, காஞ்சிபுரம் மாவட்டம்**

சிப்காட் இருங்காட்டுக்கோட்டை தொழிற்பூங்காவில் சுமார் 123.83 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.26.70 கோடி செலவில் ஆடை தயாரிக்கும் ஒரு தொழிற்பூங்காவை சிப்காட் நிறுவனம் உருவாக்கி வருகிறது. இத்திட்டத்திற்கு மத்திய அரசு ரூ.16 கோடி மானியமாக வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. சிப்காட் நிறுவனம் சுமார் ரூ.10.70 கோடியை முதலீடு செய்யும். இந்தத் திட்டத்தின் பொது வசதிகளுக்கான வளர்ச்சிப் பணிகள் யாவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதுவரை 10 ஏக்கர் நிலப்பரப்பு, இந்த ஆடைப் பூங்காவின் சுமார் 6 தொழில் அலகுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்**

1949 ஆம் ஆண்டில் இந்திய நிறுமங்கள் சட்டத்தின்கீழ் ஒரு நிறுமமாக உருவாக்கப்பட்ட தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC), நாட்டிலேயே முதன்மையான மாநில அளவிலான நிதி நிறுவனமாகும். இக்கழகம் தற்பொழுது புதிய தொழில்கள் நிறுவ, நிலம் வாங்குதல், கட்டடம் கட்டுதல், தளவாடம் மற்றும் இயந்திரம் வாங்குதல் போன்ற நிலையான சொத்துக்களை வாங்குவதற்கு ரூ.10 கோடி வரை காலக் கடன் உதவி வழங்குகிறது. இக்கழகம், புதிய தொழில் பிரிவுகளை நிறுவுவதற்கு மட்டுமின்றி, தமிழ்நாட்டில் எப்பகுதியிலும் ஏற்கெனவே உள்ள தொழில் பிரிவுகளை விரிவுபடுத்துவதற்கும், நவீனமயமாக்குவதற்கும், நிதி உதவி அளிக்கிறது.

2000 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து இலாபம் ஈட்டிவந்த தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், அடுத்த மூன்று ஆண்டுகள் அதாவது 2003 வரை பின்தங்கியது. நிதி மற்றும் நிர்வாகச் சீரமைப்புகளால்



2005 மார்ச் 30]

இக்கழகம் 2003–2004 ஆம் நிதி ஆண்டில் ரூ.2.21 கோடி இலாபம் ஈட்டியுள்ளது. அறிவுசார்ந்த கோட்பாடு (Prudential norms) அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், முதல் தடவையாக கடன்கள் மற்றும் முன்பணங்கள் குறித்து நிதியொதுக்கம் தேவைப்படவில்லை.

தரமான மேலாண்மை முறைகளை உருவாக்க, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் அண்மையில் இக்கழகத்தின் தலைமை அலுவலகத்திலும், சென்னை கிளை அலுவலகத்திலும் கடன் அனுமதிக்காக (வடிவங்கள் மற்றும் முன்னேற்றம் தவிர) இந்திய தர செயலகத்திடமிருந்து ஐ.எஸ்.ஓ 9001:2000 சான்றிதழைப் பெற்றுள்ளது (தரம் மேலாண்மை முறைகள் சான்றிதழ் உரிமம் ஐ.எஸ்/ஐ.எஸ்.ஓ 9001: 2000). இது 28–11–2007 வரை செல்லுபடியாகும்.

**தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் செயல்படுத்தும் திட்டங்கள்:**

மாநிலத்தில் தொழில் முன்னேற்றங்கள் தொடர்ந்து நடைபெற ஏதுவாக, மாநிலத் தொழில் முனைவோர்/தொழில் வல்லுநர்கள் பயன் பெறும் பொருட்டு, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் பல திட்டங்களை இயக்கி வருகிறது. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் இயக்கிவரும் முக்கிய திட்டங்களின் சிறப்பியல்புகள் கீழே விவரமாகத் தரப்பட்டுள்ளன:–

**சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான நிதி:**

இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி (SIDBI) நம் நாட்டில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் வளர்ச்சிக்காக சிறிய மற்றும் நடுத்தர நிறுவன நிதியாக ரூ.10,000 கோடி நிதியை அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு வழங்க உருவாக்கியுள்ளது. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் 1–4–2004 முதல் சிறிய மற்றும் நடுத்தர தொழில்களுக்கு மேற்கூறிய திட்டத்தில் ஆண்டொன்றுக்கு குறைக்கப்பட்ட வட்டி விகிதமான 11.5 விழுக்காட்டில் தொழில் நவீன மயமாக்குதல் மற்றும் தொழில் நுட்ப மேம்பாடு உள்ளிட்ட நிதியுதவி எந்த ஒரு வகையான திட்டத்திற்கும் அனுமதி வழங்குகிறது.

**தேசிய பங்கு மூலதனத் திட்டம்:**

சிறுதொழில் முனைவோருக்கு, குறிப்பாக, முதன்முதலாகத் தொழில் தொடங்குவோருக்கு உதவும்வகையில் புதிய திட்டத்திற்கும் ஏற்கெனவே உள்ள திட்டத்தின் விரிவாக்கத்திற்கும் திட்ட மதிப்பீடு ரூ.50.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கும்பட்சத்தில், தொழில் முனைவோரின்

[2005 மார்ச் 30

பங்காக, திட்ட மதிப்பீட்டில் 10 விழுக்காட்டுத் தொகை இருக்கும் சிறுதொழில் பிரிவுகளுக்கு நிதியுதவி இத்திட்டத்தின்கீழ் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் மூலதனப் பற்றாக்குறையைச் சரிசெய்வதற்கு சுலபக் கடனாக 25 விழுக்காடு வரை 5 விழுக்காடு வட்டியில் நிதியுதவி அளிக்கப்படுகிறது. மீதியுள்ள 65 சதவீத திட்ட மதிப்பீட்டிற்கு 11.5 விழுக்காடு வட்டியில் காலக் கடன் அளிக்கப்படுகிறது.

**தொழில்நுட்ப மேம்பாடு நிதித் திட்டத்தின்கீழ் ஜவுளித் தொழில்:**

இந்திய அரசு தொழில் மேம்பாட்டு நிதித் திட்டத்தின்கீழ் ஜவுளி மற்றும் சணல் தொழில்களை நவீனப்படுத்தி மேம்பாடு அடையச் செய்யும்பொருட்டும், உற்பத்தியை ஊக்குவிக்கும்பொருட்டும் ஒரு திட்டத்தைச் செயல்படுத்துகிறது. இத்திட்டத்தின்கீழ், இந்திய அரசு வெளியிட்டுள்ள புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்க, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் நிதியுதவி வழங்குகிறது. தொழில் முனைவோரின் மூலதனத் திட்ட மதிப்பில், 20 விழுக்காடு கொண்டுள்ள தொழில் பிரிவுகளுக்கு, இத்திட்டத்தின்கீழ், 5 விழுக்காடு மானியத்தில் 6.5 விழுக்காடு சலுகை வட்டியில் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

**காற்று சக்தி திட்டம்:**

தமிழ்நாடு மாநிலமானது, இதுவரை 3500-க்கு மேல் காற்று சக்திகள் அமைத்துள்ளதன்முலம் இப்பிரிவில் முன்னோடியாகத் திகழ்கிறது. பலதரப்பட்ட வாடிக்கையாளர்களின் தேவைக்கு நிதி அளிப்பதற்காக தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் சிறப்புப் பயிற்சி பெற்றுள்ளது. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் இரண்டு திட்டங்களைச் செயல்படுத்துகிறது. அதாவது, பொது காலக் கடன் திட்டத்தின்கீழ் திட்ட மதிப்பில் 75 விழுக்காடு வரை கடனாகவும் மற்றும் சாதனங்கள் நிதியுதவி திட்டத்தின்கீழ் 85 விழுக்காடு வரையுள்ள சாதனங்களின் மதிப்பு மற்றும் அதைச் சார்ந்த செலவினங்களுக்காகவும் நிதி உதவி அளிக்கப்படுகிறது. தனது சுய தேவைக்காகவும் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு உற்பத்தி செய்து விற்பதற்கும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் சிறப்புச் சலுகை வட்டியில் (அதாவது 10.5 விழுக்காடு) காற்று சக்தி திட்டத்திற்கு வழங்குகிறது.



2005 மார்ச் 30]

**தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் செயல்படுத்தும் மானியத் திட்டங்கள்:**

தமிழ்நாட்டில், தொழில் முனைவோரின் நிதிச் சுமையைக் குறைக்கும் வகையில், தொழில் அமைக்க/விரிவாக்க/நவீனமயமாக்க தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் செயல்படுத்தும் பல மானியத் திட்டங்கள் பின்வருமாறு:-

**கடன் இணைந்த மூலதன மானியத் திட்டம்:**

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், ஒரு செயல் அமைப்பாக கடன் இணைந்த மூலதன மானியத் திட்டத்தின்கீழ் சிறுதொழில் பிரிவுகளில் அடங்கியுள்ள 30 தொழில் நிறுவனங்களின் தொழில் மேம்பாட்டிற்காக 12 விழுக்காடு மூலதன மானியம் அதிகபட்சமாக ரூ.4.80 இலட்சம் வரை வழங்குகிறது. செயல் அமைப்பு கடன் இணைந்த மூலதன மானியத் திட்டத்தின்கீழ் தொழில்நுட்ப மேம்பாடு நிதி திட்டத்தில் சிறுதொழில் ஜவுளி மற்றும் சணல் தொழில்களுக்குத் தகுதியுடைய முதலீடுகளின்மீது 12 விழுக்காடு மூலதன மானியம் அல்லது 5 விழுக்காடு வட்டி மானியம் இதில் எதை தொழிற்பிரிவு விரும்புகிறதோ அதைத் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் வழங்குகிறது.

நூற்பாலைகளை நவீனமயமாக்க கடந்த காலத்தில் 12 விழுக்காடு மூலதன மானியம் வழங்கப்பட்டு வந்தது. தற்போது கடன் இணைந்த மூலதன மானியத் திட்டத்தின் மற்றும் தொழில் நுட்ப மேம்பாடு நிதித் திட்டத்தின்கீழ் 20 விழுக்காடு வட்டியில் மூலதன மானியம் அதிகபட்சமாக 12 இலட்சம் வரை அல்லது 5 விழுக்காடு வட்டி மானியம் இதில் எது பயனுள்ளதோ அது அளிக்கப்படுகின்றது.

தமிழக அரசு முடிவுற்ற வட்டி மானிய உதவியைக் கீழ்க்கண்ட இனங்களுக்கு விரிவுபடுத்தியுள்ளது:-

(அ) தொழில்நுட்ப மேம்பாடு/நவீனமயமாக்குதல் திட்டத்தில் பெற்ற காலக் கடன்கள்.

(ஆ) தேசிய மூலதன திட்டத்தின்கீழ் பெறப்பட்ட காலக் கடன்கள்.

(இ) ஐ.எஸ்.ஓ. சான்றிதழ் மற்றும் ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்காகப் பெறப்பட்ட காலக் கடன்.

[2005 மார்ச் 30

இத்திட்டம், 1–4–2003 முதல் இயங்கி வருகிறது. அதிகபட்சமாக 3 விழுக்காடு முடிவுற்ற வட்டி மானியம் வழங்கப்படுகிறது.

புதிய அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் ஊக்கத் தொகை அதாவது 15 விழுக்காடு சிறப்பு மூலதன மானியம்/15 விழுக்காடு மின் ஆக்கி மானியம்/5 விழுக்காடு மகளிர் தொழிலாளர்கள் மானியம் வழங்கப்படுகிறது.

**சலுகைகள்:**

2003–2004 ஆம் ஆண்டில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், "பாகுபாடற்ற கோட்பாடு திட்டத்தின்கீழ்" ரூ.10 இலட்சம் வரை கடன் பெற்ற நிறுவனங்கள் ஒரே தவணையில் கடனைத் திருப்பிச் செலுத்தும் திட்டத்தினையும், ரூ.10 இலட்சத்திற்குமேல் கடன் பெற்ற தொழில் நிறுவனங்கள் பயனடைய ஒரு தனியான ஒரே தவணை கடன் திருப்பித் தரும் திட்டத்தையும் செயல்படுத்தியது. இத்திட்டம் நலிவுற்ற நிறுவனங்கள் தன் கணக்கை முடிப்பதற்கும் மற்றும் இக்கழகத்தின் கடன் பாக்கியை வசூலிப்பதற்கும், குறிப்பாக, இந்நிறுவனம் மேற்கொள்ளும் சாதாரண வசூல் நடவடிக்கைகளினால் விரும்பிய பயனை அளிக்காத மோசமான தவணை தவறிய வாடிக்கையாளர்கள்/ இயங்காத நிறுவனங்கள், கையகப்படுத்தப்பட்ட நிறுவனங்கள், சொத்துகள் விற்பனை செய்யப்பட்ட நிறுவனங்கள், தள்ளுபடி செய்யப்பட்ட நிறுவனங்கள், வழக்கில் உள்ள நிறுவனங்கள் ஆகியவை பயனடையும் வகையில் இருந்தன. ஆகவே, இக்கழகம் திருத்திய ஒரே தவணையில் கடனைத் திருப்பிச் செலுத்தும் திட்டத்தினை 2004–2005 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது.

(அ) ரூ.5.00 இலட்சம் வரை வழங்கப்படும் கடன்களுக்கு:

- கடனாளிகளின் அசல் தொகை மற்றும் பிற தொகைகள் ஏதும் இருப்பின் நடப்பு தேதியில் உள்ளபடி மட்டுமே செலுத்த வேண்டும்.
- கடன் கணக்கில் நிலுவையில் உள்ள வட்டி முழுவதும் தள்ளுபடி செய்யப்படும்.

(ஆ) ரூ.5.00 இலட்சத்திற்கு மேல் ரூ.10 இலட்சம் வரை வழங்கப்படும் கடன்கள் (சொத்துக்கள் இல்லா நிறுவனங்கள், தள்ளுபடி செய்யப்பட்டவை, வழக்கில் உள்ளவை மற்றும் கையகப்படுத்தப்பட்டவைகளைத் தவிர):



2005 மார்ச் 30]

- கடனாளிகள் நிலுவையிலுள்ள அசல், மற்றும் எந்தத் தேதியில் அந்தக் கணக்கு வாராக் கடனாகக் கருதப்பட்டதோ அன்றுவரை உள்ள வட்டி மற்றும் பிற தொகையைச் செலுத்த வேண்டும்.
- கடனாளிகளின் கணக்கில் நிலுவையில் உள்ள அபராத வட்டி, கூட்டு வட்டி மற்றும் மீதியுள்ள சாதாரண வட்டி முழுவதும் தள்ளுபடி செய்யப்படும்.

(இ) சொத்துக்கள் இல்லா நிறுவனங்கள், விற்பனை செய்யப்பட்டவை, தள்ளுபடி செய்யப்பட்டவை வழக்கில் உள்ளவை மற்றும் கையகப்படுத்தப்பட்டவை கடன் தொகை எவ்வளவு இருந்தாலும்:

- கடனாளிகள் நிலுவையிலுள்ள அசல் மற்றும் பிற தொகையைச் செலுத்தவேண்டும்.
- கடனாளிகளின் கணக்கில் உள்ள வட்டி முழுவதும் தள்ளுபடி செய்யப்படும்.

இதைத்தவிர, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ரூ.10 இலட்சத்திற்கு மேல் கடன்தொகை பெற்ற நிறுவனங்களுக்கு அதன் தகுதியை அடிப்படையாகக் கொண்டு, முடிவெடுக்கப்பட்டு அபராத வட்டி/கூட்டு வட்டி/அபராத மற்றும் கூட்டு வட்டி, மற்றும் சாதாரண வட்டியின் ஒரு பகுதியைத் தொழில் முனைவோரின் நிகர சொத்து மதிப்பு, தொழில் முனைவோரின் இறப்பு, விற்பனை வரி மற்றும் மற்ற சட்டபூர்வமான பொறுப்புகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு ஒரே தவணையில் கடனைத் திருப்பிச் செலுத்தும் திட்டத்தைச் செயல்படுத்துகிறது.

- 2004–2005 ஆண்டில் ஒரே தவணையில் திருப்பிச் செலுத்தும் திட்டத்தின் அமலாக்கச் செயல்பாடுகளின் அடிப்படையில், திருத்தத்துடன் அல்லது திருத்தம் இல்லாமல் மேற்கண்ட ஒரே தவணையில் திருப்பிச் செலுத்தும் திட்டத்தினை 2005–2006 ஆம் ஆண்டுக்கு நீட்டிக்க இக்கழகம் பரிசீலிக்கும்.

[2005 மார்ச் 30

**முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகள்:**

தொழில் முனைவோருக்கு உதவும்வகையில் இந்நிறுவனத்தின் மூலம் நிதியுதவி பெற்றவர்களுக்கு இக்கழகத்தின் சட்ட ஆவணங்கள் முறையை துரிதமாகச் செயல்படுத்த எளிதாக்கப்பட்டுள்ளது.

மேலும், இக்கழகம் தொழில் முனைவோருக்கு உதவும்வகையில் எல்லா கடன் மற்றும் முன்பணம் கோரும் விண்ணப்பப் படிவங்களையும் அண்மையில் எளிதான முறையில் அறிமுகப்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தை UNIDO திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட திட்டங்களுக்கு முகவர் அமைப்பாகச் செயல்பட தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது:—

அ) இந்தியாவிலுள்ள ஜவுளி உற்பத்திப் பிரிவுகளின் சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு உற்பத்தி ஏற்றம், உற்பத்தி முன்னேற்றத்திற்கான வளர்ச்சி.

ஆ) சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு இலகுரக பொறியியல் தொழில் முன்னேற்றத்திற்கான கட்டுமானம்.

**தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனம்**

தமிழ்நாடு அரசு 1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனத்தை நிறுமங்கள் சட்டம் 1956-ன்கீழ் ஒரு பொதுத் துறை நிறுவனமாக நிறுவியது. நாட்டின் வன வளம் தேவையான அளவிலிருந்து மிகவும் குறைந்துள்ளதால், இந்நிறுவனம், கரும்புச் சக்கையை முதன்மை மூலப் பொருளாகப் பயன்படுத்தி ஆண்டுதோறும் 50,000 டன் செய்தித் தாளையும் 40,000 டன் அச்சு மற்றும் எழுது தாளையும் தயாரிப்பதற்காகத் தொடங்கப்பட்டது.

இந்த ஆலை ரூ.239 கோடி மூலதனச் செலவில் நிறுவப்பட்டு, 1985 ஆம் ஆண்டு வணிக அளவிலான உற்பத்தியைத் துவக்கியது. உலக வங்கி இத்திட்டத்திற்கு 100 மில்லியன் அமெரிக்க டாலர் கடனுதவி வழங்கியது.

கரும்புச் சக்கையைக் கொள்முதல் செய்ய இந்நிறுவனம் ஒரு தனித்தன்மை கொண்ட பண்ட மாற்று முறையைத் தேர்ந்தெடுத்துள்ளது. இந்நிறுவனம் ஐந்து சர்க்கரை ஆலைகளில் நிலக்கரி மற்றும் பழுப்பு நிலக்கரி கொண்டு இயக்கப்படும் கொதிகலன்களை இயக்கி, நீராவியைத்



2005 மார்ச் 30]

தயாரித்து இச்சர்க்கரை ஆலைகளுக்கு அளித்து, கரும்புச் சக்கையைப் பெற்று வருகிறது. மேலும், இந்நிறுவனம் வெளிச் சந்தையில் கிடைக்கும் கரும்புச் சக்கையையும் தனது கூடுதல் தேவைக்கென கொள்முதல் செய்து வருகிறது.

இந்நிறுவனம், ரூ.600 கோடி மூலதனச் செலவில் 1993–1996 ஆம் ஆண்டில் தனது உற்பத்தித் திறனை 90,000 டன்னிலிருந்து 1,80,000 டன்னாக இரட்டிப்பாக்கியது. இந்த விரிவாக்கத் திட்டம் 1996 ஆம் ஆண்டு ஜனவரி முதல் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டச் செலவு ரூ.600 கோடியில் ஒரு பகுதியாக ரூ.216 கோடி முதலீடு, நிறுவனத்தின் முதல் பொது சமபங்கு வெளியீட்டின் மூலம் 1995 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் திரட்டப்பட்டது. இத்திட்டத்தின் மீதமுள்ள முதலீட்டுக் தொகை, இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து பெறப்பட்ட கடன், நிறுவனத்தில் இருந்த உபரி உள்நிதி ஆதாரம் மற்றும் உலக வங்கி அளித்த 75 மில்லியன் அமெரிக்க டாலர் நேரடி கடனுதவி ஆகியவற்றின் மூலம் பெறப்பட்டது.

இந்நிறுவனம் 2001–2003 ஆம் ஆண்டுகளில் ரூ.150 கோடி செலவில் காகித இயந்திரங்களை மேம்படுத்தி உற்பத்தித் திறனை ஆண்டொன்றுக்கு 1,80,000 டன்னிலிருந்து 2,30,000 டன்னாக உயர்த்தியது. இதற்கான மொத்த நிதி ஆதாரத்தையும் நிறுவனம் உள்நிதி ஆதாரம் மூலமாகவே பெற்றது. இந்த மேம்படுத்துதலின் மூலம், தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனம் ஒரே இடத்தில் அமையப்பெற்ற மிகப் பெரிய காகித ஆலையாகவும், அச்சு மற்றும் எழுது காகித தயாரிப்புத் திறனில் நாட்டிலேயே இரண்டாவது இடத்தில் உள்ள நிறுவனமாகவும் விளங்குகிறது.

2002–2005 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனம் மேலும் நான்கு சர்க்கரை ஆலைகளுடன் பண்ட மாற்று முறையில் கரும்புச் சக்கையைப் பெற உடன்படிக்கை மேற்கொண்டுள்ளது. இந்த நிறுவனம் 1,731 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பையும் ஏறத்தாழ 5,000 பேர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பினையும் அளித்துள்ளது.

2004–2005 ஆம் நிதியாண்டில் (2005 பிப்ரவரி வரை) இந்நிறுவனம் 84.40 விழுக்காடு உற்பத்தித் திறனைப் பயன்படுத்தி 1,77,037 மெட்ரிக் டன் செய்தித் தாள் மற்றும் எழுது அச்சுக் காகிதத்தை உற்பத்தி செய்து ரூ.27.66 கோடி இலாபம் (வரிக்கு முன்) ஈட்டியுள்ளது. 2003–2004 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் 27.5 விழுக்காடு ஈவுத்தொகை அறிவித்துள்ளது.

1995 ஆம் ஆண்டு முதல் இன்று வரை இந்நிறுவனம் மொத்தம் 1,93,072 மெட்ரிக் டன் மரம் சாரா அச்சு மற்றும் எழுதுதாளை ஏற்றுமதி செய்து ரூ.524.44 கோடி அந்நியச் செலாவணியை ஈட்டியுள்ளது.

மரபுசாரா மின் உற்பத்தியிலும் இந்நிறுவனம் பெரும் பங்கு வகித்து வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் தேவர்குளத்திலும், பெருங்குடியிலும் காற்று சக்தியால் மரபு சாரா மின்சாரம் உற்பத்தி செய்ய ரூ.47.69 கோடி மூலதனச் செலவில் "15 மெகா வாட் திறன் கொண்ட ஒரு காற்றாலை பண்ணையை" நிறுவியது. இக்காற்றாலையின் திறன் மார்ச் 2001 முதல் 15 மெகா வாட்டிலிருந்து 18 மெகா வாட்டாகவும், மார்ச் 2004 முதல் 21.75 மெகா வாட்டர்கவும் அதிகரிக்கப்பட்டது. 2004–2005 ஆம் ஆண்டில் (பிப்ரவரி 2005 வரை) 346.50 இலட்சம் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் தொகுப்புக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 2004–2005 ஆம் ஆண்டு இந்நிறுவனம் எடுத்துள்ள முயற்சிகள்

❖ 2004–2005 ஆம் ஆண்டில் (பிப்ரவரி 2005 வரை) இந்நிறுவனம் 34,106 மெ. டன் அச்சு எழுது காகிதத்தை ஏற்றுமதி செய்துள்ளது. இதன் மதிப்பு ரூ.98.29 கோடியாகும். 2004–2005 ஆம் ஆண்டில் மொத்தம் 36,000 மெ.டன் ஏற்றுமதி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2003–2004 ஆம் ஆண்டில் ஏற்றுமதி 30,098 மெ. டன்னாக இருந்தது. வரும் ஆண்டில் ஏற்றுமதி அளவை மேலும் உயர்த்த முடியும் என இந்நிறுவனம் நம்பிக்கை கொண்டுள்ளது.

❖ ஒரு டன் காகித உற்பத்திக்கு 1999–2000 இல் 124 கி.லிட்டராக இருந்த தண்ணீரின் நுகர்வு, 2003–2004 இல் 83 கி.லிட்டராக குறைக்கப்பட்டது. ஆற்றிலிருந்து எடுக்கப்படும் நீரில் 80 விழுக்காடு சுத்திகரிக்கப்பட்ட நீராக பாசனத்திற்கு திரும்ப அளிக்கப்படுகிறது.

❖ சுண்ணாம்புச் சூளையில் உலை எண்ணெய்க்குப் பதிலாக மீத்தேன் வாயுவைப் பயன்படுத்தும் வகையில் பயோமெத்தனேசன் தளவாடம் ஒன்றை தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனம் துவக்கியுள்ளது. ஜூன் 2003 முதல் பிப்ரவரி 2005 வரை 71.93 இலட்சம் கன மீட்டர் மீத்தேன் வாயு உற்பத்தி செய்யப்பட்டு சுண்ணாம்புச் சூளையில் ரூ. 4.58 கோடி மதிப்புள்ள 3904.56 கி. லிட்டர் கொதிகலன் எண்ணெய்க்குப் பதிலாக உபயோகப்படுத்தப்பட்டது. இந்த





ஆண்டில் பிப்ரவரி 2005 வரை 30.48 இலட்சம் கன மீட்டர் மீத்தேன் வாயு உற்பத்தி செய்யப்பட்டது. இந்தியத் தொழிற்சாலைகளின் கூட்டமைப்பு இத்திட்டத்தை நூதன திட்டமாக அங்கீகரித்து சிறந்த எரிசக்தி மேலாண்மைக்கான விருதை வழங்கியது.

❖ 2004–2005 ஆம் ஆண்டில் பிப்ரவரி 2005 வரை 1043.69 இலட்சம் யூனிட்டுகள் உபரி மின்சாரத்தை (டர்போ ஜெனரேட்டர் மற்றும் காற்றாலை பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்டது) மாநில மின் தொகுப்பிற்கு அளிக்கப்பட்டது.

❖ மரபு சார்ந்த கரும்புச் சக்கைக்குப் பதிலாக காட்டு வகை கரும்பைப் பயிர் செய்யும் பணியில் தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனம் ஈடுபட்டு வருகிறது. குறைந்த அளவு சர்க்கரையும் அதிக அளவு நார்ப்பொருளும் அடங்கிய காட்டு வகை கரும்பினை விளைவிக்க குறைந்த அளவே நீர் தேவைப்படுகிறது. மேலும் இது மிக அளவில் பயிரிடுவதற்கு உகந்ததாகும்.

❖ தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனம் ரூ.565 கோடி செலவில் ஆலை மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இதன்மூலம் ஆலையில் உற்பத்திச் செய்யப்படும் இரசாயன கரும்புச் சக்கை கூழ் பிரிவின் உற்பத்தித் திறன் நாளொன்றுக்கு 400 டன்னிலிருந்து 500 டன்னாக உயர்த்தப்படும். நாளொன்றுக்கு 300 டன் திறன் கொண்ட புதிய நவீன மரக்கூழ் பிரிவும், புதிய இரசாயன மீட்பு கொதிகலனும் இதர தளவாடங்களும் நிறுவப்படும். இம்மரக்கூழ் பிரிவுகளில் குளோரின் தன்மையற்ற வெண்மையாக்கும் முறை அறிமுகப்படுத்தப்படும். இத்திட்டம், ஆலை சுற்றுச் சூழல் சிறப்படையவும், உற்பத்தித் திறனை மேம்படுத்தி செலவைக் குறைக்கவும், ஆலை இயக்கத்தை மேலும் சிறப்படையச் செய்யவும் உதவுவதுடன் இத்திட்டம் முடிவுற்ற பின்னரும் இந்நிறுவனம் மின் உற்பத்தியில் உபரிநிலை பெற்று தொடர்ந்து உபரி மின்சாரத்தை மாநில மின் தொகுப்பிற்கு வழங்கும். மேலும், ஆலையின் காகித உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு 2,30,000 மெ. டன்னிலிருந்து 2,45,000 மெ. டன்னாக உயரும். இத்திட்டம் 2006 செப்டம்பரில் நிறைவு பெறும். இத்திட்டத்திற்கான நிதியுதவி, ரூ.150 கோடி நிறுவனத்தின் சொந்த நிதியிலிருந்தும் மீதமுள்ள ரூ.415 கோடி வங்கிகளிடமிருந்து கடனாகப் பெறப்படும்.

[2005 மார்ச் 30

நாளொன்றுக்கு 500 டன் திறன் கொண்ட குளோரின் தன்மையற்ற வெண்மையாக்கும் முறை கொண்ட இரசாயன கரும்புச் சக்கை கூழ் பிரிவு மார்ச் 2006-லும், நாளொன்றுக்கு 300 டன் திறன் கொண்ட புதிய மரக்கூழ் பிரிவு மற்றும் இதர தளவாடங்கள் செப்டம்பர் 2006-லும் துவக்கப்படும்.

தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனம் நடப்பாண்டில் 3,500 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயப் பண்ணை மற்றும் சொந்தப் பண்ணைத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் தொடர்ந்து வரும் ஆண்டுகளிலும் ஆண்டொன்றுக்கு சுமார் 5,000 ஏக்கர் நிலப்பரப்பில் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் தரிசு நில விவசாயிகள் தம் நிலத்தில் மரக்கூழ் கன்றுகளைப் பயிரிட்டு தம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த இயலும். நடப்பாண்டில் 437 விவசாயிகள் இத்திட்டத்தின்கீழ் மரக்கூழ் கன்றுகளைப் பயிரிட்டுள்ளனர்.

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம்

1976 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11 ஆம் நாள் நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு (டிட்கோ) முழுமையாகச் சொந்தமான துணை நிறுவனமாக தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் (டான்செம்) நிறுவப்பட்டது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் (டிட்கோ) 1970-இல் ஆலங்குளத்தில் நிறுவப்பட்ட சிமெண்ட் தொழிற்சாலையை டான்செம் ஏற்றுக்கொண்டது. அதனையடுத்து டான்செம் அரியலூரில் மேலும் ஒரு சிமெண்ட் தொழிற்சாலையை 1979 ஆம் ஆண்டு ஏற்படுத்தி அங்கு சிமெண்ட் உற்பத்தியைத் தொடங்கியது. டான்செம், 1981 ஆம் ஆண்டில் விருதுநகர் மாவட்டத்திலுள்ள ஆலங்குளத்தில் கல்நார் சிமெண்ட் தகடு (ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்) தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றையும், மாயனூரில் 1984 ஆம் ஆண்டில் கல்நார் சிமெண்ட் அழுத்தக் குழாய் தயாரிப்புத் தொழிற்சாலை (ஆஸ்பெஸ்டாஸ் பிரஷர் பைப்ஸ்) ஒன்றையும் தொடங்கியது. டான்செம், 1989 ஆம் ஆண்டில் கடலூர் மாவட்டத்திலுள்ள விருத்தாசலத்தில், இயங்காமலிருந்த கற்குழாய்த் தயாரிப்புத் தொழிற்சாலையை, தமிழ்நாடு பீங்கான் தயாரிப்பு நிறுவனத்திடமிருந்து ஏற்றுக்கொண்டது. டிட்கோ நிறுவனம் தனது பங்குகளை அரசுக்கு மாற்றி அளித்த காரணத்தால் 31.12.1994 முதல் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் அரசு நிறுவனமாக மாறியது.



2005 மார்ச் 30]

அரியலூர் சிமெண்ட் ஆலை 2004–2005 ஆம் நிதியாண்டில் பிப்ரவரி 2005 வரையிலான காலத்தில் 116 விழுக்காடு உற்பத்தித் திறன் பயன்பாட்டினை எட்டியுள்ளது. குறைந்த அளவிலான மின்சாரம் மற்றும் நிலக்கரி உபயோகித்தல் மற்றும் சுண்ணாம்புக் கல் வெட்டியெடுத்தல், சிமெண்ட் போக்குவரத்து, நிலக்கரி போக்குவரத்து மற்றும் செயல்முறை இயக்கங்களில் ஏற்படுத்தப்பட்ட சிக்கன நடவடிக்கைகளால் ஆலை இயக்கத் திறன்பாடுகள் அதிக அளவில் முன்னேற்றம் அடைந்துள்ளன. தர–மேலாண்மை முறையைப் பின்பற்ற அரியலூர் சிமெண்ட் ஆலையில் தர மேலாண்மை முறையை (ஐ.எஸ்.ஓ. 9001:2000) நடைமுறைப்படுத்தும் செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆலங்குளம் சிமெண்ட் ஆலை 2004–2005 ஆம் நிதியாண்டில் பிப்ரவரி 2005 வரையான காலத்தில் 59 விழுக்காடு உற்பத்தித் திறன் பயன்பாட்டினை எட்டியுள்ளது. பழமையான இயந்திரங்கள் மற்றும் தொழில்நுட்பக் குறைபாடுகள் மற்றும் இரண்டு கிளிங்கர் சூளைகளில் இவ்வாண்டு ஒரேயொரு கிளிங்கர் சூளையை மட்டும் இயக்கிய போதிலும் இவ்வாலை இந்த உற்பத்தித் திறன் பயன்பாட்டினை எட்டியுள்ளது.

கல்நார் தகடு ஆலை (ஆஸ்பெஸ்டாஸ் தகடு ஆலை) புதிய உற்பத்தியாளர்களால் சந்தையில் ஏற்பட்டுள்ள கடுமையான போட்டிகளுக்கு இடையேயும் பொதுவாக நன்றாகவே இயங்கி வருகிறது. விருத்தாசலத்தில் உள்ள கற்குழாய் ஆலை 2004–2005 ஆம் நிதியாண்டில் பிப்ரவரி 2005 வரையான காலத்தில் 67.5 விழுக்காடு உற்பத்தித் திறன் பயன்பாட்டினை எட்டியுள்ளது. 5–1–2005 தேதியிட்ட அரசு ஆணை எண் 3 (தொழில் துறை)–ன்படி மாயனூர் கல்நார் குழாய் ஆலையில் விருப்ப ஓய்வுத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

சாதாரண பொது நுகர்வோருக்கு நியாயமான விலைகளில் சிமெண்ட் கிடைத்திட டான்செம் முன்னிலை வகிக்கிறது.

## தமிழ்நாடு கனிம நிறுவனம்

தமிழ்நாட்டில் கிடைக்கக்கூடிய பல்வேறு வகையான கனிமங்களை அறிவியல் ரீதியாகப் பயன்படுத்தக் கூடியதாகவும், கிராமப்பகுதியில் உள்ள மக்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நிறுவனச் சட்டத்தின்கீழ் தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின்) நிறுவப்பட்டது.

[2005 மார்ச் 30

இந்நிறுவனம் கருப்பு, வெள்ளை பாரடைசோ, மற்றும் பல வண்ணப் பாறைகளையும் உயர்வகை கனிமங்களான கிராஃபைட், குவார்ட்ஸ், பெல்ட்ஸ்பார், சுண்ணாம்புக்கல், சிலிகா மணல் மற்றும் வெர்மிகுலைட் கனிமங்களையும் வெட்டியெடுத்து தரம் வாய்ந்த பொருட்களாக வாடிக்கையாளர்கள் மனநிறைவு பெறும்வகையில் விற்பனை செய்து வருகிறது.

**1. மொத்த விற்பனை**

2004–2005 ஆம் ஆண்டில் இந்நிறுவனம், கடந்த ஆண்டில் பிப்ரவரி 2004 திங்கள் வரை ரூ.76.20 கோடி விற்பனை செய்துள்ள அளவிற்கு மாறாக பிப்ரவரி 2005 திங்கள் வரை ரூ.90.00 கோடி அளவு (தணிக்கைக்குட்படாதது) விற்பனை செய்து புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டில் விற்பனை சாதனை அளவான ரூ.100 கோடியை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**2. அதிக குவாரிகள் இயக்கப்பட்டது**

2004–2005 ஆம் ஆண்டில் இயக்கப்படும் குவாரிகளின் எண்ணிக்கை 54-லிருந்து 60 ஆக உயர்ந்துள்ளது.

**3. நவீன இயந்திரங்களின்மூலம் குவாரிகளை இயக்குதல்**

டாமின் குவாரிகளை நவீனமயமாக்குவதற்காக தற்கால நவீன இயந்திரங்களான வைர இரம்பம், ஹைடிராலிக் துளையிடும் இயந்திரம் மற்றும் பாறைகளை உடைக்கும் இயந்திரங்களை உபயோகித்து வருகிறது. இதன்மூலம் கூடுதல் மீட்பு விழுக்காடும், உற்பத்தியும் அதிகரித்து, மற்றும் சுற்றுப்புறச் சூழலும் காக்கப்படுகிறது.

**4. டாமின் தொழிற்சாலை அலகுகளின் முன்னேற்றம்**

**(i) சிவகங்கை கிராஃபைட் செழுமைப்படுத்தும் தொழிற்சாலை**

கிராஃபைட் செழுமைப்படுத்தும் தொழிற்சாலையின் நடவடிக்கைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இதன் பயனாக கிராஃபைட் உற்பத்தி மற்றும் மீட்பானது கடந்த ஆண்டுகளைவிட 73.62 விழுக்காட்டிலிருந்து 79 விழுக்காடாக அதிகரித்துள்ளது. இதனால் செழுமைப்படுத்தப்பட்ட கிராஃபைட்டின் விற்பனை 2004–2005 ஆம் ஆண்டில் ஒரு புதிய சாதனை அளவான ரூ.7.80 கோடியை எட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சிவகங்கை கிராஃபைட்



2005 மார்ச் 30]

செழுமைப்படுத்தும் தொழிற்சாலை 2004–2005 ஆம் ஆண்டில் ரூ.12.5 இலட்சம் ரொக்க இலாபம் ஈட்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

**(ii) மணலியிலுள்ள கிரானைட் தொழிற்சாலை**

2004–2005 ஆம் ஆண்டில் மணலி கிரானைட் தொழிற்சாலையின் செயலாக்கம் முன்னேற்றம் அடைந்துள்ளது. இயந்திரங்கள் உபயோகத்தில் இல்லாத நேரம் இயன்ற அளவு வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. அறுத்த கிரானைட் பலகைகள் மற்றும் மெருகேற்றப்பட்ட பலகைகளின் விற்பனை அதிகரித்து 2004–2005 ஆம் ஆண்டில் பிப்ரவரி 2005 வரை ரூ.4.16 கோடிக்கு விற்பனை செய்து புதிய சாதனை அளவை எட்டியுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டில் இத்தொழிற்சாலை ரூ.5 கோடிக்கு மொத்த விற்பனை செய்யும் எனவும் இதனால் ரூ.10 இலட்சம் ரொக்க இலாபம் ஈட்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

**(iii) மாதேப்பள்ளியிலுள்ள கிரானைட் ஓடுகள் தொழிற்சாலை**

ரூ.2 கோடி செலவில் ஒரு புதிய பல ரம்ப இயந்திரத்தையும் ஒரு காலிப்ரேஷன் இயந்திரத்தையும் 2002–2003 இல் நிறுவியதன்மூலம் இத்தொழிற்சாலையில் ஒரு பகுதி நவீனமயமாக்கப்பட்டு இதனால் முந்தைய 21,300 ச.மீட்டர் உற்பத்தித் திறன் 33,600 சதுர மீட்டர் ஆக அதிகரித்துள்ளது. இதனால் இத்தொழிற்சாலையில் 2004–2005 ஆம் ஆண்டில் பிப்ரவரி 2005 வரை கிரானைட் ஓடுகளின் விற்பனை ரூ.3.49 கோடி ஆகும். கடந்த ஆண்டு பிப்ரவரி 2004 திங்கள் வரை விற்பனை ரூ.1.26 கோடி மட்டுமே ஆகும். 1994–1995 இல் தொடங்கியது முதல் இத்தொழிற்சாலை முதன் முறையாக 2004–2005 ஆம் ஆண்டில் ரூ.70 இலட்சம் ரொக்க இலாபமும் மற்றும் ரூ.10 இலட்சம் நிகர இலாபமும் ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம்**

மேக்னசைட் கனிமத்தை வெட்டியெடுப்பதற்காகவும், அதைக் கொண்டு மதிப்பு கூட்டப்பட்ட மேக்னசைட் பொருட்களை உற்பத்தி செய்யும் நோக்கத்துடனும் நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் 1979 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் பொதுத் துறை நிறுவனமாகிய தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் (டான்மேக்), சேலத்தில் நிறுவப்பட்டது. ஆண்டொன்றுக்கு 30,000 மெட்ரிக் டன்கள் முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் உற்பத்தி செய்வதற்காக ரூ.8.57 கோடி செலவில் சுழற்சூளை

ஒன்று 1985 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் தொடங்கி வைக்கப்பட்டது. மற்றொரு பிரிவான நிலைச் சூளை, மிதமாக எரியூட்டப்பட்ட மேக்னசைட் உற்பத்தி செய்கிறது. 2004–2005 ஆம் ஆண்டில் (பிப்ரவரி 2005 வரை) டான்மேக், கச்சா மாக்னசைட் உற்பத்தி குறியீட்டளவான 60,500 மெட்ரிக் டன்னிற்கெதிராக 82,584 மெட்ரிக் டன் உற்பத்தி செய்தும், விற்பனைக் குறியீட்டளவான 60,500 மெட்ரிக் டன்னிற்கெதிராக 98,147 மெட்ரிக் டன்கள் விற்பனையும் செய்துள்ளது.

2005–2006 ஆம் ஆண்டிற்கான உற்பத்தி மற்றும் விற்பனைக் குறியீட்டளவுகள் பின்வருமாறு:–

| | உற்பத்தி (மெட்ரிக் டன்கள்) | விற்பனை (மெட்ரிக் டன்கள்) |
|---|---|---|
| கச்சா மேக்னசைட் | 80,000 | 80,000 |
| முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் | 28,000 | 28,000 |
| மிதமாக எரியூட்டப்பட்ட மேக்னசைட் | 13,500 | 13,500 |

2004–2005 ஆம் ஆண்டில் (பிப்ரவரி 2005 வரை) டான்மேக் நிறுவனம் தேய்மான செலவு ரூ.20.35 இலட்சங்கள் மற்றும் வட்டி செலவு ரூ.166.95 இலட்சங்களுக்கு பிறகு ரூ.172.91 இலட்சங்கள் இலாபம் ஈட்டியுள்ளது. (தணிக்கைக்குட்பட்டது) இந்நிறுவனம் 1996–1997 ஆம் ஆண்டிற்குப் பிறகு முதன் முறையாக நடப்பு ஆண்டில் இலாபம் ஈட்டியுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டில் (மார்ச் 2005 முடிய) நிறுவனம் கச்சா மேக்னசைட் 90,000 டன்கள் முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் 31,000 டன்கள் மற்றும் மிதமாக எரியூட்டப்பட்ட மேக்னசைட் 13,500 டன்கள் உற்பத்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த உற்பத்தி கடந்த 15 ஆண்டுகளில் ஒரு சாதனையாகும்.

1. கச்சா மேக்னசைட் உற்பத்தியில் கன்வேயர் பெல்ட் திட்டம் ஜனவரி 2005–இல் ரூ,39.00 இலட்சங்கள் செலவில் தொடங்கப்பட்டு அதன்மூலம் கச்சா மேக்னசைட் உற்பத்தி சீரமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. தற்போதைய கச்சா மேக்னசைட் உற்பத்திச் செலவு, ஒரு டன்னுக்கு ரூ.1,351/–க்கு எதிராக, இத்திட்டத்தின்மூலம் கச்சா மேக்னசைட் சராசரி உற்பத்திச் செலவு ஒரு டன்னுக்கு ரூ.700 மட்டுமே ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.



2. சுழலும் சூளைப் பிரிவில் இரட்டை எரிபொருள் உபயோகப்படுத்தும் பர்னர் ரூ.36.50 இலட்சங்கள் செலவில் நிறுவப்பட்டு பர்னஸ் ஆயில் உபயோகப்படுத்தி சோதனை ஓட்டம்மூலம் முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் உற்பத்தி நடைபெற்று வருகிறது. இதன் மூலம் எரிசக்திச் செலவு 5 விழுக்காடு அளவிற்குக் குறையும் என்றும் மொத்த சேமிப்பு, ஆண்டு ஒன்றுக்கு ரூ.38.80 இலட்சங்கள் ஏற்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் எரிசக்திச் செலவைக் குறைக்கும் பொருட்டு உலை எண்ணெய்க்கு மாற்றாக, அதன் உபயோகத்தில் 20 முதல் 30 விழுக்காடு வரை பெட்ரோலியம் கோக் உபயோகப்படுத்துவதற்காக பெட்ரோலியம் கோக் அரைத்து உபயோகப்படுத்தும் திட்டம் தோராயமாக ரூ.150.00 இலட்சம் செலவில் 2005–2006 இல் நிறைவேற்றும் கருத்துரு டான்மேக் நிறுவனத்திடம் உள்ளது. இதன்மூலம் ஏற்படும் சேமிப்பினால், திட்ட செலவு மூன்று ஆண்டுகளில் திரும்பப் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

3. நிறுவனம் 2004–2005 இல் கச்சா மேக்னசைட், முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் மற்றும் மிதமாக எரியூட்டப்பட்ட மேக்னசைட் உற்பத்தி மற்றும் விற்பனையில் சாதனை அளவு எட்டியுள்ளது. மேலும் 10 ஆண்டுகளுக்குப் பிறகு 2004–2005 இல் (பிப்ரவரி 2005 வரை) நிறுவனம் மிதமாக எரியூட்டப்பட்ட மேக்னசைட் 3522 டன்கள் ஏற்றுமதி செய்து அன்னியச் செலாவணி ரூ.291.01 இலட்சங்கள் ஈட்டி நிறுவன வரலாற்றில் சாதனை படைத்துள்ளது.

## தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம்

தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் (டெல்) 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (டிட்கோ) துணை நிறுவனமாகத் தோற்றுவிக்கப்பட்டது. பின்னர் டிட்கோ நிறுவனம் டெல் நிறுவனத்தில் இருந்த மொத்த பங்குகளையும் 15–11–2002 அன்று அரசுக்கு மாற்றிவிட்டது. நைட்ரோ கிளிசரின் (என்.ஜி) வெடிமருந்து, கலவை வெடிமருந்து, வெடி ஊக்கி மற்றும் வெடித் திரிகளை டெல் நிறுவனம் உற்பத்திச் செய்கிறது. ஆரம்பத்தில் இந்நிறுவனம் தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கி வந்ததால், இதன் நிகர மதிப்பு எதிர்மறையாகி, செப்டம்பர் மாதம் 1992 ஆம் ஆண்டு தொழில் மற்றும் நிதி புனரமைப்புக் குழுமத்திடம் (பிஐஎப்ஆர்) பதிவு செய்யப்பட்டு ஒரு நலிந்த நிறுவனமாக அறிவிக்கப்பட்டது.

[2005 மார்ச் 30

இந்நிறுவனம், தொடர்ந்து எடுத்த முயற்சிகளினால் இலாபம் ஈட்டத் தொடங்கியது. எனவே, 31-03-2001 அன்று இந்நிறுவனத்தின் நிகர மதிப்பு நேர்மறையானது. எனவே, மேற்படி நிறுவனம் பி.ஐ.எப்.ஆர் கட்டமைப்பிலிருந்து அக்டோபர் 2002 இல் விடுபட்டது. இந்நிறுவனம் தற்போது ஒரு நலிந்த நிறுவனம் அல்ல. ரூ. 47 கோடியளவிலான அனைத்து குவிவு நட்டமும் 31-03-2003 அன்று சரி செய்யப்பட்டு விட்டது.

2003-2004 இல், டெல் நிறுவனம் எமல்சன் வகை வெடிமருந்து உற்பத்திச் செய்யும் பிரிவை ரூ 5.40 கோடியில் நிறுவியுள்ளது. தற்போது அனைத்து வகை எமல்சன் வெடிமருந்துகளையும் இந்நிறுவனம் உற்பத்திச் செய்கின்றது. இந்நிறுவனத்தின் எமல்சன் வெடிமருந்துகள் தற்போது சந்தையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மேலும், மின்சாரமில்லா வெடி ஊக்கிகள் உற்பத்திச் செய்யும் பிரிவையும் தன் சொந்த ஆராய்ச்சி மற்றும் தொழில் நுணுக்கத்தின் உதவியால் இந்நிறுவனம் நிறுவியுள்ளது. இவ்வகை வெடி ஊக்கிகள் தொடர்ந்து உற்பத்திச் செய்வதற்கான உரிமத்தைத் தலைமை வெடிமருந்து கட்டுப்பாட்டு அதிகாரி, நாக்பூர் வழங்கி உள்ளார்.

ஜனவரி 2004 இல் மத்திய அரசு தனது அறிவிக்கை எண் ஜி.எஸ்.ஆர்.59(இ), நாள் 21-1-2004-ன் மூலம் என்.ஜி. வகை வெடிமருந்துகள் இருப்பு, விற்பனை மற்றும் உபயோகத்தை 1-4-2004 முதல் தடை செய்துள்ளது. தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்திற்கு என்.ஜி.வகை வெடி மருந்துகள் மூலம் மட்டுமே 70 விழுக்காட்டிற்குமேல் வருவாய் கிடைக்கிறது. மத்திய அரசின் தடையாணைக்குப் பின்னர், இந்திய நிலக்கரி நிறுவனம், சிங்கரேணி சுரங்க நிறுவனம் மற்ற பெரிய பயனீட்டாளர்கள் அனைவரும் பிப்ரவரி 2004 முதல் என்.ஜி. வகை வெடிமருந்துகளைப் பயன்படுத்துவதை நிறுத்தி விட்டனர். எனவே டெல் நிறுவனத்தின் செயல்பாடு 2003-2004 இல் மிகவும் பாதிக்கப்பட்டது. ஆனாலும் எமல்சன் வெடிமருந்துகளை உற்பத்தி செய்து விற்பனை செய்ய ஆரம்பித்திருப்பதால் இந்நிறுவனத்தின் செயல்பாட்டில் முன்னேற்றம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2004-2005 ஆம் ஆண்டு பிப்ரவரி முடிய முதல் 11 மாதங்களில் டெல் நிறுவனம் 3,093 மெட்ரிக் டன்கள் எமல்சன் வகை வெடிமருந்துகளை உற்பத்தி செய்துள்ளது. மேலும் சிறிய விட்ட வெடிமருந்துகளின் உற்பத்தித் திறனை மேலும் 5000 மெட்ரிக் டன்கள் அதிகரிப்பதற்காக தேவையான தளவாடங்களை வாங்கியுள்ளது. இந்தத்



2005 மார்ச் 30]

தளவாடங்கள் மார்ச்-ஏப்ரல் 2005-இல் நிறுவப்பட்டு உற்பத்தி தொடங்கப்படும்.

தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் ஏற்கெனவே டிசம்பர் 2003இல் ஐ.எஸ்.ஓ. 9001:2000 தரச் சான்றிதழைப் பெற்றுள்ளது. 2005-2006 இல் மாசற்ற சூழலைப் பராமரிக்கவும், நல்ல பாதுகாப்பிற்காகவும் ஐ.எஸ்.ஓ. 14001 மற்றும் ஓ.எச்.எஸ்.ஏ.எஸ் 18001 தரச் சான்றிதழ்களைப் பெற டெல் நிறுவனம் தற்போது அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

2005-2006-இல் டெல் நிறுவனம், அங்கீகரிக்கப்பட்ட எமல்சன் வெடிமருந்துகளை இந்திய நிலக்கரி நிறுவனம் மற்றும் ஏனைய அரசுத் துறை நிறுவனங்களுக்கு விற்பனை செய்ய ஆரம்பிக்கும்.

## சதர்ன் ஸ்ட்ரக்சரல்ஸ் நிறுவனம்

சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனம் 1956 ஆம் ஆண்டு தனியார் துறையில் சரக்கு இரயில் பெட்டிகள், இரும்பு கட்டுமானங்கள் தயாரிப்பதற்காக தொடங்கப்பட்டது. தொழிலாளர் பிரச்சனைகள் காரணமாக 1969-1970இல் மூடப்பட்டது. எனவே இதில் பணிபுரிந்த சுமார் 1,200 ஊழியர்களின் நலனைக் கருத்தில்கொண்டு 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு இந்நிறுவனத்தினைத் தன் பொறுப்பில் ஏற்றுக் கொண்டது.

1988-1989 முதல் இந்நிறுவனத்தில் தொடர் இழப்பு ஏற்பட்டது. எதிர்மறையான நிகர மதிப்பின் காரணமாக 1992 ஆம் ஆண்டு இந்நிறுவனம் தொழில் மற்றும் நிதி புனரமைப்புக் குழுமத்தின் (BIFR) ஆய்விற்கு உட்படுத்தப்பட்டது. இக்குழுமத்தின் பரிந்துரையின் அடிப்படையில் 1998 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் புனரமைப்புத் திட்டம் ஒப்புதல் அளிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது. எனினும், மறுசீரமைப்புத் திட்டத்தின்மூலம் இந்நிறுவனம் புத்துயிர் பெற இயலவில்லை.

திரு. எஸ்.வி.எஸ்.ராகவன் அவர்கள் தலைமையிலான மாநில பொது நிறுவனங்கள் தொடர்பான குழுவானது 31-3-1998 அன்றைய நிலையில் தமிழ்நாடு அரசு சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனத்தின் நிலையினை மதிப்பீடு செய்யுமாறும் மாநில அரசின் நிதி உதவியின்றி, சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனம் தன்னை நிலைநிறுத்த முடியாவிட்டால், நிறுவனத்தை மூடிவிட வேண்டும் என்றும், அதன் அசையா சொத்துக்களைச் சந்தை நிலவர மதிப்பின்படி விற்றுவிட வேண்டும்

என்றும் பரிந்துரை செய்தது. சந்தையில் கடுமையான போட்டி நிலவியதாலும் தொழிலில் ஏற்பட்ட மந்த நிலை காரணமாகவும் இந்நிறுவனத்தின் மறுசீரமைப்பு முயற்சிகள் வெற்றி பெறவில்லை.

22–3–2002 அன்று சென்னையில் நடைபெற்ற தொழில் மற்றும் நிதி புனரமைப்பு குழுமக் கூட்டத்தில், இந்நிறுவனத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட புனரமைப்புத் திட்டம் தோல்வி அடைந்ததாக அறிவிக்கப்பட்டது. எனவே, குழுமத்தின் செயல்முறை முகமையான (Operating Agency) பாரத ஸ்டேட் வங்கி, நிறுவனத்தின் நிர்வாகப் பொறுப்பை மாற்றுதல் போன்ற நடவடிக்கை தொடர்பான விளம்பரத்தை வெளியிடுமாறு பணிக்கப்பட்டது. அதற்கிணங்க, பாரத ஸ்டேட் வங்கி, 6–8–2002 அன்று நிர்வாகப் பொறுப்பை மாற்றுதல்/எடுத்துக் கொள்ளுதல்/குத்தகை விடுதல் போன்றவற்றிற்கான விளம்பரத்தை வெளியிட்டது. பெறப்பட்ட விருப்பறிவிப்புகள் குழுமத்திற்கு (BIFR) அனுப்பப்பட்டுள்ளன. இதன் தொடர்பான இறுதியான ஆணைகள் குழுமத்தினரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், தமிழக அரசு விருப்ப ஓய்வுத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. அதன் அடிப்படையில் அனைத்துப் பணியாளர்களும் விருப்ப ஓய்வுத் திட்டத்தின்கீழ் விடுவிக்கப்பட்டனர். மேலும் விருப்ப ஓய்வு விண்ணப்பம் அளிக்காத 12 ஊழியர்களும் ஆட்குறைப்பின்கீழ் விடுவிக்கப்பட்டனர். 11 பணியாளர்கள் மட்டும் நிறுவனத்தின் எஞ்சியுள்ள பணிகளைக் கவனிக்கும் பொருட்டு ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் அமர்த்தப்பட்டுள்ளனர்.

## தமிழ்நாடு உப்பு நிறுவனம்

தமிழ்நாடு உப்பு நிறுவனம், 1974 ஆம் ஆண்டு, உப்பு உற்பத்தி செய்வதோடு உப்பு சார்ந்த துணைப் பொருள்கள் தயாரிக்கும் உள்ளாற்றலைப் பயன்படுத்தும் பொருட்டு நிறுமங்கள் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்டது. மிகவும் பின்தங்கிய இராமநாதபுரம் மாவட்டத்தில் கடற்கரையோரப் பகுதிகளில் உப்பு உற்பத்தி செய்து அதன்மூலம் அதிக வேலைவாய்ப்பு அதிகரிப்பு, பின்தங்கிய பகுதியின் வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பு ஆகிய தேவைகளை கருத்திற்கொண்டு, கடற்கரையோர பகுதிகளில் உப்பு தயாரித்து, அதன்மூலம் நிறுவனத்தில் வேலைவாய்ப்பைத் தொடர்ந்து அதிகரிக்கும் பொருட்டு, இந்நிறுவனம் அமைக்கப்பட்டது. தமிழ்நாடு உப்பு நிறுவனம் தற்பொழுது தொழிற்சாலைகளுக்குத் தேவையான உப்பு மற்றும் செறிவூட்டப்பட்ட உப்புக்களான அயோடின் கலந்த "அரசு" உப்பு மற்றும் இரும்பு மற்றும் அயோடின் கலந்த உப்பு ஆகியவைகளை உற்பத்திச் செய்வதில் ஈடுபட்டு வருகிறது.



இந்நிறுவனம் 1974–1975 ஆம் ஆண்டு ரூ.50 இலட்சம் அனுமதிக்கப்பட்ட மூலதனத்தைக் கொண்டு பணிகளைத் தொடங்கியது. இதன் தற்பொழுது அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் மற்றும் செலுத்தப்பட்ட மூலதனம் முறையே ரூ.400 இலட்சம் மற்றும் ரூ.317.01 இலட்சமும் ஆகும். இதன் மூலதனம் முழுமையாக மாநில அரசின் பங்குத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம், வாலிநோக்கத்திலுள்ள மாரியூர் வாலிநோக்கம் உப்பு வளாகத்திலுள்ள 5,524 ஏக்கர் மொத்த பரப்பளவில், 4,825 ஏக்கர் பரப்பளவு உப்பு உற்பத்திக்கு பயன்படத்தக்க பகுதியாய் உள்ளது. இந்நிறுவனம், இதுவரை 3,210 ஏக்கர் பரப்பளவு மேம்படுத்தப்பட்டு வருடத்திற்கு இரண்டு இலட்சம் டன்கள் உப்பு உற்பத்திச் செய்யும் தன்மையை நிலைநாட்டியுள்ளது.

இந்நிறுவனம் தொடர்ந்து தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டத்தின் மூலம் அயோடின் கலந்த அரசு உப்பை மதிய உணவு மையங்களுக்கு விநியோகம் செய்கிறது. இந்நிறுவனத்தின் திரண்ட வலிய விற்பனை வினைமுறைத் திறன்களினால் அண்டை மாநிலங்களான கர்நாடகம் மற்றும் ஆந்திரப் பிரதேசத்திற்கு பொது விநியோக முறையின் மூலமாகவும் மதிய உணவுத் திட்டத்தின் வாயிலாகவும் அயோடின் கலந்த அரசு உப்பின் விற்பனையில் முன்னேற்றம் அடைந்துள்ளது. தமிழ்நாடு உப்பு நிறுவனம், தமிழ்நாடு, கர்நாடகம் மற்றும் ஆந்திர மாநிலங்களிலுள்ள எல்லா மாவட்ட அதிகாரிகளையும் அனைத்து முயற்சியுடன் அணுகியதன்மூலம் நுகர்வு திறனை அதிகரிக்கச் செய்துள்ளது. பன்னாட்டு நிறுவனமான யுனிசெப், கனடாவிலுள்ள மைக்ரோ நியூட்ரியன்ட் இனிசியேட்டிவ் மற்றும் அயோடின் பற்றாக்குறையினால் ஏற்படும் குறைபாடுகளை கட்டுப்படுத்தும் பன்னாட்டு மன்றம், தமிழக அரசையும் மற்றும் தமிழ்நாடு உப்பு நிறுவனத்தையும், பொது விநியோகத் திட்டத்தின்மூலமும், மதிய உணவு மையங்களுக்கு அயோடின் கலந்த உப்பை விநியோகம் செய்வதின்வாயிலாக அயோடின் குறைபாட்டை அடியோடு ஒழிப்பதற்கு எடுத்த பெரும் முயற்சியைப் பாராட்டியுள்ளன.

தமிழ்நாடு உப்பு நிறுவனம் தொழிற்சாலைக்குகந்த உப்பை தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து சீனாவிற்கு ஏற்றுமதி செய்வதற்கான ஏராளமான விசாரணைகள் பெறப்பட்டுள்ளன. இந்நிறுவனம் உப்பை

[2005 மார்ச் 30

ஏற்றுமதி செய்வதற்கு நல்ல விலை கோரியுள்ளது. ஏற்றுமதியின் மூலம் கணிசமான இருப்பு குறைக்கப்படும். ஏற்றுமதி உறுதிசெய்யப்படுமானால் கணிசமான அளவிற்கு, சுமார் 30,000 டன்கள் 2005–2006 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்படும்.

தமிழ்நாடு உப்பு நிறுவனம், கனடாவிலுள்ள ஒரு பன்னாட்டு வளர்ச்சி அமைப்பான மைக்ரோ நியூட்ரியன்ட் இனிசியேட்டிவ் (Micronutrient Initiative) அளித்துள்ள சுமார் ரூ.90 இலட்சம் மானிய உதவியுடன் செறிவூட்டப்பட்ட உப்பினைத் தயாரிப்பதற்குத் தேவைப்படும் வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டமும் மற்றும் இருவித செறிவூட்டப்பட்ட உப்பை (அயோடின் மற்றும் இரும்புச் சத்து) தயாரிக்கும் திட்டமும் முடிக்கப்பட்டு, ஜூன் மாதம் 2004–ல் இருந்து செயல்பட்டு வருகிறது. இதன் வாயிலாக தமிழ் நாடு உப்பு நிறுவனம் நாட்டிலேயே இருவித செறிவூட்டப்பட்ட உப்பை அறிமுகப்படுத்தும் முதன்மை நிறுவனமாக விளங்குகிறது.

மேலும், இந்நிறுவனம் ரூ.2 கோடி முதலீட்டில் தனியார் துறை பங்கேற்புடன் புரோமின் தயாரிக்கும் தொழிற்சாலையை வாலிநோக்கம் உப்புத் திட்டத்தில் துவங்க முயற்சிகள் எடுத்துள்ளது. புரோமின் தயாரிப்பதற்கு மூலப்பொருளான குறைந்த விலை மதிப்புள்ள உப பொருளான உப்புக் கழிவு நீரை இந்நிறுவனம் வழங்குவதினால் இத்திட்டத்திற்கு மேலும் மதிப்பு கூடுகிறது. இத்திட்டப்பணிகள் தொடங்கப்பட்டு முன்னேற்ற நிலையில் உள்ளன. இப்புரோமின் தொழிற்சாலை 30–06–2005–க்குள் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு உப்பு நிறுவனம், வாலிநோக்கம் உப்புக் கூட்டுத் திட்டத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுக்காக, 250 குடியிருப்புகள் மத்திய அரசின் "நமக் மஸ்தூர் ஆவாஸ் யோஜனா" திட்டத்தின்கீழ் கட்டத் துவங்கியுள்ளது. ஒவ்வொரு குடியிருப்பின் மத்திய அரசின் மதிப்பீடு ரூ.50,000/–. இதில் 90 சதவீதப் பங்கினை, அதாவது மதிப்பீடான ரூ.45,000/–ஐ மத்திய அரசு வழங்கும். மீதி கட்டுமான தொகையை பயனடையும் தொழிலாளர்களின் வருங்கால வைப்பு நிதியிலிருந்து பெறப்படும். இதுவரை இத்திட்டத்திற்கு மத்திய அரசு முதல் மற்றும் இரண்டாம் தவணையாக ரூ.43.75 இலட்சம் வழங்கியுள்ளது. ரூ.32.70 இலட்சம், தொழிலாளர்களின் பங்காக வருங்கால வைப்பு நிதியிலிருந்து பெறப்பட்டுள்ளது. மழை மற்றும் "சுனாமி"யினால் ஏற்பட்ட நிலைகுலைவு காரணமாக நான்கு மாதங்கள் அதாவது அக்டோபர் 2004 முதல் ஜனவரி 2005 வரை கட்டுமானப் பணிகள்



2005 மார்ச் 30]

பாதிக்கப்பட்டுள்ளது. இப்போது கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு முன்னேற்ற நிலையில் உள்ளது. கட்டுமானப் பணிகள் 30–06–2005-இல் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிறுவனம், 1990–1991 முதல் தொடர்ச்சியாக இலாபம் ஈட்டி வருகிறது. தமிழ்நாடு உப்பு நிறுவனம் 2002–2003 மற்றும் 2003–2004 ஆம் ஆண்டில் ஈவுப் பங்குத் தொகை, குத்தகைத் தொகை மற்றும் கூடுதல் ராயல்டியாக முறையே ரூ.171.71 இலட்சம் மற்றும் ரூ.58.71 இலட்சம் அரசுக்கு வழங்கியுள்ளது. 2003–2004 ஆம் ஆண்டில் (வரிக்குப்பின்) நிகர இலாபம் ரூ.44.68 இலட்சம் ஈட்டியுள்ளது. 2004–2005 ஆண்டில் (28–02–2005 முடிய) வரிக்குப்பின் நிகரலாபம் (தோராயமாக) ரூ.89.41 இலட்சம் ஈட்டியுள்ளது.

மிகவும் பின்தங்கிய மாவட்டமான இராமநாதபுரத்தில் தொழிலாளர்களுக்கு உப்பு தொழிற்சாலையில் உறுதியான வேலைவாய்ப்பையும், தமிழக அரசுக்கு ஆதாயப் பங்கு வழங்கும் முன்னிலை பொதுத் துறை நிறுவனங்களுக்கிடையே தமிழ் நாடு உப்பு நிறுவனம் ஒரு முக்கிய இடத்தை தொடர்ந்து வகிக்கிறது.

## தமிழ்நாடு தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாட்டில் பெரிய அளவிலான தொழில் முதலீட்டாளரைக் கவரும் வண்ணம் 1992 ஜனவரி திங்களில் "தமிழ்நாடு தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம்" (கைடன்ஸ்) நிறுவப்பட்டது. இந்நிறுவனம் ஏற்படுத்தப்பட்டதிலிருந்து இதுவரை ஏறத்தாழ ரூ.8350 கோடி முதலீட்டில் பெரும் முதலீட்டுப் பிரேரணைகளை ஈர்த்துள்ளது.

இந்நிறுவனம் துவங்கப்பட்ட 1992 ஆம் ஆண்டு, தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் ஆகிய ஐந்து நிறுவனங்கள் தலா ரூ.5 இலட்சம் வருடாந்திர நிதி பங்களிப்பாக வழங்கி வருகின்றன.

நிர்வாகச் செலவுகள் மற்றும் வாடிக்கையாளர்களின் தேவைகள் கூடுதலாக உள்ளதால் இந்நிதி போதுமானதாக இல்லையென்பதைக் கருத்தில்கொண்டு அதனுடைய செயல்பாடுகள் மற்றும் சேவை வகைகளை மேம்படுத்த 2004–2005 நிதியாண்டிற்குத் தொடரா செலவினமாக ரூ.15 இலட்சமும், தொடர் செலவினமாக வருடத்திற்கு ரூ.20 இலட்சம் வீதம் 2004–2005 முதல் மூன்றாண்டுகளுக்கு ஒதுக்கீடு

செய்து அதனடிப்படையில் 2004–2005 ஆம் ஆண்டிற்கு ரூ.3.5 லட்சம் அரசு வழங்கியுள்ளது.

## புவியியல் மற்றும் சுரங்கத் துறை

கனிம நிர்வாகம், கனிம ஆய்வு மற்றும் கனிம மேம்பாட்டிற்கு ஊக்குவித்தல் ஆகிய பணிகள் புவியியல் மற்றும் சுரங்கத்துறையின் தலையாய பணிகளாகும்.

கனிம நிர்வாக நடவடிக்கைகள் பொறுத்த வரையில் பெருங்கனிமங்கள் மற்றும் சிறுகனிமங்கள், சலுகைகள், சட்டங்கள் மற்றும் விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள உரிய வழிமுறைகளைக் கடைபிடித்து வழங்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம் கனிம மேம்பாடு மற்றும் கனிமப் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகின்றது. சிறு மற்றும் பெருங்கனிமங்களை வெட்டியெடுக்க கனிம விதிகளின்படி சலுகைகள் வழங்கப்பட்டு வருகிறது. கனிம வள நிர்வாகம் என்பது சட்டத்திற்குப் புறம்பாக கனிமங்களை வெட்டியெடுப்பது அவைகளை கடத்துவது போன்ற குற்றங்களைத் தடுத்து அரசுக்கு கனிம வருவாய் இழப்பினைத் தவிர்த்தல் ஆகியனவும் உள்ளடக்கியதாகும்.

### கனிமங்களின் மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை

பட்டா நிலங்களில் உள்ள பெருவகைக் கனிமங்களுக்கு முன்னோட்ட ஆய்வு, கனிம ஆய்வு உரிமம், குத்தகை உரிமம் வழங்கும் அதிகாரம் ஆகியவை புவியியல் மற்றும் சுரங்கத் துறை இயக்குநருக்கு அளிக்கப்பட்டுள்ளது. அரசு நிலங்களில் உள்ள பெருவகை கனிமங்களுக்கு, முன்னோட்ட ஆய்வு அனுமதி, கனிம ஆய்வு உரிமம் மற்றும் குத்தகை வழங்கும் அதிகாரமும் பட்டா மற்றும் அரசு நிலங்களில் கிரானைட் வெட்ட குவாரி குத்தகை வழங்கும் அதிகாரமும் மாநில அரசிடம் உள்ளது. கிரானைட் மற்றும் சிறுவகை கனிமங்கள் தொடர்பாக மாவட்ட ஆட்சியர்களால் வழங்கப்படும் ஆணையின் மீது மேல்முறையீடு செய்யும் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து அவற்றின் மீதான ஆணை வழங்க இத்துறையின் இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. கனிமத் துறை இயக்குநரின் ஆணைகளை மறு ஆய்வு செய்யும் அதிகாரம் மாநில அரசிடம் உள்ளது.

### கனிம ஆய்வு

இத்துறை மாநிலத்தில் புதிய கனிம இருப்புகளைக் கண்டறிய பல்வேறு புவியியல் பணிகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்கிறது.



இத்துறை மாநிலத்திலுள்ள கனிம இருப்புகளை ஆய்வு மற்றும் மதிப்பீடு செய்கிறது. இத்துறை மரபு வழி மற்றும் நவீன தொழில்முறைகளைக் கையாண்டும் கனிம ஆய்வு செய்கிறது. மாநிலத்தின் மலைப் பகுதிகளான நீலகிரி, பழனி மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கொடைக்கானல் பகுதிகளில் நிலச்சரிவு ஏற்படாமல் இருக்க வழிவகுக்கவும், அனைத்து வளர்ச்சிப் பணிகளுக்கும் புவிநுட்பவியல் ஆய்வுகள் மேற்கொண்டு சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் மற்றும் மக்களின் உடைமைகளைப் பாதுகாக்கவும் தக்க அறிவுரைகள் வழங்கி வருகிறது.

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் பகுதிகளில் உள்ள சுண்ணாம்புக்கல் படிவங்களின் இருப்பளவை அறிய மறுமதிப்பீடு தற்போது தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்துறையில் அமைந்துள்ள நுண்ணிய பகுப்பாய்வுக் கூடம் மற்றும் இரசாயன ஆய்வுக்கூடத்தில் கனிம மாதிரிகளில் மூலகங்களைப் பகுப்பாய்வுகளின்மூலம் மில்லியன் மற்றும் பில்லியனில் ஒரு பகுதி அளவு வரை புதிய நவீன வழிமுறைகளைப் பயன்படுத்தி ஆய்வுகள் செய்யப்படுகின்றன.

### இதர திட்டப் பணிகள்

இத்துறையில் இயங்கும் பூகோளத் தகவல் அமைப்பு சோதனைக் கூடம் ரூ.24.05 இலட்சத்தில் மேம்படுத்த கணினிகளுக்கு வன் மற்றும் மென்பொருள்களை, வல்லுநர் குழுவின் பரிந்துரையின் பேரில் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### திட்டங்கள்

1. இத்துறையில் ரூ.3.50 இலட்சத்தில் நவீன மின்னணு தராசு வாங்கப்பட்டு நவீன இரசாயன ஆய்வுக்கூட மேம்பாட்டு வசதி மார்ச் 2005–க்குள் முடிவுறும்.

2. இத்துறையின் சென்னை தலைமை அலுவலக கட்டடம் மற்றும் அதன் மின் இணைப்புக்களை ரூ.10.00 இலட்சத்தில் சீரமைக்கும் பணி, பொதுப் பணித் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு பணி முன்னேற்ற நிலையில் உள்ளது.

[2005 மார்ச் 30

**துறை மேம்பாடு**

2005–2006 ஆம் ஆண்டில் நடைபெற உள்ள தேசிய மற்றும் சர்வதேச அளவிலான நிகழ்வுகளில் தமிழ்நாட்டில் உள்ள கனிம வளங்களை எடுத்துக்காட்டுவதற்காக இத்துறை பங்கேற்கும்.

**புதிய திட்டப் பணிகள் 2005–2006**

1. ஆய்வுப் பணிகளில் நவீன தொழில்நுட்ப முறைகளை மேம்படுத்தும் பொருட்டு 2005–2006இல் ரூ.5.50 இலட்சம் செலவில் "பூகோள இருப்பிடம் காட்டும் கையடக்கக் கருவி" பத்து எண்ணிக்கை வாங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

2. இத்துறையினை மின்னணு ஆளுகைக்குத் தயாராக்கும்வகையில் கணினிமயமாக்கும் பொருட்டு, முதல் கட்டமாக பத்து மாவட்ட அலுவலகங்களுக்கு ரூ.12.00 இலட்சம் செலவில் கணினி மற்றும் உபகரணங்கள் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**கனிம வருவாய் வரவினம்**

நமது மாநிலத்திற்கு இத்துறையின் சீரிய கனிம நிர்வாகத்தின்மூலம் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் ஈட்டப்பட்ட வருவாய் வரவினம் பின்வருமாறு:–

| ஆண்டு | ரூபாய் (கோடிகளில்) |
|---|---|
| 2000–2001 | 163.12 |
| 2001–2002 | 254.26 |
| 2002–2003 | 317.20 |
| 2003–2004 | 474.81* |
| 2004–2005 | 445.95** (பிப்ரவரி 2005 முடிய) |

* பொதுப் பணித் துறையினரால் மணல் விற்பனை மூலம் ரூ.108.61 கோடி.

** பொதுப் பணித் துறையினரால் மணல் விற்பனை மூலம் பிப்ரவரி 2005 முடிய ரூ.119.20 கோடி.



2005 மார்ச் 30]

இத்துறையினால், வரும் ஆண்டுகளில் செம்மையான கனிம நிர்வாக நடவடிக்கைகள் மூலமும், கனிம தொழிற்சார்ந்த நிறுவனங்களை ஊக்குவிப்பது மற்றும் வழிகாட்டுதல் மூலமும், புதிய கனிம ஆய்வுகளை மேற்கொள்ளுதல் மூலமும் வருவாயைப் பெருக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**சர்க்கரைத் தொழில்**

தமிழ்நாட்டில் சர்க்கரைத் தொழில் ஒரு முக்கியமான வேளாண் சார்ந்த தொழிலாக உள்ளது. இத்தொழில் இம்மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியில், குறிப்பாக கிராமப்புறப் பொருளாதார மேம்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கிறது. சர்க்கரைத் தொழில், பல்லாயிரக்கணக்கான கிராமப்புற மக்களுக்கு நேரடி வேலைவாய்ப்பையும், கரும்பு சாகுபடி, அறுவடை, போக்குவரத்து மற்றும் இதர பணிகள் மூலம் பல இலட்சக்கணக்கான விவசாயிகளுக்கும், வேளாண் தொழிலாளர்களுக்கும் மறைமுக வேலை வாய்ப்பையும் அளிக்கிறது. தமிழ்நாட்டில் 38 சர்க்கரை ஆலைகள் உள்ளன. அவற்றில் 16 ஆலைகள் கூட்டுறவுத் துறையிலும், 19 ஆலைகள் தனியார் துறையிலும் உள்ளன. இது தவிர நிறுமங்கள் சட்டத்தின்கீழ் 1974 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட பொதுத் துறை நிறுமமான தமிழ்நாடு சர்க்கரைக் கழகம், மூன்று பொதுத் துறை சர்க்கரை ஆலைகளான அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை, பெரம்பலூர் சர்க்கரை ஆலை மற்றும் மதுரா சர்க்கரை ஆலை ஆகிய ஆலைகளை இயக்கி வருகிறது. தமிழ் நாட்டிலுள்ள 38 ஆலைகளின் மொத்த அரைவைத் திறன் நாளொன்றுக்கு 1,04,550 டன்னும் ஆண்டுக்கு சுமார் 180 இலட்சம் டன்னும் ஆகும். கூட்டுறவு துறையிலுள்ள 16 சர்க்கரை ஆலைகளில் மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் நேஷனல் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் 2001–2002 மற்றும் 2002–2003 ஆம் பருவங்களில் அரைவை மேற்கொள்ளப்படவில்லை. பொதுத் துறையிலுள்ள மதுரா சர்க்கரை ஆலை 2002–2003 ஆம் பருவம் முதலும், தனியார் துறையில் உள்ள அருணாசலம் சர்க்கரை ஆலை 2003–2004 ஆம் பருவம் முதலும் அரைவை மேற்கொள்ளப்படவில்லை. மேற்படி நான்கு ஆலைகளிலும் கரும்பு அரைவை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால், இயங்கும் ஆலைகளின் எண்ணிக்கை 34 ஆக உள்ளது. இவைகளின் அரைவைத் திறன் நாளொன்றுக்கு 95800 டன்களாகும். 2003–2004 ஆம் அரைவைப் பருவத்தில், 92.80 இலட்சம் டன்கள் கரும்பு அரைக்கப்பட்டு, 9.20 இலட்சம் டன்கள் சர்க்கரையை 9.92 விழுக்காடு

சராசரி கட்டுமானத்தில் இவ்வாலைகள் உற்பத்தி செய்துள்ளன. மேலும், இறக்குமதி செய்யப்பட்ட கச்சா சர்க்கரையிலிருந்து (Raw Sugar) தனியார் ஆலைகள் 2.08 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்தன. 2004–2005 அரைவைப் பருவத்தில், மதுராந்தகம், தேசிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, மதுரா சுகர்ஸ் மற்றும் அருணாசலம் சுகர்ஸ் ஆகிய ஆலைகளைத் தவிர தமிழகத்திலுள்ள அனைத்து ஆலைகளிலும் 99.61 இலட்சம் டன்கள் கரும்பு அரைக்கப்பட்டு 9.84 இலட்சம் டன்கள் சர்க்கரையை 9.88 விழுக்காடு சராசரி கட்டுமானத்தில் உற்பத்தி செய்யுமென மதிப்பிடப்பட்டது. தமிழகத்திலுள்ள கூட்டுறவு, பொதுத் துறை மற்றும் தனியார் துறை சர்க்கரை ஆலைகள் 28-2-2005 வரை 49.90 இலட்சம் டன்கள் கரும்பை அரைத்து, 4.98 இலட்சம் டன்கள் சர்க்கரையை 9.97 விழுக்காடு சராசரி கட்டுமானத்தில் உற்பத்தி செய்துள்ளது. 2003–2004 பருவத்தில் இவ்வாலைகளின் அரைவைத் திறன் 56 விழுக்காடாக இருந்தது. இது 2004–2005 ஆம் பருவத்தில் 58 விழுக்காடாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள்**

2003–2004 ஆம் அரைவைப் பருவத்தில் 14 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலும் 2 பொதுத் துறை சர்க்கரை ஆலைகளிலும் அரைவை மேற்கொள்ளப்பட்டு 28.05 இலட்சம் டன்கள் கரும்பு அரைக்கப்பட்டு 2.78 இலட்சம் டன்கள் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது.

2004–2005 ஆம் அரைவைப் பருவத்தில் கூட்டுறவு மற்றும் பொதுத் துறையிலுள்ள 19 சர்க்கரை ஆலைகளில், மதுராந்தகம், தேசிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலை மற்றும் மதுரா சுகர்ஸ் ஆலைகளைத் தவிர, 16 சர்க்கரை ஆலைகள் மட்டும் அரைவையை மேற்கொண்டு உள்ளன. இவ்வாலைகள், 28-2-2005 வரை 21.75 இலட்சம் டன்கள் கரும்பை அரைத்து, 2.17 இலட்சம் டன்கள் சர்க்கரையை 9.96 விழுக்காடு சராசரி கட்டுமானத்தில் உற்பத்தி செய்துள்ளன.

**கரும்புச் சக்கை**

சர்க்கரை ஆலைகள் தாங்கள் உற்பத்திச் செய்யும் உப பொருளான கரும்புச் சக்கையை நீராவி மூலம் எரிசக்தி உற்பத்திச் செய்ய பயன்படுத்தி ஆலையை இயக்குகின்றன. உபரி கரும்பு சக்கையை தமிழ்நாடு காகித நிறுவனத்திற்கு விற்பனை செய்து வருகிறது.



**இணை மின் உற்பத்தி**

கூட்டுறவுத் துறையில் மூன்று சர்க்கரை ஆலைகள் அதாவது, எம்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை (சேத்தியாதோப்பு), செய்யாறு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை (அனக்காவூர்) மற்றும் சுப்ரமணிய சிவா கூட்டுறவுச் சர்க்கரை ஆலை (அரூர்) ஆகியவை இணை மின் உற்பத்தி நிலையங்களை அமைத்து வெற்றிகரமாக செயல்படுத்தி வருகின்றன. இந்த ஆலைகளில் உற்பத்தியாகும் உபரியான மின்சாரம், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு விற்கப்பட்டு வருகிறது. தனியார் துறையில் 13 தனியார் சர்க்கரை ஆலைகளில் இணை மின் உற்பத்தி செய்யப்படுகின்றது.

**கருப்பஞ்சாறு கசண்டு**

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் 2003–2004 அரைவைப் பருவத்தில், 1.21 இலட்சம் டன்கள் கரும்புச் சாறு கசண்டு உற்பத்தி செய்துள்ளன. 2004–2005 பருவத்தில் கரும்புச் சாறு கசண்டு உற்பத்தி 1.57 இலட்சம் டன்களாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 28-2-2005 வரை 0.86 இலட்சம் டன் கரும்புச் சாறு கசண்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

**வடிப்பகங்கள்**

தமிழ்நாட்டில் 10 சர்க்கரை ஆலைகளில் வடிப்பகங்கள் இயங்குகின்றன. மேற்கண்ட 10 வடிப்பகங்களில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் உள்ள இரண்டு வடிப்பகங்களில் 2003–2004 ஆம் பருவத்தில் 166.68 இலட்சம் லிட்டர் எரிசாராயம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 2004–2005 ஆம் பருவத்தில் 155.48 இலட்சம் லிட்டர் எரிசாராயம் உற்பத்தி செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. 28-2-2005 வரை 123.31 இலட்சம் லிட்டர் எரிசாராயம் உற்பத்திச் செய்யப்பட்டுள்ளது.

[2005 மார்ச் 30

## இணைப்பு II

(271 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 16

## கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை

## கைத்தறி மற்றும் துணிநூல்

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006

### 1. முன்னுரை

தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில் ஜவுளித் தொழில் மிக முக்கிய இடத்தினை வகிக்கின்றது. ஜவுளித் தொழில், இந்தியாவில் முன்னேற்றம் அடைவதற்கு தமிழ்நாடு மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. நூற்புத் தொழில், கைத்தறி, விசைத்தறி மற்றும் பின்னலாடைத் தொழில் இவை நான்கும் இம்மாநில துணித் தொழிலில் நான்கு தூண்களாக உள்ளன.

கைத்தறி நெசவாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதுடன், கைத்தறி, விசைத்தறி மற்றும் துணிநூல் பிரிவுகளின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்குப் பாடுபடுவதும், இத்துறையின் முக்கிய நோக்கமாகும்.

கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் துறைத் தலைவராகவும், தலைமையக அளவில் பல்வேறு அலுவலர்களும், சரக அளவில் கைத்தறி மற்றும் துணிநூல் துணை/உதவி இயக்குநர்களும் உறுதுணையாக உள்ளனர். கைத்தறித் தொழிலின் மேம்பாட்டுக்காகவும், கைத்தறி நெசவாளர்களின் நல்வாழ்வுக்கெனவும் பல்வேறு திட்டங்கள் ஆணையரகத்தால் உருவாக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆணையரக அளவிலான செயல்பாடுகளைக் கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் நிர்வகித்து வரும் நிலையில், அரசின் கொள்கைகள் மற்றும் நெசவாளர்களுக்கான திட்டங்கள் நெசவாளர்களைச் சிறந்த முறையில் சென்றடையுமாறு செயல்படுத்துவதில் பல்வேறு சரகங்களில் உள்ள துணை/உதவி இயக்குநர்கள் பங்கு வகிக்கின்றனர்.

மாநிலம் முழுவதும் உள்ள பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் இத்தொழில் சார்ந்த பல்வேறு கூட்டுறவு நிறுவனங்களுக்குத் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகளின்படி



2005 மார்ச் 30]

செயல் பதிவாளராக கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் செயல்படுகிறார். கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் தமிழ்நாட்டின் "மாநில துணிநூல் அதிகார ஆணைக்குழு"வாகச் செயல்பட்டு துணிநூல் (வளர்ச்சி மற்றும் ஒழுங்குபடுத்துதல்) ஆணை 1993-ஐச் செயல்படுத்தும் அதிகாரம் படைத்தவராகவும் விளங்குகிறார்.

தமிழ்நாட்டில் 1,247 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், 132 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், 18 கூட்டுறவு நூற்பாலைகள், தலைமைச் சங்கமான தமிழ்நாடு மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ–ஆப்டெக்ஸ்), தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் (டான்ஸ்பின்), இவற்றைத் தவிர பொதுத் துறை நிறுவனங்களான தமிழ்நாடு சரிகை ஆலை, தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் ஆகியவை கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையரின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் செயல்படுகின்றன.

### 2. துணித் தொழிலின் பல்வேறு பிரிவுகளின் தற்போதைய நிலை

#### (அ) கைத்தறித் தொழில்

கைத்தறித் தொழிலானது இந்தியாவில் அதிக முக்கியத்துவம் வாய்ந்த பழமையான குடிசைத் தொழிலாக இருந்து, கிராமப்புற மக்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பு வழங்கி வருகின்றது. தமிழ்நாட்டின் கைத்தறித் தொழில் 11.64 இலட்சம் நெசவாளர்கள் மற்றும் 4.29 இலட்சம் நெசவாளர் குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி கிராமப் பகுதியிலுள்ள ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றமடையச் செய்வதில் பெரும்பங்கு வகிக்கிறது. தமிழகத்தில் 28-02-2005-ல் 1,247 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 2.11 இலட்சம் கைத்தறிகள் செயல்பட்டு வருகின்றன. எஞ்சியுள்ள தறிகள், கூட்டுறவு அல்லாத அமைப்பின்கீழ் உள்ளன. மொத்தமுள்ள 1,247 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில், 1,169 சங்கங்கள் பருத்தி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களாகவும், மீதமுள்ள 78 சங்கங்கள் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களாகவும் உள்ளன. கைத்தறி நெசவாளர்கள் பெருமளவில் வசித்து வரும் கிராமம் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. மைய மற்றும் மாநில அரசுகள் செயல்படுத்தும் வளர்ச்சி மற்றும் நலத் திட்டங்கள் அனைத்தும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக நெசவாளர்களைச் சென்றடைகின்றன.

[2005 மார்ச் 30

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் ரூ.559.72 கோடி மதிப்புள்ள 1,083.26 இலட்சம் மீட்டர் கைத்தறித் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.696.58 கோடி மதிப்பிற்கு கைத்தறித் துணிகள் 2004-05 ஆம் ஆண்டில் (28-02-2005 வரை) விற்பனை செய்யப்பட்டுள்ளன. 2003-04 ஆம் ஆண்டு விற்பனையைவிட 2004-05 ஆம் ஆண்டில் (28-02-2005 வரை) ரூ.121.97 கோடி அளவிற்குக் கைத்தறித் துணிகள் கூடுதலாக விற்பனை செய்யப்பட்டுள்ளன. 2003-04 ஆம் ஆண்டில் 527 ஆக இருந்த இலாபம் ஈட்டும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 2004-05 ஆம் ஆண்டில் (28-02-2005 வரை) 601 ஆக உயர்ந்துள்ளது. நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாட்டிற்கு பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய அம்சங்களில் விற்பனை அம்சம் ஒரு முக்கியக் காரணியாகும். சந்தையில் வாடிக்கையாளர்களைக் கவரும் வகையில் எளிதில் விற்பனையாகக் கூடிய இரகங்களையும்/ஏற்றுமதி இரகங்களையும் உற்பத்தி செய்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை இத்துறை ஊக்குவித்து வருவதோடு, சந்தை நிலவரத்திற்கேற்ப தகுந்த செயல்திட்டத்தினை வழங்கி விற்பனையை அதிகரிக்க நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. 2005-06 ஆம் ஆண்டில் அதிக அளவில் வடிவமைப்புகளைப் புகுத்தி, கைத்தறித் துணிகளின் விற்பனையை அதிகரிக்க புதிய விற்பனை உத்திகள் செயல்படுத்தப்படவுள்ளன.

## (ஆ) விசைத்தறித் தொழில்

தமிழ்நாட்டில் விசைத்தறித் தொழில் மக்களின் துணித் தேவையினைப் பூர்த்தி செய்வதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. விசைத்தறித் தொழிலில் காடா மற்றும் பல்வேறு பதனிடப்பட்ட துணி ரகங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. துணி உற்பத்தி செய்வதிலும் வேலைவாய்ப்பு ஏற்படுத்துவதிலும் இத்துறை தொடர்ந்து முன்னிலை வகித்து வருகின்றது. மேலும், ஏற்றுமதி செய்வதிலும் இதன் பங்கு குறிப்பிடத்தக்க அளவு உள்ளது.

இந்தியாவில் மொத்தமுள்ள 16.66 இலட்சம் விசைத்தறிகளில் 4.00 இலட்சம் விசைத்தறிகள் தமிழ்நாட்டில் உள்ளன. அவற்றில் 3.20 இலட்சம் தறிகள் பதிவு செய்யப்பட்ட விசைத்தறிகளாகும். இந்த விசைத்தறிகளில் 28,376 விசைத்தறிகள் 132 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின்கீழ் இயங்கி வருகின்றன. விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் இலவச வேட்டி சேலை மற்றும் இலவசச் சீருடை வழங்கும் திட்டத்திற்குத் தேவைப்படும் துணிவகைகள் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. கடந்த 2004-2005 ஆம் ஆண்டில் (28-02-2005வரை) ரூ.166.43 கோடி மதிப்புள்ள 1,037.20 இலட்சம் மீட்டர் துணிகளை விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்துள்ளன.



2005 மார்ச் 30]

விசைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்குவதற்காகச் சந்தையில் எளிதில் விற்பனை செய்யக்கூடிய ரகங்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான உற்பத்தித் திட்டம் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## (இ) துணித் தொழில்

### (i) துணிநூல் ஆலைகள்

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு துணிநூல் ஆலைகள் முதுகெலும்பாக இருந்து வருகின்றன. இவற்றில் பெரும்பான்மையானவை தனியாரால் நிர்வகிக்கப்பட்டு வருவதுடன், பருத்தி சார்ந்தவையாகவும் உள்ளன. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் மாநிலத்தின் துணித் தொழில் தனிச் சிறப்பு பெற்று முக்கியப் பங்கு வகித்து வருகின்றது. துணிநூல் தொழிலானது, வேலைவாய்ப்பு வழங்குவதிலும், இந்தியாவின் வர்த்தகத்திலும் மிக முக்கியப் பங்கினை வகித்து வருகின்றது. மத்திய மற்றும் மாநில அரசுகள் இத்தொழிலின் மூலம் கணிசமான வருவாய் ஈட்டுவதுடன், ஏற்றுமதி வாயிலாக அன்னியச் செலவாணியை ஈட்டவும் இத்தொழில் உறுதுணையாக உள்ளது. இந்தியாவிலுள்ள 2,939 பெரிய, நடுத்தர மற்றும் சிறிய துணிநூல் ஆலைகளில் 1,729 ஆலைகள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளன. இதில் 18 கூட்டுறவு நூற்பு ஆலைகளும், 13 தேசிய துணிநூல் கழக ஆலைகளும் மற்றும் 20 கூட்டு ஆலைகளும் அடங்கும். மாநிலத்தில் உள்ள ஆலைகள் 15.66 மில்லியன் கதிர்களுடன் 2.21 இலட்சம் தொழிலாளர் திறன் கொண்டும் செயல்பட்டு வருகின்றன. மாநிலத்தின் மொத்த நூல் உற்பத்தி ஆண்டொன்றுக்கு 1,164.80 மில்லியன் கி.கி.க்கும் மேற்பட்டதாக உள்ளது. இது நாட்டின் மொத்த நூல் உற்பத்தியில் 38 சதவிகிதம் ஆகும். பருத்தி நூல் உற்பத்தி மற்றும் பருத்தி நூல் அல்லாத நூல் உற்பத்தியில் நாட்டிலேயே முதன்மை மாநிலமாக இம்மாநிலம் விளங்குகிறது.

சந்தையில் போட்டியிடும் வகையில் பன்னாட்டுத் தரத்துடன் கூடிய தொழில்நுட்ப மேம்பாட்டு நிதித் தொழில்நுட்பத்தைப் புகுத்த ஏதுவாக தொழில்நுட்ப மேம்பாட்டு நிதித் திட்டத்தின்கீழ் 5% வட்டி மானியம் வழங்கப்படுகிறது. இதுவரை ரூ.2,486.72 கோடி மதிப்பிலான 559 திட்டங்களுக்கு ரூ.1,531.94 கோடி

கடன் தொகை ஒப்புதலளிக்கப்பட்டு ரூ.1,276.48 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

1-1-2005 முதல் துவங்கியுள்ள தடையற்ற வர்த்தகச் சூழலில் இதர வளர்ந்த நாடுகளுடனான கடுமையான தொழில் போட்டியை ஜவுளித் துறை எதிர்கொள்ள வேண்டி உள்ளது. பஞ்சு உள்ளிட்ட மூலப் பொருட்கள் விலை உயர்வு, மின்சாரம், எரிசக்திச் செலவினங்கள், தொழிலாளர் சட்டத்தின் கடுமை, நவீனப்படுத்தப்படாத பழைய கால இயந்திரங்களைப் பயன்படுத்துதல், உரிம முறை நீக்கப்பட்டதையடுத்து பெருகிய ஆலைகள் போன்றவை நூற்பாலைத் தொழில் சந்தித்து வரும் நெருக்கடிகளாகும்.

இருப்பினும், இத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் நோக்கில் அரசு தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது. குறிப்பாக நூற்பாலைத் தொழில் மட்டுமின்றி ஒட்டுமொத்த ஜவுளித் தொழிலை மேம்படுத்தும் வாய்ப்புகளை ஆராயும் வகையில் "துணித். தொழில் வல்லுநர் குழு" ஒன்றினை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. இது துணித் தொழிலின் பல்வேறு செயல்பாடுகளைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளும்.

**(ii) கூட்டுறவு நூற்பாலைகள்**

தமிழ்நாட்டில் 1958 முதல் 1985 வரையுள்ள இடைப்பட்ட காலத்தில் 4.70 இலட்சம் கதிர்களுடன் 18 கூட்டுறவு நூற்பாலைகள் கைத்தறி நெசவாளர்களுக்குத் தரமான சிட்டா நூலினையும், விசைத்தறி நெசவாளர்களுக்கு கூம்பு நூலினையும் நியாயமான விலையில் வழங்கவும், கிராமப்புறங்களிலுள்ள நெசவாளர் குடும்பங்கள், தாயகம் திரும்பியோர், ஆதிதிராவிடர் மற்றும் பிற வகுப்பைச் சேர்ந்தவர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்கும் நோக்கத்திற்காகவும் துவக்கப்பட்டது.

கடந்த சில ஆண்டுகளாகக் கூட்டுறவு நூற்பாலைகளின் செயல்பாடுகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டன. தாராளமயமாக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கை, எதிர்மறையான சந்தை நிலவரம், பஞ்சு விலை ஏற்றம், பழுதடைந்த இயந்திரங்கள், நூல் உற்பத்திக் குறைவு, நடைமுறை மூலதனமின்மை, புதிய துணிநூல் கொள்கை, உலகமயமாக்கலின் தாக்கம் ஆகியவை இதற்கு முக்கியக் காரணங்களாகும். மேற்படிக் காரணங்களினால் ஆலைகளின் லாபம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. 28-02-2005-ல் 18 கூட்டுறவு நூற்பாலைகளின் மொத்த குவிந்த நட்டம்



ரூ.477.33 கோடியாகும். 18 கூட்டுறவு நூற்பாலைகளில் 13 கூட்டுறவு நூற்பாலைகள் இயங்காத நிலையில் உள்ளன. இதர 5 கூட்டுறவு நூற்பாலைகள் தற்போது இயங்கி வருகின்றன.

அரசு பங்கு மூலதனங்களைத் திரும்பப் பெறுவதற்காக அமைக்கப்பட்ட அமைச்சரவைக் குழுவின் 31-12-2002-ல் நடைபெற்ற கூட்டத்தில் கூட்டுறவு நூற்பாலைகள் நலிவுற்றதற்கான காரணங்கள் பற்றி விவாதிக்கப்பட்டது. மேற்படிக் குழுக் கூட்ட விவாதத்தின் அடிப்படையில், நட்டத்தில் இயங்கும் 18 கூட்டுறவு நூற்பாலைகளிலும் தன்விருப்ப ஓய்வுத் திட்டம் அமல்படுத்தப்பட்டு, அதன்படி நாளது தேதி வரை 8,543 பணியாளர்கள்/தொழிலாளர்கள் தன்விருப்ப ஓய்வில் ரூ.92.87 கோடி பணப்பயன்களுடன் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது 5 கூட்டுறவு நூற்பாலைகள் (அண்ணா, பாரதி, கன்னியாகுமரி, புதுக்கோட்டை மற்றும் தர்மபுரி கூட்டுறவு நூற்பாலைகள்) தொடர்ந்து இயங்கி கொண்டிருக்கின்றன. கைத்தறி நெசவாளர்களின் சிட்டா நூல் தேவையினைப் பூர்த்தி செய்ய மேற்படி 5 கூட்டுறவு நூற்பாலைகளையும் குறைந்த அளவு செலவில் நவீனமயமாக்குவதற்கு தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மற்றும் இதர வழிகளில் நிதி உதவி பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**(ஈ) ஆடைகள் மற்றும் பின்னலாடைத் தொழில்**

ஜவுளித் தொழிலில் வேகமாக வளர்ந்து வரும் தொழிலாக ஆடை உற்பத்தித் தொழில் அமைந்துள்ளதுடன், பன்னாட்டு வணிகத்தில் பெரும்பான்மையான பங்கினையும் இத்தொழில் பெற்று விளங்குகின்றது. தமிழ்நாட்டில் சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளைப் பெருமளவில் மையமாகக் கொண்டு ஆடைத் தொழில் அமைந்துள்ளது. மாநிலத்தில் பின்னலாடைத் தொழில் நிறுவனங்கள் கோயம்புத்தூர் மாவட்டம் திருப்பூரில் அமைந்துள்ளன. இந்தியாவில் மொத்தம் உள்ள 6,000 பின்னலாடை நிறுவனங்களில் 2,900 நிறுவனங்கள் திருப்பூரில் அமைந்துள்ளதுடன், 1.50 இலட்சத்திற்கும் அதிகமான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பினையும் இவை அளித்து வருகின்றன.

**(உ) பதனிடும் தொழில்**

தமிழ்நாட்டில் பதனிடும் வசதி, முக்கியமாகக் கைகளால் சாயமிடுதல்/கைகளால் அச்சிடுதல் போன்றவை முறைப்படுத்தப்படாத

நிறுவனங்கள் வசம் உள்ளன. ஜவுளித்தொழிலின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவிற்கு நெய்வதற்கு முந்தைய மற்றும் நெய்ததற்குப் பிந்தைய வசதிகள் வளர்ச்சியடையவில்லை. வளர்ச்சியடைந்த நாடுகள் ஏற்கெனவே இரசாயனச் சாயங்களைப் பயன்படுத்துவதை நெறிமுறைப்படுத்த அசோ (Azo) மற்றும் மிதமான சாயங்களை பயன்படுத்துவதைத் தடை செய்துள்ளது. எனவே, இத்தொழிலுக்கு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பது மிகவும் இன்றியமையாததாகும். இத்தொழில் துணியின் மதிப்பு, அதன் தரத்தினை நிர்ணயிப்பதோடு அல்லாமல் துணியின் தரத்தை மேம்படுத்துவதற்கு அதிகமான வாய்ப்பு மற்றும் உத்திகள் கையாள்வது போன்றவற்றை உள்ளடக்கியது. துணி பதப்படுத்துதல் என்பது (1) வீட்டு உபயோக துணி வகைகள் மற்றும் நூல் சாயமிட்ட துணி ரகங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்கு நூலினை வெளுத்தல் மற்றும் சாயமிடுதல் (2) துணிகளை வெளுத்தல், சாயமிடல் மற்றும் காடாத் துணிகளை அச்சிட்டு, சேலைகள், லுங்கிகள் மற்றும் இதர வீட்டு உபயோகத் துணி வகைகளாக மாற்றுவது ஆகிய இரண்டு வகைகளை உள்ளடக்கியதாகும். தற்போதுள்ள பதனிடும் வசதிகள் போதுமானதாக இல்லாததால், பதனிடும் வசதிகளைப் பெரிய அளவில் அமைத்தால் இத்தொழில் மாநிலத்தில் படிப்படியாக வளர உதவிகரமாக இருக்கும்.

இம்மாநிலத்தில் 2,500 கையால் இயக்கப்படும் பதனிடும் நிறுவனங்களும் 757 மின்விசையால் இயக்கப்படும் பதனிடும் நிறுவனங்களும் உள்ளன. எனினும், மொத்தமுள்ள 757 மின்விசையால் இயக்கப்படும் பதனிடும் நிறுவனங்களும் துணிகளையோ நூலையோ பதனிடுவதில்லை. இதில் 531 நிறுவனங்கள் பின்னலாடைத் துணிகளைப் பதனிடும் பணியினை மட்டுமே செய்து வருகின்றன.

### 3. 2004-05 ஆம் ஆண்டின் செயல்பாட்டுத்திறன்

### 3.01 இலவச சேலைகள் மற்றும் வேட்டிகள் வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்துதல்

2005 பொங்கல் பண்டிகையின்போது வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் நகர்ப்புற மற்றும் கிராமப்புற ஏழை மக்கள் பயனடையும் வகையில் அரசு இலவசச் சேலைகள் மற்றும் வேட்டிகள் வழங்கும் திட்டத்தினை ரூ.173.00 கோடி மதிப்பில் செயல்படுத்த ஆணையிட்டது. பாலிகாட் சேலைகள் மற்றும் வேட்டிகள் உற்பத்தி செய்வதற்கு 350 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களையும் மற்றும் 85 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களையும் ஈடுபடுத்தியது. மொத்தத் தேவையான 111.00 இலட்சம் பாலிகாட் சேலைகள் மற்றும் 111.00 இலட்சம் பாலிகாட் வேட்டிகளில், 34,00,000 பாலிகாட் சேலைகள் மற்றும் 15,00,000 பாலிகாட் வேட்டிகள் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்ய திட்டம் வழங்கப்பட்டது. இதனைத் தவிர, முதியோர் ஓய்வூதியப் பயனாளிகளுக்கு ஆண்டுதோறும் தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகைகளின்போது வழங்கப்படும் 20.00 இலட்சம் சேலைகள் 4.00 இலட்சம் வேட்டிகள் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது. மேலும், 86,52,614 பாலிகாட் சேலைகள் மற்றும் 93,88,393 பாலிகாட் வேட்டிகள் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டன. இவை தவிர 7,10,000 பாலிகாட் வேட்டிகள் தனியாரிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் கொள்முதல் செய்யப்பட்டன. இத்திட்டத்தின்கீழ் 2005 பொங்கல் பண்டிகையின்போது 111.52 இலட்சம் பாலிகாட் சேலைகளும் 110.98 இலட்சம் பாலிகாட் வேட்டிகளும் வருவாய்த் துறை மூலம் பயனாளிகளுக்கு விநியோகிக்கப்பட்டன.





எதிர்வரும் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு 111.00 இலட்சம் பாலிகாட் சேலைகள் 111.00 இலட்சம் பாலிகாட் வேட்டிகள் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் உற்பத்தி செய்யப்படும்.

இத்திட்டம் தமிழ்நாட்டில் கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ள கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு வழங்குவதோடு மட்டுமல்லாமல் 2.22 கோடி ஏழை மக்களின் துணித் தேவையையும் பூர்த்தி செய்கிறது.

### 3.02 கைத்தறித் துணிகளின் விற்பனையை அதிகரிக்கவும் சரக்கிருப்பினை குறைக்கவும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

கைத்தறித் துணிகளின் விற்பனையை அதிகரிக்கும் நோக்கத்தோடு ரூ.1,001/-க்குமேல் விற்பனை மதிப்புள்ள பருத்தித் துணிவகைகளுக்கும் ரூ.2,001/-க்குமேல் விற்பனை மதிப்புள்ள பட்டுத் துணி வகைகளுக்கும் 2004-2005 ஆம் ஆண்டில் பண்டிகைக் காலங்களில் 135 நாட்களுக்கு உச்சவரம்பின்றி 10 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி வழங்கி விற்பனை செய்ய பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இச்சிறப்புத் தள்ளுபடியினைப் பயன்படுத்தி ரூ.94.53 கோடி மதிப்புள்ள

[2005 மார்ச் 30

கைத்தறித் துணிகள் 28-02-2005 வரை விற்பனை செய்யப்பட்டுள்ளன. இது தவிர, பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு வழக்கமாக வழங்கப்படும் 20 விழுக்காடு தள்ளுபடியுடன் கூடுதலாக 10 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி அதாவது பருத்தித் துணி வகைகளுக்கு அதிகபட்சமாக ரூ.150/–ம், பட்டுத் துணி வகைகளுக்கு அதிகபட்சமாக ரூ.300/–ம் வழங்கி விற்பனை செய்ய 2004-2005 ஆம் ஆண்டில் 96 நாட்களுக்கு பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு அரசு அனுமதி வழங்கியது. இச்சிறப்புத் தள்ளுபடியைப் பயன்படுத்தி, ரூ.154.11 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகள் 28-02-2005 வரை விற்பனை செய்யப்பட்டுள்ளன.

2004-2005 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு பகுதிகளில் மாவட்ட அளவிலான கண்காட்சிகள் துறையால் நடத்தப்பட்டு, இக்கண்காட்சிகள் மூலம் ரூ.3.79 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

அரசின் மேற்கண்ட நடவடிக்கைகளினால் 31-05-2001-ல் ரூ.442.34 கோடியாக இருந்த சரக்கிருப்பு 28-02-2005-ல் ரூ.221.52 கோடியாகக் குறைக்கப்பட்டு சரக்குத் தேக்கம் என்ற நிலை தற்போது இல்லை.

**3.03 கைத்தறி நெசவாளர்களுக்கான புதிய காப்பீட்டுத் திட்டம்**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், 15-06-2004 அன்று மாநில அரசால் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வந்த சுயகாப்பீட்டுத் திட்டத்திற்குப் பதிலாக இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்துடன் இணைந்து “புங்கர் பீமா யோஜனா” திட்டம் 2004-05 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும் எனவும், நெசவாளர்கள் செலுத்த வேண்டிய காப்பீட்டுக் கட்டணம் ரூ.130/-ஐ மாநில அரசே செலுத்தும் எனவும் அறிவித்தார்கள்.

தமிழ்நாட்டில் புங்கர் பீமா யோஜனா என்ற திட்டம் செயல்படுத்தப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததைத் தொடர்ந்து, இப்புதிய காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் 76,096 நெசவாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின்கீழ் 2004-05 ஆம் ஆண்டுக்கு நெசவாளர்கள் சார்பாக ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்குச் செலுத்த வேண்டிய காப்பீட்டுக் கட்டணம் ரூ.130/– வீதம் 76,096 நெசவாளர்களுக்கு ரூ.98.93 இலட்சம் மாநில அரசு வழங்கியுள்ளது. மத்திய அரசு பங்கு ரூ.150/– வீதம் காப்பீட்டுக் கட்டணத் தொகை ரூ.114.14 இலட்சம் நேரடியாக ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு மத்திய அரசு வழங்கியுள்ளது.



2005 மார்ச் 30]

இத்திட்டத்தின்கீழ் கைத்தறி நெசவாளர்களின் குடும்பத்தில் கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கு 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை அதிகபட்சமாக 4 ஆண்டுகளுக்கு அல்லது 12 ஆம் வகுப்பு முடியும் வரையில் இதில் எது முன்னதோ அது வரையில், ஒவ்வொரு காலாண்டிற்கும் ரூ.300/- வீதம் (இரண்டு குழந்தைகளுக்கு மட்டும்) கல்வி உதவித் தொகை வழங்கப்படும். 9ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் 9,473 மாணவ மாணவிகளுக்கு ரூ.85,25,700/- கல்வி உதவித் தொகையாக 2004-05 ஆம் ஆண்டிற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகம் அனுமதித்துள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட சில மாணவ மாணவிகளுக்கு இக்கல்வி உதவித் தொகையை 01-03-2005 அன்று வழங்கி திட்டத்தைத் துவக்கி வைத்துள்ளார்கள்.

**3.04 புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்துதல்**

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தன்னிறைவு பெற்று நல்லமுறையில் இயங்கவும், உலகச் சந்தையில் போட்டியிடும் வண்ணம் அவற்றை தயார் செய்யவும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் புதிய வடிவமைப்புகளை உருவாக்க ஆணையிட்டார்கள். அதன்படி, அகமதாபாத்திலுள்ள தேசிய வடிவமைப்பு நிறுவனம் (NID) மூலம் ஒரு திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டது. மேற்படித் திட்டம் காஞ்சிபுரம், ஆரணி, பரமக்குடி, கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் கரூர் ஆகிய பகுதிகளில் ரூ.48.50 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது. 1,300 புதிய வடிவமைப்புகள் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் உருவாக்கப்பட்டன. அகமதாபாத்திலுள்ள தேசிய வடிவமைப்பு நிறுவனம் (NID), சென்னையிலுள்ள தேசிய ஆடை வடிவமைப்பு நிறுவனம் (NIFT), நெசவாளர் சேவை மையம் ஆகிய நிறுவனங்களிடமிருந்து பெற்ற 333 புதிய வடிவமைப்புகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பட்டு மற்றும் பருத்தி ரக கைத்தறிச் சேலைகள் மாண்புமிகு முதல்வர் அவர்களால் 5-11-2004 அன்று விற்பனைக்கு அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டது.

**3.05 பள்ளிச் சிறார்களுக்கு இலவசச் சீருடை வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்துதல்**

பள்ளிச் சிறார்களுக்கு இலவசச் சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ் 2004-05 ஆம் கல்வி ஆண்டில் ரூ.44.64 கோடி மதிப்புள்ள 143.24 இலட்சம் மீட்டர் சீருடைத் துணிகள் சமூக நலம் மற்றும் சத்துணவுத் துறைக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன. இது தவிர, 2004-05 ஆம்

[2005 மார்ச் 30

கல்வி ஆண்டிற்கு ரூ.7.38 கோடி மதிப்புள்ள 22.23 இலட்சம் மீட்டர் சீருடைத் துணிகள் ஆதிதிராவிடர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறை ஆகிய துறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இலவசச் சீருடை வழங்கும் திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டிலுள்ள 250 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த 12,000 கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

**3.06 மாவட்ட அளவிலான கைத்தறிக் கண்காட்சிகள் நடத்துதல்**

கைத்தறித் துணிகளின் விற்பனையினை அதிகரிக்கவும் கைத்தறி நெசவாளர்கள் மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும் கைத்தறித் துறையின் ஒட்டுமொத்த வளர்ச்சியினைக் கருத்தில் கொண்டும் இத்துறையானது மாவட்ட அளவிலான கண்காட்சிகளை காஞ்சிபுரம், சேலம், மதுரை, திண்டுக்கல், திருச்சி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, தேனி மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் மைய அரசின் நிதியுதவியுடன் 2004-05 ஆம் ஆண்டில் நடத்தியுள்ளது. இதற்காக மைய அரசு இதுவரை ரூ.13.48 இலட்சம் வழங்கியுள்ளது. மாவட்ட அளவிலான கண்காட்சிகளின் மூலம் மொத்தம் ரூ.379.20 இலட்சத்திற்கு ஜவுளிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 2004–2005 ஆம் ஆண்டிற்கு மாநில அரசு பகுதி II திட்டத்தின்கீழ் மாவட்ட அளவிலான கண்காட்சிகள் நடத்த ரூ.10.00 இலட்சம் வழங்கியுள்ளது.

**3.07 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் ஏற்றுமதி**

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்றுமதி இரக துணிகளை உற்பத்தி செய்ய ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன. தற்போது 377 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள 28,097 தறிகள் ஏற்றுமதி இரக உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. 2004-05 ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடான ரூ.225.00 கோடியில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் படுக்கை விரிப்புகள், மேசை விரிப்புகள், ஏப்ரான், திரைச்சீலைகள், டெரிடவல்கள், சமையலறை துணிவகைகள், சிறு கைத்துண்டுகள், தரைவிரிப்புகள் போன்ற ஏற்றுமதி இரகங்களை ரூ.264.30 கோடி (பிப்ரவரி 2005 முடிய) மதிப்பிற்கு ஏற்றுமதியாளர்கள் மூலமாக ஏற்றுமதி செய்துள்ளன.



2005 மார்ச் 30]

**3.08 ஸ்வர்ண ஜெயந்தி கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சிறப்புத் திட்டம்**

19,500 கைத்தறி நெசவாளர்களுக்கு சந்தையில் எளிதில் விற்பனையாகக் கூடிய இரகங்களையும், விலை மதிப்புள்ள இரக துணிகளையும் உற்பத்தி செய்யும் வகையில் ஊக்குவிப்பதற்காகவும், கைத்தறி நெசவாளர்களின் குடும்பத்தைச் சார்ந்த 4,500 மகளிருக்கு தையல் பயிற்சி வழங்குவதற்காகவும் ஸ்வர்ண ஜெயந்தி கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஒரு சிறப்புத் திட்டம் ரூ.2,530.36 இலட்சம் மதிப்பில் உருவாக்கப்பட்டு, இத்திட்டம் 2003-04 ஆம் ஆண்டில் மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பயிற்சி அளிக்க நிதியுதவி, வடிவமைப்பினை மேம்படுத்துதல், திறனை மேம்படுத்துதல், கூடுதல் வேலைவாய்ப்பினை உருவாக்குதல், தொழில் முனைவோர் மூலம் அதிக வேலைவாய்ப்பு, அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், விற்பனைக்கு வழிவகை செய்தல் போன்ற இனங்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் விருதுநகர் மாவட்டத்தில் 22–10–2003 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் மத்திய அரசின் பங்கு ரூ.434.37 இலட்சமும் மாநில அரசின் பங்கு ரூ.144.79 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.579.16 இலட்சம் வழங்கப்பட்டு, இத்திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**3.09 நெசவுத்திறன் மேம்பாடு மற்றும் மேம்படுத்தப்பட்ட வடிவமைப்புகளுக்கான நெசவுப் பயிற்சி**

ஆலைகள் மற்றும் விசைத்தறிப் பிரிவுகளுடன் போட்டியிட கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைத் தயார் செய்யும் நோக்கத்தோடு நெசவுத்திறனை மேம்படுத்துதல் மற்றும் மேம்படுத்தப்பட்ட வடிவமைப்புகளை நெசவு செய்தல் ஆகியவற்றில் நெசவாளர்களுக்கு பயிற்சி அளிக்க முடிவு செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து இப்பயிற்சி அளிப்பதற்கென 1,061 கைத்தறி நெசவாளர்கள் தெரிவு செய்யப்பட்டு முதற்கட்டமாக, சென்னையிலுள்ள தேசிய ஆடை வடிவமைப்பு மையம் மூலமாக 55 நெசவாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. பின்னர் அந்தப் பயிற்சித் திட்டம் மாற்றி அமைக்கப்பட்டு, திண்டுக்கல்லில் உள்ள காந்தி கிராம நிகர்நிலைப் பல்கலைக்கழகம் மூலமாக 950 கைத்தறி நெசவாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 102 கைத்தறி நெசவாளர்களுக்கு

[2005 மார்ச் 30

விரைவில் பயிற்சி துவங்கப்பட்டு ஏப்ரல் முதல் வாரத்தில் முடிவடைய உள்ளது. இப்பயிற்சிக்கென தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் ரூ.13.83 இலட்சம் விடுவித்துள்ளது.

**3.10 கோ—ஆப்டெக்ஸ் நிறுவனத்தினை சீரமைப்பு செய்தல்**

2004-05 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு, கோ—ஆப்டெக்ஸ் நிறுவனத்தைச் சீரமைக்க ரூ.39.50 கோடி மதிப்பீட்டில் (மைய அரசு பங்கு ரூ.19.75 கோடி மற்றும் மாநில அரசு பங்கு ரூ.19.75 கோடி) விளிம்புத் தொகை வழங்க ஒரு திட்ட அறிக்கை மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்ட அறிக்கை மைய அரசின் பரிசீலனையில் உள்ளது.

**3.11 தன்விருப்ப ஓய்வுத் திட்டத்தினை அமல்படுத்துவதற்கான நிதி உதவி**

கூட்டுறவு நூற்பாலைகளின் பணியாளர்கள் / தொழிலாளர்களுக்குத் தன்விருப்ப ஓய்வுத் திட்டத்தினை அமல்படுத்துவதற்காக 2004-05 ஆம் ஆண்டில் ரூ.27.40 கோடியை தமிழக அரசு ஒப்பளிப்பு செய்தது. இதனால் சேலம் மற்றும் தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரிந்த 1,420 பணியாளர்கள்/தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**3.12 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் / பாரத ஸ்டேட் வங்கிக்குரிய நிலுவைத் தொகையினைச் செலுத்துதல்**

அரசு உத்தரவாதத்துடன் கூட்டுறவு நூற்பாலைகள் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் பெற்ற கடன் தொகையினைத் திரும்ப செலுத்துவதற்காக தமிழக அரசு ரூ.76.57 கோடி வழங்கியுள்ளது. மேலும், கோவை தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் பாரத ஸ்டேட் வங்கியிடமிருந்து பெற்ற கடனைத் திரும்ப செலுத்துவதற்காக தமிழக அரசு ரூ.112.37 இலட்சம் வழங்கியுள்ளது.

**3.13 ஜவுளித் தொழில் மையங்களுக்கான அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டம் (TCIDS)**

மாநிலத்தில் உள்ள முக்கியமான ஜவுளி நகரங்களில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி அதன்மூலம் ஏற்றுமதியை பெருக்கும் வகையில் இத்திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் சாலை, மின்சாரம், தண்ணீர் வசதி, பயிற்சி நிலையங்கள், மாசுக்கட்டுப்பாடு வசதிகள் போன்ற அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும். தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், சேலம், திருப்பூர், கரூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய இடங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.



2005 மார்ச் 30]

இவற்றில் காஞ்சிபுரம் மற்றும் திருப்பூர் நகரங்களில் முறையே ரூ.21.81 கோடி மற்றும் ரூ.29.66 கோடி மதிப்பில் திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள கொள்கை அளவில் மைய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதுதவிர காஞ்சிபுரம் நகரத்தில் ஆரம்ப கட்ட திட்டப் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக தமிழக அரசு முன்பணமாக ரூ.5.00 கோடி வழங்கியுள்ளது. திட்டப் பணிகள் தற்சமயம் நடைபெற்று வருகின்றன.

திருப்பூரில் ஜவுளித் தொழில் மையங்களுக்கான அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்தை நிறைவேற்ற மைய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி நிறைவேற்றும் வகையில் நடவடிக்கைகள் ஏற்கெனவே துவங்கப்பட்டுள்ளதுடன், தற்சமயம் திட்டப் பணிகளும் விரைவாக நடைபெற்று வருகின்றன. மேலும், கரூர், சேலம் மற்றும் திண்டுக்கல் ஆகிய இடங்களில் ஜவுளித் தொழில் மையங்களுக்கான அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**3.14 ஆயத்த ஆடை பூங்காக்கள் அமைத்தல்**

சர்வதேச தரம் கொண்ட ஆடை உற்பத்தி நிறுவனங்களை நிறுவும் நோக்கத்துடன் சென்னைக்கு அருகில் உள்ள இருங்காட்டுக்கோட்டை, திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் ஆயத்த ஆடைப் பூங்காக்களை அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு மைய அரசு திருப்பூர் ஆயத்த ஆடைப் பூங்காவிற்கு ரூ.15.51 கோடி மதிப்பிற்கு திட்ட அறிக்கையை அங்கீகரித்து அதில் ரூ.5.46 கோடி வழங்கியுள்ளது. மேலும், சென்னைக்கு அருகிலுள்ள இருங்காட்டுக்கோட்டையில் ஆயத்த ஆடைப் பூங்கா அமைப்பதற்கு ரூ.22.33 கோடி மதிப்பீட்டிலான திட்ட அறிக்கையை மைய அரசு கொள்கை அளவில் அங்கீகரித்துள்ளது.

**3.15 நாடா இல்லா விசைத்தறி பூங்காக்கள் அமைத்தல் (உயர் தொழில் நுட்பப் பூங்கா)**

ஏற்றுமதியில் சர்வதேச சந்தையில் போட்டியிடும் வகையில், பன்னாட்டு தரம் வாய்ந்த துணிகளை உற்பத்தி செய்ய உயர் தொழில் நுட்பப் பூங்காக்கள் அமைக்க முடிவு செய்யப்பட்டு, பல்லடம், குமாரபாளையம், ஆண்டிப்பட்டி மற்றும் ஈரோடு ஆகிய பகுதிகளில் ஜவுளித் தொழில் மையங்களுக்கான அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டம், தொகுப்பு விசைத்தறிக் கூடங்கள் அமைக்கும் திட்டம் மற்றும்

தொழில்நுட்ப மேம்பாட்டு நிதி திட்டங்களின் கீழ் நாடா இல்லா விசைத்தறிப் பூங்காக்கள் அமைப்பதற்குத் தேவையான பிரேரணைகள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

பல்லடம், குமாரபாளையம் மற்றும் ஆண்டிப்பட்டி ஆகிய பகுதிகளில் உயர் தொழில்நுட்ப விசைத்தறிப் பூங்கா அமைப்பதற்கு மத்திய அரசு கொள்கை அளவில் அங்கீகரித்து மத்திய அரசின் பங்காக ரூ.49.89 கோடி வழங்க ஒப்புக்கொண்டது.

மூன்று உயர் தொழில்நுட்ப விசைத்தறிப் பூங்காக்களின் நிதியுதவி விவரம் பின்வருமாறு:-

(ரூ. கோடியில்)

| திட்டம் | வைகை உயர் தொழில்நுட்ப விசைத்தறிப் பூங்கா | | |
|---|---|---|---|
| | மத்திய அரசு | மாநில அரசு | மொத்தம் |
| ஜவுளித் தொழில் மையங்களுக்கான அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டம் | 13.68 | 4.13 | 17.81 |
| தொகுப்பு விசைத்தறிக் கூட திட்டம் | - | - | - |
| **மொத்தம்** | **13.68** | **4.13** | **17.81** |

(ரூ. கோடியில்)

| திட்டம் | காவேரி உயர் தொழில்நுட்ப விசைத்தறிப் பூங்கா | | |
|---|---|---|---|
| | மத்திய அரசு | மாநில அரசு | மொத்தம் |
| ஜவுளித் தொழில் மையங்களுக்கான அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டம் | 13.90 | 4.22 | 18.12 |
| தொகுப்பு விசைத்தறிக் கூட திட்டம் | 2.48 | - | 2.48 |
| **மொத்தம்** | **16.38** | **4.22** | **20.60** |



(ரூ. கோடியில்)

| திட்டம் | பல்லடம் உயர் தொழில்நுட்ப விசைத்தறிப் பூங்கா | | |
|---|---|---|---|
| | மத்திய அரசு | மாநில அரசு | மொத்தம் |
| ஜவுளித் தொழில் மையங்களுக்கான அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டம் | 16.66 | 4.87 | 21.53 |
| தொகுப்பு விசைத்தறிக் கூட திட்டம் | 3.17 | - | 3.17 |
| **மொத்தம்** | **19.83** | **4.87** | **24.70** |

ஜவுளித் தொழில் மேம்பாட்டிற்கு அத்தியாவசிய உள்கட்டமைப்பு வசதிகளான குடிநீர் வழங்குதல், கழிவுநீர் அகற்றும் வசதி, கழிவுநீர் சுத்திகரிப்பு வசதி, குழந்தைகள் காப்பகம், பயிற்சி மையம், கணினி வடிவமைப்பு மற்றும் பரிசோதனை மையம், கண்காட்சி மற்றும் விற்பனைக் கூடம், மாற்று மின் வசதி மற்றும் சாலை வசதி போன்றவற்றை உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மேலும் வைகை (ஆண்டிப்பட்டி) உயர் தொழில்நுட்பப் பூங்காவில் 630 நாடா இல்லா தறிகளும், காவேரி (குமாரபாளையம்) உயர் தொழில்நுட்பப் பூங்காவில் 547 நாடா இல்லா தறிகளும், பல்லடம் உயர் தொழில்நுட்பப் பூங்காவில் 633 நாடா இல்லா தறிகளும் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இம்மூன்று திட்டங்களின் வாயிலாக 4,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளது.

தொகுப்பு தறிக்கூடத் திட்டத்தின்கீழ் அமைக்கப்படும் ஒவ்வொரு தறிக்கூடத்திற்கும் கட்டுமான செலவினத்தில் 25 சதவிகிதத் தொகை 1 சதுர அடிக்கு ரூ.80/-க்கு மிகாமல் மத்திய அரசின் மூலம் நிதியுதவி பெற தகுதி உடையதாகும். இத்திட்டத்தின்கீழ் உறுப்பினர்கள் பங்கு 10 சதவீதமாகவும், தொழில்நுட்பப் மேம்பாட்டு நிதி திட்டத்தின்கீழ் கட்டுமான செலவினத்தில் 65 சதவிகிதம் கடனுதவியாகவும் பெறலாம். நெசவுக்கு முந்தைய ஆயத்தப் பணிகளுக்கான சைசிங் ஆலை போன்றவை அமைப்பதற்கும் இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

[2005 மார்ச் 30

இத்திட்டத்தின்கீழ் கொள்முதல் செய்யும் நிலத்திற்கு முத்திரைத் தாள் கட்டணத்தில் 50 சதவிகிதம் மாநில அரசால் விலக்களிக்கப்பட்டுள்ளது. இந்த 50 சதவிகிதம் முத்திரைத்தாள் கட்டண சலுகையைப் பயன்படுத்தி பல்லடம், குமாரபாளையம் மற்றும் ஆண்டிப்பட்டி ஆகிய மூன்று பகுதிகளில் பூங்காக்கள் அமைக்க தேவையான நிலம் கொள்முதல் செய்து பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 4. 2005-06 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டங்கள்

### 4.01 இலவச சேலைகள் மற்றும் வேட்டிகள் வழங்கும் திட்டத்தினை செயல்படுத்துதல்

வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் கிராமப்புற மற்றும் நகர்ப்புற ஏழை எளிய மக்கள் பயனடையும் வகையில் இலவச சேலைகள் மற்றும் வேட்டிகள் வழங்கும் திட்டம் 2006 பொங்கல் பண்டிகைக்கும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் 1.11 கோடி பாலிகாட் சேலைகள் மற்றும் 1.11 கோடி பாலிகாட் வேட்டிகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படும். இத்திட்டத்திற்குத் தேவையான் சேலைகள் மற்றும் வேட்டிகள் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் உற்பத்தி செய்யப்படும். பொங்கல், 2006 இலவச சேலைகள் மற்றும் வேட்டிகள் வழங்கும் திட்டத்தினை செயல்படுத்துவதற்கு 2005-2006 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.175.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.02 இலவச சீருடை திட்டத்தினைச் செயல்படுத்துதல்

• பள்ளி சிறார்களுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டம் 2005-06 ஆம் கல்வி ஆண்டிற்கும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் 120.80 இலட்சம் மீட்டர் சீருடைத் துணிகள் உற்பத்தி செய்யப்படும். இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக 2005-06 ஆம் ஆண்டு தொடக்கக் கல்வித் துறையின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.42.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.03 வடிவமைப்புகளை உருவாக்குதல்

சந்தையில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்பவும், நுகர்வோரின் மாறி வரும் ரசனைக்கேற்பவும், தேசிய வடிவமைப்பு நிறுவனம் (NID), தேசிய ஆடை அலங்கார தொழில்நுட்ப நிறுவனம் (NIFT), இந்திய கைத்தறித் தொழில் நுட்பப் பயிலகம் (IIHT) நெசவாளர் சேவை மையம் போன்ற



2005 மார்ச் 30]

நிறுவனங்களின் உதவியுடன் 2005-06 ஆம் ஆண்டில் புதிய வடிவமைப்புகளை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 4.04 மாவட்ட அளவிலான கைத்தறிக் கண்காட்சிகள் நடத்துதல்

கைத்தறித் துணிகளின் விற்பனையினை அதிகரிக்கும் வகையில் 2005-2006 ஆம் ஆண்டில் மதுரை, திண்டுக்கல், கோயம்புத்தூர், நாகர்கோவில் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் மாவட்ட அளவிலான கண்காட்சிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

### 4.05 ஏற்றுமதியாளர்கள் மூலம் ஏற்றுமதி

2005-2006 ஆம் ஆண்டில் அதிக அளவு நெசவாளர்களை ஏற்றுமதி உற்பத்தியில் ஈடுபடுத்தி, ஏற்றுமதியாளர்கள் மூலம் ஏற்றுமதி விற்பனையினை ரூ.275.00 கோடி அளவிற்கு அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 4.06 தறிக்கூடத்துடன்கூடிய வீடுகளும், தறிக்கூடமும் அமைத்தல்

நெசவாளர்கள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் நல்ல பணிச்சூழலை உருவாக்கிடவும் 2005-06 ஆம் ஆண்டுக்கு 500 தறிக்கூடத்துடன் கூடிய வீடுகளும் 7,000 தறிக்கூடங்களும் அமைக்கப்படும்.

### 4.07 கைத்தறி ரக ஒதுக்கீடு சட்டத்தை அமல்படுத்துதல்

கைத்தறி நெசவாளர்கள் மற்றும் கைத்தறித் தொழிலை பாதுகாக்கவும், விசைத்தறி அதிகமுள்ள பகுதிகளில், கைத்தறி ரக ஒதுக்கீடு சட்டத்தை அமல்படுத்த தீவிர விழிப்புணர்வுப் பிரச்சாரம் மேற்கொள்ளவும், 50,000 விசைத்தறிகளை ஆய்வு செய்யவும் 2005-06 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டுள்ளது.

### 4.08 துணிநூல் பதனிடும் பூங்கா அமைத்தல்

2005-06 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்தபொழுது கடலூரில் துணிநூல் பதனிடும் பூங்கா அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. மேலும் துணிநூல் பதனிடும் பூங்காவிற்கு தேவையான திட்ட அறிக்கை தமிழ்நாடு மாநில தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் உதவியுடன் தயாரிக்கப்பட உள்ளது. கடலூரில் சிப்காட் தொழிற்பேட்டையில் பகுதி–III-இல் 300 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டு பதனிடும் பூங்கா அமைப்பதற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது.

அமைக்கப்பட உள்ள துணிநூல் பதனிடும் பூங்காவில் அனைத்து பதனிடும் பணிகளும் ஒரே வளாகத்தில் செயல்படும் வண்ணம் குறுகிய அகல பதனிடுதல் மற்றும் அதிக அகல பதனிடுதல், இதனுடன் அச்சிடல், சாயமேற்றுதல் மற்றும் மெருகூட்டுதல் ஆகிய செயல்களும் நடைபெறும். பதனிடும் கூடங்கள் நூல் நூற்போர், பின்னலாடை உற்பத்தியாளர்கள், நெசவாளர்கள் மற்றும் துணித்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் ஆகியோரது தேவைகளைப் பூர்த்தி செய்யவும் அமைக்கப்படவுள்ள துணிநூல் பதனிடும் பூங்கா ஜவுளித் தொழிலின் பல்வேறு பிரிவுகளுக்கும் ஒரு நல்ல வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதுடன் துணித் தொழில் முன்னேற்றமடைய தேவையான வாய்ப்பை ஏற்படுத்தித் தரும்.

**4.09 ஒருங்கிணைந்த துணித் தொழில் பூங்கா அமைத்தல்**

2005-06 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் அறிவிப்புக்கிணங்க, மத்திய அரசின் மூலமாக ஐக்கிய நாடுகள் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (UNIDO) நிதியுதவியுடன் கரூரில் ஒருங்கிணைந்த துணித் தொழில் பூங்கா அமைக்க திட்ட அறிக்கை தயார் செய்யப்படும்.

**5. துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

**5.01 தள்ளுபடி மானியத் திட்டம் / விற்பனை ஊக்குவிப்புத் திட்டம்**

கைத்தறித் துணிகளை விசைத்தறி மற்றும் ஆலை துணிகளுடன் போட்டியிட்டு சந்தையில் விற்பனை செய்ய உதவும் வகையில் துணிகளின் விலையினைக் குறைத்து விற்பனை செய்யும் நோக்கத்தோடு மாநில அரசு தள்ளுபடி வழங்கி விற்பனை செய்ய நிதியுதவி வழங்கி வருகிறது. இத்திட்டத்தின் மூலம் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் துணித் தேக்கத்தினை குறைக்க முடிகிறது. இத்திட்டம் கைத்தறித் தொழிலை கடுமையான போட்டியிலிருந்து பாதுகாப்பதுடன், கைத்தறி நெசவாளர்களை ஆலை மற்றும் விசைத்தறித் தொழில்களால் ஏற்படக்கூடிய பாதிப்பிலிருந்து பாதுகாக்கவும் வழிவகுக்கின்றது.

பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் விற்பனை செய்யப்படும் கைத்தறித் துணிகளின் சில்லறை மற்றும் மொத்த விற்பனைக்கு ஆண்டு முழுவதும் 20 விழுக்காடு தள்ளுபடி மானியம் அரசால் வழங்கப்பட்டு வருகிறது. அதாவது பட்டுத் துணிகளுக்கு உருப்படி ஒன்றுக்கு ரூ.200/- அல்லது 20 விழுக்காடு இதில் எது குறைவோ அத்தொகை, அதேபோன்று பருத்தி இரகங்களுக்கு



உருப்படி ஒன்றுக்கு ரூ.100/- அல்லது 20 விழுக்காடு இதில் எது குறைவோ அத்தொகை என்று வரையறைக்குட்பட்டு தள்ளுபடி மானியம் வழங்கப்படுகிறது. மாநில அரசின் கொள்கையின்படி, தீன்தயாள் ஹத்கர்கா புரோட்சஹான் யோஜனா திட்டத்தின் விற்பனை ஊக்குவிப்பு இனத்தின் (தள்ளுபடி மானியம்) கீழ் மத்திய அரசினால் வழங்கப்படும் தொகையினை விட கூடுதலாக ஏற்படும் செலவினத்தினை மாநில அரசே ஏற்றுக்கொள்கிறது.

பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கும் 2004-05 ஆம் ஆண்டில் தள்ளுபடி மானியமாக ரூ.88.24 கோடி (28-02-2005 வரை) வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசால் வகுக்கப்பட்டுள்ள வழிமுறைகளின்படி 2004-05 ஆம் ஆண்டில் தள்ளுபடி மானியம்/விற்பனை ஊக்குவிப்பு இனத்தின்கீழ் மத்திய அரசுப் பங்கு ரூ.1,523.07 இலட்சம் என கணக்கிடப்பட்டு, தீன்தயாள் ஹத்கர்கா புரோட்சஹான் யோஜனா திட்டத்தின் விற்பனை ஊக்குவிப்பு இனத்தின்கீழ் விடுவிக்கக் கோரி உரிய முன்மொழிவுகள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

2005-06 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் தள்ளுபடி மானியத் திட்டம் / விற்பனை ஊக்குவிப்புத் திட்டத்தினை செயல்படுத்த ரூ.98.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.02 தீன்தயாள் ஹத்கர்கா புரோட்சகான் யோஜனா திட்டம்**

மத்திய அரசு நெசவாளர்களின் வளர்ச்சியையும் நலனையும் கருத்தில் கொண்டு ஒருங்கிணைந்த விரிவான ஒரு திட்டத்தை தீன்தயாள் ஹத்கர்கா புரோட்சகான் யோஜனா திட்டம் என்ற பெயரில் புதிய திட்டத்தினை 1-4-2000 முதல் அமல்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தில் வழங்கப்படும் நிதியுதவியினை மத்திய மற்றும் மாநில அரசுகள் 50 : 50 என்ற விகிதாச்சார அடிப்படையில் வழங்குகின்றன. இத்திட்டத்தின்கீழ் அடிப்படை வசதிகள், உள்கட்டமைப்பு வசதிகள், வடிவமைப்பு உள்ளீடு, விளம்பரம் மற்றும் கைத்தறி நிறுவனங்களை வலுப்படுத்துதல் போன்ற இனங்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகின்றது.

2005-06 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இதற்கென ரூ.1,065.78 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2005 மார்ச் 30

**5.03 கோ–ஆப்டெக்ஸ் மற்றும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றிற்கு சலுகை வட்டி விகிதத்தில் நடைமுறை மூலதனம் வழங்குதல் (வட்டி மானியத் திட்டம்)**

தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கியின் (நபார்டு) மறு நிதியுதவி திட்டத்தின்கீழ், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கும் மற்றும் தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கிக்கும் சலுகை வட்டி விகிதத்தில் நிதியுதவி வழங்கப்பட்டது. பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வழக்கமான வட்டி விகிதங்களிலேயே நடைமுறை மூலதனம் வழங்கப்படுவதால் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 3 சதவிகித வட்டி மானியம் மற்றும் தமிழ்நாடு மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு (கோ–ஆப்டெக்ஸ்) 1 சதவிகித வட்டி மானியம் வழங்கப்பட்டு வந்தது.

பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கும் 31-03-2002 முதல் 30-09-2002 வரை உள்ள காலாண்டிற்கு வழங்கப்பட வேண்டிய வட்டி மானிய தொகை ரூ.430.33 இலட்சம் 2004-2005 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.

2005-2006 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் வட்டி மானிய திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ரூ.1,000/- அடையாள ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2004-2005 ஆம் ஆண்டுக்கு தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி (நபார்டு) பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.254.35 கோடி அளவிற்கு காசுக்கடன் அனுமதித்துள்ளது.

**5.04 90 விழுக்காடு இழப்பு பொறுப்புறுதித் திட்டம்**

மத்திய ரிசர்வ் வங்கியின் கைத்தறி நிதியுதவித் திட்டத்தின்கீழ் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன் தொகையை வசூலிக்க வாய்ப்பில்லாத நிலையால் ஏற்படும் இழப்பில் 90 விழுக்காடு அரசினால் ஈடு செய்யவும், மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு பொறுப்புறுதி வழங்கும் நோக்கத்துடனும் 90 விழுக்காடு இழப்பு பொறுப்புறுதித் திட்டத்தினை 1956-இல் மத்திய அரசு அறிமுகப்படுத்தியது. பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் காலப்போக்கில் நலிவடைந்து கலைக்கப்படும் சூழ்நிலையில் மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு அச்சங்கங்கள் கொடுபட வேண்டிய கடன் தொகையை வசூலிக்க இயலாத நிலையில் மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு ஏற்படும் நட்டத்தில் 90 விழுக்காடு தொகை அரசால் வங்கிகளுக்கு திரும்ப வழங்கப்படுகிறது.



2005 மார்ச் 30]

**5.05 கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்**

நெசவாளர்களிடம் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கவும், அவர்களது எதிர்கால வாழ்க்கைக்கு பாதுகாப்பு அளிக்கவும் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தினை 15-12-1975 முதல் தமிழக அரசு அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின்கீழ் நெசவாளர்கள் தாம் ஈட்டும் கூலியில் ரூபாய்க்கு 8 பைசா வீதம் திட்டத்திற்கு சந்தாவாக செலுத்துவார்கள். மாநில அரசு நெசவாளர் ஈட்டும் கூலியில் தனது பங்காக ரூபாய்க்கு 4 பைசா வழங்குகிறது. 1985-86 ஆம் ஆண்டு முதல் மைய அரசும் இத்திட்டத்தில் பங்கு பெற்று மைய சிக்கன நிதி திட்டத்தின்கீழ் நெசவாளர்கள் ஈட்டும் கூலியில் ரூபாய்க்கு 4 பைசா வழங்கி வருகின்றது. மொத்த சந்தா 16 பைசாவும் அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டு, இதற்கு மாநில அரசு 9.5 விழுக்காடு வட்டி வழங்குகிறது. இவ்வட்டி 9.5 விழுக்காட்டில் 6.5 விழுக்காடு நேரிடையாக நெசவாளர்கள் கணக்கில் வரவு வைக்கப்பட்டும் எஞ்சிய 3 விழுக்காடு வட்டித் தொகையிலிருந்து முதியோர் ஓய்வூதியத் திட்டம், குடும்ப ஓய்வூதியத் திட்டம் மற்றும் நல்வாழ்வு செறிவுத் திட்டம் போன்ற திட்டங்களை செயல்படுத்த பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் 28-02-2005 ஆம் தேதியில் 66,195 நெசவாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இத்திட்டத்தின்கீழ் ரூ.291.61 இலட்சம் நிதியினை 4 விழுக்காடு பங்காக 2004-05 ஆம் ஆண்டிற்கு தமிழக அரசு வழங்கியுள்ளது.

இத்திட்டத்திற்காக 2005-06 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.360.00 இலட்சம் மாநில அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

**5.06 மைய சிக்கன நிதித் திட்டம்**

மைய சிக்கன நிதித் திட்டம் 1985-86 ஆம் ஆண்டு மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. மைய சிக்கன நிதித் திட்டத்தின்கீழ் மாநில அரசுக்கு இணையாக மைய அரசுப் பங்காக நெசவாளர்கள் பெறும் கூலியில் ரூபாய்க்கு 4 பைசா வீதம் வழங்கி வருகின்றது. இத்தொகை மாநில அரசின் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தோடு இணைந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2004-05 ஆம் ஆண்டுக்கு மைய அரசு ரூ.291.43 இலட்சம் வழங்கியுள்ளது.

இத்திட்டத்திற்கென 2005-06 ஆம் ஆண்டுக்கு ரூ.460.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5.07 புங்கர் பீமா யோஜனா திட்டம்

## (கைத்தறி நெசவாளர்களுக்கான காப்பீட்டுத் திட்டம்)

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், 15-06-2004 அன்று மாநில அரசால் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வந்த சுயகாப்பீட்டுத் திட்டத்திற்குப் பதிலாக இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்துடன் இணைந்து "புங்கர் பீமா யோஜனா" திட்டம் 2004-05ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும் எனவும், நெசவாளர்கள் செலுத்த வேண்டிய காப்பீட்டுக் கட்டணம் ரூ.130/-ஐ மாநில அரசே செலுத்தும் எனவும் அறிவித்துள்ளார்கள்.

புங்கர் பீமா யோஜனா திட்டத்தின்கீழ் ஒரு நெசவாளருக்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு செலுத்த வேண்டிய மொத்த காப்பீட்டுக் கட்டணம் ரூ380/-ல் ரூ.150/-ஐ மைய அரசும், ரூ.100/-ஐ இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகமும் மற்றும் ரூ.130/-ஐ நெசவாளர் சார்பாக மாநில அரசும் செலுத்தும்.

"புங்கர் பீமா யோஜனா" திட்டத்தின்கீழ் கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை விவரங்கள் பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| (அ) | இயற்கை மரணம் | ரூ50,000/- |
| (ஆ) | விபத்தினால் ஏற்படும் மரணம் | ரூ80,000/- |
| (இ) | விபத்தினால் ஏற்படும் நிரந்தர ஊனம் | ரூ50,000/- |
| (ஈ) | விபத்தினால் ஏற்படும் பகுதி ஊனம் | ரூ25,000/- |

இத்திட்டத்தின்கீழ் 2004-05 ஆம் ஆண்டுக்கு நெசவாளர்கள் சார்பாக ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்குச் செலுத்த வேண்டிய காப்பீட்டுக் கட்டணம் ரூ.130/– வீதம் 76,096 நெசவாளர்களுக்கு ரூ.98,92,480 மாநில அரசு வழங்கியுள்ளது. மத்திய அரசு பங்கு ரூ.150/- வீதம் காப்பீட்டுக் கட்டணத் தொகை ரூ.114.14 இலட்சம் நேரடியாக ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு மத்திய அரசு வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் கைத்தறி நெசவாளர்களின் குடும்பத்தில் கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கு 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை அதிகபட்சமாக 4 ஆண்டுகளுக்கு, ஒவ்வொரு காலாண்டிற்கும் ரூ.300/- வீதம் (இரண்டு குழந்தைகளுக்கு மட்டும்) கல்வி உதவித் தொகை



வழங்கப்படும். 2004-05 ஆம் ஆண்டில் 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் 9,473 மாணவ மாணவிகளுக்கு ரூ.85,25,700/- கல்வி உதவித் தொகையாக ஆயுள் காப்பீட்டுக் கழகம் அனுமதித்துள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மாணவ மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகையை வழங்கி 01–03–2005 அன்று திட்டத்தை துவக்கி வைத்துள்ளார்கள்.

இத்திட்டத்தின்கீழ் கணினி மென்பொருள் உருவாக்கவும், நெசவாளர்கள் குறித்த விவரங்களை கணினிமயமாக்கவும், நெசவாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கவும் மற்றும் இத்திட்டம் குறித்து விளம்பரம் செய்வதற்கும் மத்திய அரசு நிதியுதவி வழங்கும். இத்திட்டத்தில் பயன்பெறும் 76,096 நெசவாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கவும், நெசவாளர்கள் சம்பந்தமான விவரங்களை கணினிமயமாக்கவும், விளம்பரத்திற்காகவும் 2004-05 ஆம் ஆண்டுக்கு ரூ.38.04 இலட்சம் மைய அரசினால் அனுமதிக்கப்பட்டு இதில் ரூ.19.02 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2005-06 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின்கீழ் ரூ.100.00 இலட்சம் மாநில அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

## 5.08 தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம்

நெசவாளர்களுக்கென "தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம்" என்ற புதிய நலத் திட்டத்தினை 01-01-1992 முதல் தமிழக அரசு அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின்கீழ் உறுப்பினர் 60 வயதிற்கு முன் இறக்க நேரிட்டால் அவரது வாரிசுக்கு நெசவாளர் இறந்த தேதியிலிருந்து மாதம் ரூ.350/- வீதம் பத்து ஆண்டுகளுக்கு குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. 2004-05 ஆம் ஆண்டில் 647 பயனாளிகளுக்கு ரூ.27.44 இலட்சம் குடும்ப ஓய்வூதியமாக மாநில அரசு வழங்கியுள்ளது. குடும்ப ஓய்வூதியத் தொகையானது சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்ட நிதிக்கு வழங்கப்படும் 3 சதவிகித வட்டித் தொகையிலிருந்து வழங்கப்படுகிறது.

## 5.09 கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் முதியோர் ஓய்வூதியத் திட்டம்

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் முதியோர் ஓய்வூதியத் திட்டம் மாநில அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு 01-04-1997 முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் உறுப்பினராக இருந்து 60 வயது பூர்த்தியான நெசவாளர்கள்

மாதந்தோறும் ரூ.200/-வீதம் முதியோர் ஓய்வூதியமாக பெற தகுதி பெறுகின்றனர். சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்ட நிதிக்கு வழங்கப்படும் 3 சதவிகித வட்டித் தொகையிலிருந்து முதியோர் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. 2004-2005 ஆம் ஆண்டில் 11,018 நெசவாளர்களுக்கு முதியோர் ஓய்வூதியமாக ரூ.282.12 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**5.10 தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் அமைக்கும் திட்டம்**

கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களுக்கு தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் கட்டும் திட்டம் 1979-80 ஆம் ஆண்டு முதல் மாநில அரசின் மானியம் மற்றும் ஹட்கோ நிறுவன கடனுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1985-86 ஆம் ஆண்டு முதல் மைய அரசும் பங்கு பெற்று இத்திட்டத்தின்கீழ் மானியம் வழங்குகிறது. தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் அமைக்கும் திட்டத்தில் தறிக்கூடத்துடன் கூடிய வீடு ஒன்றுக்கு தற்போது வழங்கப்படும் நிதியுதவியின் விவரம் பின்வருமாறு:

| விவரம் | கிராமப்புறம் | நகர்ப்புறம் |
|---|---|---|
| | (ரூபாயில்) | |
| மாநில அரசு மானியம் | 7,000 | 7,000 |
| மைய அரசு மானியம் | 18,000 | 20,000 |
| ஹட்கோ கடன் | 40,000 | 40,000 |
| பயனாளியின் பங்கு | 3,000 | 5,000 |
| **மொத்தம்** | **68,000** | **72,000** |

இத்திட்டத்தின்கீழ் 66 தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் கட்ட ரூ.12.00 இலட்சம் 2004-05 ஆம் ஆண்டுக்கு மைய அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது. அதில் முதல் தவணையாக ரூ.6.00 இலட்சம் விடுவித்துள்ளது.

இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கென 2005-06 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.60.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**5.11 தறிக்கூடம் அமைக்கும் திட்டம்**

தறிக்கூடம் அமைக்கும் திட்டமானது 1997-98 ஆம் ஆண்டு முதல் 100 விழுக்காடு மானியத்துடன் மைய அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நெசவாளர்களுக்கு நல்ல பணிச் சூழலை உருவாக்கும் நோக்கத்துடன் நெசவாளர்களின் வீடுகளுக்கு தறிக்கூடம் கட்ட நிதியுதவி வழங்கப்படுகிறது. ஒரு தறிக்கூடம் அமைப்பதற்கு தற்போது வழங்கப்படும் நிதியுதவியின் விவரம் பின்வருமாறு:

| விவரம் | கிராமப்புற தறிக்கூடம் | நகர்ப்புற தறிக்கூடம் |
|---|---|---|
| | (ரூபாயில்) | |
| மைய அரசின் மானியம் | 7,000 | 10,000 |
| பயனாளியின் பங்கு | 2,000 | 4,000 |
| **மொத்தம்** | **9,000** | **14,000** |

2004-2005 ஆம் ஆண்டுக்கு 4,209 தறிக்கூடங்கள் கட்ட ரூ332.58 இலட்சம் ஒப்பளிப்பு செய்து இதில் முதல் தவணையாக ரூ.166.29 இலட்சம் தொகையினை மைய அரசு விடுவித்துள்ளது.

2005-2006 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.650.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.12 நல்வாழ்வு செறிவுத் திட்டம்**

கைத்தறி நெசவுத் தொழிலால் ஏற்படக்கூடிய நோய்களுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு, நல்வாழ்வு செறிவுத் திட்டம் 1992-93 முதல் மைய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. 2001-2002 ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தில் மாநில அரசும் பங்கேற்று, மைய அரசால் வழங்கப்படும் மருத்துவத் தொகைக்கு ஈடான தொகையினை வழங்கிவருகிறது. சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்திற்கு வழங்கப்படும் 3 விழுக்காடு வட்டித் தொகையிலிருந்து மாநில அரசின் பங்கு செலவிடப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் மருத்துவச் செலவினங்களைத் திரும்ப வழங்குதல், கண் பரிசோதனை மற்றும் கண்ணாடி வாங்குதல், மகப்பேறு உதவி, குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைக்கான ஈட்டுத்

[2005 மார்ச் 30

தொகை, குடிநீர் வசதி மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான அடிப்படை கட்டமைப்பு வசதிகள் செய்தல் போன்ற இனங்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது.

2004-2005 ஆம் ஆண்டிற்கு மைய அரசு ரூ.100.08 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது.

இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு 2005-06 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.250.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.13 டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளையிலிருந்து கல்வி உதவித்தொகை வழங்குதல்**

நெசவாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கி அவர்களை மேல்நிலைக் கல்வி பயில்வதில் ஊக்குவிக்கும் பொருட்டு டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளை 1986 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்த அறக்கட்டளையை நிறுவ பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் ஆகியவை தங்களது பொது நிதி மற்றும் பொது நல நிதியிலிருந்து நன்கொடை வழங்கியுள்ளன. இத்தொகை நிரந்தர வைப்புக் கணக்கில் முதலீடு செய்யப்பட்டு, அதிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையைக் கொண்டு மேற்படி உதவித் தொகை வழங்குவதற்கான செலவினம் மேற்கொள்ளப்படுகிறது.

**5.14 இந்திய கைத்தறித் தொழில்நுட்பப் பயிலகத்தில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு உதவித் தொகை**

சேலத்திலுள்ள இந்திய கைத்தறித் தொழில் நுட்பப் பயிலகத்தினால் நடத்தப்படும் 3 ஆண்டு கைத்தறித் தொழில் நுட்ப பட்டயப் படிப்பிற்கு மாணவ, மாணவியர்களை தேர்வு செய்யும்போது நெசவாளர்களின் குழந்தைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. தமிழக அரசு மாணவ, மாணவியர்களுக்கு கீழ்க்கண்டவாறு உதவித் தொகை வழங்கி வருகிறது:—

முதலாம் ஆண்டு ரூ.400/- மாதமொன்றுக்கு

இரண்டாம் ஆண்டு ரூ.450/- மாதமொன்றுக்கு

மூன்றாம் ஆண்டு ரூ.500/- மாதமொன்றுக்கு



2005 மார்ச் 30]

இதனைத் தவிர, அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் புத்தகம் வாங்குவதற்கென மாதமொன்றுக்கு ரூ.60/- உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. மேலும், இரண்டாம் ஆண்டு மாணவ, மாணவியர்களுக்கு சுற்றுலா செல்வதற்கு ஆண்டொன்றுக்கு ரூ.200/- அளிக்கப்படுகிறது. தற்போது, இந்தக் கல்வி உதவித் தொகை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கல்வி நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

கடாக் மற்றும் வெங்கடகிரி ஆகிய இடங்களிலுள்ள பயிலகங்களில் மூன்று வருட கைத்தறித் தொழில்நுட்பப் பட்டய வகுப்பில் படித்து வரும் தமிழக மாணவ மாணவியர்க்கு 2002-03 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கல்வி நிதியிலிருந்து கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

**5.15 சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கு பரிசு வழங்கும் திட்டம்**

கைத்தறித் துணிகளின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கும், அயல்நாட்டு சந்தையில் கைத்தறித் துணிகளின் விற்பனையினை விரிவுபடுத்தவும் தமிழ்நாட்டிலுள்ள சிறந்த கைத்தறித் துணி ஏற்றுமதியாளர்களுக்கு பரிசு வழங்கும் திட்டத்தை 1975 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே ஏற்றுமதி உற்பத்தியை ஊக்குவிப்பதற்கும் சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வெற்றிச் சின்னங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்குவதற்கும் இத்திட்டத்திற்கான தொகையை ரூ.30,000/-லிருந்து ரூ.50,000/-ஆக அரசு உயர்த்தியுள்ளது. 2004-05 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ரூ.50,000/- விடுவித்து வழங்கியுள்ளது.

2005-06 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில், இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ.50,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.16 புதிய வடிவமைப்பை உருவாக்கும் சிறந்த நெசவாளர்களுக்கு பரிசு வழங்கும் திட்டம்**

புதிய வடிவமைப்பினை ஊக்குவிக்கும் வகையில் புதிய வடிவமைப்பினை உருவாக்கும் சிறந்த நெசவாளர்களுக்கு பரிசு வழங்கும் திட்டம் ஒவ்வொரு ஆண்டும் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பருத்தி, பட்டு போன்ற பல்வேறு இரகங்களில் சிறந்த

[2005 மார்ச் 30

வடிவமைப்புகளை உருவாக்கும் நெசவாளர்களுக்கு இரகங்கள் வாரியாக கீழ்க்கண்டவாறு பரிசுத் தொகை வழங்கப்படுகிறது:—

| | |
|---|---|
| முதல் பரிசு | ரூ. 5,000/- |
| இரண்டாம் பரிசு | ரூ. 3,000/- |
| மூன்றாம் பரிசு | ரூ. 2,000/- |

இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதன் மூலம் எளிதில் விற்பனையாகக்கூடிய இரகங்களில் புதிய வடிவமைப்புகள் கிடைப்பதோடு, ஏற்றுமதிக்கும் புதிய வடிவமைப்புகள் கிடைக்கின்றன. இத்திட்டத்திற்கான செலவினம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது.

### 5.17 கைத்தறி ஏற்றுமதித் திட்டம்

கைத்தறி நெசவாளர்களின் திறனை மேம்படுத்தி வடிவமைப்புகளை உருவாக்கி ஏற்றுமதி ரகங்களை உற்பத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு மைய அரசு 2002-2003 ஆம் ஆண்டு கைத்தறி ஏற்றுமதித் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம் வடிவமைப்புகளை உருவாக்குதல் மற்றும் இரக மாற்றம், தறிகளை மாற்றியமைத்தல் மற்றும் நெசவாளர்களின் திறனை மேம்படுத்துதல், மாதிரிகள் உருவாக்குதல், கைத்தறித் துணிகளின் தரத்தினை மேம்படுத்துதல், விளம்பரம் மற்றும் விற்பனை தரக்கட்டுப்பாடு மற்றும் கூடுதல் மதிப்புள்ள ரகங்களை உருவாக்கும் பிரிவுகளை நிறுவுதல் போன்ற பல்வேறு இனங்கள் அடங்கும்.

இத்திட்டத்தின்கீழ் மைய அரசு 2004-2005 ஆம் ஆண்டிற்கு திருச்செங்கோடு சரகத்திலுள்ள ஓம்சக்தி பருத்தி மற்றும் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு முதல் தவணையாக ரூ.5.63 இலட்சம் வழங்கியுள்ளது. மைய அரசிடமிருந்து அதிக அளவில் நிதியுதவி பெறும் வகையில் 2005-2006 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

### 6. கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம், 1985

கைத்தறி நெசவாளர்களையும், கைத்தறித் தொழிலையும் விசைத்தறியின் ஆதிக்கத்திலிருந்து பாதுகாக்க கைத்தறி இரக ஒதுக்கீடு



2005 மார்ச் 30]

சட்டம் 1985 மத்திய அரசினால் இயற்றப்பட்டு, அனைத்து மாநில அரசுகளால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. கைத்தறியில் மட்டுமே உற்பத்தி செய்ய 11 இரகங்களை மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

கைத்தறிக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட 11 இரகங்கள் விவரம் பின்வருமாறு:—

1. சேலை, 2. வேட்டி, 3. டவல் / கம்சா மற்றும் அங்கவஸ்திரம், 4. கைலி, 5. கேஸ் / பெட்சீட் / பெட்கவர் / கவுண்டர்பேன் / பர்னிசிங், 6. ஜமுக்காளம் / டர்ரி அல்லது டர்ரட், 7. டிரஸ் மெட்டீரியல், 8. பாரக் பிளாங்கெட், கம்பள் அல்லது கம்பளீஸ், 9. ஷால், லோய், மப்ளர், பங்கி, 10. உல்லன் டுவீடு, 11. சத்தர், மேக்லா / பானக்.

1985 ஆம் ஆண்டு கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டத்தை முனைப்புடன் தமிழ்நாட்டில் செயல்படுத்த பிரத்தியேகமாக அமலாக்கப்பிரிவு ஒன்று சென்னையை தலைமையிடமாகக் கொண்டு ஒரு துணை இயக்குநர் / அமலாக்க அலுவலர் அலுவலகமும், சேலம், திருச்செங்கோடு, ஈரோடு, திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர் / உதவி அமலாக்க அலுவலர்களின்கீழ் சரக அளவிலான அலுவலகங்களும் செயல்பட்டு வருகின்றன.

2004-2005 ஆம் ஆண்டில் 50,000 விசைத்தறிகளை ஆய்வு செய்ய நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டில் 28-02-2005 வரை 55,034 விசைத்தறிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இது தவிர, 2004-05 ஆம் ஆண்டில் (28-02-2005 வரை) 7 விசைத்தறி உரிமையாளர்கள்மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதில், 6 பேருக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

### 7. கைத்தறி உற்பத்தி ரகங்களை பூகோள குறியீடு சட்டத்தின்கீழ் பதிவு செய்தல்

உலக சந்தையில் ஏற்படக்கூடிய மாற்றங்களைக் கருத்திற்கொண்டு, பன்னாட்டுத் தரத்துடன் உலக சந்தையில் போட்டியிடும் வகையில் நமது இந்தியாவின் பாரம்பரியம் மிக்க கைத்தறி உற்பத்தி ரகங்களான "காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள்", "பவானி ஜமக்காளம்" மற்றும் "மதுரை சுங்குடி புடவைகளுக்கு" காப்புரிமை பெறும் வகையில் பூகோள குறியீடு சட்டத்தின்கீழ் பதிவு செய்வதற்கு இத்துறையின் மூலம் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

[2005 மார்ச் 30

காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள், பவானி ஜமக்காளம், மதுரை சுங்குடி புடவைகளுக்கு காப்புரிமை பெறும் பொருட்டு பூகோள குறியீடு சட்டத்தின்கீழ் பதிவு செய்வதற்கு சென்னையிலுள்ள பூகோள குறியீடு சட்டப் பதிவு அலுவலகத்தில் தேவையான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேலும் கலந்தாய்வுக் குழு காஞ்சிபுரம் மற்றும் ஈரோடு பகுதிகளில் ஆய்வு நடத்தி, காஞ்சீபுரம் பட்டு, பவானி ஜமக்காளம் ஆகிய ரகங்களை பூகோள குறியீடு சட்ட இதழில் வெளியிடத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பூகோள குறியீடு சட்ட இதழில் இதன் நிகழ்வுகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் மதுரை சுங்குடி ரகங்களையும் பூகோள குறியீடு சட்ட இதழில் விளம்பரப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை கலந்தாய்வுக் குழு எடுத்து வருகின்றது.

### 8. துறையின்கீழ் இயங்கும் நிறுவனங்கள்

#### (அ) தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் லிட் (கோ–ஆப்டெக்ஸ்)

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், நாடெங்கிலும் பரவியுள்ள தனது 261 விற்பனை நிலையங்கள் மூலமாக தமிழ்நாட்டிலுள்ள பிரதம கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனைக்கு உறுதுணையாக இருக்கும் நோக்கத்தோடு 1935 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

இது தவிர, கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம், மாநிலத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்தும், தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகத்திடமிருந்தும், நூல் கொள்முதல் செய்து நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகம் செய்து வருகிறது. மேலும், இலவச வேட்டி சேலை திட்டம், பள்ளிச் சிறார்களுக்கான இலவச சீருடை வழங்கும் திட்டம் மற்றும் முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் தேவைப்படும் துணிவகைகளை கொள்முதல் செய்து விநியோகிக்கும் ஒருங்கிணைப்பு முகவராக கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

#### 2004-2005 ஆம் ஆண்டில் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

- 2004-2005 ஆம் ஆண்டில் (28-02-2005 வரை) ரூ.295.60 கோடி மதிப்பிற்கு கைத்தறி மற்றும் விசைத்தறித் துணிகளை விற்பனை செய்துள்ளது.



2005 மார்ச் 30]

- 2004-2005 ஆம் ஆண்டில் (28-02-2005 வரை) ரூ.117.05 கோடி மதிப்பிற்கு கைத்தறித் துணி வகைகளை கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்துள்ளது.
- 2004-2005 ஆம் ஆண்டில் (28-02-2005 வரை) ரூ.3.80 கோடி மதிப்பிற்கு ஏற்றுமதி விற்பனை மேற்கொண்டுள்ளது.
- நிர்வாகச் செலவுகளை குறைக்கும் நோக்குடன் சிறப்பு தன் விருப்ப ஓய்வுத் திட்டத்தை அரசு அமல்படுத்தியதையடுத்து முதற்கட்டமாக 600 பணியாளர்கள் தன்விருப்ப ஓய்விற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். 600 பணியாளர்களில் முதற்கட்டமாக 155 பணியாளர்கள் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், 220 பணியாளர்கள் இரண்டாம் கட்டமாக விடுவிக்கப்பட உள்ளனர்.
- கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம், ரூ.14.45 கோடி மதிப்புள்ள 5,29,152 படுக்கை விரிப்புகளையும், 2,64,626 சேலைகள் மற்றும் 2,64,626 வேட்டிகளையும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மிகக் குறுகிய கால இடைவெளியில் விநியோகம் செய்துள்ளது.
- பட்டு மற்றும் பருத்தி சேலைகளில் 365 புதிய வடிவமைப்புகளை உருவாக்கி வழங்கியுள்ளது.
- நல்ல தரம் வாய்ந்த மற்றும் கண்ணைக் கவரும் துணிவகைகளை விற்பனை செய்ய ஏதுவாக கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் புதிய வடிவமைப்புகள், புதிய வண்ணங்கள் மற்றும் புதிய துணிவகைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இவ்வாறு (அ) கோரா பருத்தி சட்டைத் துணி (ஆ) பருத்தி ரக பாயடி சட்டைத் துணி (இ) விலை மதிப்புள்ள கைலி வகைகள் (ஈ) நவ நாகரீக டஸ்ஸர் சேலைகள் ஆகிய துணி வகைகளை புதிதாக அறிமுகப்படுத்தியுள்ளது.
- பாரம்பரியமிக்க கலை நயம் வாய்ந்த துணிவகைகளை வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்வதற்கு ஏதுவாக, கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் சென்னை, கோவை மற்றும் புதுடில்லி ஆகிய இடங்களில் மூன்று பிரத்தியேக விற்பனை நிலையங்களை அமைத்துள்ளது.

[2005 மார்ச் 30

## கோ–ஆப்டெக்ஸின் எதிர்காலத் திட்டங்கள்

- தன்விருப்ப ஓய்வுத் திட்டத்தை அறிமுகப்படுத்தி பணியாளர்களின் எண்ணிக்கையை 1,728-லிருந்து 1,028 ஆக குறைப்பதன் மூலமும், பொருளாதார பின்னடைவு அடைந்துள்ள விற்பனை நிலையங்களை மூடி விடுவதன் மூலமும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தை சீரமைப்பு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

- நமது பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை தக்க வைக்கவும், புதுப்பிக்கவும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் பாரம்பரியமிக்க துணி வகைகளான செட்டி நாடு சேலைகள், காஞ்சி காட்டன் சேலைகள், நெகமம் சேலைகள், விளந்தை சேலைகள், கோவை சேலைகள், சுங்குடி சேலைகள் மற்றும் டோரியா சட்டைத் துணி வகைகளை 2005-2006 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## (ஆ) தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் லிமிடெட், சென்னை

தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் 1964 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு கூட்டுறவு அமைப்பின்கீழ் இல்லாத நெசவாளர்களுக்கு கைத்தறி, விசைத்தறி மற்றும் பின்னலாடை துணிகளின் உற்பத்தி மற்றும் விற்பனைக்காக கடனுதவி வழங்கும் நோக்குடன் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம், அதிகபட்சமாக ஒரு நெசவாளருக்கு ரூ.3.00 இலட்சம் வரை கடன் வழங்கி வருகிறது. இக்கழகம் நெசவாளர்களுக்கு உதவிபுரியும் வகையில், தமிழ்நாடு முழுவதும் 7 கிளைகளைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. தற்போது கழகத்தில் 11,848 உறுப்பினர்கள் உள்ளனர். தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம், 2004-2005 ஆம் ஆண்டில் (28-02-2005 வரை) 547 உறுப்பினர்களுக்கு ரூ.198.87 இலட்சம் அளவிற்குக் கடனுதவி வழங்கியுள்ளது. மேலும், 2004-2005 ஆம் ஆண்டில் (28-02-2005 வரை) ரூ.207.97 இலட்சம் அளவிற்குக் கடன் வசூல் செய்துள்ளது.

இக்கழகம் 2005-2006 ஆம் ஆண்டில் வழங்கும் கடன் அளவை ரூ.360.00 இலட்சம் அளவிற்கு உயர்த்தவும் ரூ.340.00 இலட்சம் அளவிற்குக் கடன் வசூல் மேற்கொள்ளவும் திட்டமிட்டுள்ளது.



2005 மார்ச் 30]

## (இ) தமிழ்நாடு சரிகை லிமிடெட், காஞ்சிபுரம்

தமிழ்நாடு சரிகை லிமிடெட், காஞ்சிபுரம் ஓர் அரசு சார்ந்த பொதுத் துறை நிறுவனமாகும். இந்நிறுவனம் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான தரமான சரிகையை உற்பத்தி செய்து நியாயமான விலையில் விநியோகம் செய்து வருகிறது. இந்நிறுவனம் சர்வதேச தரச் சான்று [ISO 9001] பெற்ற நிறுவனமாகும்.

இந்நிறுவனம் 2004-2005 ஆம் ஆண்டில் 60,437 சரிகை மார்க்குகளை உற்பத்தி செய்து 62,116 சரிகை மார்க்குகளை விற்பனை மேற்கொண்டுள்ளது. இந்நிறுவனம் பட்டு கூட்டுறவுச் சங்கங்களுக்கு சரிகை மார்க் சப்ளை செய்யும் சூரத் சரிகை உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகளிடமிருந்து பெறப்பட்ட 3,887 சரிகை மாதிரிகளை (28-02-2005 வரை) பரிசோதனை செய்துள்ளது.

சரிகையினை வேதியல் முறையில் பரிசோதனை மேற்கொள்வது மட்டுமல்லாமல், சரிகை மற்றும் பட்டுச் சேலையில் உள்ள சரிகையின் தரத்தினை அறிய எந்தவித சேதாரமும் இன்றி "எக்ஸ்ரே ஊடுகதிர் பகுப்பாய்வு இயந்திரம்" மூலம் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வியந்திரம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 14-08-2003 அன்று அறிமுகப்படுத்தப்பட்டு, பொதுமக்கள் பயன்பெறும் வகையில் 30-10-2003 முதல் காஞ்சிபுரம் காந்தி சாலையில் செயல்பட்டு வருகிறது. 2004-2005 ஆம் ஆண்டில் (28-2-2005 வரை) 19,327 சரிகை மாதிரிகள் மற்றும் சேலைகள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, பரிசோதனை கட்டணமாக ரூ.5.85 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

சூரத் சரிகை உற்பத்தியாளர்களால் மட்டுமே சரிகை சப்ளை செய்யப்பட்டு வருவதைக் கட்டுப்படுத்தும்வகையில், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் திட்டத்தின்மூலம் ஒரு முன்னோடித் திட்டமாக ஹைதராபாத்திலுள்ள என்.எப்.டி.டி.சி நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் வெள்ளி இழை தயாரிக்கும் பிரிவை அமைத்துள்ளது. இத்திட்டத்தின் பணிகள் தற்போது முடியும் தருவாயில் உள்ளன. மேலும், தமிழ்நாடு சரிகை ஆலையில் உற்பத்திச் செய்யப்படும் சரிகையின் தரத்தினை, மேலும் மேம்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப உதவியினை வழங்கிட என்.எப்.டி.டி.சி நிறுவனம் முன்வந்துள்ளது. வெள்ளி இழையின் உற்பத்திச் செலவினைக் குறைக்கும்பொருட்டு, வெள்ளி இழையினை தட்டையாக்கும் இயந்திரத்தினையும் வெள்ளி இழை நூற்பு இயந்திரத்தின் பொறியியல் தொழில்நுட்பத்தை மேம்படுத்தி உற்பத்தியினை நிலைப்படுத்த என்.எப்.டி.டி.சி. உதவியுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2005 மார்ச் 30

இந்நிறுவனம், 1990-1991 ஆம் ஆண்டு முதல் அரசின் பங்கு மூலதனத்திற்கு, இலாப ஈவுத் தொகையினை வழங்கி வருகிறது. அரசின் பங்கு மூலதனத் தொகை ரூ.34.40 இலட்சத்திற்கு, கடந்த இரண்டு ஆண்டுகளாக ஆண்டொன்றிற்கு (2002-2003, 2003-2004) 50 விழுக்காடு (அதாவது) ரூ.17.20 இலட்சம் வீதம் அரசு பங்கு மூலதனத்திற்கு, ஈவுத் தொகையாக, அரசுக்கு வழங்கியுள்ளது.

**தமிழ்நாடு சரிகை ஆலையின் எதிர்காலத் திட்டங்கள்**

- 2005-2006ஆம் ஆண்டில், இந்நிறுவனம் 96,000 சரிகை மார்க்குகள் உற்பத்திச் செய்யவும், அதே அளவு கொண்ட சரிகை மார்க்கினை விற்பனை மேற்கொள்ளவும் திட்டமிட்டுள்ளது. வெள்ளி இழை உற்பத்தியில், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நுணுக்கத்துடன் ஆரம்ப நிலையிலிருந்து செயல்படுத்தி, மேலும் தரமான சரிகையினை உற்பத்தி செய்ய கவனம் செலுத்தப்படவுள்ளது.

- இந்நிறுவனத்தால் வெள்ளி இழை இழுவை இயந்திரம் நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிலையில் உள்ளது. மேலும், வெள்ளி இழை உற்பத்தியினைத் துவக்கி, ஹைதராபாத்திலுள்ள என்.எப்.டி.டி.சி நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் உற்பத்தி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

- மின்னாற்பகுப்பு முறையில் பதனிடுதல் (Electroplating Process) தரத்தினை உயர்த்தும்வகையிலும், வெள்ளி இழை தயார் செய்யும் இழுவை இயந்திரத்தினையும், என்.எப்.டி.டி.சி. நிறுவனத்தின் உதவியுடன் தரம் உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

- இந்நிறுவனம் அதிக அளவு தங்கம் மற்றும் வெள்ளியின் உள்ளடக்கம் கொண்ட சரிகை மார்க்கினைத் தயார் செய்து, தேவைப்படும் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இதர நிறுவனங்களுக்கும் விற்பனை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது.



2005 மார்ச் 30]

**(ஈ) தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை லிமிடெட், ஈரோடு**

தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை லிமிடெட், ஈரோடு ஒரு கூட்டுறவு நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டு 1973 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இவ்வாலை மாநிலத்தில் கூட்டுறவு அமைப்பின்கீழ் செயல்படும் ஒரே பதனிடும் ஆலையாகும். இவ்வாலை பருத்தி மற்றும் செயற்கை இழை துணிகளையும் பருத்தி மற்றும் செயற்கை இழை நூலினையும் வெளுத்தல், சாயமிடல், மெர்சிரைசிங் மற்றும் அச்சிடல் போன்ற பல்வேறு பதனிடும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இவ்வாலை ஒரு மாதத்தில் சுமார் 18.00 இலட்சம் மீட்டர் துணிகளைப் பதனிடும் திறன் பெற்றுள்ளது. பதனிடும் மற்றும் அச்சிடுதலுக்குத் தேவையான துணிவகைகளை இவ்வாலை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், மத்திய சிறைச்சாலை, கோவை, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கர்நாடகா கைத்தறி வளர்ச்சிக் கழகம், சர்வோதயா சங்கம் ஆகிய நிறுவனங்களிடமிருந்து பெற்று வருகின்றது. அரசுத் திட்டமான பள்ளிக் குழந்தைகளுக்கான இலவச சீருடைத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் துணிகளையும் இவ்வாலை பதனிட்டு வருகிறது.

பதனிடும் ஆலையின் 2004-2005 ஆம் ஆண்டிற்கான (28.02.2005 வரை) மொத்த விற்பனை ரூ.1057.98 இலட்சம் ஆகும். தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை லிமிடெட், ஈரோடு 2004-2005 ஆம் ஆண்டில் (28.02.2005 வரை) ரூ.201.97 இலட்சம் (தோராயமாக) நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

**பதனிடும் ஆலையின் எதிர்காலத் திட்டங்கள்**

- ஆலையின் கழிவு நீரைத் சுத்திகரிப்பு செய்ய திருப்புதல் சவ்வூடு பரவல் முறையை ரூ.2.00 கோடி செலவில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

- ஆலைக்கு ஐ.எஸ்.ஓ. 9001:2000 மற்றும் ஐ.எஸ்.ஓ.14001 சான்றினைப் பெற திட்டமிடப்பட்டுள்ளது.

- பெருந்துறை சிப்காட் தொழிற் பூங்காவில் அகண்ட அகல பதனிடும் தொகுதி ஒன்றினைத் துவக்க திட்டமிடப்பட்டுள்ளது.

- ஆலையில் நவீன பதனிடும் இயந்திரங்களை அமைக்க பெருந்துறை சிப்காட் தொழிற்பேட்டை வளாகத்தில் 9.62 ஏக்கர் நிலத்தினைக் கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

[2005 மார்ச் 30

- தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகம் மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டு நிதி ஆகியவை மூலம் கடன் வசதியைப் பெற்று ஆலையின் இயந்திரங்களை நவீனமுறையில் மாற்றி, கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**(உ) தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், கோவை**

நலிவடைந்த மற்றும் மூடப்பட்ட ஆலைகளை ஏற்று நடத்தி, அவற்றிற்குப் புத்துயிர் அளித்தல், விசைத்தறிக் கூடங்களை நிறுவுதல், கூட்டுறவு நூற்பாலைகளுக்குத் தொழில்நுட்ப சேவை வழங்குதல், விசைத்தறிக் கூடங்களில் உற்பத்தி செய்யப்பட்ட விசைத்தறித் துணிகளைச் சந்தையில் விற்பனை செய்தல் ஆகிய பல்வேறு நோக்கங்களுக்காக தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் 1969 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. மூன்று விசைத்தறிக் கூடங்கள், ஒரு தானியங்கி விசைத்தறிக் கூடம் மற்றும் செயலற்றுள்ள சோமசுந்தரம் சூப்பர் நூற்பாலை ஆகியவற்றை நிர்வகிப்பதில் இக்கழகத்தின் செயல்பாடு தற்சமயம் அமைந்துள்ளது. இதுதவிர ரயில்வே துறை, மின்வாரியம், போக்குவரத்துக் கழகங்கள் போன்ற பொதுத் துறை நிறுவனங்களுக்குத் தேவைப்படும் சீருடைத் துணிகளையும் இக்கழகம் வழங்கி வருகிறது. 2004 -2005 ஆம் ஆண்டில் (28-02-2005 வரை) ரூ.3,324.59 இலட்சம் அளவிற்கு இக்கழகம் விற்பனை மேற்கொண்டுள்ளது.

**2005-2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் செயல்திட்டங்கள்**

- தமிழ்நாடு பஞ்சாலைக் கழகமானது 2005-2006 ஆம் ஆண்டில் இலவச சீருடை வழங்கும் திட்டத்திற்காக 7.58 இலட்சம் மீட்டர் வெள்ளை நிற சட்டைத் துணி மற்றும் 0.87 இலட்சம் மீட்டர் காக்கி டிரில் துணியும், இலவச சேலைகள் மற்றும் வேட்டிகள் வழங்கும் திட்டத்திற்காக 3.48 இலட்சம் வேட்டிகளும், இதுதவிர அரசு நிறுவனங்களுக்காக ரூ.965.73 இலட்சம் மதிப்புள்ள 8.28 இலட்சம் மீட்டர் பாலியெஸ்டர் துணிகளை விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளது.
- 2005–2006 ஆம் ஆண்டில் அரசு நலத் திட்டங்களுக்கு வழங்குவதற்காக ரூ.1027.07 இலட்சம் மதிப்புள்ள 59.68 இலட்சம் மீட்டர் வெள்ளை நிற சட்டைத் துணியை விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து இக்கழகமானது கொள்முதல் செய்ய உள்ளது.



Chennai-600 008

2005 மார்ச் 30]

- தனது கட்டுப்பாட்டிலுள்ள விசைத்தறிகளை நவீனப்படுத்தும் வகையில் முத்தனேந்தலில் உள்ள சோமசுந்தரம் சூப்பர் நூற்பாலையில் 'நாடா இல்லாத விசைத்தறிப் பூங்கா' ஒன்றினை நிறுவவும் இக்கழகம் திட்டமிட்டுள்ளது.

**(ஊ) தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் லிமிடெட் (டான்ஸ்பின்), சென்னை**

தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் (டான்ஸ்பின்), கூட்டுறவு நூற்பாலைகளின் பஞ்சு கொள்முதல் நடைமுறையினைச் சீராக்கும்பொருட்டு, 1994 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இவ்விணையத்தின் உறுப்பினராகவுள்ள அனைத்து கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் தேவையான தரமான பஞ்சினை நியாயமான விலையில் பல வெளி மாநிலக் கூட்டுறவு இணையங்கள் மூலமாகவும் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாகவும் வாங்கி விநியோகிப்பதே இணையத்தின் முக்கிய நோக்கமாகும்.

**9. 2005-2006 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு**

"கைத்தறி மற்றும் துணிநூல்" மானியக் கோரிக்கை எண் 16–இன் கீழ், பல்வேறு நல மற்றும் வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்த 2005-2006 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.31278.05 இலட்சம் பின்வரும் விவரப்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ரூ. இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| அ. | திட்டத்தில் சேராதது | 772.71 |
| ஆ. | மாநிலத் திட்டம் | 21325.30 |
| இ. | மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் | 1437.23 |
| ஈ. | மத்திய, மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் | 7625.80 |
| உ. | தலைமைச் செயலகப் பொருளாதாரப் பணிகள் (நிர்வாக செலவுகள்) | 117.01 |
| | **மொத்தம்** | **31278.05** |

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**112, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner of
Stationery and Printing, Chennai-600 002.